
வெளியீடு எண், 428

அமரநாதம்

[அமரநாத யாத்திரை]



தருமபுர ஆதீனம்



தருமபுர ஆதீனம் இரண்டாவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
குருமூர்த்த ஆலயம்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
2 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகளின்

குருபூஜை விழா வெளியீட்டு மலர்

28—12—1958

வெளியீடு எண் 428

உ

குருபாதம்

அமரநாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளப்பாங்கின் வண்ணம் வெளிவருவது.

தருமபுர ஆதீனம்

1958

ஞானசம்பந்தம் அச்சகம்.
தருமபுரம்.



தருமபுர ஆதீனம் 25-ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

நூன்முகம்

சைவசமயத்தின் உண்மையுயர்வை விளக்கும் வகையில் மாயாகாரியப் பொருள்கள் பல விளங்கு கின்றன. அவை நாகலிங்கப்பூ, நாகரத்தினம் முதலியன. அவற்ருேடு இமயமலேப் பகுதியான அமர நாதமும் ஒன்று. அமரநாதம் சைவத்தின் தனிச் சிறப்பை விளக்கும் ஓர் உண்மைச் சான்ருகும். அதனை இந்நூலில் விரித்தெழுதியிருப்பதால் இதில் எழுத வில்லை.

காசுமீரம் கண்கவரும் அழகிய காட்சிக்காகவோ இனிய பொழுது போக்கிற்காகவோ சென்று காணப் படும் தேயம் அன்று. அங்குப் பெரும்பாலோராய் வாழும் முகமதியரை நோக்கி, அது வேற்றுச் சமயத் தார்க்கு உறைவிடம் என எண்ணிவிடற்கு உரியதும் அன்று, அம் முகமதியர் எல்லாரும் ‘இசுலாம் ஒன்றே தெய்வம்’ என்று கொண்டு வழிபடும் பெற்றியரும் அல்லர். அவருள், பலர் சைவப்பற்று மிக்குடையராய் விளங்குகின்றனர். சிவபிரானே பரத்துவக் கடவுள் என்று உணர்ந்து, ‘சிவனேடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை’ என்னும் கோள்கையராய்ப் பற்பலர் உளர்.

அமரநாதம் 'சிவகிரி'யாய்த் திகழ்ந்தாலும் அங்கு எல்லாச் சமயத்தவரும் சென்று வழிபடுவது குறிக்கொளத்தக்கது. அமரநாதம் காசுமீர தேயத்தில் உள்ளது. அதனால், காசுமீரம் சைவத்தைத் தழுவும் மக்களை உடையது என்று கருதின், அது பொருந்தாது. காசுமீரம் தொன்றுதொட்டே சிவபூமி. அந்தப்பூமி சிவம் நாம் உய்யக்கொள்கின்ற தேயம். அங்குப் பிறவாமையின் இப்பிறவி அவமே என்று கொண்டு வருந்துகின்றனர் அங்கே ஏகிக் கண்டுகளித்த யாவரும். தென்னாட்டுச் சைவமும் காசுமீர தேயத்துச் சைவமும் வேறல்ல, தத்துவவுண்மைகளிற் சிறிதும் வேறுபாடில்லை. சிவாநுபவத்தில், தென்னாட்டுச் சைவ மடங்களின் மரபுக்கும் காசுமீரத்துச் சைவ மரபுக்கும் வேறுபாடு உண்டு என்று தோன்றினும். இரண்டற்கும் பெரிதும் தொடர்புண்டு.

தருமையாதீனத்து முதற்குரவர் அருளிய ஞானவர்ணத்தையும் அதற்கு அவர் சீடபரம்பரையில் சகலகலாவல்லவராய் விளங்கிய தவசிரேட்டர் வெள்ளியம்பலவாணர் அருளிய மாபாடியமும் ஆதீன வெளியீடாக (முதற்பகுதி) உலகில் நிலவுகின்றது. அம்மாபாடியத்தைக் கற்பார்க்குக் காசுமீரத்துச் சைவ நூல்களின் பெருக்கும் கருத்தும் பெருமையும் அருமையும் நன்கு தெரியும். அவற்றோடு நம் தென்னாட்டுச் சைவ சித்தாந்த நூல்களிடை உள்ள ஒப்பும் வெள்ளிடைமலையாம்.

அங்குள்ள பழைய சிவாலயங்கள் எல்லாவற்றின் அமைப்பும் சிற்பத்திறனும் இங்குள்ளனபோலவே

இலங்குகின்றன என்று இந்நூலை நோக்குவார் அறிய லாம். அங்கே உள்ள மலை, ஆறு, நாடு, நகர், ஊர் முதலியவற்றின் பெயர்களும் சிவபுராணங்களை ஒட்டி அமைந்தனவாகும். தேசாசாரம் வேறுபடுவது கண் கூடு. ஆசாரத்தால் தென்னாட்டிலேயும் ஓர் இடத்தை இகழ்ந்து கூறுதல் உண்டு. ஆசாரபேதம் இருப்பினும், சமயக்கோள்கைகளின் உண்மை யுணர்ச்சியில் நம் நாடும் காசுமீரமும் வேறுபட்டில. ஆசார பேதத்துக்கு நாட்டின் தட்பவெப்பம் காரணம், வெயில்மிக்க நாட்டில் உள்ள ஒழுக்கத்தைக் குளிர்மிக்க நாட்டில் கோள்வது போருந்துமோ.

காசுமீரத்தினர் பேச்சும் வடமோழி முதலிய பல மோழிகளின் கலப்பாயிருக்கின்றதாம். காசுமீர மோழி யின் தோற்றம் பின்னையது, பன்மோழிக்கலப் புடைமையே அதை வலியுறுத்தும்

1600 ஆண்டிற்கு முன்பே அங்கு முகமதியமதம் பரவிற்று. அதற்குச் சிறிது முன்னர்த்தான் முகமதிய மதம் தோன்றிற்றும். அங்கேயே முதலில் அசோகாது பௌத்த மதம் நிலவிற்று. பௌத்தனுயிருந்த மன்ன னும் நம் சமயத்தனுனன் அவனுடைய மகன் (தலை) முறையில் அப் பௌதத்ம் மறைந்தது சைவம் தழைத் தது. பின்பு முகமதியம் வளர்ந்தது. அஃது ஒரு பெருமையுடையதால் அன்று. அங்கே சங்கரர் செல்லு முன்னரே, சைவசமயம் பரவியிருந்தது. வித்தியாரண்ய ரிடம் வாதம்செய்து அவர் தோற்றதும், உபதேசம் ஏற்றதும் வரலாற்ருல் அறியலாம்.

இத்தகைய காசுமீரதேயம் அநாதியான சைவ பூமி என்பது இந் நூலைக் கற்பார்க்கு நன்கு புலனாகும். ஆகவே இத் தருமை யாதீனத்து 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், அமரநாத யாத்திரை புரிந்தருளியகாலத்தில், வழிபட்டுக்கொண்டுஏகியவருள் திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்களும் ஒருவர். அங்கே ஒவ்வொரு வேளையும் கண்டறிந்தவற்றைக் குறித்தும் உளங்கொண்டும் போந்து, இந் நூலை எழுதினர். அவர் முன்னர் எழுதிய 'கேதார யாத்திரை' 'நேபால யாத்திரை' இரண்டும் 'ஞானசம்பந்தம் இதழ் களில் எழுதிய கட்டுரைகளும் இந் நூலின் உயர்விற்குத் துணையாகும்.

இந்நூல் வெற்றென முடிய யாத்திரையை மட்டும் கொண்டுரைப்பதன்று. பண்டைச்செலவு (யாத்திரை) உணர்த்தும் பெரும்பாணாற்றுப்படை முதலியவற்றைப் போலப் பல பல காட்சிகளையும் அவற்றால் கருதலாகும் உயரிய தத்துவங்களையும் பலவகைக் கலைகளையும் கற்பதற்குத் துணையாய் விளங்குகின்றது. கற்பார்க்குச் சலிப்புத் தோற்றாது, காலப்போக்காகவும் நினைக்க இடம்தாராது, கற்றார் கல்லார் இருவர்க்கும் வேண்டிய பற்பல கருத்துக்களை இந் நூலில், ஆங்காங்கு ஒவ்வொரு தொடர்புபற்றி எழுதியிருக்கின்றார் இதன் ஆசிரியர்.

இதனால், இவரது மதிநுட்பமும் நூலறிவும் பலராலும் பாராட்டப்படும் எனல் சொல்லாதே தோன்றும்.

'மதிநுட்பம் நூலோ டுடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை'.

இது வெளிவரும் நாள் 'சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்' ஆநந்தபரவச மூர்த்தியின் திருநாள். அதற்கேற்ப, இந்நூலில், கண்ட இட மெல்லாம் ஆநந்த பரவசம் உண்டாதல் அவரவர் அநுபவமாகக் காணுதிரார்.

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்ற வாயுறை வாழ்த்துக்குத் தக்கவாறு, நண்பர் திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர் அவர்களைக்கொண்டு இதனை எழுதுவித்தும் வெளியிடுவித்தும் வழங்கிய நலத்தை எய்தி இன்புறும் உலகர், இத் தருமை யாதீனத்தை மறவாது போற்றுவர் என்று கருது கின்றேன்.

வாழ்க உலகெலாம்! வளர்க தலயாத்திரையின்பம்!!

தருமையாதீனப்
பல்கலைக் கல்லூரி.
25—12—58.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்,
Principal.

உ

குருபாதம்


பொருளடக்கம்

உ

சிவமயம்

படங்களின் அட்டவணை

பக்கம்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அமரநாதனை வழிபடல்

அமரநாத் குகையில் — அடியார் இணக்கம்



ஸ்ரீ சரத்சந்திரதாஸ் நிர்வாண்மகாராஜும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

அமரநாதம்

திருச்சிற்றம்பலம்

துனியுறு துயர்தீரத் தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனாத லிரண்டுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக் கருமுசுக் கழையுகளும்
பனியுறு கதிர்மதியான் பருப்பதம் பரவுதுமே.

—சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

1. இமயம்

இமயக் காட்சி :

நம் பாரதப் பெருநாட்டிற்கு இமயம் ஒரு காவல். அது ஒரு எல்லைக்கோடு. உலகிலே அதைவிடப் பெரிய மலைத்தொடர் இல்லை. அதில் உள்ளவற்றைவிட உயரமான சிகரங்களுமில்லை. மண்வாகும் இல்லை. பெருவளமும்

இல்லை. பெருவனப்பும் இல்லை. சுருக்கமாக, அது மலைகளின் பேரரசன். அதன் ஆட்சி ஒரு தனி ஆட்சி. இங்கு பனிபடர் சிகரங்கள் உண்டு. கடும் வெயிலும் உண்டு. கொடுங்குளிரும் உண்டு. சூரியன் ஒளிபுகா அடர்ந்த காடுகளும் உண்டு. பூண்டும் முளைக்காத வெற்றுச் சிகரங்களும் உண்டு. வெயில் எரிக்கும் ஆனால் சுடாது; இந்த நிலையும் உண்டு. ஆறுகளும் உண்டு. அருவிகளும் உண்டு. உலகப் பெரும் ஏரிகளும் உண்டு. உயரத்திற்கு உயரமாக, பருமனுக்குப் பருமனாக ஆண்டவனுடைய பேருருவத்தின் சின்னமாக உலகோருக்கு இமயம் காட்சி அளிக்கிறது.

ஒரு பேரரண் :

அதை எல்லைக்கோடாக, பாதுகாவலாக அமைத்துக் கொண்டிருக்கும் நமது நாடு ஒரு புண்ணியபூமி - தவ பூமி எனலாம்; இப்படியே வெளியுலகும் அழைக்கிறது. அதன் காவலால், அதனுடைய பெருமையால் நமக்கு விளையும் பெரும் பயன்களில் இதுதான் சிறந்தது. ஆன்மநிலை உலகோர்க்கு உயர்ந்ததாக நாம் மற்றையோர்க்கு உபதேசியாராகக் காணப்படுவதற்குக் காரணம் இந்த இமயமே. நமக்கு அரணாக நின்று வெளியுலக வாடை அடிக்காது தேக்கிக் காத்துவரும் பேரரண்!

வளம் :

உலகியல் தேவைகளுக்கு வேண்டிய எல்லா விளை பொருள்களும், பொன்னும், மணியும் ஒருசேர வாரிவாரி வள்ளலாக வழங்கிப் பிறர் கண்ணுக்குச் செல்வத்திலும் சிறந்து விளங்கும் நாடாக நம்மைக்காத்துவருகிறது. நீரை,

வளத்தை, பருவகாலத்தை உலகியல் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாவற்றையும் தேக்கி, விளைத்து, விரைந்து கொடுக்கிறது எனலாம். ஆனால் உலகியல் வாழ்வளிக்கும் இமயம், நமக்கு உயிரியல் (ஆன்ம இயல்) வளம்பெறவும் மேலே சொன்ன ஆலயங்களையும், புனித இருக்கைகளையும் தன்னகத்தேகொண்டு, நம்மைக் கூவியழைத்து எத்தாலும் குறையாத ஆதரவு தந்தும் காத்துவருகிறது. ஆகவே நமக்கு - நமது தேசத்துக்கு அது அரண் செய்வது, உலகியல் வளம் பெருக்கவும் ஆன்ம இயல் வளம் பெருக்கவும் என்று சொல்லலாம்.

பெருநதிகள் :

உலகை அழித்துவிடும் நிலையில் அஞ்சத்தக்கதான வேகத்தோடுவந்த கங்கையைப் பெருமான் தம் திருமுடியில் தாங்கினார்; தம் சடைக்காட்டில் தேக்கினார்; பகீரதன் தவத்திற்கு இரங்கி ஒரு சிறிது கீழே விட்டார்; அதுவே புனித நதியான கங்கையாகப் பெருகிச் சகரவம்சத்தினருடைய வினைபோக்கி வீடு பேறு அளித்தது என்னும் வரலாறு எல்லோரும் அறிந்தவொன்றுதான். இவை போன்று இமயம் தன் ஒப்பற்ற சிகரங்களில் பல நூற்றுக் கணக்கான அடி உயரமுள்ள பனிப்படிவுகளைத்தேக்கி வைத்துச் சூரியன் உதவிகொண்டு சிறிது சிறிதாக ஆண்டு முழுவதும் கங்கை, யமுனை, சிந்து, பிரம்மபுத்திரா, ஐராவதி போன்ற பெரு நதிகளை வளர்த்துவருகிறது.

மலை அரசன் :

உலகிலே நாம் கண்டு துய்க்கும் இன்பங்கள் நிலையில்லாதன; அனுபவிக்கும் நிலையிலேயே கழிந்து போவன.

ஆகவே, சிற்றின்பங்கள் எனக் கண்டு, அவைகளைவிட்டு நீங்கி, பேரின்பம் நாடிச் செல்வோர்க்குப் புகலிடம் தருவது இந்தப் பெருமலையேயாகும். அத்தோடு தன்னுடைய சிகரங்களிலும் பிற இடங்களிலும், கிழக்கிலிருந்து மேலை எல்லை வரை, எங்கும் சிவபெருமான் வீற்றிருக்கும் புனித ஆலயங்களையும். உறைவிடங்களையும், பல தவசிரேஷ்டர்கள்வாழும் பகுதிகளையும் உடையதாகவும் இருக்கிறது.

இம்மலையை நம் பெரியோர்கள். மலை அரசன், பர்வத குலச் சக்கரவர்த்தி, பெருமானுக்குப் பெண் பெற்றுக் கொடுத்த மாமன் என்றெல்லாம் பெருமை பேசுகிறார்கள். நமது பாரததேசம் ஒரு புனிதநிலமாக அங்குள்ள ஒவ்வொரு மண்ணும் ஒவ்வொரு துகளும் பெருமான் பெருமை பேச வல்லதாக அமைந்திருப்பதற்குக் காரணம் இப்பேரரசாட்சியே ஆகும்.

தாயின் செய்கை :

ஆண்டவன் உயிர்கள்மாட்டு வைக்கும் கருணைச் செயலாக, தன்னியல்கெட்டு உயிர்வாடும்பொழுது, நல்ல தாய் தன் குழந்தை நோய்கண்டு வருந்தி, மருந்தூட்டித் தீர்த்தல்போல, தண்ணருள்காட்டி உய்விக்கிறான் என்று சொல்லுகின்றன நம் பெருநூல்கள். அதேபோல, உய்வு வேண்டுவோரைத தன்னிடத்தே அழைத்து உலகியல் துன்பங்களினின்றும் காத்து, மனம் ஒருநிலைப்பட உதவி, திருவடி முத்தி இன்பத்திற்கு வழிகாட்டுகிறது பக்குவிகளுக்கு. முதிரா இளம்பிஞ்சான நம்மனோரையும் வளம் காட்டும் வகையாலும், வனப்புக் காட்டும் வகையாலும், சிறிது பக்தி உடையோர்க்குப் புனித இடங்களைக்காட்டும் வகையாலும், புனித நதிகளின் பிறப்பிடங்களைக் காட்டும்

வகையாலும் தன்னைக் காட்டி, தன்னிடத்தே இழுத்து எல்லோரையும் கனிவிக்கிறது.

சிவ சிந்தனை :

பெருமான் பொன்வண்ணத்தன். அந்தி வண்ணத்தன், வெண்ணீறுதுதைந்தமேனியன் என்று பெருமை பேசுகின்றன நம் திருமுறைகள். இங்கே அத்திருமேனியின் பொன்னிறங் காட்டி மேலே பனிப்படிவுகளைப் போர்த்து நிற்கும் காட்சி நம்மைத் திருமுறைச் சிந்தனையில் கொண்டுவிடும். பெருமான் ஒருபால் பெண் உகந்தான்; அப்பெண் கரிய உருவத்தினள்; பெருமான் பொன் வண்ணம்; இந்த இரண்டு திருமேனிகளும் பங்குகொண்ட நிலையில் ஒரு அர்த்தநாரீஸ்வர வடிவம். அதே திருவுருவக்காட்சி இங்கே காணலாம்:- ஒருபால் சூரிய ஒளி பட்டு பொன் கதிர் பரப்பும், மற்றொரு புறம் வெண்மையில் கருமை கலந்த ஒரு நிழல், இப்படி ஒரு சிகரம். ஒன்றல்ல இரண்டல்ல; எத்தனை எத்தனையோ. அந்தக் காட்சி கண்டவர் கண்ட நிலையிலேயே, பெருமானையும் பெருமாட்டியையும் மனத்தால் நினைந்து, கண்ணால் கண்டு, சிந்தை மயங்கி, ஒன்றி நிற்கச் செய்யும் ஒரு அருட் காட்சி. சிறிது நேரம் இவ்விதமாக மயங்கி நிற்கும் நமக்குக் காட்சி மாறிக்காட்டும். ஒளிவண்ணம் மாறிக் காட்டும். எவ்வண்ணத்தன், எவ்வுருவினன் எம்பெருமான் என்று எழுதிக்காட்டொணாதே என்று முறையிடுகின்ற திருமுறைச்சிந்தனை நம்முள்ளே வந்து புகுந்துகொள்ளும். அதிகாலையில் இருள் பிரிந்து, ஒளி வளர்ந்து, ஒளி மயங்கி இருள் கலக்கும் வரையிலும் ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு வண்ணம், ஒவ்வொரு காட்சி.

இப்படி இப்படி நம்மை மயக்கி இவ்வுலகச் சிந்தனையை மறக்கச் செய்து சிவசிந்தனையில் ஈடுபடுத்தும்.

சிவராஜதானி :

இமயம் ஒரு பெரிய சிவராஜதானி. அங்கே எங்கும் சிவபெருமானின் திருவுருவக் காட்சிகளே. ஒரு புறம் கங்காவிசர்ஜனர், மற்ரொருபுறம் அர்த்தநாரீசர், மற்ரொரு புறம் தனித்திருக்கும் செம்மேனி அம்மான், மற்ரொரு புறம் * பெருமானும் பெருமாட்டியும், மற்ரொரு புறம் சோமாஸ்கந்தர். மற்றும் மும்மூர்த்திகள். இப்படி இப்படி எத்தனை எத்தனையோ திருவுருவக்காட்சிகள்.

நள்ளிருள்நட்டம் :

இரவிலே பனிபடர் சிகரம் ‡ வெண்ணீறு போர்த்த பெருமான் திருவுருவம். மற்றமற்ற மோட்டைக்குன்றுகள் பேய்பூதக்காட்சி † ஒரு மயான அமைதி. நமக்கு எதை நினைவூட்டுகிறது. நள்ளிருள் நட்டம் ஆடும் நம்பனை. பேய், பூதங்கள் சுற்றி நின்ருடும் பேய்க்கூத்தினை. சூழ் நிலை ஊழிக்கால அமைதியினை. அங்கே ஒரு காரைக்கால் அம்மையார் என்றும் திருவடியிலே நின்று அந்த ஊழிக் கூத்தைக் கண்டு களிக்கிருர். ஒருவர் அல்ல எத்தனை எத்தனை அம்மையாரோ? இப்படியும் உண்டா? இதுவும்


---

* " முவருமாகி இருவருமாகி......" — சம்பந்தர்.

‡ " பொன்னின் வெண்திருநீறு புனைந்தெனப்
பன்னு நீள்பணிமால்வரை" —சேக்கிழார்.

† " கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம்" — சேக்கிழார்.

அமரநாத வழியில்



சேஷநாக் ஏரிக்கரையில் (14000 அடி)

அமரநாத வழியில்



மூவரும் ஒருவனாய முதல்வனோ

ஒரு கற்பனையா? ஆம்; கண்டது; நினைத்தது; சொல்ல முடியாதது. அந்தக் கூத்தை அங்கு நின்று காண முடியும். ஆனால் விளக்கமுடியாது.

பாம்பும் பூதமும்:

அந்நேரத்திலே அங்கு நிற்கும் நம்முளே ஒரு தனி அச்சம் புகுந்துகொள்ளும். நமக்கு மாத்திரம் அல்ல. அடியார்களுக்ும்கூட அப்படி ஆயிற்று எனலாம். திருவடிப் பேரானந்தத்தில் அயராது நின்று திளைக்கும் பேத்த நிலையில் உள்ளவர்களுக்கும் உண்டு போலும். நாலு பேர் சொன்ன மொழி, நாலுபேர் சென்ற வழி என்றெல்லாம் உலக வழக்காய் வழங்கக்கூடியதாக நடந்து காட்டிச் சென்ற சமய முதல்வர்களுக்கும்கூட அந்த அச்சம் இருந்தது எனலாம்.

சுந்தரர்பெருமான் திருவுருவைக் கண்டார் மேலே சொன்ன சூழ் நிலையில். அத்தோடு * பாம்புகள் திருமுடியிலும், கழுத்திலும், இடையிலும், திருக்கரங்களிலும்,

---

* "பாம்புகைக் கொண்டதும், பாம்படிகேள்
உமக்காட் செய அஞ்சுதுமே."

"முக்கப்பாம்பைக் கண்டத்திலும் தோளிலும்
கட்டிவைததீர்."

"முக்கப்பாம்பு. முடைநாறிய வெண்டலை
மொய்த்த பல்பேய்
பாடாவரு பூதங்கள்"

"உங்கை நாகமதற் கஞ்சுண்டு படம்
அதுபோகவிடீர் அடிகேள்
உமக்காட் செய அஞ்சுதுமே"

திருவடிகளிலும் எங்கும். 'பெருமானைக் கண்டோம். ஆரத் தழுவி திருவடி இன்பத்தைத் தீண்டிய தனி அனுபவத்தைப் பெறவேண்டுமே' என்று அவாவுகிறது அத்திருவுளம். ஆனால் அப்பாம்புகள் சீறி எழுந்து வளைந்து காட்டுகின்றன. பெருமான் காட்சி தந்து மகிழ் விக்க வந்த அந்தப் புன்முறுவல் அப்போதும் மாறவில்லை. அது அப்பெருமானை நெருங்க அழைக்கிறது; வாவென்று தன்கருணை காட்டுகிறது. நெஞ்சுரம் உள்ள அப்பரும், நெருங்கிய தோழருமான சுந்தரரும் கூட மயங்குகிறார்கள்.

"பெருமானே! உம்முடைய திருவுருவக்காட்சி கண் டேன்; காமுற்றேன். ஆனால் இந்தப்பாம்புகள் உம்மைச் சுற்றியுள்ள பூதங்கள் வெருட்டுகின்றனவே. அச்சமாக

"புலால் வாயன பேயோடு பூச்சொழியீர்"

"பெருங் காட்டகத்திற் பெரும்பேயும்
நீரும், துணிவண்ணத்தின்மேலும் ஒர்
தோல் உடுத்துச் சுற்றும் நாகத்தராய்
உமக்காட் செய அஞ்சுதுமே." — சுந்தரர்.

"பாக மொருபெண் குடியிருக்கும்
பரம னணியிற் பரித்தமணி
நாக நுழைவுற் றுடல்சுருண்டு
கிடந்து நகுவெண் டலைப்புழையிற்
போக மெல்லத் தலைநீட்டிப்
பார்த்து வாங்கப் போகும்ஒரு
தோகை மயில்வா கனப்பெருமாள்
துணைத்தாட் கமலந் தொழுதிடுவாம்."

— பிரபுலிங்க லீலை.

இருக்கிறதே நெருங்குவதற்கு. ஆனால் இவைகளைக் கண்டு அஞ்சி விலக மனமும் இல்லையே. இத்தருணம் தப்பினால் பின்னே ஒரு வாய்ப்புக் கிடைக்குமா? அற்புதக் காட்சி. நல்லதொரு ஆனந்தக் காட்சி. மயங்குகிறது என் மனம். தந்த காட்சி என்றும் என்னுளே நிலைத்து நிற்கத் திருவருள் பாலித்தருளல் வேண்டும். திருவடி தீண்டி வழிபட அருள் செய்தல்வேண்டும். என்னை மயக்காதீர். ஆண்டு அருள் செய்தல் வேண்டும் பெருமானே.'' இப்படி வேண்டுகிறார். அந்தப் பிரார்த்தனை திருமுறையில் தோய்வுடையாருக்கு அங்கே நினைவில் வந்துறும். அந்த இரவு நேரத்தில் அங்குத் தனித்து நிற்கிறோமே துணையாருமில்லையே என்ற நினைவு, நம்மைப்பற்றிய அச்சம் அங்கு வராது.

சொல்லவும் வேண்டுமோ :

பால் பிறைச் சந்திரன் அங்கே அதோ உச்சி முகட்டின் மேல் வந்து நிற்கிறான். பக்கத்திலே ஒரு அருவி பேரிரைச்சலோடு வந்து விழுந்துகொண்டே இருக்கிறது. சுற்றிலும் அடர்ந்த பயின் (Pine) மரக் காடுகள். அதனுள்ளே ஒளிபுகாத நல்ல இருட்டு. கீழே நெளிந்து செல்லும் மலைப்பாம்புகள். இப்படி ஒரு காட்சி. இந்தத் திருவுருவம் இன்னதென்று சொல்லவும் வேண்டுமோ? இப்படிச் சிறிது நேரம்.

விழித்தநிலை :

இவ்வண்ணம் முன்னே சொன்னதுபோல இருள் பிரியும் அந்நேரம் தொட்டு மறுபடியும் அதேநேரம் வரும் வரையிலும் நாள் முழுவதும் இரவும் பகலும் எந்நேரமும்

ஏகாந்தமாக அவனும் நாமுமாக ஏகபோகமாக இடையருச் சிந்தனையோடு சிவோகம் பாவனையில் அதுவே நாமேயாக நாமே நிற்போம். முற்றும் துறந்தவர்கள், முழுஞானியர் இவர்கள் நிலை? அங்கே, நாம் ஆர்? நம் உள்ளங்கள் ஆர்? என்ற வேற்றுமைக்கு இடமே இல்லை. நாமும் அவனும் இரண்டறக் கலக்கலாம். வீடுபேறு காணலாம். உலகியல் தோல்லை இல்லை. அங்கிருந்து விடுபட்டுக் கீழேவர மனம் இடம் தராது. மயங்கி மயங்கி அங்கேயே நிற்போம். கிடப்போம். பசி இல்லை. தாகம் இல்லை. உறக்கமும் வாராது. எப்போழுதும் விழித்த நிலை. இப்படி எல்லா அனுபவங்களும் தானே நமக்கு வந்து சித்திக்கும்.

வள்ளல் :

மேலே சோல்லியிருக்கிறது இமயம் ஒரு வள்ளல் என்று. வள்ளல் இலக்கணம் தமிழ் நாட்டவர்க்கு எடுத்துச் சோல்லவும் வேண்டுமோ? வரையாது கோடுப்பவன், வற்ருத வளம்படைத்தவன் வள்ளல் எனப்படுவான். பெருமானைக் கருணை வள்ளல் என்று சோல்வார்கள். வள்ளல் கருணை உள்ளம் படைத்தவனுகவும் இருத்தல் வேண்டும். கோடுக்கும் சேயல், ஏற்கும் ஒருவனை க குறைவு படாதிருக்கும்படிச் சேய்தலே கோடுத்த கோடையின் சிறப்பியல்பாகும். அதைப் போலவே இம்மலையரசன் தன் வள்ளண்மை தோன்ற வாரி வாரி வழங்குகிருன். அப்படி வழங்குவதால் அவனுடைய வண்மையும் குறைய வில்லை. வளமும் குன்றவில்லை. ஆயிரமாயிரம் ஆண்டு களாக வாரிவாரி வழங்கிக்கோண்டே இருக்கிருன். அந்த வழக்கம் மேலே சோல்லியபடி மக்களுடைய இகவாழ் விற்கும் பரவாழ்விற்கும் என்றும் குன்ருத வளம் பேருக வழங்கி வருவதாகும்.

புகலூர்க் காட்சி :

வேறு ஒரு விதமாகவும் நம்முடைய சிந்தனை வளர்கிறது. சமய முதல்வர்களில் அப்பர் பெருமானை நோக்கிச் செல்வதாக இருக்கிறது அது. உள்ளத்திலே சதா சிவ சிந்தனை. கண்களிலே வற்றாத அன்பு வெள்ளம். கரங்களிலே என்றும் குறையாத சிவத்தொண்டு. துறவுள்ளம் படைத்த அவர் மனமோ கல்லினும் உறுதி வாய்ந்தது. சொல்லோ அதனினும் உறுதி. இந்த அன்புமலை திருப் புகலூரை நாடிச்சென்றது. பெருமானிடமிருந்து அழைப்பு அங்கே வந்து காத்திருந்தது திருவடிக் கலப்புக்கு. அங்கே அப்பர் சுவாமிகள் திருநந்தவனத் தொண்டு செய்து மகிழும் நேரம். சுற்றிலும் நல்ல வண்ண வண்ண மலர்கள். நறுமணம் காற்றிலே மிதந்து வந்துகொண்டே இருந்தது. அப்பொழுது தேவ அரம்பையர்கள் வந்து அங்கே தோன்றி நின்றார்கள். பெருமானைச் சுற்றிலும் சூழ்ந்துவந்தார்கள். நெருங்கி நெருங்கி வந்தார்கள். சுற்றிச் சுற்றி நின்று ஆடினர். பாடினர். பூமாரி பொழிந்தனர்.

இப்படி நல்ல இனியதொரு சூழ்நிலையிலே அப்பர் பெருமான் அங்குள்ள களைகளை வாங்குவதற்கு உழவாரத்தை மண்ணிலே புதைத்து எடுக்கும்பொழுதெல்லாம் பருக்கைக் கற்களோடு ஒளிவீசும் பொன்னும் மணியும் கலந்து வந்துகொண்டே இருந்தன. இவ்விதமாக எல்லாம் அகக்கண்ணையும் புறக்கண்ணையும் ஈர்க்கத் தக்கதான இனிமை; மனத்தை மயக்கி மாற்றச் செய்யத் தக்கதான இனிமை. அப்பர் பெருமான் உறுதியைச் சோதிக்கவே இந்த ஆடலும் பாடலும் மற்றைச் செயல்களும். ஆனால் அவருடைய திருவுளத்திலே மாற்றம் நிகழ்ந்ததா ? அதுதான் இல்லை. வேறென்ன நிகழ்ந்தது.

திருவடிக்கீழ் நினைவு அகலாத அன்புருகும் மெய்த் தன்மை உணர்வுடைய விழுத்தவத்து மேலோரான அப்பர் சுவாமிகள் தம் சித்த நிலை திரியாது செய்பணியின் தலை நின்ருர். இந்தச் சூழ்நிலை அவருடைய மன உறுதியை மாற்றும் வலிமையுடையதாயில்லை. 'திருவாரூர் அம்மா னுக்கு ஆளானேன். அலையேன்மின் நீர்' என்று சொல்லி எல்லாவற்றையும் வென்று 'தன்னுடைய சாரணை தமியேனைப் புகலூரான் என்னை இனிச் சேவடிக்கீழ் இருத் திடும்' என்று வேண்டினுர். நிறைவுறுகிறது. நண்ணரிய சிவாநந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு இருந்தார். இப்படி ஒரு சித்திரம்.

இமயமும் அப்பரும் :

இதனை இமயம் இப்போழுதும் இருந்து காட்டுகிறது. பனிப் போர்வை போர்த்த நிலை மெய்த்தவத்தோரினது நீற்றுக் கவசமேன நிறைந்து நிற்கிறது. கருணை (கண்) போழி நீராக ஆங்காங்கும் அருவிகள். அசைவில்லாத சிந்தனை அலைவில்லாது நிற்கும் ஒரு நிலை. கடுங்காற்றும், பெருமழையும் கோடும்பனியும் மந்தமாருதமும் எல்லாமும் அதனை எவ்விதத்திலும் அசைக்கவோ, நின்ற நிலையில் பேயர்க்கவோ, சூழ் நிலையை மாற்றவோ முடியவில்லை. போன்னும் மணியும் அங்கே சிதறிக் கிடக்கின்றன. அருவிகள் ஆறுகள் இவை வழியே போன்னையும், மணிகளையும் பருக்கைக்கற்களையும் ஒக்கவே வாரி வாரி விடுகிறது. அச்சேயல் அப்பர்பேருமான் சேயலோடு ஒத்து வருவதையும் காணலாம். சேம்போன்னும் நவ மணியும் சேண்விளங்கு ஆங்கவையும் உம்பர்பிரான் திருமுன்றில் உள்பருக்கையுடன் ஒக்க எம்பேருமான்

வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி வம்பலர் மேன் பூங்கமல வாவியினில் புக எறிந்தார். இங்கேயும் இமயம் தன்னிட மிருந்து போன்னேயும் மணிகளேயும் மற்றைப் பருக்கைக் கற்களோடு வேகமாக அடித்தேடுத்துச் சேல்லும்படி ஆறுகளில் அள்ளி விடுவது. மேய்த்தவத்து மேலோர் தம் சித்தநிலே திரியாது பணி சேய்யும் பான்மையைக் குறிக்கிறது.

இங்கேயும் மலர்ச் சோலேகள். இன்பம் தரும் மந்தமாருதம். அமரர் இருக்கையோ என ஐயுற அமைந் திருக்கும் அழகு போலியும் இடங்கள் பல. ஆடலுக்கும் பாடலுக்கும், இத்திருமலேயில் அரம்பையர் ஆடல் முழ வுடன் மருங்கில் அருவிகள் எதிர் எதிர் முழங்கிக்கோண்டே யிருக்கிறதேன்ற பேரியபுராண அடியினேயும் கூட்டிப் பார்த்தல் சிறப்பு. அப்பர்பேருமானுடைய தவக்கோலத்தை படம் பிடித்துக் காட்டுகிறது இது.

இமயத்தின் பக்தி வெள்ளம் :

"உன்றன் நாமம் கேட்ட மாத்திரத்திலே பதைத்து உருகி இரு கண்களிலும் ஊற்றுப் பேருக்கேடுக்கும் பல பேரன்பர்கள் இருக்கிருர்கள். வேறு எங்கேயோ இருப்ப தாகக்கூட இல்லே. என்னேயே தவச்சாலேயாகக்கோண்டு என்மிதே வாழ்கிருர்கள். அது உனக்கும் தேரிந்ததே. அவர்களுக்கு உன்னுடைய திருவருட்காட்சி இன்னும் கிட்டவில்லே. திருவடிப் பேரானந்தம் இன்னது என்ப தையும் அவர்கள் உணரும்படியான வாய்ப்பும் இல்லே. அவர்கள் ஆறறிவுக்கு மேலறிவு பேற்றவர்கள். அவர்கள் அப்படி உருகிநிற்க, அவர்களே விடுத்து, கல்லாகிய (மலேயாகிய) என்னேத் தேர்ந்தேடுத்து உன்னே

இன்னான் என்று பெயர் சொல்லி உன்னுடைய வல்லமை எல்லாம் சொல்லி என்னையே இருக்கையாகக் கொண்டீர்''.

'' அப்படி அமர்ந்திருந்து உம்முடைய கருணைவெள்ளம் எல்லா உயிர்களுக்கும் கிடைக்கும்படி வழங்குகிறீர். அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப உணர்ந்து பயன் பெருக்குகிறார்கள் அவர்கள். உம்முடைய சடைக் காட்டில் கங்கையைத் தேக்கி மக்களுக்கு வழங்குகிறீர். உம்முடைய திருமேனி வெண்ணீறு சண்ணித்த திருமேனி. உம்முடைய வாகனமோ பால் வெள்ளேறு. இவ்விதமான திருக்கோலக் காட்சி எனக்கு வழங்குகிறீர். இந்தக் காட்சியைக் கண்ட பெருமக்கள் 'உடம்பெல்லாம் கண்ணாக இல்லையே. உடம்பிலுள்ள உறுப்புக்களில் கண் மிகச் சிறியதாக அமைந்திருக்கிறதே. அருமையான காட்சி கண்டோமே. அரியபேறு கிடைத்தும் நெஞ்செல்லாம் கல்லாக இருக்கிறதே. உருக்கம் காணவில்லையே. அமைந்திருக்கும் அந்தக் கண்களும் ஆனந்த வெள்ளம் பொழியாது மரக்கட்டைகள் போன்று இருக்கின்றனவே' என்று சொல்லி ஏங்குகிறார்கள். அவர்களுடைய அவாமேலீட்டைத்தான் இது காட்டுகிறது. மழைவாரும் இணைவிழியும் பதைப்புள்ள நெஞ்சும் உடையவர்கள்தான் அவர்கள். அவர்களுடைய பேராசை - அப்படிச் சொல்வது பொருந்தாது - பேரவாவின் பெருக்கத்தைக் காண்பதுதான் அச்சொல்''.

'' மக்களாகப் பிறந்தவர்களுக்கு மாத்திரம் ஏற்படும் என்பதில்லை இந்த நிலை. ஜடமாக அதுவும் கல்லாகப் பிறந்த நானும் பெருமான் கருணை காட்டி என்மீது திருவடி தோய எழுந்தருளி உள்ள பெருமையை உணருகிறேன். என்மீது வளர்ந்துநிற்கும் அந்த மரங்களும் செடிகளும் புல்பூண்டுகளும்கூட உணர்கின்றன. அந்த உணர்ச்சியை

வெளிப்படுத்த மக்களுக்கு அமைந்துள்ளதுபோன்ற நெஞ்சுறுப்பும் கண்ணுறுப்பும் எங்களுக்கு அமையவில்லை ''.

'' ஆகவே உள்ளுணர்ச்சியை இயற்கையாக வெளிப்படுத்தும் செயலற்றவர்களாக இருக்கிறோம். அதற்கு ஒரு செயற்கை வேண்டியிருக்கிறது. அதுதான் இந்தப் பனிப் போர்வை. உள்ளுருக்கமாக உருகி ஆறுகளும் அருவிகளும் ஓடி ஆகின்றன. மரங்கள் பனித்துளி சிந்திக் கண்ணீர் சிந்துகின்றன. என்னுடைய கண்கள் போன்ற மரங்களிலும் நீர்த்துளிப்புக் காட்டுகிறேன். நெஞ்சாகிய கற்பாறை மீதும் உருக்கத்தை வெளிப்படுத்துகிறேன். ஆகவே ஜடமாகிய என்னால் இப்படித்தான் என் உணர்ச்சியை வெளிப்படுத்த முடிகிறது தீவினையேனுக்கு '' என்று சொல்லுவதாக ஒரு காட்சி.

மௌன உபதேசம் :

இவ்விதமாக அங்கே நாம் காணும் ஒவ்வொரு காட்சியும் நம்மைத் திருமுறைச் சிந்தனையில் பெரியோர்களுடைய செய்கையாக, அவர்கள் கண்ட அனுபவமாக, காட்சியாக எங்கும் நிறைந்து நிற்கிறது. நம்முடைய அறிவுக்கு நல்ல விருந்து. அறிவோடு உயிரும் பயன் பெருக்கவும் உதவுகிறது. அவமாகக் காலம் கழிய இடம் இல்லை அங்கே. சிந்தனை சிவனையே நாடிச் செல்லுகிறது. எல்லாம் மௌன உபதேசம் ; மௌனத் திரைப்படக் காட்சிகள் தாம்.


அறிவுக்கு விருந்து :

இமயம் ஒரு பொழுதுபோக்கு இடம். ஒரு காட்சிச் சாலை. ஒரு ஆராய்ச்சி நிலையம். மருந்துச் சாக்கறை.

ஞானத்தவ பூமி. அரன் உறையும் பெருந் திருக்கோயில். யார் யார் எவ்வெவ்விதத்தில் அங்கு மனத்தை - செயலை ஈடுபடுத்த முடியுமோ அவ்வவரையும் அவ்வச் செயலுக்கு என தன்னிடத்தே இழுத்து அவரவர் மனமகிழ் முடிவுகளைக் காட்டி என்றும் எல்லோரும் தன் நினைவாகவே இருக்கும் படிச் செய்கிறது ஒருமுறை தன்னை நாடி வந்தோர் தம் வாழ்நாளில் எவ்வெப்பொழுது சமயம் வாய்த்தாலும் தன்னை நாடிவரச் செய்துகொண்டே இருக்கிறது. அவரவர் அவ்வப்பொழுதும் காணும் முடிவு - கண்டபயன் போதாது; மேலும் மேலும் வற்றாத ஊற்றாக அவரவர் சிந்தைக்கு - அறிவுக்கு புதுப்புது விருந்து காத்திருக்கிறது என்றும் காட்டி வருகிறது. நம் நாட்டவரும், மேலை நாட்டவரும் கீழை நாட்டவரும், எந் நாட்டவரும் ஆண்டு முழுவதும் ஏதோ ஒரு நாட்டம் கொண்டு வந்துகொண்டே இருக்கும் படிச் செய்கிறது


அவரவர் முடிவு :

இங்கே வந்து மண்வளம் கண்டோர் சிலர். மலை வளம் கண்டோர் சிலர். காட்டுவளம் கண்டோர் சிலர். பனிவளம் கண்டோர் சிலர். உயிர்வளம் கண்டோர் சிலர். உடல்வளம் கண்டோர் சிலர். பனிப் படிவின் ஆழம் கண்டோர் சிலர் வான் முகட்டின் உயரம் கண்டோர் சிலர். மண்ணில் புதை மணிகள் கண்டோர் சிலர். பொன் கண்டோர் சிலர். மலர் கண்டோர் சிலர். உயிரினம் வகை கண்டோர் சிலர், அவற்றின் வாழ்வு கண்டோர் சிலர். இன்னும் பலவும் பலரும் கண்டுவந்து தாம்தாம் கண்டதே இமயம் என்று களித்து மகிழ்வர். இந்தப் புநித மலையை திருக்கயிலாய பரம்பரைத்



அம்மையும் அப்பனும்

அமரநாத யாத்திரை :



திருமுறைத்தோய்வு

தருமபுரம் ஆதீனம் 25-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தம் ஆன்ம வளம் பெருக்க, தவவளம் பெருக்கத் தவருது சென்று கண்டுவருகிருர்கள். முன்னே கேதார நாதம், அடுத்துப் பசுபதிநாதம், இப்பொழுது அமரநாதம் யாத்திரை சென்ருர்கள். நற்பலன் கண்டு வந்தார்கள். அங்கே அவர்கள் கண்டு அனுபவித்த அத்தனேயும் சொல்லால், எழுத்தால் எடுத்துக் காட்டமுடியாது. அனுபவம் சொல்லுக்கு அப்பாற்பட்டதன்ருே ?

உ. காஷ்மீரம்

அருமைக் குழந்தை :

இமயத்தின் மடியில் நின்று விளேயாடும் ஒரு அருமைக் குழந்தை காஷ்மீரம். சுற்றிலும் பல ஆயிரக்கணக்கான அடி உயரமுள்ள மலேத்தொடர்கள். நடுவிலே ஒரு பள்ளத்தாக்கு. ஒரு பேரரசின் அருமந்த பிள்ளே அங்கே தவழ்ந்து விளேயாடுவதுபோன்ற அமைப்பு. குழந்தை மீது அனல் காற்றும் வேறு எதுவும் பட்டுவிடக்கூடாதே என்ற கவலே அவ்வரசனுக்கு. சுற்றிலும் உள்ள மலேத் தொடர்களின் சிகரங்களில் பனிப்போர்வை போர்த்து உள்ளே நல்ல மந்தமாருதம் அடித்துக் கொண்டே இருக்கிறது. குழந்தை வேடிக்கை பார்ப்பதற்கு பலவேறு வண்ண ஓவியக் காட்சிகள், விளேயாட்டுக் கருவிகள்போலப் பலபல உருவில் அமைந்த மலேச் சிகரங்கள். வண்ண வண்ண நறுமலர்கள், அருவிகள், ஆறுகள் கோபுரம்போல் அமைந்த நல்ல மரக்காடுகள்

எப்போழுதும் இன்பப் பொழுதுபோக்காகச் சுற்றிலும் எங்கும் விளையாட்டிடங்கள்.

இன்பமே :

குழந்தை எப்பொழுதும் இன்பம் கண்டு நல்ல சூழ்நிலையில் வளர்க்கப்படல்வேண்டும் என்ற கவலை அவ்வரசனுக்கு. அரம்பையர் சூழநின்று ஆடலும் பாடலும் காட்டுவதுபோல இனிய குரல் எழுப்பும் பறவைகளும் வண் டினங்களும். இப்படிச் செல்வத்திலும் சீரிலும் மேம்பட்ட தாக அக்குழந்தை வளர்கிறது. சமவெளியில் உள்ள எந்தச் சிறு துன்பமும் அதனை எளிதில் அணுகமுடியாத உயரத்தில் வைத்திருக்கிருன் அவன். இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்ற சொல்லுக்கு இலக்கியமாக அது விளங்குகிறது எனலாம்.

குறிக்கோள் :

"குழந்தை செம்மையாக வளரவேண்டுமானுல் நுண் கலை உணர்ச்சி அதற்கு(ப்பழக்குவித்தல்) அமைதல்வேண் டும். நுண்கலை வளர்ச்சி வெளிநுகர்ச்சியாகமட்டும் அமை தல் கூடாது. உள்மனத்திலே பதிதல் வேண்டும். வெறும் உலகியலோடு ஒட்டிய நுண்கலையானுல் அதில் மனம் நிறைவு பெருது. தான் கண்டதை - அனுபவித்ததைவிட வேருேர் உருவில் இன்பம் காணமுடியும்; தான் காணுத ஒன்றில் தான் இன்பம் இருக்கிறதேன்று மனத்திலே அவா மேலிடவழியுண்டு. தன்னைச்சுற்றிலும் எவ்வளவு சிறப்பாக அமையப்பேற்றிருந்தாலும் அந்தச் சூழ்நிலையிலே ஒரு சலிப்புத் தட்டிவிடுதல் உண்டு. இதற்கு மாற்று சமயப்பயிற்சி ஒன்றுலேதான் அமையும். மனத்திலே ஒரு

உறுதி பிறக்கும். கண்டதிலே முழு இன்பத்தையும் அனுபவிக்க அந்த மன அமைதி உதவியாக அமையும். தன் குழந்தை துன்பங்கலவாத இன்பம் நுகரவேண்டும். அதிலும் அதற்குச் சோர்வு காணுதல் கூடாது. அனுப வத்தில் தோயத்தோய அதிலே ஒரு புதுமை காணும் போது நெறியில் பழக்குவித்தல் வேண்டும்'' என்பது அந்த நல்ல தந்தையின் குறிக்கோளாகவும் இருத்தல் வேண்டும்.

மனப் பண்பு :

அந்த நாடு முழுவதும், நல்ல பசிய பூஞ் சோலைகள், ஏரிகள், ஆறுகள், அடவிகள், காடுகள் இப்படியே இருந்தாலும், ஆங்காங்கும் பலபல பெருந்திருக் கோயில்களும், புனிதக் குகைகளும், பெருமான் இருப் பிடமாகப் பலபல பெரிய மலைச்சிகரங்களும் அமைந்து விளங்குகின்றன. ஹிந்து மகமதிய திருக்கோயில்கள் பல நூற்றுக்கணக்காக விளங்கிவருகின்றன. மக்களுடைய மனப்பண்பும் இது முகமதியாது, இது ஒரு இந்துவி னுடையது என்ற வேற்றுமை உணர்ச்சிக்கு அங்கு இடம் தருவதாக இல்லை. விழாக்களிலும் அதேநிலை. இந்த நல்ல அரிய காட்சி எங்கும் காணமுடியாத ஒன்று. முகமதியர் எண்ணிக்கையில் அதிகம்; இந்துக்கள் குறைவு. ஆனாலும் எல்லோரும் ஓர் குடும்பமாக ஒரே நிறையில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றனர். இவ்விதமாக அக்குழந்தையை நல்ல சூழ்நிலையில் நல்ல குணப்பண்பாட்டோடு நல்ல பாதுகாவலில் அழகின் சிகரமாக, என்றும் அழகுணர்ச்சி குன்றாதநிலையில் காத்து வளர்த்து வருகிறது இமயப் பேரரசு. இந்த அருமை காண உலகின் எல்லாப் பகுதி களிலுமிருந்தும் பலரும் வருகிறார்கள்.

3. அமரநாதம்

குட்டிக் கயிலாய யாத்திரை :

இளமை மாருத காஷ்மீர நாட்டிலே அமரநாதம் அநந்தநாகம், மாட்டன். கீர்பவாநி, ஹரமுக், ஹரிபர்வதம் முதலிய சைவப் பெருந் திருக்கோயில்களும், ஜீலம், சேஷ நாகம், பஞ்சதரணி, அமராவதி முதலிய பெருந் தீர்த்தங் களும் அமையப்பெற்றிருக்கின்றன. அடியார்கள் ஆயிரக் கணக்கில் வந்து கொண்டே இருக்கிருர்கள். இவற்றுள் சிறந்த அமரநாத யாத்திரை நல்லதொரு அருமையான அநுபவம். அமரநாத யாத்திரை ஒரு குட்டிக் கயிலாய யாத்திரை என்றே சொல்லலாம். இமய அமைப்புக்கள் எல்லாம் உடையது. வரும் அடியார் உறுதிகண்டு சோதித்து, வெற்றி பெற்ரோர்க்குத் தன் தண்ணருள் வழங்கிக் காட்சி தந்து உய்விப்பது.

அப்புலிங்கம் ; அமரநாதன் :

பெருமான் பஞ்சபூதங்களிலே விரவி நிற்கிருன். பஞ்ச பூதங்களாகிருன் என்றும் திருமுறைகள் சொல்லுகின்றன. அவற்றுள் (அப்பு) நீர் நிலையாக நின்று காட்டும் திருக் கோலம் இது. நீரிலே ஒரு இலிங்கத் திருமேனிகொண்டு வெளிக் கண்ணாலும் கண்டு தரிசிக்க வகை செய்கிறது அங்கே. நீர் நிமிர்ந்து நிற்குமா ; நிற்க வேண்டுமே. திருவருள் திறம் காண அந்த நீரும் பனிக்கட்டியாக உறைந்து இலிங்கத் திருமேனியாகக் காட்சி அளிக்கிறது. அதுவும் வளர்பிறையில் ஒவ்வொரு நாளாக வளர்ந்து தேய்பிறையில் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து உவா (அமாவாசை) நாளன்று அருவத் திருமேனியாகிறது.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய், ஒன்ருய், என்று அடியார்கள் பாடுகின்ற நிலையை மெய்ப்பித்துக் காட்டுவதுபோல வெற்றிடத்திலே - ஒரு குகையின் கடைசி இடத்திலே - வளர்ந்து வளர்ந்து தேய்ந்து தேய்ந்து அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப நிலைகாட்டி அருள் வழங்கு கிறது. அங்கே சென்று கண்டவர்கள் அமரர் ஆகிருர்கள். அவர்களுக்கு இனிப் பிறப்பு இல்லை என்று சொல்லுகிறது தல மகிமை. நதி அமராவதி. பெருமான் அமரநாதன். தேவாதிதேவனுகக் கடல் மட்டத்திலிருந்து 13000 அடி உயர்த்திலே, தமிழ்நாட்டிலிருந்து இரண்டாயிரம் மைல் களுக்கு அப்பால், இமயத்தின் நடுவிலே அருள் ஒளி பரப்பி நிற்கிறது அமரநாதம்.

4. யாத்திரை

வாய்ப்புக்கிடைக்குமா ?

"காஷ்மீரத்தில் அமரநாதம் என்று ஒரு புநிதஸ்தலம் இருக்கிறது. அங்கே பெருமான் பனி இலிங்க உருவில் காட்சி வழங்குகிருன். செல்லும் பாதையோ மிகக் கடுமையானது. பலர் சேர்ந்து செல்லவேண்டுவது. தனியே சென்ருல் அச்சம் தருவது. அப்படிச் சேரவேண்டு மானுல் ஆண்டு முழுவதும் பல சமயங்களில் பலரும் கூடுவது இல்லை. ஆண்டுக்கு ஒருமுறை ஆவணிமாத பௌர்ணமி அன்று பெருந் திருக்கூட்டம் ஒன்று சேர்ந்து அங்கே செல்லும். அதுவும் ஆயிரக்கணக்கில். ஒருவர் இருவர் தனித்துச் செல்லுவது முடியாது. சென்று சேர்வதில் எவ்வளவு துன்பம் இருந்தாலும் திருவுருவைக்

கண்டதும் பட்ட துன்பம் மறந்தேபோகும். நாம் முன்னே எப்போழுதும் அனுபவித்தறியாத பேரின்பத்தில் நம்மை ஆழ்த்திவிடும்.'' என்ற செய்தி வடநாட்டு யாத்திரையாகச் சென்ற காலங்களில் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்திற்கு எட்டியது. 'வழிச்செலவு துன்பம் தருவ தாயும், அங்குச்சேரும் திருக்கூட்டத்தின் உடன் உறைவு தனி இன்பத்தைத் தருவதாயும் இருக்கும். அரசனுயினும் அத்திருக்கூட்டத்தில் கலந்து செல்லுதல் ஒன்றே சிறப் பானது' என்றும் சோன்னார்கள். எத்தகைய சிறப்புடை யதாக இருந்தாலும், ஒரு அற்புத வாய்ப்புக் கிடைக்குங் காலத்தில், பெருமான் வழிபாட்டில். பரபரப்பு, ஒரு பெரும் கூட்டத்தின் ஆரவாரம் இவை நிகழுமேல் மனத்தின் ஒருமை கேட்டுச் சிந்தை சிதைவுறும். கூடியவரை கூட்டம் குறை வாக, எல்லாவற்றையும்விடத் தனித்து இருந்து தரிசனம் செய்யும் வாய்ப்புக்கிடைக்குமா என்று மகாசந்நிதானத்தின் திருவுளம் கனிந்தது. அந்த வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தது.

உத்தரவு பிறந்தது :

ஒருநாள் செய்தித்தாளைப் புரட்டிக்கோண்டே வரும் போழுது ''அமரநாத யாத்திரைக்காக 7000, 8000 அடியார்கள் கோண்ட திருக்கூட்டம் ஒன்று ஸ்ரீநகரை விட்டுப் புறப்பட்டிருக்கிறது. 24—8—1958 ஆவணி யவிட்டத்தன்று விழா. அதற்கு 'காங்கண விழா' என்று பெயர். அத்திருக்கூட்டத்தில் பேரிய பேரிய மகான்களும் பேரியோர்களும் கலந்திருக்கிருர்கள். பெருமான் புகழ் பாடிக்கோண்டே செல்லுகிறது அத்திருக்கூட்டம்'' என்ற செய்தியைக் கண்டார்கள். ''இவ்வாண்டு நாமும் அமர நாதம் சென்று வழிபட வேண்டியதுதான், எப்படிச்

செல்லுவது. விழாவன்று செல்லுதல் வேண்டாம் பெருமான் நமக்கு என்று போனாலும் காட்சி வழங்குவான் தனித்து நாம் மட்டும் போதல் வேண்டும். ஆவன நடக் கட்டும்'' என்று உத்தரவாயிற்று.

சில ஆண்டுகளுக்கு முன்னே அமரநாதம் சென்று கண்டுவந்த ஒருவர் ஸ்ரீ காசியில் இருக்கிருர். திருப்பனந் தாள் ஸ்ரீ காசி மடத்தைச் சேர்ந்த ஸ்ரீ குமாரசாமி மடத்தில் தொண்டுசெய்பவர் அவர். அவருடைய அனுபவம் நமக்குப் பயன்படும் என்ற கருத்தில் அங்கு மானேஜராக உள்ள திரு. கல்யாணசுந்தரம் பிள்ளைக்குக் கடிதம் எழுதிக் கேட்டேன். ''ஆகஸ்டுமாதத்தில் ஒருநாள், அதாவது ஆவணியவிட்டத் தன்று மட்டும் எவரும் செல்லலாம். மற்றைய நாட்களில் யாரும் அங்கு போவதாகத்தெரியவில்லை. அப்படி செல்லக் கூடுமா என்பதை விசாரித்து அறிந்து எழுதுகிறேன்'' என்று மறுமொழி வந்தது. இச்செய்தியும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் திருமுன்னர் தெரிவிக்கப்பட்டது. ''இது பற்றிய விசாரணை போதும். யாத்திரை போவது உறுதி செய்யப்பட்டுவிட்டது. அழைப்பை எதிர்நோக்கி உள் ளோம்'' என்று உத்தரவாயிற்று.

புறப்பாடு :

ஒரு வியாழன்; நல்லதோரு மௌனநாள்; 28–9–'58. திருமுன்னர் அழைக்கப்பட்டேன். 'யாத்திரை செல்லலாமே என்ற குறிப்பு வெளிப்பட்டது. யார், யார் ? எப்பொழுது ? புரியவில்லை. ''உத்திரவுப்படியே செய்கிறேன்'' என்று பணி வாகச் சொல்லிவிட்டு என் இடம் சேர்ந்தேன். பகல் 3-30 மணி அளவில் ''மகாசந்நிதானத்தில் அழைக்கிறது. சென்னை செல்ல உத்திரவாகி இருக்கிறது. பிரசார வாகன மும் புறப்பட்டுவிட்டது. வாருங்கள்'' என்று அழைப்பு

வந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருமுன்னர் உத்தரவு பெற்றுப் புறப்படலாம் என்ற எண்ணத்தோடு திருமடம் சேர்ந்தேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஓய்வு நிலையில் ஒடுக்கத்தில் எழுந்தருளியிருக்கிறது என்று தெரிந்தது. தரிசிக்க முடியவில்லை. "பிரசாரவாகனம் முன்னே செல்லட்டும். உத்தரவானால் நான் ரயிலிலாவது சென்னைக்கு வந்து சேர்ந்துவிடுகிறேன்" என்று சொல்லி அனுப்பி வைத்தேன். மாலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசித்தேன். ஒரு புன்முறுவல் தோன்றியது. 'திட்டம் பெரிதாய் இருக்கவேண்டும். மௌன நாளாகவே விளக்கமாகக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல் வேண்டாம். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துடன் புறப்படுவதாக இருந்தால் நல்லதோரு வாய்ப்புத்தானே" என்று அமைந்தேன். இரவு எட்டு மணி. மாயூரம் வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி தரிசனத்திற்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளியாயிற்று. உடன் சென்றேன். தரிசனம் முடிந்ததும் தருமைக்கு மீண்டும் எழுந்தருளி வந்துவிட்டார்கள். வந்து சிறிது நேரத்திற்கெல்லாம் "ஆயத்தமாகி விட்டதா? புறப்படலாமா?" என்ற குறிப்புத் தோன்றியது. புறப்பாடும் ஆயிற்று. வழக்கம்போல அடியார்களும், மடாலயத் தொண்டர்களும் வழி அனுப்பினார்கள். சென்னையை இரவு 2 மணிக்குச் சென்று அடைந்தோம். மௌனநாள் ஆகவே வழியிலேயும் பேசிப் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பில்லை.

திட்டம் :

மறுநாள் வெள்ளிக்கிழமை. நித்திய வழிபாடுகள் முடிந்து மயிலாப்பூர் தரிசனத்துக்கு எழுந்தருளினார்கள்.

அங்கிருந்து ஒற்றியூர் சென்று வரும்வழியிலே '' அமர நாதம் செல்லுவதாக இருந்தால் வழி எப்படி ? காரிலேயே செல்லலாமா ? எத்தனை நாட்களில் அங்கு சென்று அடையமுடியும் '' என்ற கேள்விகள் பிறந்தன.

சமயப் பிரசார நிலயம் வந்ததும், தேசப்படத்தை வைத்துத் தொலைவைக் கணக்கிட்டு, ஒவ்வொரு நாளும் இத்தனை இத்தனைமைல்கள் செல்வது. இன்னஇன்ன இடத்தில்தங்குவது என்ற ஒரு திட்டமும் தயாராயிற்று அதன்படி சற்றேறக்குறைய 2,400 மைல்கள் என்றும், நாள் ஒன்றுக்கு 300 மைல்கள் வீதம் செல்வதாக இருந்தாலும் எட்டு அல்லது பத்து நாட்களில் காஷ்மீரத்திலுள்ள பஹல்ஹாம் (Pahalgam) சென்று அடையலாம் ; பிறகு கால்நடை என்று முடிவு செய்தோம். மேலும் சில விளக்கங்கள் தேவையாக இருந்தன. சென்னையில் உள்ள காஷ்மீர நாட்டுச் செய்தி நிலயத்துக்குச் (Kashmir Government Information Office) சென்றோம். அங்குச் சில குறிப்புக்கள் கிடைத்தன. அதுவும் போதிய அளவு துணை செய்வதாக இல்லை.

நுழைவுச் சீட்டு :

ஜம்மு காஷ்மீர நாட்டுக்குள் புகுவதற்கு நுழைவுச் சீட்டுப் பெறுதல் வேண்டும. பெறுவது எளிதில் முடியும். சென்னையிலேயே போலீஸ் கமிஷனர் அவர்களிடம் அனுமதிச்சீட்டுப் பெற்றுவிடலாம். மற்ற வெளியிடங்களில் இருந்துவருவோர், அந்தந்த ஜில்லா கலெக்டர்களிடம் அனுமதிச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். இவ்வை அல்லாது பாரதத்தின் தலைநகரான புதுடில்லியில் ராணுவ மந்திரிக் காரியாலயத்திலும் நுழைவுச்சீட்டு பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரியவந்தது. இதற்காகக் கொடுக்கப்படும்

விண்ணப்பங்களில் கெஜட்டுப் பதிவுபெற்ற அதிகாரி ஒருவருடைய மேலொப்பம் வேண்டியிருக்கும். சென்னைநகர சிவில் கோர்ட்டின் தலைமை நீதிபதி திரு. S. A. அய்யாசாமி செட்டியார் அவர்கள் நுழைவுச்சீட்டுக்கள் பெறுவதற்குப் பெரிதும் உதவியாக இருந்தார்கள்.

காஷ்மீரநாட்டைப்பற்றி:

காஷ்மீர ராஜ்யத்திற்கு அந்தந்தப் பருவத்திலும் பொழுதுபோக்குக்கு எனவும், பல பந்தய விளையாட்டுக்களுக்கு எனவும், சமவெளிப்பிரதேசத்திலுள்ள கொடும் வெம்மையின் அயர்வு போக்கிக்கொள்ள குளிர்ப்பிரதேச வாசத்திற்கு எனவும், அங்குள்ள அழகுக்காட்சிகளை அனுபவிப்பதற்கு எனவும் பெரும்பாலோர் காஷ்மீரம் செல்லுகிறார்கள். அந்நாட்டிலுள்ள பல வனப்புப் பகுதிகள், வளமான நீர்நிலைகள் முதலியவற்றின் சிறப்புச் செய்திகளைக் குறித்து அந்த ராஜ்ய அரசாங்கமும் பல துண்டுப் பிரசுரங்களும் விளம்பரங்களும் வெளியிட்டு மக்களை அழைக்கிறார்கள்.

அந்த நாடு உருவிலும், மக்கள் தொகையிலும், வருமானத்திலும் மிகக் குறைவானது. குடிசைக் கைத்தொழில் அல்லாது வேறு யந்திரத்தொழில்கள் அதிகம் பெருகவில்லை. அங்குத் தொழில்வளம் பெருக வசதிகள் இருந்தும் அதிக கனமுள்ள இயந்திரப்பகுதிகளைக் கொண்டு சேர்ப்பதற்கு நல்ல உறுதியான பால அமைப்புக்கள் கொண்ட சாலைகள் பெருகவில்லை. இப்பொழுது உள்ள பெரும் பாட்டைகள் நமது ஊரில் உள்ள இரண்டாம்தரச் சாலைகளையொத்து இருக்கின்றன. பாலங்கள் பெரும்பாலும் மரத்தால் ஆனவை. மலைச்சரிவினூடே ஏதாவ

தோரு ஆற்றின் கரையை ஒட்டிப் பாதைகள் செல்லு கின்றன. ஒருபக்கம் பல நூற்றுக்கணக்கான அடி உயரமுள்ள மலைப்பகுதிகள். மற்றொரு பக்கம் பல நூற்றுக்கணக்கான அடி ஆழத்தில் மிக வேகமாகப் போங்கி விழுந்தோடும் ஆறுகள்.

நடுநடுவில் ஆங்காங்கும் மலை உச்சிகளிலிருந்து கல்லையும் மண்ணையும் பெயர்த்துக்கோண்டு ஓடிவரும் பல அருவிகள். மழை சிறிது பெய்தாலுங்கூட உச்சியில் பெய்த மழைநீர் கல்லையும் மண்ணையும் கரைத்தேடுத்துக் கற்குழம்பாகச் சாலையின்மீது பல அடி உயரம் வந்துவழிந்து தேங்கிவிடுகிறது. அதை அப்புறப்படுத்த நூற்றுக் கணக்கான ஆட்கள் இரவும் பகலும் சிலநாட்கள் வேலை செய்யவேண்டியதாக இருக்கிறது. இதுவல்லாது பெரிய குண்டுக்கற்களையும் அடித்தேடுத்துவந்து பாலங்களைச் சிதைத்துவிடுகின்றன. அடிக்கடி பல மலைச்சரிவுகள் ஏற்படுவதும் உண்டு. ஆகவே அந்தச் சாலைகளை நம்பி மிகக் கனமுள்ள இயந்திரப் பகுதிகளை எடுத்துச்சேல்ல முடியவில்லை. முற்கூறிய காரணங்களால் அந்த நாட்டு மக்கள் பெரும்பாலும் வேளியிலிருந்தே அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய போருள்களைப் பெறவேண்டிய தாக இருக்கிறது வேளிஉதவியின்றி வாழமுடியாதுஎனவும் சோல்லலாம்.

யாத்திரிகர்கள் வருகை :

எந்த நாட்டிற்கு வேளி உலகத்திலிருந்து (அந்நிய நாடுகளிலிருந்து) மக்கள் அதிகமாக வருகிறார்களோ, அந்த நாட்டு அந்நியச் சேலாவணி வளர்ச்சி அடையும் என்று போருளாதார நிபுணர்கள் கருதுவார்கள். இது தனிச்

சுதந்திரம் உள்ள நாடுகளுக்குப் பொருந்துமேயானுலும் இதுபோன்ற பெரியநாட்டின் உறுப்புக்களாக உள்ளவற்றுக்கும் அது பொருந்துவதே. இதன் சிறப்பினுல் விளேயும் பயன் மற்றையப் பகுதிகளுக்கும் சேர்ந்ததுதானே. வெளியிலிருந்து யாத்திரிகர்கள் கூட்டம் அதிகம் வருவதால் அந்த நாட்டில் கைத்தொழில் விருத்தியும் பலதுறை வியாபார விருத்தியும் ஏற்படுகின்றன. இது கருதியே, நம்முடைய நாட்டில் சமயத்தின் பெயர்கொண்டும் பிற ஏதாவது ஒரு விழாவின் பெயர் சொல்லியும் பல ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஆண்டு முழுவதும் சுற்றிச்சுற்றி வரும்படியாக அமைத்து வைத்திருக்கிருர்கள். மக்கள் கூடும் அந்தக் காலங்களில் அப்பகுதியின் சிறப்பான சிறு தொழில்கள் வளர்கின்றன. வளம் பெருகுகின்றது. பணப்புழக்கமும் ஏற்படுகிறது. இது ஒரு பெரிய பொருளாதாரப் பிரச்சினேயாகும். இதே போல காஷ்மீர நாட்டில் ஆண்டு முழுவதும் ஏதோ ஒரு கவர்ச்சி இருந்துவருகிறது. யாத்திரிகர்கள் வருகை ஒவ்வொரு ஆண்டிலும் பெருகிக்கொண்டே வருகிறது. ஆகவே அதற்கெனத் தனி இலாகா இயங்கிவருகிறது.

யாத்திரிகர் இலாகா :

அந்தநாட்டில் யாத்திரிகர்கள் இலாகா ஒருசக்திவாய்ந்த பகுதியாகும். அவர்களுடைய வேலே மிக்க பொறுப்பு வாய்ந்ததாகவும் இருக்கிறது. வெளி இடங்களிலிருந்தும், மற்ற நாடுகளிலிருந்தும் மக்கள் அதிகமாக அப்பகுதிக்கு வருவதற்குக் கவர்ச்சி தரக்கூடிய சிறு வெளியீடுகள் வெளியிடுகிருர்கள். நல்ல விளம்பரங்கள் செய்கிருர்கள். உலகம் முழுவதும் காஷ்மீரத்தின் வனப்பு மிக்க காட்சி

அமைப்புக்களும் பிறவும் பிரசாரம் செய்யப்படுகின்றன. அதைப்பார்த்து இந்த நாட்டிற்கு வருவோரை வரவேற்கவும் அவர்களுக்கு எத்தாலும் எக்குறையும் இல்லாது மனநிறை மகிழ்வுண்டாகும்படி எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தற்கும் இந்த இலாகா நிறுவப்பட்டிருக்கிறது. பிறர் அந்த நாட்டை எவ்விதத்திலும் குறைசொல்லாதபடி காத்தும் வருகிறார்கள் அதிலுள்ளவர்கள். வெளியார் அங்கு வந்து ஏமாற்றப்பட்டதாகவோ, எதையும் (மனத்தைத் தவிர) பறிகொடுத்ததாகவோ இருத்தல் கூடாது. அப்படி ஏதேனும் நிகழுமாயின் உடனே அதற்கு ஆவனசெய்து நிறைவு செய்கிறார்கள். வந்தவர்களுக்கு அந்த நாட்டு மக்களாலோ, வியாபாரிகளாலோ துன்பமோ, இழப்போ ஏற்பட்டால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கிறார்கள். வியாபாரிகளின் பெயர்களைக் கள்ள வியாபாரிகளின் பட்டியலில் (Black List) சேர்த்து அந்தநாடு முழுவதும் விளம்பரப்படுத்துகிறார்கள். அதனால் அவனுடைய (வியாபாரத்) தொழில் கெட்டு இழிநிலையை அடைய நேருகிறது.

வழிகாட்டித் தொழில் :

இஃதன்றி வருவோர்க்குச்செய்யும் உதவிகளில் பெரும் உதவி, வழிகாட்டிகள் அமைத்துக் கொடுத்தல் நல்லவர்களாகத் தேர்ந்தெடுத்துத் தகுதிச்சான்று வழங்கி வருவோர்க்கு வழிகாட்டிகளாக நியமித்து வைத்திருக்கிறார்கள். வருவோர் தாமேயும் அந்த நற்சான்று பெற்ற வழிகாட்டிகளை அமர்த்திக் கொள்ளலாம். இலாகாவினரின் உதவி வேண்டினும் அவர்களும் திட்டம்செய்து கொடுக்கிறார்கள். அப்படி அடையப்பெறும் வழிகாட்டி அந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் சென்று கண்டுவந்தவனாகவும்,

அவைகளின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லி வந்தவர்கள் அவரவர் விருப்பத்திற்கு (இயற்கைக்கு) ஒத்த இடங்களுக்கு அழைத்துச்சென்று உடனிருந்து எல்லா உதவிகளையும் செய்து இனிமையாகப் பேசிப் பழகி அவர்களைக் கவரக் கூடியவனாகவும் இருக்கிறான். இதன் மூலம் அந்த நாட்டிற்கும் நல்ல புகழ்; அவர்களுக்கும் நல்ல வருமானம். வந்தவர்கள் மனமகிழ்வோடு அவரவர் இருப்பிடம் சென்றதும் தாம் கண்ட, தாம் அனுபவித்த இன்பக் காட்சிகளையும் நல்ல அனுபவங்களையும் தம்முடைய நண்பர்களுக்கும் பிறர்க்கும் வாயார மனமார எடுத்துச் சொல்லிப் பெருமை பேசுகிறார்கள். இதுவே பெரும் விளம்பரம் அல்லவா ? யாத்திரீகர்கள் கூட்டம் ஆண்டிற்கு ஆண்டு பெருகிக்கொண்டே வருவதால், இந்த வழிகாட்டித் தொழிலும் (Guide Service) பெருகிக்கொண்டே வருகிறது. சில ஆண்டுகளுக்குமுன் நூற்றுக்கணக்கான மக்களே வந்து போய்க்கொண்டிருந்த அந்தக் காஷ்மீரத்தில் சென்ற ஆண்டு 77 000 மக்களுக்கு மேலாக வந்திருந்தார்கள் எனத் தெரிகிறது.

கட்டணச் சலுகை:

மேலே சொன்ன முறையில் மக்களைக் கூவி அழைத்து தன்னிடம் வரும்படிச் செய்வதால் நுழைவுச் சீட்டுப் பெறுவதில் அதிகமானக் கடும் நிபந்தனைகள் எதுவும் இல்லை. மேலும் அப்பகுதி பாரதநாட்டில் ஒரு உறுப்பாகச் சேர்ந்திருப்பதால் நமது நாட்டிலிருந்து அங்குச் செல்வதில் அதிகத் துன்பமும் இல்லை. விமான, இரயில் போக்குவரத்தில் கட்டணச் சலுகைகள்கூட ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இந்தச் செய்தி சென்னையிலேயே தெரிய வந்தது.

முதல் திட்டம் :

காரிலேயே செல்லக்கூடிய அளவுக்குச்செல்வது என்றும் வழிநடையாக உள்ள பகுதியைக் கால்நடையாகச் செல்வதென்றும் திட்டம் போகிற வழியிலே பல ஜோதிர் லிங்கங்கள் எழுந்தருளியுள்ள ஸ்தலங்கள் இருப்பவற்றையும் தரிசித்துக்கொண்டு செல்ல அது வாய்ப்பாக இருக்கும் என்ற நினைப்பு.

அவ்விதமே 1—9—58 சோமவாரத்தன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் உதவிக்கு இரண்டொருவரை ஏற்றிக் கொண்டு ஒரு காரிலும். மற்றப் பணியாட்கள் ஒரு காரிலுமாக புறப்பாடாயிற்று. பெங்களூர் வழியாகப் புனு, நாசிக் டில்லி, ஸ்ரீநகர், பஹல்ஹாம் இந்த வழியிலே கார் செல்லவேண்டியது என்று ஏற்பாடு உடன் வருவதாக இருந்த "நாரதர்" ஸ்ரீ ஸ்ரீனிவாச ராவ் டில்லியில் வந்து எங்களோடு சேர்ந்துகொள்ளுவதாகவும் அது வரை இரயிலில் வருவதாகவும் மற்ரெரு ஏற்பாடு. இந்தத் திட்டத்தில் கார்கள் புறப்பட்டன.

ராணிப்பேட்டை நாற்சந்தியால் :

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் காரை ஓட்டிவந்தவர்க்கு சிறிது அயர்வு தோன்றியது. அதனைப்போக்கி விறுவிறுப்பு ஊட்டச் செல்லும் வழியிலே சூடான பானம் (காப்பி) வாங்கிக்கொடுக்கும்படியாக உத்தரவு பிறந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் சென்ற கார் வேகத்தைக்குறைத்து, பின்வந்த காரில் உள்ளவர்களை அழைத்து வழியில் உள்ள சிற்றுண்டிச்சாலையில் சிறிது காப்பி வாங்கிவரும்படிச் சொல்லி முன்னே சென்றது. பின்வந்த காரில் உள்ளவர்

விரைவிலே காப்பி வாங்கி எடுத்துக்கோண்டு அவரும் புறப்பட்டார்.

ராணிப்பேட்டையில் ஒரு நாற்சந்தி கிழக்கே சென்னை யிலிருந்து வருவது. மேற்கே பெங்களூர்க்கு நேரே செல்வது. தெற்கே ராணிப்பேட்டை, ஆர்க்காடு இவை வழியாகப் பெங்களூர் செல்வது. மற்றொரு பாதை, வடக்கே ஆந்திரநாட்டுச் சித்தூர்க்குச் செல்லும் வழி. நடுவில் கைகாட்டிமரம் நின்று நாலுபுறமும் வழிகாட்டி நிற்கிறது. அதிலே கிழக்கு நோக்கியதில் சென்னை என்றும் தெற்கு நோக்கியதில் பெங்களூர் என்றும். மேற்கு நோக்கி யதில் சித்தூர் என்றும், வடக்கு நோக்கியதில் மதனப் பள்ளி என்றும் பெயர்ப்பலகைகள் போருத்தப்பட்டிருக் கின்றன. மேற்கு நோக்கியதில் சித்தூர் என்று போடப் பட்டிருந்தாலும், அது சித்தூர்க்கு நேரே செல்லுவதில்லை. சித்தூரை ஒட்டிச்செல்வது. அதனின்றும் அந்த இடத்தில் சித்தூருக்கு ஒரு கிளைப்பாதை பிரிகிறது. இரண்டு மூன்று கல் தொலைவிருக்கிறது சித்தூர். அது நேரே பெங்களூர் சென்று பம்பாய்வரை செல்லும் நெடும்பாட்டை. தெற்கே செல்லுவது பழயவழி. புதிதாகவருபவர்களை இந்தஇடத்தில் திசைமாற்றம் அடையச் செய்கிறது அந்தக் கைகாட்டி. முன்னே பெங்களூர் வழியாக மைசூர்க்குப் பலமுறையும் இரண்டு கார் ஒட்டிகளும் அவ்வழியே சென்றிருக்கிறார்கள்.

அன்று எங்கள் திட்டம் ஏதோஒரு காரணத்தால்தடைப் படவேண்டும் என்றிருந்ததோ என்னவோ ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் கார் மேற்கு நோக்கிச் சிறிதுதூரம் சென்று ஒரு மரநிழலில் நிறுத்தப்பட்டது. பின்னேவந்தவரும் விரை வில் காரியத்தைமுடித்துக்கோண்டு வேகமாகவே வந்திருக் கிறார். இரண்டு கார்களுக்கும் உள்ள இடைவெளி 4அல்லது

5 மைல்களுக்கு மேலும் இருக்காது. ஆனால் அந்தக் கைகாட்டி அவர்களை மயக்கி தெற்கு நோக்கிப் பழைய வழியாகச் செலுத்திவிட்டது. முன்னே சென்றது, சிறிது நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு வந்தவழியே திரும்பி விட்ட இடம் வரையிலும் வந்துபார்த்தது. வந்தவழி யெல்லாம் மயங்கி மயங்கிக் கண்டவர்கள் இடம் எல்லாம் கார் அமைப்புச்சொல்லி, வண்ணம்சொல்லி, நம்பர்சொல்லி கேட்டுக்கேட்டு ஏமாந்தது. ஒருக்கால் அந்த நாற்சந்தியில் பின்வந்த கார் ராணிப்பேட்டை ஊரினுள் புகுந்து நேர் வழியில் வந்து கலந்து வேகமாக முன்னே சென்ற நம்மைத் தேடிப்போகிறதோ என்ற ஏக்கமும் உண்டாயிற்று. இந்தக் கார் மறுபடியும் பெங்களூர்க்கு நேர்வழியில் விரைந்து சென்றது.

ஒவ்வோரு சந்திப்பிலும் நின்று நின்று பார்த்தது. பெங்களூர் எல்லையையும் எட்டியது. ஆனால் பின் வந்த கார் என்ன ஆயிற்று, எவ்வழிச் செல்கிறது ஒன்றும் புரியவில்லை. 'எப்படியும் மல்லேஸ்வரம் வரை சென்று பார்ப்போம். மற்றவழியாகப் பெங்களூர் வந்திருந் தாலும் மல்லேஸ்வரம் வழியாகத்தானே அந்த பம்பாய் வழியில் செல்லவேண்டும். அதுவரை சென்று பார்ப்போம்' என்று அங்கேயும் சென்றது. இரவு மணி ஒன்பது. அதுவரை காத்திருந்தது. மனம் கலங்கிற்று. 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது. அவனுடைய திட்டம் வேறு விதமாக அமைந்திருக்கிறது போலும்! அது நமக்கு அமைத்திருக்கும் வழியே செல்லு வதுதான் நம்மால் இயல்வது. இப்படி நடுவழியில் மயங்கி நிற்பதைவிட நேரே சென்னைக்கே திரும்பிவிடுவோம், அங்கே போலீஸுக்குத் தகவல் சொல்லி எங்கிருந்தாலும்

கார் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கலாம்' என்று முடிவாயிற்று. வருத்தத்தோடு காரும் திரும்பியது.

சென்னையை இரவு 3 மணிஅளவில் வந்து அடைந்தது. அன்று முழுவதும் கவலையும், தொல்லையுமாகவே கழிந்தது. ஆனால் அங்கு வந்ததும் ஓர் நற்செய்தி காத்திருந்தது. அது, பின்வந்த கார் வாணியம்பாடியில் ஓரிடத்தில் நிற்பதாகவும், முன் சென்ற காரைக் காணவில்லை என்றும். அது என்ன ஆயிற்றோ என்று தாங்கள் கவலையுறுவதாகவும் தொலைபேசியின் மூலமாக நிலையத்தில் உள்ள ஸ்ரீமத் சுவாமிகளை அதிலுள்ளவர்கள் கேட்டறிந்த செய்திதான். அத்தோடு அவர்கள் பதில் பெறுவதற்காக அஞ்சல் நிலையத்திலேயே தங்கி இருப்பதாகவும் செய்தி சொல்லி இருந்தார்கள். இந்தச் செய்தி அன்று ஏற்பட்ட கவலைகளை மாற்றி மனத்திற்கு ஒரு நிம்மதி தந்தது.

உடனே அவர்கள் இருக்கும் வாணியம்பாடிக்குப் பணத்துடன் உதவி வருவதாகச் செய்தி சொல்லிவிட்டு என்னைப் புறப்பட்டுப் போகும்படியாக உத்தரவாயிற்று. சென்றேன் ; வழிமேல் விழிவைத்து என்னை எதிர்பார்த்திருந்தார்கள் அவர்கள். என்னைக் கண்டதும் எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள். காரணம் கையில் பணமும் இல்லை, காருக்குப் பெட்ரோலும் இல்லை. உதவி செய்யக்கூடிய வேறு எவரும் அங்கு இல்லை. அன்று என்னைக் காணும் வரையிலும் முந்தினநாள் முழுவதும் அவர்கள் பட்டகவலையும் துன்பமும் எல்லை இல்லாதனவாக இருந்திருக்கும்போலும்.

தாங்கள் நேர்வழியில் செல்லுகிறோம். அதிக வேகமாகச் சென்றால் முன்னே செல்லும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் காரைப் பிடித்துவிடலாம் என்ற நோக்கத்

தோடு கையில் பணம் இருந்த அளவு, காரில் எண்ணெய் இருந்த அளவு சென்றிருந்தார்கள். எதிரே வந்த ஒவ்வொரு காரையும் வழியிலே வந்த ஊர்களில் எங்கும் கார் அடையாளம் சொல்லிக் காரின் எண் சொல்லி அவர்களும் விசாரித்திருக்கிருர்கள். அவர்களுக்குக் கிடைத்த செய்திகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருந்திருக்கின்றன. ஒருவர் “அந்த அடையாளமுள்ள ஒரு கார் இந்த வழியாகச் செல்லவே இல்லை” என்று சொல்லியிருக்கிருர். வேறு ஒருவர் “தாங்கள் சொல்லும் அடையாளம் உள்ள கார் ஒன்று இப்பொழுதுதான் இந்த வழியே அதிவேகமாகச் செல்லுகிறது. இன்னும் சிறிது வேகமாகச் சென்ருல் அதைப் பிடித்துவிடலாம். சென்று பாருங்கள்” என்று சொல்லி இருக்கிருர். பாவம்! அவர்களும் “ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தினுடைய திருவுளம் நோகுமே! விரைவில் சென்று எப்படியேனும் அந்தக் காரைப் பிடித்துவிட வேண்டுமே. நாம் உடன்வந்த நோக்கம் சிதைவுறக் கூடாதே” என்று முனைந்து எந்த அளவு அந்தக் காரை வேகமாகச் செலுத்தமுடியுமோ அந்த அளவு முழுவேகத்துடன் சென்றிருக்கிருர்கள். வழிமாறிய செய்தி கடைசி வரை அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஒரு சிறு பிழை ஒரு பெரிய திட்டத்தைக் குலைத்துவிட்டது. இரண்டு கோஷ்டியினரும் தாம் இருக்க மற்றவர்க்கு எந்த விதமான துன்பம் வந்ததோ? என்ன ஆயினர்களோ? எங்கே தம்மைத் தேடித் தவிக்கிருர்களோ என்று நாள் முழுவதும் சொல்லொணுத கவலைப்பட்டிருக்கிருர்கள்; துன்பப் பட்டிருக்கிருர்கள், உணவும் உறக்கமும் இன்றியும்கூட.

படிப்பினை :

நீண்ட வழிப் பிரயாணத்தில் ஒருசேரக் கூடிச் செல்பவர்கள் எக்காரணத்தைக்கொண்டும் பிரிந்துவிடக் கூடாது. அப்படி ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்துவிட நேர்ந்தாலும் இன்ன இடத்தில் இன்ன நேரம் வரை காத்திருந்து பார்ப்பது என்ற முன் ஏற்பாடும் வேண்டும். செல்லும் வழியில் எங்கேங்குக் கிளைபிரிந்தாலும் அங் கங்கும் இன்னின்ன பிரிவில் செல்லுவது என்ற வழிக் குறிப்பு இரண்டு பிரிவினரிடமும் இருத்தல் வேண்டும். ஒன்றன்பின் ஒன்ருகத்தானே செல்லப்போகிரோம்; ஆகவே, அவ்வளவு முன்னேற்பாடு எதற்கு என்று சிறிது கவனக்குறைவாக இருந்ததால் வந்த தவறுதான் இதுவும். ஒரு படிப்பினையாயிற்று.

தவறியதும் நல்லதே :

முதல் திட்டம் தவறியதும் ஒரு காரியத்துக்கு நல்லதாக ஆயிற்று. மேற்குக் கரையோரத்தில் பெரு மழை பெய்து கொண்டிருந்த நேரம் அது. நமது நாட்டில் முக்கியப் பெரும்பாட்டையாக அது அமைக்கப்படிருந் தாலும் மழையிலேயே செல்லுவது மனத்திற்கு மிகவும் சோர்வைக் கொடுக்கும். பெரு மழை கண்டால் எங்கா வது சிறிது நேரம் தங்கியும் செல்ல நேரிடும். இந்தத் துன்பம் தவிர்க்கப்பட்டது.

முதற் சோதனை :

ஒரு சிலமணி (4 அல்லது 4-30 மணி) நேரத்தில் சென்னையிலிருந்து டில்லியை அடைவதைவிட்டுச் சில

நாட்கணக்கில் செல்லுவதால் உடற்சோர்வும் ஏற்படலாம் அல்லவா? அமரநாதன் தன்னைக் காணவரும் ஒரு அடியார்க்கு இந்தத் துன்பங்கள் நேருவதைத் தடுத்து உடலுக்கும் உள்ளத்திற்கும் இன்பம் தரத்தக்கதோர் ஒரு நல்ல வழியில் அழைத்துச்சென்றான். இது இந்த யாத்திரையில் முதற்சோதனையும் அருள்துணையுமாகும்.

வான் வழி :

''நம்முடைய திட்டத்தில் வேற்றிகிட்டாவிட்டால் ஆற்றொழுக்காகச் செல்லுதலே நன்மைபயக்கும். திருவருள் திட்டம் நம்மை வேறுவழியில் செல்லச்சோல்லுகிறது. ஆகையால் இனி தரைமார்க்கம் வேண்டாம். வான் வழியே செல்வோம். காலமும் சுருக்கம். துன்பமும் குறைவு. அதற்கானவைகளைச் செய்க'' என ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருவுளங்கோண்டார்கள். இப்படித் திட்டம் மாறியதால் உடன்வருவதாக இருந்தவர்களில் சிலரை அங்கேயே நிறுத்தவேண்டியதாயிற்று. அவசியமாக வேண்டிய சிலர்மட்டும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தோடு செல்வது என்றும் முடிவாயிற்று.

இஜா (Z) க்கி ? ஜப்பானீஸ் ?

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் பணியாள் ஒருவன் பேயர் இசக்கி. திருநேல்வேலியில் இசக்கியா பிள்ளை, ஏன் போதுவாகத் தமிழ் நாட்டில் அந்தப் பேயர் தேரியாதவர்கள் இருக்கமுடியாது. இசக்கி என்பது சிறு தேய்வம். அதைக் குலதேய்வமாக உடையவர்கள் ஆணுக்கும் பேண்ணுக்கும் அப்பேயர் இடுவது உண்டு. சேன்னையில் விமானக் காரியாலயத்தில் டில்லி செல்லுவதற்குச் (டிக்கட்) சீட்டு

வாங்கச் சென்றேன். ஒவ்வொரு பிரயாணியின் பேயரையும் பதிவுசெய்து. நமக்கு வழங்கும் சீட்டிலும் பதிவுசெய்து கொடுக்கிறார்கள்; இது எங்கும் உண்டு.

அந்தச் சீட்டுப்பதிவாளர் தமிழ்த்தெரியாதவர். " பெயர் சொல்லுங்கள்; பதிவுசெய்ய வேண்டும் " என்று கேட்டார். முதலில் "His Holiness Mahasannithanam" என்றேன். " என்ன ஐயா? இவ்வளவு நீளமான பெயர் " என்றார் அவர். " பெயர் சொல்லவில்லை. ஆங்கிலம் படித்த தங்களுக்கு பெயருக்கு முன்னடைவாக உள்ள His Holiness என்பது ஒரு பெரிய சமய ஆச்சாரியாருக்கு வழங்கப்படும் மரியாதை என்பது தெரிந்திருக்குமே " என்றேன். " சரி சரி! எது எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும்! மற்றவர்கள் பெயர்களைச் சொல்லுங்கள் " என்றார். என் பெயரைக் குறுக்கி A. K. தேசிகர் என்றேன். அச்சா! என்றார். மேலே மீனாட்சிசுந்தரம் என்ற பெயர் பதியவேண்டியதாயிருந்தது. அவருடைய போக்கு எனக்குப் புரிந்துவிட்டது. அதைக் குறுக்கி M. M. சுந்தரம் என்றேன். உடனே அவர் எல்லாம் புரிந்ததுபோல " சுந்தராம் " என்றார். எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும் ; அவரைத் திருத்துவதற்கு இது சமயம் இல்லை என்று நினைத்து "நான் எழுத்து எழுத்தாகச் சொல்லுகிறேன் எழுதிக்கொள்ளுங்கள் " என்றேன். மேலே "இசக்கியாபிள்ளை" என்று சொன்னேன். உடனே அவர் தன்னுடைய உலக அறிவை வெளிப் படுத்தும் நிலையில் " Izakki ? - Japanese ? " என்றார். " இல்லை ஐயா ! அவர் தமிழர், இஜாக்கி அல்ல இசக்கி " என்று சொல்லவே அங்கிருந்தோர் எல்லோரும் சிரித்து விட்டார்கள்.

தமிழ்த் தலைநகரிலே தமிழனுடைய பேயர் எழுத முடியாத, எழுதத் தேரியாத, புரிந்துகோள்ளக்கூட முடியாத, மேலும் சோல்லப்போனுல், புரிந்துகோள்ள வேண்டும் என்ற முயற்சி சிறிதும் இல்லாத ஒருவர் இந்த வேலை பார்க்கிருரே என்ற வருத்தத்தோடு விமானச் சீட்டு களைப் பேற்றுவந்தேன்

முதல் உதவியும் புறப்பாடும் :

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அமரநாத யாத்திரை சேல்லும் சேய்தி அறிந்த சேன்னை உயர்திருவாள்ர் நல். முருகேச முதலியார் அவர்களும், சேன்னையில் இந்திய அரசாங்கத் துணிக்கட்டுப்பாடு அதிகாரியாக இருக்கும் உயர்திருவாளர் P. சபாநாயகம் அவர்களும் அவரவரும் மகாசந்நிதானத்தின் யாத்திரை எவ்விதத்திலும் குறைவில் லாது நிறைவுற வேண்டும் என்றும் ஆசைப்பட்டார்கள். டில்லியிலுள்ளஉயர்அதிகாரிகளுக்குத் தோலைபேசிமூலமும் கடிதங்கள் மூலமும் சேய்தி சோல்லி மகாசந்நிதானத்தில் தங்குவதற்கும் பிற ஏற்பாடுகளுக்கும் உடன் இருந்து உதவவேண்டும் என்று திட்டம் சேய்திருந்தார்கள். அது வல்லாது காஷ்மீரத்தில் மகாசந்நிதானம் யாத்திரை சேல்லுங் காலத்தில் அந்த நாட்டு உயர் அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் கடிதங்கள் எழுதி அங்கும் எல்லாம் வசதியாக இருக்கும்படிச் சேய்துதந்தார்கள். இந்த முதல் உதவி பின்னே நிகழ்ந்த யாத்திரையில் பேரிய நிலையில் எல்லாவிதமான வசதிகளையும் அடைவதற்கு வழிசேய்தது.

6—9—58 சனிக்கிழமை காலை 11-10 க்கு டில்லி சேல்லும் விமானம் புறப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத் தில் அதில் சேன்ருர்கள். இது இப்போழுது இந்தியாவில் விமானப்போக்குவரத்துக்கேன திட்டமாகியிருக்கும் விமான

வகைகளுள் உயர்ந்த வகையைச் சேர்ந்தது. வைகவுண்ட் (Viscount) என்ற இனம்.

டகோட்டா :

முன்னேல்லாம் காலையில் 7-10க்கு சென்னையில் புறப் படும் விமானம் சிக்கந்தராபாத், நாகபுரி இரண்டு இடங்களி லும் தங்கி அங்கங்கும் எண்ணேய் ஏற்று இயந்திரச் சோதனை செய்யப்பெற்று டில்லிக்குப் பிற்பகல் 3மணிக்குப் போய்ச்சேரும். அவை (Dakota) டகோட்டா இனத்தைச் சேர்ந்தவை. விமான ஓட்டி, வானொலி இயக்குனர், பிரயாணி களுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்யும் பணிப்பெண் இவர்களோடு 25பேர் சேல்லக்கூடியதாக இருந்தது. உயரம் 9000, 10000 அடிகளுக்கு உள்ளாகவே பறந்துசெல்லும். கடும் வேயில் எரிக்கும் நேரங்களில் சூடு அதிகமாக ஏறினால் உயரே சென்றுகோண்டிருக்கும் விமானம் திடீர்திடீரேன்று 1000 அடி, 500 அடி கீழே இறங்கி இறங்கி ஏறும். இதனால் அதில் ஏறிச் செல்வோர்க்குத் துன்பமாகவும் அச்சமாகவும் இருக்கும். ஒரு பேரிரைச்சலும் கேட்டுக் கோண்டே இருக்கும். இரண்டு இயந்திரங்கள் அதை இயக்கிச்சேல்ல அமைக்கப்பட்டிருக்கும். அவற்றுள் ஏதாவது ஒரு இயந்திரம் பழுதுபட்டாலும் போக்குவரத்துத் தடைப்படும். அதிக அளவு எண்ணேய் ஏற்று அதிகத் தோலை பறந்துசெல்லமுடியாது. அதில் உண்டாகும் அந்த இரைச்சல் ஒருவரோடு ஒருவர் பேசி அளவளாவவோ அல்லது ஏதாவது ஒரு பத்திரிகை, போழுதுபோக்குப் புத்தகங்கள் படிக்கவோ அமைதியாக இருக்காது. (பவுண்டன்) ஊற்றுப் பேனாக்கள் எடுத்துச்சேன்றால் அதில் உள்ள மை முழுவதும் போங்கி வழிந்துவிடும். சூடு ஏறுங்காலங்களில் ஓரளவு உள்ளேயும் சூடு பரவும். தரைப் போக்குவரத்தில் ஏற்படக்கூடிய காலதாமதம், தூசிப்படிவு

இவைகளில்லாது செல்கிறோம். இரண்டு நாள் பயணம் $7\frac{1}{2}$ அல்லது 8 மணி நேரத்தில் முடியக்கூடியதாக இருக்கிறது என்ற வசதிகள்தாம் இருந்தன.

வைகவுண்ட் :

இப்பொழுது உள்ள (Viscount) வைகவுண்ட் மிகத் திருந்திய முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. வெளியிலே உண்டாகும் இரைச்சல் உள்ளே கேட்காது. அதிலும் சீதோஷ்ணசமனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே விமான அலுவலர்கள் உள்பட 50 பேர் வரை ஏறிக் கொள்ளலாம். பெட்டி படுக்கைகள் முதலிய பொருள் களும் மூன்று முதல் ஐந்து டன் எடைவரை ஏற்றிச் செல்லக்கூடியதாகவும் இருக்கிறது. உள்ளே அமர்ந் திருப்பவர்களுக்கு ஏதோ ஒரு சிறு கட்டிடத்தில் வசதியாக அமர்ந்திருக்கும் உணர்வு தோன்றக்கூடியதான அமைப்பு. எளிதில் 13.000, 14,000 அடி உயரம் வரையும் மேலே பறந்து செல்லுகிறது. அதற்கு மேலும் செல்லமுடியும். விமானம் பறக்கும்பொழுது அதனுள்ளிருந்துகொண்டே எழுதலாம்; படிக்கலாம். சென்னையிலிருந்து புறப்படும் விமானம் சிக்கந்தராபாத்தில் ஒரு தங்கல் மாத்திரம்வைத்து எண்ணெய் ஏற்று, இயந்திரங்கள் பரிசோதிக்கப்பட்டு டில்லி சென்றடைகிறது. முற்பகல் 11-10க்குப் புறப் படும் விமானம் பிற்பகல் 4-10க்கு டில்லி போய்ச்சேரு கிறது. நான்கு இயந்திரங்கள் பொருத்தப்பட்டது. ஒன்று இரண்டு இயந்திரங்கள் பழுதுபட்டாலும், மிகுந்துள்ள இயந்திரங்களை இயக்கி விமானத்தை ஒரு குறிப்பிட்ட இடத்தில் கொண்டுபோய் இறக்கிவிடலாம். முன்னையதை விட இதில் ஆபத்துக்குறைவு. நெடுவழிப் பயணத்திற் கெல்லாம் இப்பொழுது இந்தியாவில் இவ்வகை விமானங்

களே திட்டம் செய்யப்பெற்றிருக்கின்றன. விமானப் போக்குவரத்தில் முன்னே சென்றதைவிட அதிகமாக மக்களும் விரும்பிச் செல்லுகிருர்கள்.

வனம் வனந்திரம் :

இவ்விதமாக மிகவும் வசதியான சூழ்நிலையில் டில்லிப் பயணம் நிறைவுற்றது. செல்லும் வழியில் வட்டபெண்ணை, கிருஷ்ணு, கோதாவரி முதலிய பெருநதிப் பிரதேசங்களும், விந்தியமும், பல சிறிய பெரிய ஏரிகளும் கண்ணுக்கு நல் விருந்தாகின்றன. நம்முடைய நாடோடிக்கதைகளில், வனம் வனந்திரங்களையும் மலைகளையும் பேராறுகளையும் காற்றினும் கடிய வேகத்திற கடந்துசென்ருன் என்று அக்கால வீரர் புகழ் பாடப்பட்டிருக்கும். அந்த நிலை இந்த விமானப் பயணத்தினுல் நாமும் அடைகிருேம் என்ற எண்ணம் நம்முள்ளே தோன்ருமல் இருக்காது.


புதுடில்லியில் :

ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானத்தில் செல்லும் அதே விமானத்தில் டில்லி மக்கள்மன்ற உறுப்பினர் உயர்திருவாளர் பட்டாபிராமன் அவர்களும் உடன்வந்தார்கள். ரயிலில் வருவதாக இருந்த நாரதர் ஸ்ரீ ஸ்ரீனிவாசராவும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தோடு, சென்னையிலிருந்தே விமானத்தில் வந்தார். டில்லி விமானநிலையத்தில் இந்திய அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கும் திருவாளர்கள் K. C. C. செட்டியார், T. S. குஞ்சிதபாத முதலியார், எஞ்சிநீயர் P. கந்தசாமி, போலீஸ் குற்ற இலாகத் தலைவர் V. கந்தசாமி, தஞ்சை காலஞ்சென்ற ராவ்பகதூர்



புதுடில்லி வரவேற்பு

புதுடில்லி - பிர்லாமந்திரில்:



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும், உயர்திருவாளர்கள்
K. C. செட்டியாரவர்களும், T.S. குஞ்சிதபாதமவர்களும்.

பன்னீர்செல்வத்தின் குமாரர் எஞ்சினீயர் செல்வம், மக்கள் சபை உறுப்பினர்கள் சங்கரபாண்டியம் பிள்ளை, T. D. முத்துக்குமாரசாமி, Free Press விசேஷப் பிரதிநிதி சுவாமிநாதன், பாண்டியன் இன்ஷியூரன்ஸ் வை. ஆறுமுகம் பிள்ளை, நெல்லை K. T. கோசல்ராம் M. L. C., G. V. பிள்ளை, இன்ஷியூரன்ஸ் கார்ப்பரேஷன் அதிகாரி ராஜகோபாலன் முதலிய பேரன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தை மலர்மாலையிட்டு உபசரித்து அழைத்துச் சென்றனர். தங்குவதற்குத் தனி இடம் ஒன்று வசதி செய்திருந்தார்கள். திங்கட்கிழமை டில்லியை விட்டு ஸ்ரீநகரத்திற்கு விமானமுலம் செல்லவும் ஏற்பாடாயிற்று.

மற்றொரு அனுபவம் :

புதுடில்லியிலிருந்து ஸ்ரீநகர் போவதற்கு விமானச் சீட்டுவாங்க அந்தக் காரியாலயத்திற்குச் சென்றிருந்தோம். டில்லியிலிருந்து நேரே ஸ்ரீநகர்க்கோ, அல்லது பத்தன் கோட்டிலிருந்து ஸ்ரீநகர்க்கோ இரண்டில் ஏதாவது ஒரு வழியில் எங்களுக்குச் சீட்டு வழங்கவேண்டும் என்று கேட்டோம். முதலில் டில்லியிலிருந்து ஸ்ரீநகர் செல்லுவதற்குப் பத்து நாட்கள்வரை இடம் இல்லை என்றார்கள். பத்தன்கோட்டிலிருந்து ஸ்ரீநகர்க்குச் செல்வது குறித்து தொலைபேசிமுலம் பத்தன்கோட்டில் உள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்து சீட்டுக்கள் வழங்குவதாக ஒப்புக் கொண்டார்கள். அதற்குள்ள கட்டணமும் வசூலித்துக் கொண்டார்கள். விரைவுப் பதிவாக (Express) விசாரித்துச் சொல்லும்படியும் நாங்கள் கேட்டுக்கொண்டோம். காலை எட்டு மணிக்குப் பதிவு செய்யப்பெற்றது. பிற்பகல் மூன்று மணிவரை செய்தி வந்ததாக இல்லை. நடுவில் நாங்கள் தங்குமிடத்திற்கு வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திடம்

செய்தி தெரிவித்து மீண்டும் விமானக் காரியாலயம் சென்ருேம்.

இந்தத்தடவை எங்களுடன்வந்தவர் அவ்வூரில் பெரிய நிலையில் உள்ளவர். நாங்கள் காலையிலிருந்து காத்திருக்கும் செய்தியை விமானக் காரியாலய அலுவலரிடம் நினைவு படுத்தி, மேலே ஏதாவது முடிவு தெரியவேண்டும் என்று கேட்டோம். சரியான மறுமொழி கிடைக்கவில்லை. தான் இன்னர் என்று சொல்லிக்கொள்ளாமலே, உடன்வந்த அப்பெரியவரும் எங்களுடைய முயற்சி என்னவாயிற்று என்று விமானக் காரியாலயச் சிப்பந்தியிடம் கேட்டார். அவருக்கும் சரியான மறுமொழி இல்லை. சிறிதுநேரம் காத்திருந்தார்.

நகரில் பெரிய பதவி வகிக்கும் அவருக்குச் சொந்த முறையிலும் அலுவல் முறையிலும் பல வேலைகள் எப் பொழுதும் இருக்குமல்லவா! அதிகநேரம் அவரால் காத்திருக்க முடியவில்லை. எழுந்தார், தொலைபேசியிடம் சென்ருர். ‘ இதன்முலம் உங்கள் தலைமை அதிகாரியிடம் பேசலாமா ’ என்று அனுமதி கேட்டார். ‘ தடை ஒன்றும் இல்லை ’ என்ருர்கள். உடனே அந்தக்கருவியைக் கையில் எடுத்துத் தான் இன்னர் என்பதைச்சொல்லி தென்னுட்டி லிருந்து ஒரு பெரிய சாது மகராஜுக்காகச் சீட்டுப்பெற வந்திருப்பதாகவும் செய்தி சொன்னுர். “ இதற்காகத் தாங்கள் நிலயத்திற்கு வரவேண்டுமா? தாங்கள் தங்கள் இருப்பிடத்திலிருந்தே செய்தி சொன்னுல் வசதி செய்து கொடுத்திருக்கமாட்டோமா ? ” என்று பதில்வந்தது. பிறகு ஒருவருக்கொருவர் குசலப்பிரசனம்.

இதைக் கேட்டிருந்தார் பக்கத்தில் நின்ற அலுவலர். “ நாங்கள் அவர்களுக்குச் சீட்டுக் கொடுப்பதற்கு இல்லை

என்று சொல்லவில்லை. மாலைவரை பொறுத்திருந்து பார்த்து, அரசாங்க அவசர ஏற்பாடாக ஏதாவது இல்லா விட்டால் சீட்டு வழங்கலாம் என்றிருந்தோம். அது வல்லாமல் ஸ்ரீநகர் செல்லும் விமானம் சிறிய டக்கோட்டா இனத்தைச் சேர்ந்தது. அதில் பண்டங்கள் அதிகமாக ஏற்றப்படும். அதன் எடையைக் கழித்துக்கொண்டு மிகுதி ஓரளவுதான் பிரயாணிகள் ஏற்றப்படுகிருர்கள். அந்த வரம்பைக் கூட்டவோ குறைக்கவோ எங்களுக்குத் தனி அதிகாரம் கிடையாது. மேலதிகாரி அனுமதி பெற்றுச் செய்யவேண்டி இருக்கிறது. ஆகையால் வந்தவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளவில்லை என்ற எண்ணம் தங்களுக்கு வேண்டாம். அப்படி ஏதாவது இருந்தால் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிருேம்'' என்று பணிவுடன் பேசினுர்கள். ''எங்களுடைய எஜமானர் இப் பொழுது தங்களுக்குச் சொன்னதுபோல நாங்களே இந்தக் காரியத்தைச் செய்துகொடுத்துவிடுகிருேம். தங்களை இன்னுர் என்று எங்களால் அறிந்துகொள்ள முடியாத நிலையில் பிழை ஏதும் ஏற்பட்டிருக்கலாம். மன்னிக்க'' என்றும் குழைந்தனர்.

இவ்வளவையும் கேட்டுப் புன்முறுவல்செய்து என்னைப் பார்த்துக் கண்ணைச்சிமிட்டினுர். ''வருகிறேன் பிறவற்றைத் தாங்களே செய்துமுடித்துச் செல்லுங்கள். அப்படி உதவி வேண்டுமானுல் என்னுடைய தொலைபேசி எண் இன்னது. அங்கே நான் இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்களில் யார் எது கேட்டாலும் செய்து கொடுக்கும்படியான ஏற்பாடு செய்து வைத்திருக்கிறேன். கூசாமல் கேட்கலாம். மகாசந்நிதானத்திற்கு எனது வணக்கத்தை அறிவிக்கவும். நாளை விமான நிலையத்தில் வந்துபார்க்கிறேன்.

இப்போழுது உங்களுக்குத் தங்குமிடம் செல்லுவதற்கு உதவி வேண்டுமா '' என்ருர் ஆங்கிலத்தில். "இல்லே இல்லே, நாங்களே வசதி செய்துகொள்ளுகிருேம். மிக நன்றி '' என்றேன். விமான அதிகாரி "தாங்கள் கவலேப் படாமல் செல்லலாம். நானே இவர்களுக்கு வேண்டிய வற்றை முடித்துக்கோடுத்து வீடுவரையிலும் வேண்டு மாளுலும் ஆளும் அனுப்புகிறேன் '' என்ருர். பிறகு சுமுகமான சூழ்நிலேயில் விரைவில் சீட்டுக்கள் வழங்கப் பட்டன. மகிழ்ச்சியோடு நாங்களும் திரும்பினேம்.

ஒரு கடிதம் :


மற்ருெரு மக்கள் சபை உறுப்பினரான அன்சார் ஹர்வானி (Ansar Harvani) என்பவர் மூலமாகக் காஷ்மீரப் பிரதமர் கனம் பக்ஷிகுலாம் அவர்களுக்குக் கடிதம் ஒன்று வாங்கித் தந்தார்கள். நேரே கனம் பக்ஷிகுலாமிற்குக் கடிதம் எழுதப்படவில்லே. ஆனுல் அவர்களுடைய உள்படுகருமத் தலேவர் (Principal Private Secretary) உயர்திரு. (A. J. Ziadi) ஸயாடி அவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் பெருமை சொல்லித் "தென்ஞட்டுத் தலேசிறந்த மடத்தின் தலேவர் அவர்கள் காஷ்மீரத்தில் அமரநாத தரிசனத்துக்கு எழுந்தருளுகின்ருர்கள். இந்த நாட்டில் பல பெரும் தலேவர்கள் அவர்களுடைய சிஷ்யர்களாக இருக்கிருர்கள். ஆகவே, இந்த யாத்திரையில் அவர்களுக்கு எல்லாம் வசதியாக இருக்கவேண்டியதற்கு அரசாங்கத்திலே உதவிகள் செய்தல் வேண்டும். உயர் பக்ஷிக்கு வேலேத் தோல்லே அதிகம் இருக்கலாம். தாமே எல்லாவற்றையும் செய்து தருதல் வேண்டும் '' என்று எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தையும் பேற்றுக்கோண்டு சென்ருேம்.

புதுடில்லி:



மக்கள் சபை நுழைவு

புதுடில்லி:



இராஜ்ய சபை

இன்னும் சிலரும் ஸ்ரீநகரிலுள்ள யாத்திரீகர்கள் வரவேற்பு இலாக்காத் தலைவரான உயர்திரு. கௌவுல் அவர்களுக்குத் தொலைபேதி மூலமும் செய்தி அறிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் காஷ்மீரம் வரும் செய்தி கடிதமூலமும், தொலைபேசி மூலமும் அவர்கள் அங்கே செல்லுமுன்னேயே அறிவிக்கப்பட்டிருந்தது.

காஷ்மீரம் நோக்கி :

8—9—58 திங்கட்கிழமை காலை 8-30க்கு விமானம் புறப்பட்டது. டில்லி நகரப் பிரமுகர்கள் பெரியோர்கள் பலர் வந்து வழி அனுப்பிவைத்தார்கள். மக்கள்சபை உறுப்பினர் சங்கரபாண்டிய பிள்ளையும், ஆறுமுகம் பிள்ளையும் தனி உரிமையோடு டில்லியில் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டார்கள்.

குறித்த நேரத்தில் விமானம் புறப்பட்டது. நடுவில் மழையும் பெய்யத் தொடங்கியது. மேகமுட்டத்திற்கு மேலே விமானம் எழுந்து செல்லவேண்டியதாயிற்று. அந்த நிலையிலும் ஒவ்வோர் இடத்தில் மழையும் இடியும் உண்டாயின. விமானமும் ஏறியும் இறங்கியும் ஆடிக் கொண்டும் சென்றது. அப்பகுதியில் அது மழைகால மானபடியால் எல்லா ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் தண்ணீர் வழிந்து ஓடிக்கொண்டிருந்தது. எங்கும் நல்ல பசுமையான சாகுபடி. விமானம் அமிர்தசரஸ் வந்து சேர்ந்தது.

பக்ராநங்கல் :

அமிர்தசரஸ் விமான நிலையத்திற்கு பல மைல்களுக்கு அப்பாலேயே (Bhakra - Nangal) பக்ரா நங்கல் பாசனத்தின் பெருமை தெரியவந்தது. எங்கும் பெரிதும்

சிறிதுமான பல வாய்க்கால் குறுக்கும் நெடுக்குமாக வெட்டப்பட்டிருக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னே வானம் பார்த்த பூமியாக, எப்பொழுதாவது மழை பெய்யாதா, நாடு செழிக்காதா என்று ஏங்கி இருந்த ஏக்கம் மாறி, வருகின்ற ஆற்றுநீரை வீணுக்காது பயன்படுத்திக் கொள்ளவேண்டுமே என்ற கவலை அப்பகுதி மக்களுக்கு வந்துவிட்டது. அவரவரும் அவரவர் சக்திக்கு மீறிய முயற்சியாக நிலததைப் பண்படுத்தி வருகிறார்கள். உழவு மேன்மை அடைந்துவருகிறது. மக்களும் செழித்து வளர்கிறார்கள்.

முதல் தடை :

அமிர்தசரஸ் வந்த விமானம் தளத்தில் இறங்கும் போழுது அங்கும் சிறிதுமழை பெய்துகொண்டே இருந்தது. அங்குத் தங்கவேண்டியநேரம் 30 நிமிடங்கள். அதற்குள் பிரயாணிகள் களைப்பாறிக்கொள்ளலாம். விமானத்திற்கு வேண்டிய எண்ணேயும் போட்டுவிடுவார்கள். இயந்திரங் களைச் சரிபார்த்து முடித்துவிடுவார்கள், குறித்த நேரத்தில் விமானம் புறப்பட்டாகவேண்டும். ஆனுல் அன்று 2 மணி நேரத்திற்குமேலாகத் தங்கவேண்டியதாயிற்று. காரணம், 'வழியில் வானிலை சரியாக இல்லை. அடுத்த தங்கல் ஜம்முவில் மழை அதிகம்' என்ற செய்திவந்ததே. விமானம் அங்கே தங்கும் காலவரையரை தாண்டி நேரம் ஆகஆக அதில் வந்த பிரயாணிகளுக்குச் சிறிது சஞ்சலமும் ஏற் பட்டது. இவ்விதமாக இங்கே காலதாமதமானுலும், ஜம்மு தளத்திற்கு வரலாம் என்ற அனுமதி கிடைத்தவுடனேயே நிலைய அறிவிப்பாளர் " பிரயாணிகள் எல்லோரும் விமானத் தில் ஏறிக்கொள்ளலாம். விமானம் புறப்படப்போகிறது "

என்ற செய்தியை ஒலிபெருக்கிமூலம் அறிவித்தார். ஒரு அயர்வுநீங்கி விமானத்தில் ஏறிப்புறப்பட்டோம். விமானமும் ஜம்முவை நோக்கிப் பறந்தது.

முன்னே கண்டதுபோல வழி எல்லாம் மழையும் சிறு தூறலுமாக விமானம் ஜம்முநிலையத்தைவந்து அடைந்தது.

நற்செய்தி வந்துவிடாதா ?

இங்கேயும் எல்லாப்பிரயாணிகளும் சிறிது ஒய்வு எடுத்துக்கொண்டு மறுபடியும் பயணம் தொடங்கவேண்டும். 10-15 க்கு வரவேண்டியது 12-30 க்கு வந்துசேர்ந்தது. அப்பொழுது அங்கே சிறுமழை பெய்துகொண்டேயிருந்தது. விமானநிலைய அதிகாரிகள் " இப்பொழுது விமானம் மேலே செல்லுவதற்கு இல்லை. ஸ்ரீநகர் செல்லும் வழியில் உள்ள பனிஹால் கணவாய்ப் பகுதியில் மேகமூட்டம் அதிகமாக இருக்கிறது. மழையும் பெய்துகொண்டிருக்கிறது. ஸ்ரீநகர் பகுதியும் அப்படியே. ஸ்ரீநகர்ப் பகுதியிலிருந்து இத்தனை நேரம் இங்கே வந்திருக்கவேண்டிய விமானம் அதைவிட்டு இன்னும் புறப்பட்டதாகக்கூடத் தெரியவில்லை. ஆகவே, எல்லோரும் முதலில் ஜம்மு நகரில் சென்று நடுப்பகல் உணவு ஏற்றுத் திரும்ப இங்கு வருவோம். அதற்குள் நற்செய்தி வந்துவிடாதா " என்றார்.

எல்லோரும் (காஷ்மீர அரசாங்க) யாத்திரிகர்கள் விடுதிக்குச் (Tourist. Reception Centre) சென்றோம். நடுப்பகல் உணவு முடிந்தது. மீண்டும் விமான நிலையத்துக்கு வந்தோம். அப்பொழுதும் சிறு தூறல். அதுவரையிலும் நல்ல செய்தி ஒன்றும் இல்லை.

மாலை ஐந்துமணி வரையிலும் பொருத்துப்பார்த்தோம். அப்பொழுதும் வானிலை வழிவிடவில்லை. இடையில் ராணுவப் பகுதியினர் காஷ்மீர நுழைவுச் சீட்டுக்களை வாங்கிப் பார்த்துப் பதிவு செய்துகொண்டு திரும்பத்தந் தனர்.

விமான நிலையத்தின் கடைசி எல்லையில் ஒரு விமானம் நொருங்கிக்கிடந்தது. 'கேட்பாரற்றுக் கிடக் கிறதே. இந்த விபத்து என்றைய நிகழ்ச்சி' என்று கேட்க எங்களுக்கு ஆவல். ஆனால் அங்கு அந்த நிலைய அலு வலர்கள் பட்ட துன்பத்தைக்கண்டு அதுபற்றிக் கேட்கவும் மனம் வரவில்லை. ஒவ்வொருவராக நேரம் ஆக ஆக இன்று காஷ்மீரம் போகமுடியாதா என்று அடிக்கடி நிலைய அதிகாரியைக் கேட்டுத் தொந்தரவு செய்தனர்.

பலரும் பலவிதம் :

எங்கள் கோஷ்டியில் மகாசந்நிதானத்துடன் சென்ற வர்கள் அல்லாமல், மற்றவர்கள் எல்லோரும் பொழுது போக்கிற்காகவும், உல்லாசவாழ்க்கைக்காகவும், புதுமணத் தம்பதிகள் தேன்நிலவு களிப்பதற்காகவும் காஷ்மீரத்தை நாடிச் செல்வதாக இருந்தார்கள். ஒவ்வொருவர் ஒவ் வொரு நிலையினராகவும், தகுதி உடையவராகவும் இருந் தார்கள்.

லாபத்தில் ஒரு பகுதி :

பெரிய வியாபாரி தாம் வருந்திப் பெற்ற லாபத்தை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்காமல், அதில் பொழுது போக்கிற்காக எவ்வளவு அதிகமாகச் செலவு செய்து

கழிக்க முடியுமோ அந்த அளவு கழித்ததாகவும், அத்தனை நாள் உழைப்பின் அயர்வு போக்கிக் கொண்டதாகவும் இருக்கலாம் என்ற நோக்கத்தோடு வந்திருந்தனர் ஓரிருவர்.

புதுமணத் தம்பதிகள் :

புதிதாகத் திருமணம் முடிந்த செல்வந்தர் வீட்டுப் பிள்ளை ஒருவர் இளம் மனைவியுடன் தன் காதல் களியாட்டங்களை அழகுபோலி காஷ்மீரநாட்டுத் தால் ஏரியிலும், ஜீலம் நதியிலும் படகு வீடுகளில் தங்கி இன்பகரமாகப் பொழுது கழிக்கவும், அன்னம் ஊர்ந்து செல்வதை ஒத்து ஜீலத்திலும், தால் ஏரியிலும் மிதந்துசெல்லும் ஷிக்காரக் களில் (Shikkara)-ஓடங்களில் உல்லாசமாய் ஊரைச்சுற்றி வரவும், மற்றும் பல (Marg) மார்க்குகளிலும் (பசும்புல் மலைச் சரிவுகள் சமவெளிகள்) இன்பப்பொழுதுபோக்கவும் கனவுகண்டுவந்தவர். அந்த இளம் காதலி நேரம் ஆகஆக கண்ணை - தன் பார்வையை ஸ்ரீநகரம் அமைந்திருக்கும் திக்கை நோக்கிச் செலுத்தும்பொழுதெல்லாம் அது கண்டு ,சகியாது விமானத்தின் மீது பொல்லாத கோபம் வரும் காதலருக்கு. அந்தக்கோபம் அதிகாரியிடம் சென்று பாயும். அவர் இது போன்ற ஆயிரக் கணக்கான காதலர்களைக்கண்டு அவர்களுடைய மன ஏக்கம்தெரிந்தவர் போலும்.

அனுதாபத்தோடு சொல்லில் நயம்காட்டி " உங்களை ஒரு சிறிதும் இங்குத்தங்கவைக்கமாட்டேன். இப்பொழுதோ இன்னும் சிறிது நேரத்திலோ பனிஹால் கருணை காட்டினால் விமானம் உடனே புறப்பட்டுவிடும். ஒரு சிறிதும் தடையில்லை. அந்தச் சிறிது நேரம் வரையிலும்

ஒரு பொழுது போக்காக இந்தச் சுற்றுப் புறங்களைப் பாருங்கள். எதிரே இந்த மழைத் தூறலிலும் நமது நாட்டைக் காக்கும் ஒரே லட்சியத்தோடு அதோ ராணுவப் படையினர் பயிற்சி செய்கிறார்களே அதைப்பாருங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன் வேலையில் முனைவார்.

உரிமை பரிபோகிறதே :

ஒரு சீக்கியர். அவரும் இந்திய விமானப் போக்கு வரத்துச் சிப்பந்திதான். வேறொரு ஊரில் வேலை பார்ப்பவர். அது போன்றோர்க்குச் சில சலுகைகள் இருக்கின்றன. அவற்றில் ஆண்டுக்கு இத்தனைநாள் விடுதி; அந்த விடுதிக்காலத்தில் அவர் உழைத்துவரும் விமானப் போக்குவரத்தில் இலவசமாக எங்கு வேண்டு மானாலும் சென்றுவர பிரயாண சலுகைச்சீட்டு வழங்கல் என்பவை சிறப்பானவை. ஒவ்வொரு ஆண்டும் தனக்கு உரிமையாகக் கிடைக்கக்கூடிய இந்தச் சலுகைகளை அவர் அனுபவிக்கத் தவறுவதில்லை. அதில் இவ்வாண்டு காஷ்மீரத்தைக்கண்டு களித்துவரலாம் என்ற நோக்கத் தோடு வந்தவர். ஒவ்வொரு நாள் கழிவும் அவருடைய விடுதியில் கழிந்ததாக ஆகும். நாள் கணக்கில் எவ்வளவு அதிகமாகக் காஷ்மீரத்தில் இருக்கமுடியுமோ அதில் குறைகிறது இப்படி வெளியே தங்குவதால். அவருக்குத் தன்னுடைய உரிமை பறிபோவதாக ஒரு எண்ணம்.

ஸ்ரீநகரானாலென்ன ! ஜம்முவானாலென்ன !

அடுத்து ஆஸ்திரேலியா தேசத்தவர். ஆங்கிலேயர். பத்திரிகைத் தொழிலைச் சேர்ந்தவர். அவரும் விடுதி பெற்றுவந்தவர்தாம். ஆனால் அவருக்கு ஜம்முவில்

தங்கியதிலும் மகிழ்ச்சிதான். இல்லையேல் ஜம்முப் பகுதியைச் சுற்றிப்பார்த்துப் படம் எடுத்துச் செல்லு வதற்கென்றே ஒருமுறை வரவேண்டாமா? அதை இப்பொழுதே பயன் படுத்திக்கொண்டால் இன்றோ, நாளையோ மறுநாளோ, எப்படியும் விமானம் ஸ்ரீநகரத் திற்குச் செல்லத்தானே வேண்டும். ஜம்முவானாலும் காஷ்மீரமானாலும் அவருக்கு ஒன்றே போலத்தான். அவர் ஒருவர்மட்டும் விமானத்தில் வந்தவர்களுள் தன்னுடைய மனத்துன்பத்தைக் காட்டாது சிரித்தும் விளையாடியும் இன்பமாய்ப் பொழுதைப் போக்கியவர்.

அவர் கண்களுக்குத் தப்பாது :

முன்னே சொன்ன நிலையில் சிதைந்துகிடக்கும் விமா னத்தைப் படம் எடுக்கப்போனார் அவர். நிலைய அலுவலர் ‘இந்த எல்லை முழுவதிலும் படம் பிடிக்கக்கூடாது. ராணுவக்காவல் கட்டுப்பாடு அதிகம். அதோ அந்தக் கோபுரத்தில் (Tower) ஒருவர் இரவு பகல் எந்நேரமும் தொலைநோக்கிவைத்து நாலாபுறமும் பார்த்துக்கொண்டே இருப்பார். இங்கே நடக்கும் ஒரு சிறு செயலும் அவர் கண்களுக்குத் தப்பாது’ என்றார். “ஏன் ஐயா இப்படி ஒரு கட்டுக்காவல் ?”. “இது ராணுவப் பிரதேசத்தைச் சேர்ந் தது. காஷ்மீரத்தைக் காக்கும் பொறுப்புடன் அவர்கள் இங்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள். எதிரிகள் எப்பொழுதே னும் வந்துவிடக்கூடாதே ; அதற்காகத்தான் இந்தக் கட்டுப்பாடு. அதோ நொருங்கிக் கிடக்கிறதே அந்த விமானம் பாக்கிஸ்தானிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதன் நினைவாகத்தான் அங்கேயே விடப்பட்டிருக்கிறது. பாக்கிஸ்தான் படையெடுப்பு முன்பு நிகழ்ந்ததே, உங்கள் நாட்டிலும் தெரிந்திருக்கலாமே?” என்றார் நிலையச்சிப்பந்தி.

இப்படிப் பலவகை நோக்கத்தோடும் எங்களைச் சேர்த்து 15, 16 பேர் அந்த விமானத்தில் வந்திருந்தார்கள்.

அருள் நமக்கு உண்டு :

அன்று மாலை 6 மணிவரை காத்திருந்து பார்த்துவிட்டு மறுபடியும் விடுதிக்கு வந்தோம். இந்த அனுபவம் எங்களுக்குப் புதிது. விமானத்தில் புறப்பட்டோம் விரைவில் குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தோம் என்று பழகிய நாங்கள். 'காஷ்மீரம் நம்மை ஏன் வரவேற்கவில்லை. அமரநாதன் ஏன் இப்படிச் சோதனை செய்கிறான். ஒருக்கால் புறப்பட்ட வேளையில் குற்றம் இருக்குமா?' என்று ஆராயத் தொடங்கியது எங்களுடைய உலகியல் எண்ணங்கள். அங்குத் தங்குவதென்றான பிறகு ஜம்மு நகரில் பார்க்க வேண்டியவற்றையாவது பார்த்துப் பொழுதைக் கழிக்க லாமே என்ற எண்ணமும் வந்தது. மகாசந்நிதானத்தில் "அமரநாதன் அருள் நமக்கு உண்டு. நம்முடைய உறுதி சோதிக்கும் செயல்களில் இதுவும் ஒன்றே. இன்று இங்குத் தங்குவதில் ஏதோ நல்லதொரு நன்மை உண்டு" என்று அருளிச்செய்தார்கள். பிறகு ஓரளவு மன நிம்மதியோடு சுற்றுப்புறங்களைப் பார்க்கலானோம்.

ஜம்மு :

ஜம்மு நகரம் ஒரு உயரமான குன்றின்மீது அழகாக அடுக்கடுக்காக அமையப்பெற்ற காட்சிக்கு இனிய நகரம். பக்கத்திலே தவி நதி. விமானக்கூடத்திலிருந்து தவி எல்லைவரை ஒரே ராணுவமயம். ஆங்காங்கும் அந்தந்தப் பிரிவினரும் உறுதியாகக் கட்டப்பெற்ற கட்டிடங்களிலும் கூடாரங்களிலும் தங்கிப் பயிற்சிபெறுகிறார்கள்.

ஜம்முப் பகுதியிலிருந்து இனி இமயமலைப் பகுதிகளில் மேலேமேலே ஏறிச்செல்லுதல் வேண்டும். ஸ்ரீநகரம்

இங்கிருந்து 203 மைல். அந்த வழி முழுவதும் பல மலைத் தொடர்களையும் கணவாய்களையும் கடந்தும், மலைக்குடைவு களில் நுழைந்தும் செல்லவேண்டியதாகவிருக்கிறது.

தவி இரண்டுநாட்களாகப் பெய்த புதுவெள்ளத்தை ஏற்றுச் செந்நிறத்தில் பொங்கிப் பொழிந்து வேகமாகச் செல்லுவது கண்ணுக்கு நல்லதொரு விருந்து. இருபுறங்களிலும் அடவிகள். அவைகளை ஒட்டி இப்புறத்திலே ராணுவ தளம், விமானநிலையம். அப்புறத்திலே அடுக்கு அடுக்காக உயர்ந்து உயர்ந்து செல்லும் ஜம்மு நகரக்காட்சி. நகர மத்தியிலே பல உயர்ந்த பொற்கோபுரங்களையுடைய கோவில்கள்.

ராணுவ தளத்திற்கும் நகரத்திற்கும் இடையிலே ஆற்றைக்கடக்க நீண்டதொரு பாலம் ; 3/4 மைல் நீளம் இருக்கலாம். ஆற்றுக்கு இருபுறத்திலும் ராணுவக் காவல். அதன்வழியே ராணுவ லாரிகளும், ஸ்ரீநகரத்திற்கு சரக்கேற்றிச்செல்லும் பிற லாரிகளுமாக நூற்றுக்கணக்கில் சென்று கொண்டே இருக்கும் ; அதுவும் தொகுப்புத் தொகுப்பாக (Caravan).

நாரதர் வேலை :


அன்று விமானக்கூடத்தில் தங்கிக் காத்துக்காத்துப் பொழுது கழிந்துகொண்டே இருக்கும் நிலையிலும் காலத்தை வீணுக்காமல் எங்கள் உடன் வந்த "நாரதர்" ஸ்ரீநிவாசராவ் அவருக்கு அறிமுகமான ராணுவ அதிகாரி மேஜர் பூரி (Puri) அப்பகுதியில் இருப்பதை விசாரித்தறிந்து அவரிடம் தொலைபேசியின் மூலம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் ஜம்முவில் அன்று வந்து

தங்க நேர்ந்திருப்பதையும், தருமபுர ஆதீனத்தின் பெருமைகளையும் நட்பு முறையில் சொல்லிவைத்தார் மேஜர் பூரி, தான் உடல்நலக்குறைவால் வருந்துவதாகவும், மகா சந்நிதானத்தைக் காண, தன்னால் வர இயலாதிருப்பதாகவும் சொல்லி வருந்தி "உடன் வந்தவர்களையாவது - அந்தப் புண்ணிய புருஷருடன் வந்திருக்கும் மற்றவர்களையும் தங்களையுமாவது - காண விரும்புகிறேன். அழைத்துவரக் காரும் அனுப்புகிறேன். தவருது வந்து என்னைக் காணவேண்டும். இதுவல்லாது காஷ்மீர யாத்திரையில் என்னால் செய்யக்கூடிய உதவிகள் ஏதாவது இருந்தால் அந்த சாதுமகாராஜுக்குச் செய்து கொடுக்கும் பாக்கியம் கிட்டுமா?" என்று கேட்டார். நாங்கள் "எங்களுக்கு வேண்டிய வசதிகள் அங்கே என்ன என்பது எங்களுக்கே தெரியாது. எதைச் செய்து கொடுத்தாலும் அததுவும் எங்களுக்குப் பெரியஉதவிதான்" என்று சொன்னோம்.

சாளக் கிராமங்கள் :

இதனிடையில் அந்தி மயங்கும் நேரம். "இங்கே தரிசனத்திற்குச் செல்லுவதற்கு ஏதாவது கோயில் அண்மையில் இருக்கிறதா? வீணே கவலைப்பட்டு காலத்தைக் கழிப்பதை விடப் பெருமான் தரிசனம் நமது கவலையை மாற்றும். புறப்படுங்கள்" என்று மகா சந்நிதானத்தில் உத்திரவாயிற்று. நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு மிக அருகில் ஸ்ரீ ரகுநாதர் ஆலயம் என்ற சிறப்பான கோயில் ஒன்று இருக்கிறது. காஷ்மீர மன்னன் ஜம்முவில் தங்குங் காலத்தில் தரிசனத்திற்கு அடிக்கடி வரக்கூடியது என்று தெரிய வந்தது. அதில் ஒரு தனிச்

ஜம்மு: ஸ்ரீரகுநாத் மந்திர்



சாளக்கிராமப் பிரதிஷ்டை

ஜம்ப்ருவில் :



விமான நிலையம்

சிறப்பு பல உருவில் அமைந்த ஆயிரக் கணக்கான சாளக் கிராமங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதே. வேலைப்பாடும் மிக அருமையானது. விமானங்கள் மிக உயரமானவை. பொன் வேயப்பட்டு மிக அழகான எடுப்பான தோற்றம் உடையவை. சைவ வைணவ பேதம் இல்லாமல் எல்லா மூர்த்தங்களும் அமையப்பெற்று விளங்கும் திருத்தலம். ஜம்முவில் தரிசனம் செய்யவேண்டிய முக்கியமான திருக்கோவில் எனவும் தெரியவந்தது.

தர்மார்த்த பரிபாலனம் :

காஷ்மீர மன்னன் ரணவீரசிங்கன் தன் ஆட்சிக் காலத்தில் தர்மார்த்த பரிபாலன இலாகா ஒன்றை உண்டாக்கி அதன் பொறுப்பைத் தன்னிடமே வைத்துக் கொண்டான். அதன் குறிக்கோள் மத ஸ்தாபன பரிபாலனமும் சமயப் பிரசாரமும். இவற்றிற்கெனவே பல லட்சம். இவை அல்லாது ஆதுலர்சாலை, அகதிகள் ஆதரவு, ஹரிஜன முன்னேற்றம், சமஸ்கிருத பாடசாலைகள், மதபோதனை, பிரசாரப்பயிற்சி, மருத்துவசாலைகள், விதவா விடுதிகள். காசி, ஹரித்துவார், ஸ்ரீநகர், ஜம்மு முதலிய பல பெரும் ஸ்தலங்களிலும் இவை போன்றவைகளுக்கு ஆதரவு. இச்செய்தி பொறிக்கப்பட்ட விளம்பரங்கள் எல்லா ஆலயங்களிலும் முன்னிடத்தில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. ஜம்முவில் இதுபோன்ற ஒன்றை ஸ்ரீ ரகுநாதர் ஆலயத்தில் கண்டு மகிழ்ந்தோம்.

மதச்சார்பற்ற ஆட்சி :


சைவ மன்னன் ஆட்சி - செங்கோலாட்சி இப்படியிருக்கும். மக்கள்நலப் பாதுகாப்பையே தன்னலமெனக்

கருதும் ஆட்சி. மக்கள் (பெரும்பாலோர்) சமயம் மகமதியம். ஆளுவோன் ஒரு சைவன். ஆட்சிக்கு அடிப்படை சமயப் பாதுகாப்பு. அச்செயலை அரசன் தன் பொறுப்பாக வைத்துக்கொண்டிருக்கிறன். மதச்சண்டைகள் அங்கே நிகழ்ந்ததாக இல்லை. ஆட்சிக்கு எல்லா மதங்களும் ஏற்றவையாகவே இருந்து வருகின்றன. சமயச் சார்பற்ற நாட்டிற்கு இலக்கணம் காஷ்மீரம். ஆட்சிச் சிறப்பால் பல மதத்தவர்களும் உடன்பிறந்தாரைப்போன்றே இன்றும் வாழ்கிறார்கள். அவரவர் சமயத்தை அவரவரும் காத்து வருகிறார்கள். ஒருவர் மற்றொருவர் நிலையில் எக்காரணத்தாலும் தலையிடுவதாக இல்லை. இந்தப் பண்பாடு வளர்ந்திருப்பதால் பஞ்சம் வந்தாலும், வாராத எத்துன்பம் வந்தாலும் அவ்வளவையும் பொறுமையாக ஏற்று அவ்வப்பொழுதும் தங்களைக் காத்துக் கொள்ளுகிறார்கள். முகத்திலேயும் வாட்டம் கொள்ளுவதில்லை. எந்தத் துன்பத்தையும் தாங்கும் சக்தி அவர்களிடம் இருப்பதால் எப்பொழுதும் அங்கே ஒரு தனி அமைதி நிலவி வருகிறது. துன்ப நிலையிலும் மகிழ்ச்சியோடு வாழத் தெரிந்தவர்கள் அவர்கள். பஞ்சம் வந்தால் தெளியும், ஆனால் மனப் பண்பு கெட்டால் திருந்துவதரிது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இதுவே சைவ ஆட்சியின் சிறப்பாகும்.

ரகுநாதராலயத்தில் :

பிரதான மூர்த்தி, பெரிய விநாயகர், ரகுநாதர், இராம லக்ஷ்மண கிருஷ்ண மூர்த்தங்கள், தசாவதாரங்கள், வசுக்கள், முனிவர்கள் முதலிய எல்லாத் திருவுருவங்களும் சலவைக்கல்லால் பிரதிஷ்டை. உள்ளே சென்றால் மிளகு

ஜம்முவில் :



சூரியன் வழிபடும் மகாதேவர் - ஸ்ரீ ரகுநாத்மந்திர்

ஜம்முவில் :



சூரியபகவான் - ஸ்ரீ ரகுநாத்மந்திர்

அளவில் இருந்து மட்டையோடு கூடிய பெரிய தேங்காய் அளவு வரையிலும் பலப்பல உருவில் பலப்பல வகையான சாளக்கிராமங்கள். மற்றெரு சிறப்பு சாதுக்கள் தங்குவதற் கெனத் தனியான ஒரு பகுதி. அங்கே எப்போழுதும் பக்திப் பாடல்கள் முழங்கிக்கோண்டே இருக்கும். சூரியன் சிவபெருமானே வழிபடுவதான ஐதிகத்தில் முன்னே சிவலிங்கப் பிரிதிஷ்டையும், பின்னே ஏழு குதிரைகள் பூட்டிய ஒற்றை ஆழிகோண்ட இரதத்தை அருணன் ஓட்டுவதாக அமைந்த சூரிய தேவனும் அமைத்திருக் கிருர்கள். அங்கு வழிபாட்டிற்கு வருவோர் மயில் விசிறி கோண்டு விசிறியும், மயில் தோகையினுல் ஆக்கப்பெற்ற தோம்பைகோண்டு விசிறியும் வழிபாடு நடத்துகிருர்கள் நீண்ட நேரம். அக்கோவிலில் எல்லா மூர்த்தங்களேயும் தரிசித்து முடித்துக்கோண்டு நாங்கள் இருப்பிடம் வந்து சேரவும் மேஜர் பூரியின் கார் வந்து நிற்கவும் ஒத்திருந்தது.

பூரியுடன் :

நானும் 'நாரதர்' ஸ்ரீ ஸ்ரீநிவாச ராவும் மேஜர் பூரியைப் பார்க்கச் சென்ருேம். எங்களே உரிய மரியாதையோடு அழைத்துச் செல்ல இருபடை வீரர் வந்திருந்தார்கள். மேஜர் பூரியின் வீட்டின் எல்லேக்குள் புகுந்ததும் அவரே எங்களே எதிர்கோண்டு வரவேற்று அழைத்துச் சென்ருர். சிறிது நேரம் அறிமுகம்; பிறகு போதுவான உலகியல் பேச்சு; உபசார மோழிகள்.

புரிகிறதா ?

பேசிக்கோண்டிருக்கும்போழுது நடுவில் தோலே பேசியில் மணி கிணுகிணுத்தது. மேஜர் பூரி "இதோ

வருகிறேன் " என்று சொல்லி எழுந்தார். தொலைபேசியை எடுத்தார். ராணுவ அதிகார தோரணையில் " யாரது அங்கே " என்றார். பதில் வந்தது. " அப்படியானாலும் சரி. இங்கே தென்னாட்டிலிருந்து சாது மகராஜ் ஒருவர் வந்திருக்கிறார்கள். அமரநாத தரிசனம் விரும்பி அங்கே நாளையோ மறுநாளோ வருவார்கள். (ஒருவர் பெயர் சொல்லி) இன்னார் இருந்து எல்லா வசதிகளையும் அவர் களுக்குச் செய்துதரல் வேண்டும். புரிகிறதா ? " என்றார். அந்தப்பக்கத்தில் இருந்து இவ்வதிகாரி யாரை எங்களுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்று சொன்னாரோ அவர் இப்பொழுது உதவக்கூடியதாக இல்லை என்று செய்தி வந்ததுபோலும். " அவர் இல்லாவிட்டால் பாதகம் இல்லை. நீயே செய் " என்று உத்தரவு போட்டார். எங்களை அழைத்து " சாது மகராஜுக்கு அங்கே முன் ஏற்பாடாக என்ன செய்துவைத்தல் வேண்டும் " என்று கேட்டார். எங்களுக்கு எது வேண்டும் என்பது புரிய வில்லை. அப்படியே அதைச் சொன்னோம். உடனே அவர் " எப்படியானாலும் அவர்கள் அங்கு வந்ததும் நீ அவர்களைச் சந்தித்து எது விரும்பினாலும் அவர்களுக்குச் செய்துதா வேண்டும். புரிகிறதா ? சிறு தவறும் இதில் ஏற்படக்கூடாது நீ பொறுப்பு " என்று பேசிமுடித்து எங்களுடன் அளவளாவ வந்து சேர்ந்தார்.

பக்தி உணர்ச்சி :

நாங்கள் விமானத்தில் வந்தும் இங்கு ஜம்முவில் நாள் வீணாகக் கழிகிறதே என்று வருந்தினோம். 'இதற் கெல்லாம் இப்படி வருந்தத் தேவையில்லை. நான் ராணுவத்தில் வேலை பார்த்தாலும் நல்ல பக்தியுடையவன். எனக்கு அவனுடைய கருணைச்செயலில் அசைக்கமுடியாத

நம்பிக்கை உண்டு. நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு தடையும் நம்மை உய்விக்க அவன் அருளும் அருட்பிரசாதங்களாகும். பின்னே நமக்கு வர இருக்கும் பெரிய நன்மையைக்குறித்து முன்னே அதற்கு அணை கோலுவான் ஆண்டவன். இதெல்லாம் அனுபவத்தால் - ஆழ்ந்த பக்தியால் விளையக்கூடியதுதான். அதிலும் உங்களைப்போன்று, ஒரு பெரிய மகானுடைய சேவையும் சேர்க்கையும்பெற்ற நன்மக்களுக்கு, என்றும் எப்பொழுதும் போர்வெறியே வாழ்வாகக் கொண்டிருக்கும் என்போன்ற அறிவிலிகள் எடுத்துச்சொல்லத் தரமாகுமா? என்னுடைய தமக்கையின்மூலம் நல்ல அடியவர் சேர்க்கை எனக்குக் கிடைப்பதாக இருக்கிறது. அவரே (தமக்கை) பெரிய சாதுபோன்றவர். இல்லற வாழ்வில் ஈடுபட்டிருந்தாலும் எப்பொழுதும் விரதங்களும் பிரார்த்தனைகளும் யாத்திரை களும் செய்துசெய்து பண்பட்டவர். ஆசாரசீலர். உடன் பிறந்த நான் அவர்களுடைய உடைமைகளைத் தொட்டாலும் அனுசிதப்படுமோ என்று அஞ்சக்கூடியவர். அந்த உத்தமப் பெண்மணி தங்களுக்கென்று நறுமணம் கமழும் தேயிலைப்பானம் தயார் செய்துவைத்திருக்கிறார். நாங்களும் இந்துக்கள்தாம். உயர்வகுப்பைச்சேர்ந்தவர்கள். சிறிது சிற்றுண்டியும் இருக்கிறது. ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்றார். 'அந்த நேரத்தில் ஒரு சிறிது தேநீர் மட்டும் கொடுத்தால் போதும், சிற்றுண்டி வேண்டாம் என்று சொல்லித் தேநீர்மட்டும் அருந்தினோம்.

அம்பிகையின் தண்ணருள் :

ஜம்முவிலிருந்து ஸ்ரீநகருக்கு விமானத்தில் செல்லு வதைவிட நல்ல காரிலே செல்லுதல் மனதிற்கும் இன்பம் ;

தொல்லேயும் இல்லே. அந்தவழி முழுவதும் கண்டு களிக்க வேண்டிய காட்சிகளும் அதிகம் உண்டு. இங்கிருந்து உத்தேசம் 28 கல்தொலேவில் ஸ்ரீவைஷ்ணவ்தேவி ஆலயம் இருக்கிறது. செல்லும்வழியிலே ஜம்முவிலிருந்து 19 கல் தொலேவிலுள்ள கட்டாரா (Katara) வழியாக உத்தேசம் 9 மைல்களில் திரிகூடா பகவதி - ஸ்ரீ வைஷ்ணவ் தேவி திரிகூட பர்வதத்தில் அமர்ந்து அருள் வழங்கு கிருள். நான் அங்கு அடிக்கடி தரிசனத்திற்குச் செல்வ துண்டு. கட்டாரா வரை காரில் செல்லலாம். பிறகு கால்நடை. ஆனுல் நல்ல இன்பகரமான சூழ் நிலேயில் வழி செல்லுகிறது. அந்தச் சூழ்நிலே அம்பிகையின் தண்ணருளே போன்றிருக்கும். இந்தத் தரிசனத்திற்காக வாவது விமானப் பயணத்தைவிட்டுவிட்டுத் தரை வழியே போதல் மிகச் சிறப்பாகும். இச்செய்தியை அந்த மகா னிடமும் தெரிவிக்கவேண்டுகிறேன்'' என்று சொன்னுர்.

"இப்பொழுது எங்களுடைய திட்டம் (குறிக்கோள்) அமரநாதம் செல்வது. நேரே அங்குச் சென்று வழிபாடு முடிந்தபிறகு நாள் பொருத்தமாக இருந்தால் தேவியைத் தரிசிக்கின்ருேம். திருவருள் இருந்தவாறு எல்லாம் நடக்கும்'' என்றும் சொன்னுேம். தான் இரண்டாவது மகாயுத்தத்தில் கடும் போர்க்களத்திலே நின்று எடுத்த படங்கள், அந்நியநாட்டுப் பெருந்தலேவர்கள் வந்தபொழுது உடனிருந்து உபசரிக்கும் வாய்ப்புப்பெற்றபெருமை, இந்தியப் பெரும் தலேவர்களோடு தான் நெருங்கிப் பழக நேர்ந்த வாய்ப்புக்கள், அவ்வப்போதும் தான் எடுத்த படங்கள், இவைகளே எல்லாம் எடுத்துக்காட்டிப் பெருமைப் பட்டார். சிறிதுநேரம் பொழுது போக்காகப் பேசியபிறகு விடைபெற்று விடுதிக்கு வந்து சேர்ந்தோம்.

கர்மஜோன் : (Garma jone)

கட்டாரா கிராமம் மிகவும் வசதியானது. அங்கே புவனேஸ்வரி எழுந்தருளி அருள் வழங்குகிருள். தங்குவதற்குச் சத்திரங்கள், அரசாங்க விடுதிகள் இருக்கின்றன. அங்கிருந்து ½ மைல் தொலேவில் பாலகங்கா (Bal-ganga) என்னும் சிறு நதி ஓடுகிறது. அதில் தீர்த்த மாடுதல் நற்பயன் அளிக்கும். அதற்குமேலே $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் (Pandiga) பண்டிகா (திருவடி), அம்பிகையின் திருவடி இருக்கிறது. அந்த இடத்திற்குப்பேயர் அடன்வாரி. தரிசனம் விசேஷம். பிறகு மேலே ஒரு மலேக்குடைவின் மூலமாக (Tunnel) செல்லுதல் வேண்டும். இந்த குடைவுக்கு (Garma-jone) கர்மஜோன் அதாவது மோட்சத் தூவாரம் என்று பேயர். பாதுகை தேரிசனம் முடித்து மேலே சேல்லும் வழியில் இக்குகைக்கு இப்புறம் நம்முடைய கர்மங்கள் - பாவங்கள் நசிக்கப்பட்டு குகையில் நுழைந்து அப்புறம் சென்றதும் புநிதம் அடைகிரேம் நாம். அதாவது குகைக்கு இப்புறம் கர்ம பூமியும் அதற்கு அப்புறம் ஞான பூமியும் ஆகிறது என்று கருத்துப்பட அக்குகைக்கு அப்பேயர் இடப் பட்டிருக்கிறது. கர்ப்பவாசத்திலிருந்து விடுதலே என்ற கருத்தும் உண்டு.

ச்சஜிசேத் :

பிறகு வழியில் கதி மாதா (Hateematha) என்ற சிகரத்தைக் கடந்துசேல்லுதல்வேண்டும். அதற்கு அடுத்து ச்சஜிசேத் (Chchajeecheth) அல்லது (Sanjee chat) சான்ஜிசாத் அதாவது போம்மைவிளேயாட்டுக்கூரை. (மலேச் சிகரம்). அடுத்து அடகன்வாரி. நல்ல அழகான காட்டுப்

பிரதேசம். மேலே (Bhairov-ghatti) பைவரக் கட்டம் மேலே (Bhaironga Bagh) பைரவர் தோட்டம். மலர்ப் பூஞ்சோலை. மேலே தேவதாருமரம் அடர்ந்த காடு. அழகான நல்ல காட்சி. பிறகு வைஷ்ணவ தேவிதர்பார். அந்த இடத் திற்குப் பெயர் மாதாபாக் - தேவியின் நந்தவனம்.

சரண் கங்கா :

பிறகு வைஷ்ணவ தேவி எழுந்தருளி அருள் வழங்கும் குகைக்கோயில். குகைக்கோயில் வரையிலும் பாதையின் பக்கத்தில் சிறு ஆறு வந்துகொண்டே இருக்கிறது. அதற்கு சரண் கங்கா என்று பெயர் (திருவடித் தீர்த்தம்). அது அம்பிகை எழுந்தருளியுள்ள குகைக்குள் திருவடியின் கீழிருந்து ஊறிப் பெருக்கெடுத்து ஒடிவருகிறது. மிகப் புநிதமானது.

குகை :

அம்பிகை எழுந்தருளியுள்ள குகை மிகச் சிறியது. நுழைவும் ஒடுக்கமானது. குகைக்குள் 10, 15 பேர்களே ஏககாலத்தில் நிற்கலாம். அங்கே திருவடிகள் மட்டிலும் இருக்கின்றன. அவற்றின் அடியில் இருந்துதான் சரண கங்கை ஊறிப் பெருக்கெடுத்துவருகிறது. அந்தத் திருவடி களுக்கு வழிபாடுகள் செய்து மகிழ்கிறார்கள் அன்பர்கள். ஆடியும் பாடியும் கண்ணீர் வடித்தும் இன்பம் பெருக்கி நிற்கும் அவர்களைப் பார்ப்பதே ஒரு நல்ல காட்சி.

தேவி தர்பார் :

அந்தக் குகையைச் சுற்றிலும் நான்கு புறமும் மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் முன்னே சொன்ன வைஷ்ணவ தேவி தர்பார் என்பது.

இது மிகவும் புனிதமான இடம் என்று அன்பர்கள் அங்குத் தங்கி தேவிக்கு வழிபாடுகள் செய்வார்கள். பூசகர்கள் பலரும் அங்கிருந்து தேவி வழிபாடு செய்திருப்பர். மாலை நேரங்களில் எல்லோரும் கூடியிருந்து பஜனையும், பிரார்த்தனையும் செய்து மகிழ்வர். அந்த நேரத்திலே நமக்கு அங்கே ஒரு தனி இன்பம் உண்டாவது இயல்பு. அந்தி நேரங்களில் புறக்காட்சிகளும் மிக அழகாகவே இருக்கும். அந்த இன்பச் சூழ்நிலையில் எவ்வளவு நேரம் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். அதை விட்டு அகல யாருக்கும் மனம் இடந்தராது. சிதோஷ்ண நிலையும் சமனப்பட்டதாக அமைந்திருக்கிறது. இங்கே இரண்டோருநாள் தங்கி வழிபாடுசெய்து, மனமகிழ்வோடு அன்பர்கள் திரும்ப வருவார்கள். வரும் வழியில் கட்டாரா வில் புவனேஸ்வரி ஆலயத்தில் (கன்யாபூசை) கன்னி வழிபாடு செய்வார்கள். இதோடு வழிபாடு முடிவடையும்.

வரலாறு :

அம்பிகை (வைஷ்ணவதேவி - திரிகூடா பகவதி - பார்வதிதேவி) கன்னிப்பருவத்தில் அடகன்வாரி (ஆத்ய கும்வாரி) என்னும் பகுதியில் மகிழ்வுடன் வீற்றிருந்தாள். அந்த இடத்தில் அம்பிகைக்கு ஆந்தியகும்வாரி என்று பெயர். பொருள், முதல் பிரம்மச்சாரிணி, யுவராஜி என்பது. தமிழில் முதல்கன்னி, பர்வதகுல இளவரசி, உலக முதலான பராசக்தி. பைரவர் என்னும் அசுரன் தோன்றினன் அங்கே. அம்பிகையின் அழகைக்கண்டான். காமுற்ருன். நெருங்கிவந்தான். அவனைக்கண்டு அஞ்சி ஒடத்தலைப்பட்டாள் தேவி. எப்படியாவது அவளைப் பலாத் காரமாகக் கைப்பற்ற ஆசைப்பட்டு அந்த அசுரனும் துரத்திச் சென்ருன். குகைக்குள் நுழைந்தாள் அம்பிகை.

அசுரனும் உள் நுழைந்தான். தன் கையில் இருந்த சிறு கோலால் அவ்வசுரனை அடித்துக்கொன்ருள். அச்சிறுகோல், அம்பிகையின் அருளால் பெரிய ஆயுதமாக நின்று உதவியது. அவனுடைய சரீரம் விழுந்த இடம் பெரிய கல்லாக இன்றும் கிடக்கிறது. மேஜர் பூரி சொன்னவற்றின் சுருக்கம் இவை. பூரியிடம் விடைபெற்று வந்து யாத்ரீகர் விடுதியில் அன்றிரவைக்கழித்தசெய்திமேலேசொல்லப்பட்டிருக்கிறது.

சட்டம் குறுக்கிட்டது :

அன்றிரவு கழிந்து மறுநாள் அதிகாலையில் எழுந்து நீராடி, காலைக்கடன்களை முடித்து விமான நிலையம் வந்து சேர்ந்தோம். அப்போழுது மணி 6-30. அதிகாலையில் இருந்தே விமான நிலைய அதிகாரிகள் எவ்வளவு முயன்றும் 7 மணி வரையிலும் ஸ்ரீநகருக்கு வரலாம் என்ற அனுமதி கிடைக்கவில்லை. ‘ எந்த விமானமும் முதலில் புறப்பட்ட ஊரிலிருந்து எங்கு எந்தநிலையில் தங்கி இருந்தாலும், 24 மணி நேரம் வெளியே தங்கிவிட்டால், பிறகு எஞ்சினீயர் ஒருவர் இயந்திரங்களைச் சோதித்துப்பார்த்து அவற்றில் கேடுதி ஒன்றும் இல்லையேன்று உறுதி சோல்லும்வரை எந்த இடத்தில் தங்கி இருக்கிறதோ அங்கேயே அவரை எதிர்நோக்கிக் காத்திருக்கவேண்டும் ’ என்றவிதி ஒன்றிருக்கிறது. முதல்நாள் 8-30க்கு எங்கள் விமானம் புறப்பட்டதாதலின் அன்றுடில்லியிலிருந்து எஞ்சினீயர்வந்துபரிசீலனை செய்து மேலே சேல்வதற்கு உத்திரவு கோடுக்கவேண்டியதாக ஆகிவிட்டது. டில்லிக்கு அறிவித்தார்கள். எஞ்சினீயர் அதன்படியே அன்று வரும் விமானத்தில் வருவதாகவும் செய்திவந்தது. நிலைய அதிகாரிகள் ‘‘ சட்டம் குறுக்கிட்டு விட்டது. என்னசெய்யலாம் ? ’’ என்று சிறிது காலத்தைக் கடத்திவிட்டார்கள்.

எவரெவர்க்குதவினர் ;

''மற்றேன்று எங்களுடையவிதிகளின்படிவிமானத்தில் புறப்பட்டதிலிருந்து 24 மணி நேரம் விமானப் பிரயாணிகளுக்கு உணவு வசதியும் தங்குவதற்கு இடவசதியும் நாங்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேம். அதற்குமேல் எந்தக் காரணத்தைக்கோண்டாவது தாமதப்பட்டாலும் அவரவர் வசதிகளை அவரவருமே பார்த்துக்கோள்ளுதல் வேண்டும். இதையும் வருத்தத்துடன் தேரிவித்துக் கோள்ளுகிறேன். மன்னிக்க'' என்று சோல்லிமுடித்தார்.

'' இதுவல்லாமலும் இனி விமானம் புறப்படும் வரைக் காத்திருக்க மனம் இல்லாது ஸ்ரீநகர்க்குப் புறப்பட்டுப் போக விரும்பினல் எங்கள் சேலவிலேயே உந்தூர்தி (பஸ்) மூலமாக அனுப்புதற்கும் ஏற்பாடு சேய்யக் காத்திருக்கிறேன். அவரவர் விருப்பத்தைத் தேரிவித்துக்கோள்ளலாம். ஆனுலும், இன்று முழுவதும் விமானம் இங்கேயே தங்கிவிடும் என்றும் எதிர்பார்ப்பதற்கும் இல்லை. ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் பனிஹால் பகுதி வேளி வாங்கினுல் உறுதியாக விமானம் புறப்பட்டுவிடும். போறுத்துப் பார்ப்பதும் நல்லதுதான்; அவரவர்விருப்பப்படி எதுவும்சேய்துகோள்ளலாம்'' என்ருர்.

வழி திறக்காதா ?

அன்று அதிகாலையிலிருந்தே ஜம்முப் பகுதியில் சிறு தூறலும் இல்லை. சூரியன் நன்ருக ஒளிவிட்டு வேளிவந்தான். இங்கு இப்படி இருக்கும்போழுது பனிஹால் பகுதியில் ஒரு சிறிது நேரம் மழை மேகம் கலேந்து விமானம் சேல்லுதற்கு வழி திறக்காதா என்ற ஆசை ஒவ்வோருவர் மனத்திலும் மேலோங்கி நின்றது.

ஏனெனில் உந்தூர்தி (பஸ்) வழியாகச் சென்ருல் காலையில் புறப்படும் ஒன்று மாலையில் பனிஹால் சென்று அடையும்; அங்குத் தங்கி மறுநாள் காலையில் புறப்பட்டு ஸ்ரீநகரத் திற்குப் பிற்பகல் போய்ச்சேரும். விமானம் ஜம்முவை விட்டுப் புறப்பட்டால் 1 மணி நேரத்திற்குள்ளாக ஸ்ரீநகரை அடைந்துவிடும். சோர்வுக்கு இடம் இல்லை. நேரமும் வீணுகாது. இந்த எண்ணத்தோடு அன்று நடுப்பகல் 12 மணி வரை பார்ப்பது, பிறகு மலைப்பகுதிகளில் இந்த நாட்களில் மழையோ மேகமுட்டமோ வந்தாலும் வரலாம், ஆகவே விமானத்தை எதிர்பார்க்காது உந்தூர்தி தனியாகத் திட்டம் செய்து எடுத்துச் சொல்லுவது என்று மகாசந்நிதானத்தில் உத்திரவாயிற்று.

நல்ல பொழுதுபோக்கு :

எதிரே உள்ள ராணுவ தளத்தில் பலபல பகுதி களாகப் படையினரைப் பிரித்து சண்டைப் பயிற்சி, துப்பாக்கி சுடுதல், உடற் பயிற்சி இதுபோன்ற எல்லாப் பயிற்சிகளும் கொடுத்தார்கள். ராணுவப் பயிற்சியில் மலைப் பகுதிப் போர் முறையும் நடத்திக் காட்டினர்கள். வேறு எங்கும் இப்பயிற்சிகளை ஒரு சேரப்பார்த்தால் அரிது. அத்தோடு போர் விமானங்கள் அவ்வப்பொழுதும் மேலே வந்து அப்படைப்பகுதியை வட்டமிட்டு வேகமாக மறைத்து செல்லும். இது பயிற்சியேயானுலும் அழிவு ஏற்படாத கடும்போர் எனவே சொல்லக்கூடியதாக நடத்திக் காட்டினர்கள். குண்டு வேடித்தது. ஆனல் சேதம் எதுவும் இல்லை. மனதில் ஏக்கத்தோடு இருந்த பலருக்கு இது ஒரு நல்ல போழுது போக்கு.

காலைச் சிற்றுண்டிக்கு அவரவரும் ஜம்மு நகரத்திலிருந்து வாங்கி வர ஏற்பாடு செய்து கொண்டோம். அதற்கு நகரம் வரை சென்று வர விமான நிலைய உந்தூர்தியை அதிகாரிகள் கொடுத்துதவினர்.

நல்ல செய்தி :

மணி 10-30க்கு நல்லசெய்தி ஒன்றுவந்தது. ஸ்ரீநகரத்திலிருந்து விமானம் புறப்பட்டு வந்துகொண்டிருக்கிறது; சிறிது நேரத்தில் ஜம்மு வந்து சேரும் என்பது. மேலும் ஒரு நல்ல செய்தி. டில்லியிலிருந்து புறப்பட்ட விமானமும் அமிர்தசரஸைவிட்டு வந்துகொண்டிருக்கிறது; எஞ்சிநீயரும் அதில் வருகிறார் என்பது. எல்லோரும் பெருமகிழ்வோடு அந்த இரண்டு விமானங்களையும் எதிர்நோக்கி இரண்டு திக்குகளிலும் அடிக்கடி கண்ணோட்டம் செலுத்தி வந்தோம்.

முதலில் வந்தது காஷ்மீரத்திலிருந்து வருவது. நல்லநிலையில் தளத்தில் வந்து இறங்கி நின்றது. சில விநாடிகளுள் டில்லி விமானமும் வந்து இறங்கியது. இதற்குள் மழைத் தூறலும் தொடங்கிவிட்டது.

எஞ்சிநீயரும் வந்தார் :

உள்ளூர் விமான நிலைய அதிகாரி அளவில்லாத மன மகிழ்வோடு பெரிய போரில் வெற்றி கண்ட வீரனைப் போல டில்லி விமானத்திற்கு வழக்கமாகக் காட்ட வேண்டிய சைகைகளைக் காட்டிவந்தார். அவருடைய சைகையின்படி விமானஓட்டியும் விமானத்தைத் தளத்தில் நகர்த்திவந்தார். மழை நேரம் ஆதலால்

அதில் வரும் பிரயாணிகளுக்கு அதிகத் துன்பம் இல்லாது செய்யும் நோக்கத்தோடும், காஷ்மீரத்து வழி திறந்து வரவேண்டிய விமானம் வந்துவிட்டதாகையால் தடையில்லாமல் டில்லி விமானங்கள் இரண்டையும் ஒருசேர ஒன்றன்பின் ஒன்ருகக் காஷ்மீரத்திற்கு எல்லோருடைய மனமும் குளிர அனுப்பிவைத்து இன்று காரியத்தைச் சாதித்துவிடப்போகிரேம் என்ற பரபரப்போடும் தவருன குறிப்பைக் காட்டிவிட்டார். அவர் கை ஆட்டத்தைக் கண்டு அதன்படி நடத்தப்பட்ட விமானம் சேற்றுப் பகுதியில் திடீரேன்று இறங்கிவிட்டது. முன் சக்கரங்களில் ஒன்று சேற்றில் நன்ருகப் பதிந்து சிக்கிக்கோண்டது. விமானத்தை இப்புறம் அப்புறம் நகர்த்தமுடியாமல் நிறுத்த வேண்டியதாயிற்று. ஒருவழியாகப் பிரயாணிகளையும் இறக்கிஞர்கள். விமானிகளும் இறங்கிஞர்கள். எஞ்சிநீயரும் இறங்கிஞர்.

சிறு விமானக்கூட்டந்தான் :

பனிஹால் பகுதியும் கண்ணைத் திறந்துவிட்டது; எதிர்பார்த்த எஞ்சிநீயரும் வந்துவிட்டார்; இன்னும் சிறிது நேரத்தில் நமது விமானமும் புறப்பட்டுவிடும் என்று குதூகலத்துடன் ஒருவருக்கோருவர் சேய்தி சோல்லிக்கோண்டோம். ஆனல், அங்கு நேர்ந்தது என்ன ? டில்லி விமானம் சேற்றில் இறங்கியபடியால் மற்ற விமானங்களை முன்னே நகர்த்தவும் முடியவில்லை. அது ஒரு சிறு விமானக்கூடம்தான்.

யாருமில்லை :

வந்த எஞ்சிநீயரும் அதிகமாக அவசரப்படத் தேரியாதவர். வந்தார்; சிற்றுண்டிச்சாலைக்குள் புகுந்தார்;

ஓரளவு களைப்பாற்றிக்கொண்டார் ; தேனீர் அருந்தினர். மூன்று விமானங்களின் ஒட்டிகளும் நிலைய அதிகாரிகளும் அவருக்கு உபசாரங்கள் செய்தனர். அளவளாவிப் பேசத் தொடங்கினர். புறப்பட்டுத் தளத்திற்கு வந்தார்கள். நேரே முதல்நாள் வந்த விமானத்தைப் பரிசீலித்து முடித்துக் கொண்டு, பிறகு வேறு வேலை பார்ப்பார் என்று நினைத் தோம். அவர் நேரே அன்று வந்து சேற்றில் இறங்கிய விமானத்திடம் சென்றார். விமான ஒட்டியையும் இயந் திரத்தை இயக்கச்செய்தார். அந்தச் சக்கரம் மிகவும் பளு வானது. அமைப்பிலும் பெரியது. இயந்திரம் இயங்கத் தொடங்கியதும் வேகமாகச் சுழன்று கீழே 4, 5 அடிகள் சேற்றில் பதிந்தது. நிலையசிப்பந்திகள் எல்லோரும் அங்கே கூடிவிட்டார்கள். மக்கள் மனநிலை அறிந்து அவர்களுக்குப் பரிகாரம் செய்யவேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் அங்கு அப்போழுது யாருமில்லை.

கைகொடுத்துத் தள்ளுங்கள் :

நல்ல நிலையிலுள்ள மற்ற இரண்டு விமானங்களையும் முதலில் அதுவதுவும் செல்லவேண்டிய இடங்களுக்கு அனுப்பிவிட்டு மூன்றுவதாக இதைப்பார்க்கலாமே என்று லும் அதைக் காதில் வாங்கிக்கொள்ளக்கூடிய நிலையில் யாரும் அங்கில்லை. “ எல்லோரும் தயவுசெய்து இங்கு வாருங்கள். இந்தப் பகுதியை இப்படிச் சிறிது பிடித்துத் தள்ளுவோம். ஒரு சிறு அசைவில் இந்த விமானம் நேர் நிலைக்கு வந்துவிடும். இப்பக்கத்தில் ஒருகைகொடுத்துத் தள்ளுங்கள். போதும்; போதும். அதிகமாகத்தள்ளிவிட்டீர் களே. மற்றொரு சக்கரமுமல்லவா கீழே இறங்கிவிடப் பார்த்தது. இன்னும் சிறிது ஒத்துழையுங்கள். அந்தப் பகுதியில் கைவைத்துத் தள்ளுங்கள். ” இப்படியே

மாறிமாறி இப்பகுதியிலிருந்து அப்பகுதி; அப்பகுதியிலிருந்து இப்பகுதி தோட்டு எல்லோரும் தள்ளினோம். விமானத்தை நேர்வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. இதற்குள் ஒரு மணி நேரத்திற்கு மேலாகிவிட்டது.

ஆலோசனை சபை :

மேலே மழைத்தூறல், எல்லோர் உள்ளத்திலும் மனக் குமுறல். அதைவிட்டு ஒவ்வொருவராக நழுவி விமானக் கூடத்திற்கு வந்துசேர்ந்தோம். எஞ்சினீயர் அதைச் சுற்றி சுற்றி வந்தார். அவரும் மற்றையோரும் விமானக்கூடத் திற்கு வந்தார்கள். ஒரு சிறு ஆலோசனை சபை கூடியது. அவரவர் மனதில் உள்ள எண்ணங்களை வெளியிட்டார்கள். முடிவில் விமானத்தைக் கயிறுகொண்டு வால்பகுதியில் கட்டிப் பின்பக்கமாக இழுக்கலாம் என்று முடிவு கட்டினார்கள். வாலிலே கயிற்றைக் கட்டினார்கள். கயிற்றைப்பற்றி வலித்து இழுத்தார்கள். கயிறு நீண்டது, விமானம் அசையவில்லை. சிறிதுநேரம் கழிந்தது.

வாலில் கயிறு :

இரண்டாவது படையெடுப்புக்கு மறுபடியும் ஒரு ஆலோசனை சபை கூடியது. ஏகமனதாக பக்கத்திலுள்ள இராணுவக் காரியாலயத்தில் இருக்கும் (Tractor) டிராக்டரைக் கொண்டுவரச்செய்து அதையும் விமானத் தையும் கயிற்றால் பிணைத்து வால்பக்கமாக இழுத்தால் விமானம் நேர்நிலை வந்துவிடும் என்று முடிவு செய்தார்கள். தொலைபேசியை எடுத்தார்கள். ராணுவத்தினரின் உதவி கேட்டார்கள். ' டிராக்டர் தற்பொழுது இல்லை. ஜீப் வருகிறது '' என்று பதில் வந்தது. ஐந்து நிமிஷ நேரத் திற்குள் ஜீப்பும் விரைந்துவந்து நின்றது. ஜீப்பையும்

விமானத்தையும் இணைத்துக் கயிறு கட்டினார்கள். கயிறு சிறு தேர்வடம்போன்று பெரிய வலுவான கப்பற்கயிறுதான். இருந்தாலும் முன்னே மனிதர்கள் இழுத்தபொழுதே நீண்டு கொடுத்ததல்லவா ? ஒருக்கால் அந்தக் கயிறு அறுந்து விட்டால், அந்த வேகத்தில் விமான உறுப்புக்கள் பழுது படுமோ என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கும் போலும். “ எல்லோரும் சிறிதுநேரம் இங்கே வாருங்கள் இதை நேர்நிலையில் நிறுத்திவிட்டு மற்ற விமானங்களை முதலில் புறப்படச் செய்யலாம் ” என்று நயமாகப் பேசினார்கள். எவ்வளவு மனதில் வருத்தம் இருந்த போதிலும், இந்தநிலையில் உதவுகிறோம் என்ற எண்ணத் தோடு எல்லோரும் சென்றோம். பின்னே ஜீப் இழுக்க, நாங்களும் விமான உறுப்பைத்தாங்கி அப்பக்கமாகத்தள்ளி னோம். கயிறு நீண்டது; அறுந்தது; விமானம் அசைய வில்லை. ஜீப் அந்த வேகத்தில் சிறிதுதூரம் ஓடிநின்றது.

முறட்டுச் சங்கிலி :

வந்ததுமே ராணுவத்தினர் இதற்கென விமானத்தில் உள்ள கருவிகளில் கொக்கியுடன் கூடிய சங்கிலியை எடுத்து அதை வால் பகுதியில் மாட்டி இழுத்தால் எளிதில் இக்காரியம் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் எஞ்சினியர் ‘ முறட்டுச் சங்கிலிகொண்டு வால் பகுதியில் கட்டினால் ஒருக்கால் வேகமாக இழுக்கும் பொழுது அது பிணைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில் இரும்புச் சங்கிலி உராய்ந்து விமான உறுப்புக்கள் பழுது படலாம் அது வேண்டாம். கயிறு கொண்டே இழுத்து விடலாம் ’ என்றார். அவர் முடிவு பலியாது போகவே, அந்தச் சங்கிலி விமானத்திலிருந்து வெளியே எடுக்கப் பட்டது. உட்காரும் பகுதிகளில் உள்ள சிறு தலையணைகளை

அணைத்துச் சங்கிலியை மாட்டி ஜிப்பில் பொருத்தி இழுக்கச் செய்தார்கள். விமானம் மிக எளிதில் மேலே வந்து நின்றது. மகிழ்வுற்றூர்கள்.

சந்தோஷம்! நன்றி !!

காஷ்மீரத்திலிருந்து வந்த விமானச் சிப்பந்திகள் தாம் இனிப் பொறுத்திருக்கமுடியாது. டில்லிக்குப் புறப்பட அனுமதிவேண்டும் என்ருர்கள். மூன்று விமானங்களும் பக்கம் பக்கமாக நிறுத்தப்பட்டிருந்தபடியால் அந்த விமானம் சிறிது தொலைவு தளத்தில் ஓடி மேலே பறக்கத் தொடங்குவதற்கு வேண்டிய அளவு இடைவெளி இல்லை. மறுபடியும் பிரயாணிகளை நோக்கி ''இந்த விமானத்தைச் சிறிது தள்ளிவிடுவோம். பிறகு எல்லாம் எளிதில் முடிந்து விடும்' என்று அழைத்தார்கள். அங்கும் சென்ருேம். அதைப் பின்னுேட்டமாக வெகுதூரம் தள்ளினுேம். ' சந்தோஷம் '' என்ருர்கள். '' நன்றி '' என்ருர்கள். கையைப் பிடித்துக் குலுக்கினுர்கள். 'டில்லி செல்லும் பிரயாணிகள் விமானத்தில் ஏறிக்கொள்ளலாம்' என்ருர்கள். அந்த விமானமும் புறப்பட்டது டில்லியை நோக்கி.

எஞ்சினியரும் விமான ஓட்டிகளும் நிலைய சிப்பந்திகளும் அந்த நிலையத்திற்குள்ள (பஸ்ஸில்) உந்தூர்தியில் ஏறிக்கொண்டார்கள் ; 'நகரத்தில் வந்து பசியாற விரும்புவோர் எங்களோடு வரலாம்' என்று அறிவித்தார்கள். வந்தவர்களை ஏற்றிக்கொண்டு நகரத்திற்குச் சென்று விட்டார்கள். பிறகு பிற்பகல் 3 மணிக்கு எல்லோரும் உற்சாகமாக வந்தார்கள். அளவளாவிப் பேசினர்.

மேலே செல்லலாம் :

மேதுவாக முதல் நாள் நாங்கள் வந்த விமானத்தில் எஞ்சினீயர் ஏறினார். சில விசைகளை முடுக்கினார். இயந்திரத்தை இயக்கச் செய்தார். "நல்ல நிலையில் இருக்கிறது; மேலே செல்லலாம்" என்று சான்றுப் பத்திரம் வழங்கினார். ஆனால் அந்தப் பாழும் மலைப்பகுதி மறுபடியும் அந்த நேரத்தில் அடைத்துக்கொண்டது.

கடமை முடித்த பெருமை :

இதற்குள் மாலை மணி 4. இரண்டு விமானங்களிலும் வந்த பிரயாணிகளுக்கும் மனத்துன்பம் அதிகம். 'காஷ்மீரம் வந்தது போதும். டில்லிக்கே நாங்கள் திரும்பிவிடுகிறோம். ஒரு விமானத்தையாவது இப்பொழுது டில்லிநோக்கி அனுப்பவும். எங்களுடைய பிரயாணத்தின் மிகுதிப் பகுதிக்குள்ள கட்டணத்தை திருப்பித் தரவும்' என்று கேட்டு வாங்கி டில்லிக்கே பலரும் திரும்பினார்கள். உறுதியாக அமரநாத தரிசனத்திற்கென வந்த மகாசன்னிதானமும் அவர்களைச் சார்ந்த நாங்களும், தேன்நிலவு கழிக்கவந்த தம்பதிகளும், ஆஸ்திரேலியரும், இன்னும் ஒரு சிலருமே அங்கே தங்கினோம். எஞ்சினீயரும் தாம் வந்து சிறப்பாக எல்லாவற்றையும் பார்வையிட்டுத் திருத்தவேண்டியதைத் திருத்தி தம்முடைய கடமையை முடித்த பெருமையோடு திரும்பினார். டில்லி திரும்பச் செல்லவேண்டும் என்று பலரும் வற்புறுத்தியது அவருக்கும் நல்லதாயிற்று.

சென்றது போதும் :

இந்த நாடகத்தைக்கண்ட எங்களுக்கு மனம் புண்பட்டது. நிலைய அதிகாரியை அணுகி 'விமானத்தில் நாங்கள் சேன்றது போதும். காலையில் தாங்கள் ஏற்றுக்

கொண்டதுபோல காஷ்மீரம் செல்லுவதற்கு நல்லதொரு உந்தூர்தி திட்டம் செய்து கொடுத்துவிடுங்கள். ஆனால் மகாசந்நிதானத்தின் கோஷ்டியோடு வேறு ஒருவரும் வரவேண்டாம். ஸ்டேஷன்வாகனாக இருந்தால் அதுவே போதும். தனி வசதி செய்தி தரல்வேண்டும்' என்று கேட்டோம். "மிகவும் மகிழ்ச்சி. எங்களுடைய நிலைய ஸ்டேஷன் வாகன் ஒன்று இருக்கிறது. அது பழுதாக இருந்தபடியால் பட்டறையில் விடப்பட்டிருக்கிறது. வேண்டுமானால், மாலை 6 மணிக்கு மேல்தான் அது வரும், அப்படி வந்தாலும் இரவு நேரத்தில் அந்த வழியில் செல்லுவது முடியாது. நாளைக் காலையில்தான் புறப்படமுடியும். அவசரமாக இருந்தால் வெளியார் வாடகைக்கு வைத்துள்ளவற்றுள் சிறந்ததாக ஒன்றை ஏற்பாடு செய்து தருகிறேன். உத்திரவா" என்றார். எப்படியாவது அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டால் போதும் என்ற மனநிலை எங்களுக்கு. "இனி இங்கு ஒரு சிறிதும் தங்கமுடியாது. இப்பொழுதே ஒரு ஏற்பாடு செய்யவும்" என்று கேட்டுக்கொண்டோம். தொலைபேசி மூலம் ஏற்பாடுசெய்து ஒரு உந்தூர்தியும் (காரும்) வரச் செய்தார். நிலைய அதிகாரி அதைவந்து சுற்றிப்பார்த்தார். காரோட்டியைச் சிறிது தொலைவில் அழைத்துச்சென்று அவர் காதில் ஏதோ சில பேசினார். பிறகு எங்களை அழைத்தார். 'இந்த வண்டியைப் பார்த்துக்கொள்ளுங்கள். இதுதான் இப்பொழுது உள்ள நிலையில் சிறந்த ஏற்பாடு. விருப்பமிருந்தால் இதில் செல்லலாம். இல்லையேல் பொறுத்திருந்து நாளைக்காலையில்தான் செல்லமுடியும். சிந்தித்து முடிவு செய்யுங்கள். பிறகு என்மீது குறை சொல்லவேண்டாம்" என்று சொல்லித் தன் பொறுப்பைக் கழித்துக்கொண்டார்.

தந்தனம்! தந்தனம்! தந்தனம்!

அப்போழுது மாலே மணி 5. "வேளித்தோற்றம் எப்படி இருந்தாலும் இயந்திரப்பகுதி நன்ருக இருந்தால் அதுவே போதும். இதைவிடச் சிறந்த வண்டி கிடைக்கா விட்டால் தாங்கள்தான் என்ன சேய்யமுடியும். தங்களுக்கு இது வரையும் நாங்கள் கோடுத்த தோல்லேக்கு வருந்து கிருேம். எங்களுடைய பேட்டி படுக்கைகளே இதில் ஏற்றச் சேய்யவும். நாங்கள் இதிலேயே இப்போழுதே சேல்லு கிருேம்" என்ருேம். விரைவில் விமானத்திலுள்ள போருள்கள் காரில் ஏற்றப்பட்டன. அதிகாரியும் உடன் இருந்து வழியனுப்பினுர். கார் புறப்படும் சமயத்திலும், "என்மீது குறைப்படவேண்டாம். சமய சந்தர்ப்பங்கள் இப்படி ஆகிவிட்டன. இப்போழுதுள்ள சூழ்நிலேயில் இந்தச் சிறந்த ஏற்பாட்டையாவது தங்களுக்கு நான் சேய்துகோடுக்கமுடிந்ததே என்று மகிழ்வுகோள்ளுகிறேன். யாத்திரை வேற்றியுடன் நிறைவுற அமரநாதன் அருள் புரிவாருக. சேன்றுவாருங்கள் வந்தனம் வந்தனம்*" என்று வாழ்த்தி வழியனுப்பினுர்.

பேறுபெற்றேன்:

ஸ்ரீநகரத்திற்கு விமானம் எப்போழுது புறப் படும் என்று ஏங்கி இருந்தநிலேயில் டில்லியில் இருந்து

---

* நரியைப் பரியாக்கி அழைத்து வந்த சோக்கலிங்கப் பேருமான் பாண்டிய மன்னனிடம். குதிரைகளின் இலக்கணம் முதலியன விளக்கிச் சோல்லிக் கோடுத்தார். கயிறு மாறினுர். அப்போழுது "தந்தனம், தந்தனம், தந்தனம்" என்று மும்முறை சோல்லி விடைபேற்ருர் என்பர். அதுபோன்ற நிகழ்ச்சிதான் இதுவும்.

எஞ்சிநீயரை ஏற்றிவந்த விமானத்தில் (ரேடியோ ஆப் ரேட்டர்) வானொலி இயக்குனர் ஒரு தமிழர். திருச்சியைச் சேர்ந்தவர். M. M. சுந்தரம் என்று பெயர். மீனாட்சி சுந்தரம் அப்படிக் குறுகியது. மகாசந்நிதானத்தின் அருகே வந்தார். வணக்கம் தெரிவித்தார். தமிழில், தான் இன்னார், இன்ன ஊர், இன்ன வேலை என்பதையும் தெரிவித்துக்கொண்டார். டில்லியிலிருந்து அன்று, தான் விமானத்திற்கு வரும்பொழுது அங்குள்ள அன்பர்கள் மகாசந்நிதானத்தில் முதல்நாள் ஸ்ரீநகர் சென்றிருக்கும் செய்திசொல்லி "அங்கு அவர்கள் (ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்) தங்குவதற்கு நல்ல ஏற்பாடுகள் நடைபெற்றிருக் கின்றனவா என்று பார்த்துவரச் சொன்னார்கள். மகா சந்நிதானத்தை இங்கேயே காணும் பேறுபெற்றேன்" என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டார்.

உண்டா இல்லையா ?

பக்கத்தில் நின்றநான் "காஷ்மீரம் செல்வது இவ்வளவு துன்பமாக இருக்கும் என்று முன்பே எங்களுக்குத் தெரியாது. விமானத்தில் புறப்பட்டோம் ; நேரே போய் இறங்கினோம் என்பதில்லாமல், நேற்றும் இன்றும் காத்திருக்கவேண்டி யிருக்கிறது. உண்டா, இல்லையா என்பது தெரியாது மயங்கி மயங்கி இங்கே தங்கி இருப்பது துன்பமாக இருக்கிறது. ஏன் இப்படி எங்களுக்கு இந்தச் சோதனையோ" என்றேன்.

"உங்களுக்கு மாத்திரம் அல்ல. இங்கு வரும் எவருக்கும் இந்தச் சோதனைகள் நிகழ்வதுண்டுதான். சிலநாட்கள் நாங்கள் வீட்டிலே அன்றிரவு எங்களுக்குப் பிடித்தமான உணவுவகைகளை ஆக்கிவைக்கும்படிச் சொல்லி உடனிருந்து உண்ணச் சில நண்பர்களையும்

அழைத்துவிட்டுப் புறப்படுவோம். விமான அலுவலர்கள் பெரும்பாலும் சகோதரபாவத்தோடு நெருங்கிப் பழகு வோம். எப்போழுதும் மகிழ்ச்சியாக இருக்கவே பயிற்சி எங்களுக்கு. டில்லியை விட்டுக் காலே 8-30 மணிக்குப் புறப்படும் விமானம் ஸ்ரீநகர்க்கு 11-30க்குப் போய்ச் சேரவேண்டும் அதே விமானம் ஸ்ரீநகர் விட்டு பிற்பகல் 1-10க்குப் புறப்பட்டு மாலே 4-10க்கு டில்லி வந்து சேரவேண்டும். இதுதான் திட்டம். விமானதளத்தில் ஒரு சிறிது எங்களுக்கு வேலே இருக்கும். அவற்றை முடித்துக்கோண்டு மாலே 5 மணிக்குள் வீடு சென்று விடலாம். இதைநம்பி முன்னே சோன்ன ஏற்பாடுகள் வீட்டிலே நடக்கும்.''

நம்பிக்கைத்துரோகி :

''பனிஹால் பகுதி விமானப் போக்கு வரத்திற்கு எப்போழுதும் ஒரு நம்பிக்கைத் துரோகி என்றே சோல்லலாம். போகும்போழுது வானிலே மிக நன்ருக அமைந்திருக்கும். ஸ்ரீநகரை விட்டு விமானம் புறப்பட சில விநாடிகளுக்கு முன்னே மழை மூட்டமோ பனி மூட்டமோ, சுழல் காற்ருே அல்லது பனியோ மழையோ பேய்வதாக அல்லது இருப்பதாகச் சேய்தி வரும். சில நாட்கள், அன்று முழுவதும் எங்களுக்கு வழிவிடாது. மறுநாளோ மூன்ருவது நாளோதான் புறப்படக் கூடிய தாகவும் இருக்கும். எங்கள் பிரயாணத்திட்டப்படி காலேயில் புறப்பட்டு மாலேயில் திரும்புவது என்றிருப் பதால் மேலே போட்டிருக்கும் உடைகளேத் தவிர மாற்றுடை இல்லாது வந்துவிடுவோம். அப்படித் தங்க நேரும் நாட்களில் வீட்டில் உள்ளோர் விருந்தினர்

எல்லோரும் எங்களை எதிர்பார்த்து நீண்ட நேரம் காத்திருந்து அன்று திரும்பவரவில்லை என்பதை எங்கள் காரியாலயத்திலிருந்து தெரிந்து, வருத்தத்துடன் உண்டு செல்வர், நாங்களும் மாற்றுடை இல்லாது இங்கு தவிப்போம். அன்று திட்டப்படி விருந்தினரை உபசரிக்க வழியில்லாது காஷ்மீரத்திலோ அல்லது ஜம்முவிலோ தங்கி ஏங்கி நிற்போம். ஆகவே இது எப்பொழுதும் நிகழ்வதுதான். புதிதாகையால் தங்களுக்கு வருத்தம் இருக்கிறது'' என்று தேர்தல் சொல்லி அவர் வேலை மேற்சென்ருர்.

தமிழ்ச்சொக்கன் :

அவ்வளவு கவலையிலும் தமிழர் ஒருவர் அந்நேரத்தில் மனச் சோர்வைப் போக்கவந்தார். வந்தவர் பெயரும் மீனுட்சிசுந்தரம். '' சொக்கன் என்னுள் இருக்கவே - இடர் இல்லை. என்பது இங்கே நமக்கு அருளியிருக்கும் உபதேசம். நேற்றும் இன்றும் நாம் வீணுகப்பட்ட கவலைகளுக்கு மாற்று மனித உருவிலே வந்து நமக்கு ஆறுதல் சொல்லிப்போயிருக்கிறது. இவ்வளவு தொலைவில் தமிழர் ஒருவர் நமக்கு வந்து ஆறுதல் சொல்லுவது எதிர்பார்க்கக்கூடியதா ? குருமுதல்வர்கள் இடித்து இடித்துச் சொல்லியிருப்பவைகள்தான் இப்பொழுது நமக்குத் துணை செய்யும் ; எங்கே நடத்துமோ! எங்கே கிடத்துமோ! எங்கே இருத்துமோ! கங்கைமதி சூடிருன் தில்லையால் தொம்தோம் என நின்று நடனமாடிருன். அவன் எம் கோன். 'அவனுட்டம் இவ்வுலகாட்டம். ஐந்தொழில்களும் அந்த நடனத்திலே நடைபெறுகின்றன. அவன் அருள்

இருந்தவாறு நமக்கு எல்லாம் நடைபெறுகின்றன. அத் திருவிளையாடலைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் நமக் குண்டா? மாதேவன் காட்டிடுவதான அத்திருவருளே கண்ணாகக் காணின் அல்லால் நம்முடைய ஊனக்கண் கொண்டோ வேற்றுமனம் கொண்டோ பார்த்து அறிந்து விடமுடிகிறதா? 'எங்கே என்னை இருந்திடம் தேடிக் கொண்டு அங்கே வந்து அடையாளம் அருளினார் உன்னி உன்னி உறங்குகின்றேனுக்கு' என்பதற்கு இலக் கியமாக வந்தார் மீனாட்சிசுந்தரம் - செந்தமிழ்ச்சொக்கன். தமிழன் நிலையில்வந்து தன்னை நினைவுபடுத்தினான்.''

''மனம் மயங்குகின்றகாலத்தில் பெருமானுடைய திரு வடிச் சிந்தனை நம்முள்ளே நிலைத்துநிற்கச் செய்திருக்கும் திருவிளையாடல்தான் இது. அறிவைத் திருப்பி அவன் பாதாரவிந்தம் அடையவல்ல நெறியைக் கொடுத்து நிறுத்திய மேன்மையே. திருந்திய அறிவு, 'புண்டரிகத் தாளைப் புகழ்ந்து தினம் அண்டமரர் கொண்டிறைஞ்சும் ஆதியே! தொண்டுபடு நாயேனை ஆண்டுகந்து நன் னெறிகள் காட்டுவித்த தாயே நீ சொக்கநாதா' என்று சொல்லி வாழ்த்துமல்லவா? இதை விடுத்து வீணே கவலைகள் கொள்ளவேண்டாம். மாலை 4 மணிவரை பொறுத்துப் பார்ப்போம். விமானம் புறப்படுவதாய் இருந் தால் அதில் செல்வோம். இல்லையேல் உந்தூர்திமூலம் செல்லுதலே சிறந்தது. திருவருட் சோதனையாக இரண்டு நாள் நம்மை இங்கே நிறுத்தி இருக்கிறது. ஆற்றொழுக் காக அது செல்லும் வழியே செல்லுதலே முறையாகும்; அதுவல்லாது எதிர்த்து நிற்றல் தகாது.'' என்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் அருளிச் செய்தார்கள்.

வட்டம் இல்லாத வேலையும் உண்டா ?

முன்னே சொல்லியபடியே நாங்கள் சென்ற உந்தூர்தி, வாடகை உந்தூர்திகள் நிறுத்தும் பேட்டையில் நிறுத்தப் பட்டது. காரோட்டி தனக்கு மாற்றுடுப்பு, படுக்கை எடுத்து வர இறங்கிச்சென்முன். அவன்சென்ற சிறிது நேரத்திற்குள் அப்பேட்டையிலுள்ள காரோட்டிகள் பலரும் இதைவிடச் சிறந்ததான, பார்வைக்கும் அழகிய உந்தூர்திகளைச் சுற்றி லும் கொண்டுவந்து நிறுத்தி ' எங்குச் செல்லவேண்டும் ? என்னுடையது புதிய கார் ; இடவசதி அதிகம் உண்டு. ஆட்டமோ அசைவோ இல்லாது செல்லலாம். வாடகையும் மற்றவர்களைக்காட்டிலும் குறைவாக ஏற்றுக்கொள்கிறேன். சிறிது தவறும் ஏற்படாது " என்று ஒவ்வொருவரும் கேட் டார்கள். " விமானநிலைய அதிகாரி எங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிருர். ஆகையால் அதைத்தவிர்த்து வேறுவண்டி யில் செல்வது முடியாது " என்று சொல்லிவிட்டோம். தொலைவிலே ஒரு குரல், " விமானநிலைய ஏற்பாடா ! சரி ! சரி !! வட்டம் இல்லாத வேலையும் உண்டா ! பாவம் ! ஊருக்குப் புதியவர்கள். நாம் என்ன சொல்ல " என்று பேசுவது காதில் விழுந்தது. அப்பேச்சு முடியுமுன்னே எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். காரோட்டியும் வந்தான். காரும் புறப் பட்டது. இரவு உதம்பூர் போய்ச்சேர்ந்தோம். மணி 9.

போஜப்பத்திரத்தில் :

வருகிறவழியில் ஜம்மு நகரத்தில் அரசாங்க நூல் நிலையம் இருந்தது. பல நூற்றுக்கணக்கான ஆண்டு களுக்கு முன்னே போஜப் பத்திரத்தில் பச்சிலைச்சாறு கொண்டு அக்கால காஷ்மீர உயர்கவிகள் எழுதிவைத்த

காவியங்களும், சாஸ்திரங்களும், மற்ற இலக்கியங்களும் இங்குத்தான் சேமித்துவைக்கப்பட்டிருக்கின்றன. கை யெழுத்துப் பிரதிகள் பல நூற்றுக் கணக்காக அங்கு இருப்பதாகச் சொன்னார்கள். உள்ளே சென்று பார்க்க ஆசைதான். நேரம் மாலை மணி 6. பூட்டிக் கிடந்தது. ஊரின் மேலேஎல்லையைக் குறுகினோம். தவி அங்கும் குதித்துக் களித்து ஓடி வருகிறது. அதன் கரையில் ஒரு சிறு குன்றின்மீது காஷ்மீர மன்னனுடைய மாரிக் கால அரண்மனை கம்பீரமாக, பெருவனப்போடு கட்டப் பட்டிருக்கிறது. வழி எல்லாம் படைத்தளங்கள்.

துணிந்து போகமாட்டார்கள் :

அந்த மலைப்பாதையில் இரவில் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குமேல் எவரும் துணிந்து போகமாட்டார்கள். உந்தூர்திகளும் மற்ற வாகனங்களும் அந்த நேரத்திற்குள் எந்த ஊரை வந்து அடைந்ததோ அங்கேயே நிறுத்தி வைக்கப்படும். பிறகு மறுநாள் காலையில்தான் பயணம் தொடங்குவார்கள். கொடிய மிருகங்களும், பிறவும் அகால நேரங்களில் வந்து உலவும். ஆகையால் அந்த அச்சம். அதுபோல் எங்கள் காரோட்டியும் உதம்பூரில் ஒரு சத்திரத்தில் எங்களைக்கொண்டு இறக்கிவிட்டான். " எதிரே இந்த நேரத்தில் போக்குவரத்து இராது. வந்ததைவிட இன்னும் சிறிது வேகமாகச் செல்லலாம். அயர்வாக இருந்தால் 11 மணிக்குமேல் எங்காவது ஓர் இடத்தில் தங்கிக்கொள்வோம். அதிகாலையில் மூன்று அல்லது நான்கு மணிக்கு புறப்பட்டால் விடிவதற்குள்ளாக எதிர்போக்குவரத்துக் குறைவாக இருக்குமாதலால் மிக்க தொலைவு சென்றுவிடலாம் அல்லவா " என்றேன். " அது முடியாது ஐயா ! வழியில் அச்சம் அதிகம். அதோடு

பனியும் முடிக்கொள்ளும். மலைப்பாதையல்லவா ? வழி கண்டு செல்லுதல் முடியாது. ஏதாவது இடையூறு நேர்ந்து விடக்கூடாதல்லவா ? என்றால் முடியாது. நிம்மதியாக இந்தச் சத்திரத்தில் தாங்கள் எல்லோரும் இரவு ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள். இப்பகுதியில் இது ஒரு பெரிய ஊர். எல்லா வசதிகளும் இங்குக் கிடைக்கும். நாளை அதிகாலையில் நானே உங்களை வந்து எழுப்புகிறேன்" என்று சொல்லிக் காரை எடுத்துப்போய்ப் பேட்டையில் நிறுத்தி, அதற்குள்ளேயே படுத்து ஓய்வுகொண்டான்.

சினம் தீது :

நாங்கள் தங்கிய சத்திரத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் தங்க இடம் இருக்கிறது. தங்கியும் இருந்தார்கள். சத்திர மேற்பார்வையாளன் (சவுக்கிதார்) ஓர் கிழவன். அவனுக்கு ஆங்கிலமும் தெரியாது; ஹிந்தியும் தெரியாது ; காஷ்மீரி அல்லது உருது தெரியும். அந்த இரண்டு மொழிகளிலும் ஒரிரண்டு சொற்கள்கூட எங்களுக்குத் தெரியாது. ஆகவே, காரோட்டியை மொழிபெயர்ப்பாளராக வைத்து, ஆங்கிலம், ஹிந்தி, சைககள் இவற்றின் மூலமாக பெரிய மஹான் வந்திருக்கும் செய்தி சொல்லி விளங்கவைத்தோம். எங்களுக்குமுன்னே அங்கேவந்து தங்கியிருக்கும் வெளியூர்வாசிகள் சிலர் காரிலிருந்து மகாசந்நிதானம் அவர்கள் இறங்குவதைக் கண்டிருக்கிறார்கள். அவர்களும் எங்களுக்கு உதவியாக வந்தார்கள். மேற்பார்வையாளனுக்கு வயது 80 க்கு மேலிருக்கும். மிகத் தளர்ந்த முதிய தோற்றம். அரைச்செவிடு. பார்வையும் குறைவு. தோல் சுருங்கிக் கூனல் விழும் பருவம். இருட்டுக்காலம். சுற்றிலும் பல வெளியூர்வாசிகளின் கூட்டம் ; இடம்தேடி வந்தவர்கள். ஒரு சிறு பெட்ரோமாக்ஸ்விளக்கு தன் மங்கிய

ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. இந்த நிலையில் அவனுக்குப் புரியவைத்து இடம் பெறுவதற்குள் எங்கள் பொறுமை எல்லைகடப்பதாயிற்று. ஆனாலும் ஊரும் புதிது. செல்லா இடத்தில் சினம் தீதல்லவா? இதைவிட்டால் வேறு இடவசதி கிடைப்பதும் அரிது. எங்கள் முயற்சியும் வீண்போகவில்லை. புரிந்துகொண்டபிறகு பெரிய காற்ரோட்ட வசதியுள்ள அறை ஒன்றை மேல் தளத்தில் எங்களுக்குக் கொடுத்தான் அக்கிழவன்.

கீழே சுற்றுப்புறத்துக் கிராமத்தார்கள் தாழ்வாரங்களிலும், அறைகளிலும் முடங்கிக்கிடந்தனர். அந்தச் சத்திரத்திற்கு எதிரே - பெரிய மைதானம். அதைச் சுற்றிலும் கடைத்தெரு. இரவு நேரம் ஆகஆக அந்த மைதானத்தில் வெளியூர் வாகனங்கள் நூற்றுக்கணக்கில் வந்து நிறுத்தப்படுகின்றன.

கருமமே கண்ணாயினர் :

திருவருள் அன்று எங்களுக்குப் போதனையும், மனத்தெளிவும் கொடுத்து ஆண்டது. இந்த மகிழ்ச்சியில் இரவு மிகவிரைவில் கழிந்து அதிகாலை நேரம் வந்தது. எழுந்தோம். காலைக்கடன்களை முடித்துக்கொண்டு புறப்பட்டோம். வந்து எழுப்புவதாகச் சொன்ன காரோட்டியை நாங்கள் மிகமுயன்று எழுப்பவேண்டியதாயிற்று.* குளிர் நிறை பகுதிகளில் உள்ளவர்களுக்கு அதிகாலை என்பது விடிந்து இரண்டொரு மணி நேரம் கழிந்த பிறகுதான்.

---

* "நானே நாளை நென்னலை வந்து எழுப்புவன்"

— திருவெம்பாவை

அதாவது 7 அல்லது 8 மணிக்குத்தான் அவர்கள் வேகமாக எழுவார்கள். கருமமே கண்ணுயினுராக யாத்திரையிலே மிகவிரைவில் செல்லவேண்டும் என்ற பேருவிருப்போடு உள்ள எங்களுக்கு, அதிகாலை மணி 4 என்பது நேரம் அதிகமாகி விட்டதுபோல ஒரு தோற்றம். எப்படியோ காலை மணி 6 க்குள் உதம்பூரை விட்டு எங்கள் உந்தூர்தி புறப்பட்டது.

உடைந்தது :

இரவு முன்னேரத்தில் தோடங்கிய சிறுதூறல் அப்போழுதும் போட்டுக்கோண்டே இருந்தது. ஊர் எல்லையைக்கூடத் தாண்டவில்லை. காரோட்டிக்கு முன்னுல் உள்ள கண்ணுடியில் விழும் மழைத் தண்ணீரைத் துடைக்கும் கருவி (Viper) உடைந்து விட்டது. காரோட்டியின் முயற்சிகள் பலவும் வீணுயின. மனம் தளராது அவரும் ஒளவு வேகமாகக் காரைச் சேலுத்தினுர்.

நற்காலந்தான் !

சேமோனி என்னும் இடத்திற்கு வந்ததும் ஒரு சிறு மலை ஏற்றம். காரில் இயந்திரப்பகுதிகளை இயக்கும் முன் விசிறியோடு இணைக்கப்பட்டிருக்கும் நாடா (Fan - belt) அறுந்தது. காரும் நின்றது. அதற்கு மாற்று நாடா காரில் இல்லை. அப்போழுது மணி காலை 7-30. நல்ல வேளையாக நாங்கள் நின்றிருந்த இடத்திலிருந்து சிறிது பின்னே சிறு கடைத்தேரு ஒன்றிருந்தது. அங்கே சிற்றுண்டிகள் கிடைக்கக்கூடிய இடமாக அமைந்ததும் எங்கள் நற்காலம்தான்.

விழித்து நின்ருன் :

அப்போழுதும் மழைத்தூறல் நிற்கவில்லை. காரோட்டி இயந்திரப் பகுதியைத் திறந்துபார்த்தான். அறுந்த

நாடாவைக் கையில் எடுத்தான். இங்கு ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வந்தவழியே வேகமாகப்போனுன். இதற்குள் பல லாரிகளும் பேருந்துகளும் எங்களைத் தாண்டிப்போய்க்கொண்டே இருந்தன. நாங்கள் இருந்த இடத்திலிருந்து (Kud) குத் என்னும் சிறு நகரம் 7½ மைல். உதம்பூர் 18 மைல். அந்த நாடா வாங்குவதானுல் குத் அல்லது உதம்பூருக்குத்தான் செல்லவேண்டும். அப்படி ஏதேனும் ஒரு ஊருக்கு காரோட்டி சென்றிருப்பான்; (Fan-belt) நாடா வாங்கிக்கொண்டு விரைவில் வந்துவிடுவான், என்று எதிர்பார்த்தோம். ஒரு மணி நேரம் கழித்து உதம்பூரி லிருந்து வரும் லாரி ஒன்றிலிருந்து இறங்கினுன். புது நாடா (Fan-belt) ஒன்று அவன் கையிலிருந்தது. லாரி டிரைவரும் அவனும் அதைக் காரில் மாட்டிப் பார்த்தார்கள். மிகப் பெரிதாக இருந்தது. உடனே லாரிக்காரர் அதை வாங்கிக்கொண்டு மேலே போய்விட்டார். அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. மேலே மேலே லாரிகளும் பிறவும் வந்துகொண்டே இருந்தன. அவனுக்குத்தெரிந்த இரண்டொரு காரோட்டிகள் காரிலிருந்தபடியே தலையை வெளியே நீட்டி நலங்கேட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

மேலும் ஒரு மணி கழிந்தது. டிரைவரைக் கூப்பிட்டு ‘ஒன்று இவ்வழியாகச் செல்லும் லாரியிலோ பஸ்ஸிலோ நீ குத் அல்லது உதம்பூர் சென்று (Fan - belt) வாங்கிவா; அல்லது நாங்கள் போய்வருகிறோம். உன்னுடைய முட்டாள் தனத்தால் எங்களுக்கும் அல்லவா துன்பம் வந்துவிட்டது. ஏற்றமும் இறக்கமுமாகச் செல்லும் மலை வழிகளில் இது போன்ற சிறு உபகரணங்கள் அதிகப்படியாகக் கையில் இருக்கவேண்டாமா’ என்று கடுமையாகச் சொன்னேம். அவனுக்கு மேலே செய்வதென்று தெரியாமல் விழித்தான்.

போய்வருதல் நலம் என நினைத்தான் :

அந்த நேரத்தில் மலையின் சரிவிலே ஒரு சிற்றூர் இருப்பதும் அதில் ஒருசிறு உந்தூர்தி நிற்பதும் எங்களுக்குப் புலனாயிற்று, மழைத்தூறல் நின்றது. வெயிலும் வெளிச்சமும் வந்தது. அங்கிருந்து அந்தச் சிற்றூர் இரண்டு மைல் தொலைவிருக்கலாம். இறக்கம் கடுமையானதுதான். காரோட்டி அப்பொழுதுள்ள சூழ்நிலையில் எங்களைவிட்டு எங்காவது ஓரிடம் போய்வருதல் நலம் என நினைத்தான். ‘அங்கே சென்று வருகிறேன். அங்கே நிற்பது ஸ்டேஷன் வாகன் அல்ல. சிறிய பஸ். ஒருக்கால் அந்தக் காரோட்டியிடம் மாற்று நாடா (Fan-belt) இருந்தாலும் இருக்கலாம். நான் சென்று பார்த்து வருகிறேன்’ என்று சொல்லி மறுமொழி எதிர்பார்க்காமல் வேகமாக அவ்வழியே சென்றான்.

வேண்டாம் ! வேண்டாம் !!

அவன் சொல்லிப்போன முறையில் எங்களுக்கு நம்பிக்கையும் பிறந்தது, ஓரளவு பசியும் தெரிந்தது. பக்கத்திலுள்ள கடைத்தெருவிலிருந்து தேனீர் வாங்கி வரச்செய்து அருந்தினோம். சுற்றுப்புறத்தில் இதுவரை முட்புதராகத் தோற்றமளித்த செடிகள் மாதுளை என்பது தெரிந்தது. மாதுளங்காடு அப்பகுதி. பெரும்பாலும் புளிப்பு வகையைச் சேர்ந்தவை அதிகம். மலைப்பகுதி முழுவதும் மாதுளம் காடாகவே மண்டிக்கிடந்தது. நாரதர் ஸ்ரீநிவாசராவ் ‘அனார்கலி! அனார்கலி!’ என்றார். ‘அது வேண்டாம்; வேண்டாம்’ என்று சொன்னேன் நான். இதுவும் ஒரு நாடகமாகத் தோன்றியதோ என்னவோ? மற்றவர்கள் எல்லோரும் சிரித்தார்கள். நாங்களும் சிரித்தோம். மகாசந்நிதானத்தில் ‘இருவரும்

இப்படிப் பேசியதின் உட்போருள்?' என்று கேட்டார்கள். நான் முந்திக்கோண்டு ''அது ஒரு காதல் கதை. முதிர்ந்த காதல் கைகூடாது முடிவிலாத் துன்பத்தில், சோகத்தின் சிகரமாக முடிவுபெறும். நாம் இப்போழுது இரண்டு மூன்று நாட்களாக அமரநாதர் தரிசனத்திற்கு ஆசைப் பட்டுக் கடும் சோதனையில் தேறி வருகிறோம். முடிவு இன்பகரமாக, அருள்பேற்ற நிலையில் முடியவேண்டுமே! அனார்கலி சரித்திர முடிவுபோல கானலாக முடியக் கூடாதே என்ற அச்சத்தோடு வேண்டாம்! வேண்டாம்! என்று சோன்னேன். இதுவே என் எண்ணம்'' என்றேன். அதற்கு நாரதர் 'காதல் கதையைப்பற்றிச் சிந்திக்கக்கூட, அந்தக்கற்பனையில் ஈடுபட மனம் இப்போழுது இடங் கோடுக்குமா! அந்த அனார்கலி என்றாலே மாதுளை என்பதுதான் போருள். தாங்கள் சோன்ன அனார்கலியும் மாதுளம்பூ நிறத்தவள் என்ற போருளில் அமைந்ததுதான். மாதுளங் காட்டைப் பார்த்து அளவிலா மகிழ்ச்சி கோண்டேன். இதுவரை இருந்த மழையும் மப்பும் சுற்றிலும் உள்ள புதர்கள் என்ன என்பதை எளிதில் தேரிந்துகோள்ள முடியாதபடி மறைத்து நின்றன. மாதுளை சிறந்த மருந்துப் போருள். வேளித் தோற்றமும் அழகானதே. நாக்கிற்கும் ருசி உள்ள பண்டம் தான். இது தான் என்னுடைய சிந்தனை' என்றார்.

காதற் கனிவுகள் :

நீங்கள்இருவரும் இதுவரை சோல்லிவந்தவை எல்லாம் நாக்கிற்கும் உடலிற்கும், வேண்டுமானால், உளத்திற்கும் இன்பம் தரக்கூடியவை. உயிருக்கு உறுதி - உயிரின்ப மாக உள்ள போருள்களிலும் இதே கற்பனை. வேளியோட்ட மாகக் காணப்படும் பாக்களின் உட்போருளாகிய தத்துவ

சாரம் எடுத்து விளக்கினுலன்றி எளிதில் காணுதல் அரிது. ஆண்டவனை நாயகனுக வைத்து உயிரை நாயகியாகக்கோண்டு பேரின்பப் போருள்படும் நூல்கள் பல இருக்கின்றன. உயிரை நாயகனுக வைத்து இறைவனை நாயகியாகக் கோண்டு உயிர்க் காதல் நாடகமாக அமையப்பெற்ற நூல்களும் உண்டு. வேற்றுரை பேசி உளம் கனியாத காதல் நாடகம் அல்ல அவை. இளமையோடு கழிந்துபோகும் காதல் நாடகங்களும் அல்ல. மும்மைக்கும் உறுதி பயக்கும் காதற்கனிவுகள். அதிலும் பிரிவு உண்டு. ஏக்கம் உண்டு. இதயத் துடிப்புக்களும் உண்டு. சோல்லமைதி சிற்றின்பப் போக்காக இருக்கும். போருள் முடிவு ஆண்டவனேடு இரண்டற நடத்தும் ஆன்ம நேய உறவாகவே முடியும்.

பயனில்லை :

உதாரணமாக: ஒருசேவிலித்தாய் தான்வளர்த்தேடுத்த தலைவியைப் பார்க்கிருள். அவள்மேனி பசந்திருக்கிறது. முகத்தில் ஒரு வாட்டம். ஒரு ஏக்கம். கைவளைசோர எங்கோ அடிக்கடி உற்றுப் பார்க்கிருள். பெருமுச்சு விடுகிருள். பூச்சூடுதல், வாசனைப் போருள்கள் பூசுதல் முதலியவறறை வேறுக்கிருள். சேவிலித் தாய்க்கு ஒன்றும் புரியவில்லை. தன்மகள் நோயால் வருந்துகிருளோ என நினைந்து மருத்துவனை அழைத்து வந்து காட்டு கிருள். நாடிகண்டு உடல் நோய் ஒன்றுமில்லை என்று அறிவித்துச் சேன்றுன் அவன். தேய்வக் குற்றமாக இருக்குமோ என்று அஞ்சுகிறது தாயுள்ளம். பூசாரியை அழைத்து வந்து காட்டுகிருள். தேய்வங்களுக்குப் பூசை போடுகிருள். பயனில்லை.

அஞ்சுகிறது தாய் உள்ளம் :

ஒரு நாள் இரவு தலைவி படுத்திருக்கும் திக்கிலிருந்து ஒலி கேட்கிறது. அதைக் கேட்கக்கேட்க ஒரு ஐயுறவு தோன்றுகிறது தாய்க்கு. தலைவி தான் கண்ட தலைவனது வண்ணம் சொல்லி, திருமேனி அமைப்புச் சொல்லி, அவன் வன்மை சொல்லி ஏங்குகிறாள். அதனைக் கேட்டாள்; மகளின் நோய் இன்னதென்று ஒருவாறு உணர்ந்தாள். அவனைக்கண்டு. அவனில் மயங்கி, அவனோடு உறவு கலந்தும் வந்தாளோ என்று அஞ்சு கிறது அந்தத் தாய் உள்ளம்.

கழிப்பாலை அண்ணலே தான் :

" இந்தப் பெண்ணை நாம் கட்டுக்காவலோடு காத்து வருகிறோமே ! நம்மையும் அறியாது அவள் வெளிச் சென்றிருக்கமுடியாதே ! ஒருக்கால் கனவிலேகண்டு காதல் பட்டாளோ ! வண்ணமும் வடிவும் சென்று கண்டிலள். எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள். இவள் தன் தன் மையைக் கண்ணுலாம் பொழில்சூழ் கழிப்பாலை எம் அண்ணலே அறிவார் " என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்கிறாள். தன்மகள் கனவிலும் வந்த தலைவன் அந்தக் கழிப்பாலை அண்ணலேதான் என்றும், அதற்கு முன்னே அவனையே தன் மகள் கூடிக் கலந்து வந்திருக் கின்றாள் என்றும் அறிந்தாளில்லை அந்தத் தாய்.

வெறித்து நோக்குகிறாள் :

நல்ல அனுபவம் உள்ள தாய்தான் அவளும். வயதிலும் முதிர்ந்தவள்தான். தன் மகளது உள்ளத்தை

மேல்ல ஆய்ந்து அறிந்துகோள்ள ஆசைப்படுகிருள். மறுநாள் விடியட்டும் ; போறுத்துப் பார்போம் என்கிறது அவளறிவு. பேண்ணின் அவல நிலையை நினைந்து நினைந்து வருந்துகிருள் தாய். தான் கண்டு கலந்த தலைவனை நினைந்து நினைந்து வருந்துகிருள் மகள். மேதுவாகப் போழுதும் புலர்ந்தது. தாய் தன் மகள் ஊணின்றி உறக்கமின்றி ஏங்கிஏங்கி இளைத்திருத்தலைக்கண்டு இரங்கி விரைவில் தலைவிக்குப் பால் எடுத்துவரச் சேல்கிருள். மகளும் தன் படுக்கையைவிட்டு எழுந்து மேல்மாடத்தில் முன்னிடத்தை அடைந்து வீதி முழுவதும் வேறித்து நோக்குகிருள்.

தன்னை நாடி வருவான் :

அவள் நின்ற இடத்திலிருந்து பார்த்தால் எல்லாத் திசைகளிலும் பாதைகள் சேல்லுவதுதேரியும். "தலைவனுக வந்தவன் தன்னிடம் சோல்லிச் சேன்றபடி ஏதோ ஒரு வழியில் தன்னை நாடிவருவான். அன்னையிடமும் அத்தனிடமும் அனுமதிபேற்று அழைத்துச் சேன்றுவிடுவான்" என்று எதிர்பார்க்கிறது அவள் மனம். சிறிது நேரம் அப்படியே நின்ருள். ஒருவரும் வரவில்லை.

தூது சேன்று அழைத்து வாராரோ :

ஆனுல் குயிற் கூட்டங்களும், நாரைகளும், இளங் குருகினமும், கிளிகளும், நாகணவாய்ப் புள்ளும், வண்டினங்களும் மேலே பறந்து சேல்கின்றன. தேன்றலும் வீசுகிறது. யாரேனும் நமக்காகத் தூது சேன்று அவரை அழைத்து வாராரோ என்று ஏங்குகிறது அவளது நேஞ்சம். அந்த நேரத்தில்தான் மேலே பறவைக் கூட்டங்கள் பறந்து சேல்லுதலைக் காணுகிருள்.

சோன்மாலேபயில்கின்ற குயிலினங்காள்! மனேக்காஞ்சி இளங்குருகே! போங்கோதமால் கடலிற் புறம் புறம்போய் இரைதேடும் செங்கால் வெண்மடநாராய்! பூவைகாள்! மழலேகாள்! வண்டினங்காள்! என் புது நலன் உண்டு களித்த என் தலேவன் என்னே இகழ்வானே! விரைந்து செல்லுங்கள். இச்செய்தி சோல்லுங்கள். (இந்தநேரத்தில் தாய் மகளேக் காணவருகிருள். இவ்வளவும் அவள் காதிலும் விழுகிறது. 'இப்படியா செய்தி! இன்னும் இங்கே என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று நினேத்து இருந்த இடத்திலேயே நிற்கின்ருள்.)

'நேரம் செல்லுகிறது. நம் தலேவன் இருக்குமிடம் நமக்கே தெரியுமே! அன்னேயையும் அத்தனேயும் இன்றே நீத்து இப்படியே இப்போழுதே அவனிடம் சேன்ருல் என்ன? *நாட்டார் நகைத்தால் என்ன? யார் எதை வேண்டுமானுலும் எப்படி வேண்டுமானுலும் பேசட்டும். நாம் தலேவனேக்கூடியே ஆகவேண்டும்' என்று தன் மனதிற்கு உறுதி கூறிக்கோள்ளுகிருள் தலேவி. 'தலேவன், தான்வந்து, தன்பெயர்சோல்லி, திறம்சோல்லி என்பெற்ருேர் களிடம் என்னே இரந்து கேட்டு அழைத்துச்செல்வதாகச் சோன்ஞனே, நானே செல்வதால் அவன்பெயருக்கு இழுக்கு வரக்கூடாதே' என்று நினேக்கிறது அவ்வுள்ளம்.

இந்நிலேயில் அவளும் அவனும் அன்றிரவு சந்தித்த தாமரைத்தடம் (அதோ எதிரே) அவள் கண்ணிலே படுகிறது. என் எதிரே உள்ள தடத்திலே பூத்து நிற்கும் அழகிய மலர்களே! என்னேக் கோண்ட நாள் அவன் அறிவானே! மறந்து விடுவானே?

---

* நாட்டார் நகை செய்ய நாம்மேலேவீடேய்த

ஏ! குருகே ஏ வண்டே! நான் நினைக்கின்ற நினைப்பையெல்லாம் அவனிடம் சென்று சொல்ல மாட்டீர்களா! (அப்பொழுது மெல்லத் தென்றல்வீசுகிறது.) ஆ! இது என்ன? என் உயிர்மேல் விளையாடல் விடுப்ப தாக இப்பூந்தென்றலை அந்த விதியாளன் ஏவி இருப்பானோ? நான் உறங்கும்போதும் அவனை மறப்பேனில்லை. சேங்கால் வெண்மட நாராய்! என்ன செய்வது? மனம் மயங்குகிறது. என் வளையும் சோர்கிறது. அவன் சூடி இருக்கும் மாலையையாவது வாங்கிவா. நீ கேட்டால் அவன் தாராது இருப்பானு? அவன் பணை ஆரவாரத்தான், பாட்டோவா பழனத்தான், அம்பு எய்யப்படாமல் தன் வில்லிலே பொருந்தி இருக்க முப்புரம் எரித்தவன், உயர்ந்த மார்பை உடையவன், எப்பெண்ணும் அவனைக் கண்டு காமுறும் எழில் நலம் படைத்தவன். இது அவன் அடையாளம். அவனிடம் எங்நிலை சொல்லி அழைத்து வருவீர்களா? ” என்று ஏங்குகிருள்.

உயிர் ஒன்ருனர்கள் :

இப்பொழுதுதான் சேவிலிக்குத் தன் பேண்ணின் உண்மை நிலை புரிகிறது. ‘முதிர்ந்து விட்டது. உள்ளத் தால் சிந்தை மருவிய இன்ப வெள்ளத்தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப ஒருவருள் ஒருவர் மேவும் உயிர் ஒன்ருகி விட்டார்கள். பருவத்தில் அடைய வேண்டிய பயனும் கிட்டிவிட்டது. இது துன்பமே இல்லாத இன்ப நிலைதான்’ என்று மனம் தேறுகிருள். தலைவனும் தலைவியும் முறையாகக் கூடுகிற வகை செய்கிருள். அதைக்கண்டு மகிழ்கிருள். இது ஒரு காதல் நாடகம்.

பயன் :

உயிர் இறைவனை நாடி அன்பு செலுத்தித் திருவடிப் பேரானந்தத்தில் நின்றிடும் தன்மையை விளக்குவதே இந் நாடகத்தின் உட்பொருளாகும். என்றும் மாருத குறையாத அன்பு வெள்ளத்தில் திளைத்து நிற்கும் செயல் மேலே சொன்ன நாடகம். அப்பர் சுவாமிகள் உருவாக்கியது. அவரே அவர் வாய்மொழியாலே அதன் பயனும் சொல்லுகிருர்.

" களித்து கலந்த தோர் காதற் கசிவோடு காவிரிவாய்
குளித்துத் தொழுது முன்னின்ற இப்பத்தரை கோதில்
செங்தேன்
தெளித்துச் சுவை யமுதூட்டி அமரர்கள் சூழ் இருப்ப
அளித்துப் பெருஞ் செல்வமாக்கும் ஐயாறன் அடித்தலமே "

விளக்கம் :

இங்கே செவிலித்தாய் உயிர் வளர்க்கும் குருமுதல்வர். தலைவி ஆன்மாவாக, தலைவன் இறைவனாக வைத்துப் பேசப்படுகின்றன. ஆன்மாவை இழிநிலை அடையாது காத்து பெருநலம் அடையச் செய்யும் செயல் உடையவர் குரு. அவர் உபதேச வழியிலே நிற்கும் ஆன்மாக்கள் வழி தெரிந்து அதில் நின்று அன்பு முதிர்ந்து திருவடியைப் பற்றுக் கோடாகக்கொண்டு முத்தி அடைவனவாகும். தன் மாணுக்கன் நந்நிலை அடைந்த செய்தி யறிந்து ஆசானும் மகிழ்வு கொள்வான்.

கற்பு :

குருசந்தான வழியில் வரும் சைவமடாலயத் தலைவர்கள், தம் * குருமுதல்வரையே ஆண்டவனாகக் கொள்ளும் கொள்கை உடையவர்கள். இதனையே சமய நிலையில் உண்மைக் கற்பு என்று சொல்வது. ஒருவனைப் பற்றி ஒரகத்திருப்பது. குமரகுருபரர் மாசிலாமணி தேசிகரைக் குருவாகக் கொண்டவர். அவர் மீது இயற்றிய பண்டார மும்மணிக் கோவையில் ‘ கமலையும், தருமையும் விரிதமிழ்க் கூடலும் அரசு வீற்றிருக்கும் குருஞான சம்பந்தர் ’ என்று அழைக்கிறார். இதுதான் மரபு.

ஊற்றாய்ப் பெருகல் :

எங்கள் குருமுதல்வர் ஞானசம்பந்தரும் அதே கருத்தை உபதேசித் தருளியிருக்கிறார்கள். முன்னாள் அரியயற்கு அடிமுடியும் காணாப் பெரியவனே இன்று ஆரூரில் ஞானப்பிரகாசனாகி வந்து பிறந்திருக்கின்றான். துரியம் பெருக்குகின்றான். அவனைக்கண்டேன் ; பாசம் கழிந்தேன். அவன் அருளாரமுதை முகந்துண்டேன் ;

---

* “ பரம்பிரமம் இவனேன்றும் பரசிவன்தா னேன்றும்
பரஞானம் இவனேன்றும் பராபரன்தா னேன்றும்
அரன்தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே யேன்றும்
அருட்குருவை வழிபடவே அவனிவன்தா னாயே
இரங்கியவா ரணம்ஆமை மீன்அண்டம் சினையை
இயல்பினோடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்
பரிந்திவைதா மாக்குமாபோல் சிவமே யாக்கும்
பரிசித்தும் சிந்தித்தும் பார்த்தும் தானே.”

— சித்தியார் சுபக்கம் பாட்டு 328

சுகானந்தத்துள்ளிருந்தேன். இதுமட்டுமா! அவன் வந்து அமலபதந்தந்து எனையாண்டான். அவன் சொற்படி நின்றேன் ; அப்படி நிற்க, ஒருநாள் நிகழ்ந்தது ஒரு செயல். அதை விளக்கிச் சொல்லவும் முடியவில்லை. ஆனால் அனுபவம்? நின்று உயிர்ப்பறவே தருகாயமின்றி ஒரு ஆனந்தம் எங்கும் தலைப்பட்டதே. அந்த ஒருநாள் நிகழ்ச்சி என்ன தெரியுமா. ஊன்பார் உடற்பவம் நீக்கிடச் சொன்னான் ஒரு சொல் (உபதேசம்). அது தித்திக்கும் தீஞ்சொல். சுவை எப்படி என்று உணரலாமே ஒழிய விளக்க முடியுமா? ஆனாலும் சொல்லுகிறேன், அந்த வசனம் தேன், பாகு, கற்கண்டு இளநீர், தயிர்க் கட்டி, (அளைமுறி) கரும்பு, ஆவின்பால் இவைகளைவிடத் தித்தித்து (நினைக்க, நினைக்க) ஊற்றுய்பெருகல் அதிசயமே. இந்த அனுபவம் ஒரு பேரானந்த அனுபவம்.

இங்கேயும் காதல் அனுபவம். தலைவன் பெயர் கேட்டார் ; கேட்டதுமே ஒரு ஆனந்தம். கண்டார் ; காட்சியால் ஒரு இன்பம். திருவடிபட்டது ; தீண்டியதால் ஒரு புளகாங்கிதம். பேச்சைக் கேட்டார் ; அந்தப் பேச்சு எப்பொழுதும் சுவை மிக்கதாய் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இவ்வானந்தம் சொல்லுக்கும் அப்பாற்பட்டது" என்று சொல்லிமுடித்தார்கள்.

குளிர்பதம் :

காரோட்டியும் வந்தான் நல்ல செய்தியோடு. காருக்கு ஏற்ற நாடாவும் கிடைத்தது. பூட்டினான். வேகமாக ஓட்டினான். மணி 10-30. இமயமலையின் மேலேமேலே எல்லார் மனமும் குளிர உந்தூர்தியும் ஏறிற்று. சூரியன் உதவி செய்தான். நல்ல வெயிலும் எரித்தது. ஆனால்,

உயர்ந்துயர்ந்து மேலே போகப்போக வெப்பநிலை குறைந்து தட்பம் மிகுந்துகொண்டே வந்தது. உடலுக்கும் உளத்திற்கும் உவந்த சூழ்நிலையும் காட்சிகளும் எங்கும் நிறைந்தன. மலைப்பகுதிகளில் மாதுளைப் புதர்களும் ஓங்கி உயர்ந்து வளர்ந்த பலவகை மரங்களும் நிழல் பரப்பிக் குளிர்பதம் தந்தன.

திருப்பங்கள் :

இடையிடையே ஆங்காங்கும் அருவிகளும் ஓடைகளும். அவைகளைக்கடக்க சிறிய பெரிய மரப்பாலங்களும். சிறிதுதூரம் மேலே சென்றதும் சாலையோரத்தே பெருகியோடும் செனுப் (Chenab) நதி. இமயமலைப் பாதைகள் எங்கும் செல்வதுபோல, இங்கேயும் ஒரு ஆழ்ந்தபள்ளத்தில் ஆறும், பக்கத்திலே உயர்ந்தோங்கி நிற்கும் மலைச்சரிவுகளும், மலைத்தொடர்களை யோட்டி வளைந்து வளைந்து செல்லும் வழியும். ஒரு சிறிது தொலைவிற்கப்பால் பாதை ஏற்றமா அல்லது இறக்கமா, சமவெளியா அல்லது காடடர்பகுதியா, வழி நல்ல நிலையிலிருக்கிறதா அல்லது அடைபட்டிருக்கிறதா என்பவை எளிதில் தெரிந்து செல்லக் கூடிய வழியல்ல. அவ்வளவு திருப்பங்கள். இருப்பினும் முன்னே சொன்னதுபோல காட்சி மனதைக் குளிர்விக்கும். ஆங்காங்கும் தன் புதுமை காட்டும். பழக்காடுகளாகவும், மலர்ச்சோலைகளாகவும், அடுக்கடுக்காக உயர்ந்துசெல்லும் வயல் படிவுகளாகவும் காட்சியளிக்கும். அம்மலையுச்சியிலிருந்து ஓடிவரும் அருவிகளும் ஓடைகளும் அவை யவையும் தனித்தனி குண நலன்காட்டி மனதில் மகிழ்ச்சியூட்டும்.

ஓரருவி :

ஒருபுறம் கல்லேயும் தகர்க்கும் கடுவேகத்தோடு பாய்ந்துவிழும் ஓரருவி. மலேகளைப் புரட்டுகிறேன் என்று வல்லமை பேசும் ஓரருவி (குண்டுக்கற்களை உருட்டிக் கொண்டோடும்). ஓரிடத்தில் காட்சியளித்துப் பிறகு மறைந்து பெருநதியோடு கலக்கும் மற்ருேரருவி. (மலேயிலிருந்து விழுந்து ஒரு பிலத்தின் வழியாகச் செல்லுமது). மற்ருென்று மேலே குதித்துவரும் ; இடையிலே காட்டிலே மறையும் ; பாதையிலேவந்து வழிந்து சிலுசிலுப்புக்காட்டும் (கண்ணும்பூச்சிபோல). மற்ருென்று மந்தகாசத்தோடு தவழ்ந்து தவழ்ந்து ஆடி ஆடி அசைந்து அசைந்துவரும். இன்னும் இதுபோன்றே பலப்பல விதத்தில் நம் மக்கள் உளப்போக்கை அளந்துகாட்டும் கருவிகளோவென ஐயுறும்வண்ணம் அதுவதுவும் பாய்ந்துவந்து பெருநதியோடு கலக்கும். இதுவல்லாமல், ஞானியர் சிந்தை போல் தெளிந்த நீரைப் பெருக்கும் சில. பால்போன்ற வெண்மை நிறத்தவை சில. செந்நிறங்கொண்ட அருவிகள் சில. கடுங்காவியிலிருந்து வெளிர்க்காவ்வரை படிப்படியாக பலநிறங்கொண்டவை பலப்பல. கடுஞ்சேறு குழப்பி கருநிறங்கொண்டு கடும் வேகத்தோடும் வருபவை சில.

நந்நீர் :

இவ்விதமாக எதுவேது எங்தேந்தக் குணநலம் காட்டினுலும், மண்வாகு கொண்டாலும், மேனியழகு காட்டினுலும் எல்லாவற்றையும் ஒருசேரத் தன்னிடம் இழுத்து அணைத்து நல்ல தாய் அரவணைத்துச் செல்வது போலப் பெருநதி பெருக்கெடுத்தோடிவருகிறது. அதுவதுவும் கலக்கும் நிலேயில் ஆங்காங்கும் அந்தந்த வண்ணம்

குழம்பினுலும் நடுநடுவே அவற்றைத் தெளிவித்து நன்னீராகப் பெருக்கெடுத்தோடுகிறது அந்தப்பெருநதி.

கடும்புனற்குழவி :

இந்தக் காட்சி நம்முடைய அறிவைச் சைவப் பெரும் நூல்களில் வரும் இதை ஒத்த காட்சிகளில் ஈடுபடுத்தும். திருவிளையாடல் புராணத்தில் ஒரு காட்சி.

"கல்லெனக் கரைந்து விழும் கடும்புனல் குழவி கானத்து
ஒல்லெனத் தவழ்ந்து தீம்பாலுண்டு ஒரீஇ
மெல்லெனக் காலில் போகி ... ...
... ... பணைதோறும் விளையாட்டெய்தி
தன்மகிழ் கிழவனுகம் தழீஇக் கோடு கலந்ததன்றே"

இவ்விதமாகக் கடும்புனற் குழவியாகத் தோன்றியவொன்று தவழ்ந்து விளையாடி எல்லாப் பருவநிலைகளையும் அடைந்து கன்னி முதிர்ந்து தலைவனுக உள்ள பெருநதியைக் கலக்கின்றது இங்கே. (அங்கே கடலிற் கலப்பு)

மூரி வெள்ளம் :

மேலும் பல நிறங்கொண்டு கலங்கிப் பெருநதியைக் கலந்து அந்த வண்ணமெல்லாம் குன்றித்தெளிந்து செல்லுங்காட்சியை அந்தச் சிவாநுபூதிச் செல்வர் விளக்குகிருர்.

"மறைமுதற் கலைக ளெல்லா மணிமிடற் றவனே யெங்கும்
நிறைபர மென்றும் பூதி சாதன நெறிவீ டென்றும்
அறைகுவ தறிந்துந் தெரு ரறிவெனக் கலங்கி யந்த
முறையின்வி டுணர்ந்தோர் போலத் தெளிந்தது மூரி
வெள்ளம்"

" மறைவழி கிளைத்த வேண்ணேண் கலைகள்போல் வருநீர் வேள்ளந்
துறைவழி யோழுகும் பல்கால்சோலைதண்பழனஞ்சேய்தேன்
உறைவழி யோடையேங்கு மோடிமன் றுடையார்க் கன்பர்
நிறைவழி யாத வுள்ளத் தன்புபோ னிரம்பிற் றன்றே "

கேசவம் :

இதே நேரத்தில் "நாரதர்" ஸ்ரீ ஸ்ரீனிவாசராவின் சிந்தனையையும் இக்காட்சிகள் கிளர்ந்திருக்கின்றன. அவர் வாய்,

आकाशात् पतितं तोयं यथा गच्छति सागरम् ।
सर्वदेव नमस्कारः केशवं प्रति गच्छति ॥

ஆகாசாத் பதிதம் தோயம் யதாகச்சதி ஸாகரம் 1
ஸர்வதேவ நமஸ்காரஹ கேசவம் ப்ரதி கச்சதி 11

என்று முணுமுணுத்தது. "என்ன ஐயா" என்றேன். " காட்சி என்மனதில் இந்த சுலோகக் கருத்தை நினைவூட்டியது. எப்படி ஆகாயத்தினின்றும் விழும் தண்ணீர் நதிகளாகப்பெருகி சமுத்திரத்தைச் சென்று அடைகிறதோ, அதேபோல, எல்லாத் தேவருக்கும் செய்யப்படும் நமஸ்காரம் கேசவனை (நாரயணனை)ச் சென்று சேருகிறது. இங்கேயும் நாம் வரும்வழியில் ஆங்காங்கும் மலைப்பகுதிகளில் பெருக்கேடுக்கும் அருவிகள் எத்தனையோ (வேகம்) நடை வேறுபாடு கோண்டிருந்தும், நிறவேறுபாடு கோண்டிருந்தும், எல்லாம் இப்பெருநதியில் வந்து கலப்பதையும் ஒரு சிறிது தோலைவு ஒடுவதற்குள் தேளிந்து நந்நீராவதையும் கண்டேன். அது இந்த நினைவுக்கு அடிகோலியது " என்றார்.

சங்கரம் :

அதற்கு அடியேன், ‘ நல்ல போருத்தமான கருத்துத் தான். ஆனுலும் இதையே சைவபரமாகச் சோல்லும் போழுது சர்வதேவ நமஸ்காரஹ என்னும் பகுதிக்குப் பின்னேவரும் ‘ கேசவம் ’ என்ற சோல்லுக்குப் பதிலாக ‘ சங்கரம் ’ என்றே சோல்லுவார்கள். அதற்கோரு காரண மும் உண்டேன்பர். நமஸ்காரமேன்பது சிவனுக்கே உரியது. ‘ நமகம் ’ (ருத்ரம்) சிவனே நமஸ்கரிக்கிறது என்றே சோல்லுகிறது. மற்றைத் தேய்வங்கள் எல்லாம் சிவனேயே தேய்வமாகக்கோண்டு நமஸ்கரிக்கிருர்கள். எல்லாத் தேய் வங்களிலும் மேலான விஷ்ணுவும் அவரையே நமஸ்கரிக் கிருர். * நான் சோல்லவில்லே. சங்கரர் சோல்லுகிருர்.

---

* “ வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தோழ வாமுன் னிறுமாப்பு மாலாலம்
உண்டவனேப் பூசித்த பேறேன் றுணர்திலேயால்.”

— திருவிளேயாடற் புராணம்.

“ வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ ”

— திருவாசகம்.

“ ஓவாதே
எவ்வுருவில் யாரோருவர் உள்குவார் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கோடுப்பான்—எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனேர்க்குங் காண்பரிய எம்பேருமான் ”

— திருக்கைலாய ஞானஉலா.

बाणत्वं वृषभत्व मर्धवपुषा भार्यात्वमार्यापतेः
घोणित्वं सखिता मृदंगवहता चेत्यादिरूपं ददौ ।
त्वत्पादेनयनार्चनंच कृतवान् त्वत्देह भागोहरिः
पूज्यात् पूज्यतरस्स एवहि भवेत् कोवात्वदन्योऽधिकः ॥

பாணத்வம் விருஷபத்வம் அர்த்தவபுஷா
பார்யாத்வ மார் யாபதே :
கோணித்வம் ஸகிதா மிருதங்கவஹதா
சேத்யாதி ரூபம் ததௌ ।
த்வத்பாதே நயனார்ச் சனஞ்ச க்ருதவான்
த்வத் தேஹபாகோ ஹரி :
பூஜ்யாத் பூஜ்யதரா ஸ்ஸஏவஹி ।பவேத்
கோவா த்வதன்யோ அதிக ; ।

எல்லாத் தேவர்களாலேயும் பூசிக்கப்படுகின்ற பூஜ்யர் என்று புகழப்படுகின்ற மகாவிஷ்ணு, இறைவனாகிய சிவபெருமானைப் பலவழிகளிலும் வழிபட்டிருக்கிறார்.

दत्तन्नमः किमुपशुश्रुम देवताभ्यः
त्वामन्तरेण नमसामवसान भूमिम् ।
तस्मात् ग्रहीतु मनलंन्नहि कश्चिदीष्टे
चोरोपनीतमिव धारयितुं किरीटम् ॥

தத்தன்னம : கிமுபசுச்ரும தேவதாப்ய :
தவாமந்தரேண நமஸா மவஸானபூமிம்,
தஸ்மாத் க்ரஹீது மலநன்னஹி கச்சிதீஷ்டே
சோரோபநீதமிவ தாரயிதும் கிரீடம்.

அரசனுடைய கிரீடத்தை ஒருவன் திருடி எடுத்து வந்து விட்டால் அதை அவன் எவ்வாறு உபயோகிக்க முடியும்?

பாணமாக இருந்தார் திரிபுரஸம்ஹாரம் செய்த காலத்தில். இடபமாக இருந்து பெருமானைச் சுமந்திருக்கிறார். திருமேனியிலே பங்குகொண்டு மனைவியாக (சக்தி) இருந்திருக்கிறார் பன்றியாக நின்று வழிபட்டிருக்கிறார். தோழனாக இருந்திருக்கிறார். ஆநந்ததாண்டவத்திற்கு முழவு கொட்டியிருக்கிறார். இறைவனுடைய சரணாரவிந்தங்களில் தன் கண்மலரை அர்ப்பணித்திருக்கிறார். (யா உமா ஸா மஹாவிஷ்ணு : या उमा सा महाविष्णुः எவள் உமையோ அவள் மகாவிஷ்ணு என்பது வேதவசனம்). சிவசக்தியாக திருவுருவிலே ஒரு பாதிகொண்ட பெருமை விஷ்ணுவிற்கு அமைந்திருந்தாலும் அவரே உன்னை உபாசிப்பதாக இருந்தால், ஏ சிவபரம்பொருளே! உன்னைக்காட்டிலும் மேலானதெய்வமுண்டோ.'' (சிவானந்தலகிரி.)

சாஸ்திரங்கள் முழங்குகின்றன :

இதே கருத்தைத் திருமூலரும் ''சிவனோடொக்கும் தெய்வம் தேடினுமில்லை, அவனோடொப்பார் இங்கு யாவருமில்லை'' என்று சொல்லியிருக்கிறார். தெய்வங்களுக்கு மேலான அப்பரம்பொருளே வணங்கத்தக்கது

முடியணி அரசனுக்கே உரியதல்லவா? திருடன் திருடிவந்த சமர்த்துப்போல மறுபடி அதை அரண்மனையில் சேர்த்தால்தான் பிழைக்கலாம். அதுபோல் நமஸ்காரங்கள் பரமேச்வரனைச் சேரவேண்டியவை, விஷ்ணு, பிரம்மா முதலிய தேவர்கள் தம்மைக்குறித்துச் செய்யப்படும் நமஸ்காரங்களைத் தமக்குத்தான் என்று ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அப்படி ஏற்றுக்கொண்டாலும் பரமேச்வரனால் ஒறுக்கப்படுவார்கள். ஆகவே, நமஸ்காரங்களை சிவார்ப்பணம் செய்வதற்காகவே ஏற்றுக்கொள்வார்கள், சுருதி சூக்தி மாலை.

என்பதை அப்பர் சுவாமிகளும் 'சேர்ந்தறியாக்கையான்' என்று சொல்லி விளக்கி இருக்கிறார்கள். பிறர் தன்னை வணங்க அருள்வழங்கும் வள்ளலாகத் தாம் எழுந்தருளி, பிறர் எவரையும் எதற்காகவும் வணங்கத் தேவை யில்லாதவராகவும் விளங்குகிறார் பரமேஸ்வரர். ஆகவே வணக்கம் எல்லாம் அவருக்கே உரியது. யார் யார் எந்தெந்தத் தெய்வத்தை விரும்பி வணக்கத்தைத் தெரிவித்தாலும், அங்கங்கே இவனே விரவிநின்று அருள் புரிகிறான் என்று சாஸ்திரங்களும் முழங்குகின்றன'' என்று சொல்லி முடித்தேன். இதுபோல அந்தந்தக் காட்சியும் அவரவர் மனத்திலும் நற்சிந்தனைகளை உருவாக்கும் தூண்டுகோலாக விளங்கின.

வழியிலே :

செல்லும் வழியிலே குத் (Kud), பாட்னிடாப் (Patni-top), பட்டோட் (Batote) ராம்பாண் (Ramban) கடந்து பனிஹாலை அடைந்தோம்.

வழியில் கண்ட குத் (Kud) ஒரு கோடை வாசஸ் ஸ்தலம். 5700 அடி உயரத்திலுள்ளது. சுற்றிலும் நல்ல அடர்ந்த காடு. எதிரே செனாப் நதி. அதற்கப்புறம் பசியமர மடர்ந்த காடுகளையுடைய மலைத்தொடர்கள். ஊர் ஒரு மலைச்சரிவில் அமையப்பெற்றிருக்கிறது. வசந்தகாலத்தில் மலைக்காட்சிகளைக் காணவும், சமவெட்ப தட்ப நிலையை யுடையதாக இருக்கும் இவ்வூரில் வசிப்பதற்கும் பலரும் வருவார்கள். தண்ணீரும் குளிர்ந்து பளிங்குபோன்றதாக விருக்கும். குளித்தாலும் குடித்தாலும் உடலுக்கும் உளத்திற்கும் குளிர்ச்சிதரும். உந்தூர்திகளுக்கு வேண்டிய பெட்ரோல் முதலியவை இங்கே கிடைக்கும். தங்க

அரசினர் விடுதியும் இருக்கிறது. அடுத்த பாட்னிடாப் 6447 அடி உயரத்தில் அமைந்தது. பட்டோட், குத்தைப் போல மனோரம்மியமான காட்சிகளை உடையது. 5170 அடி உயரம். செனுப் பள்ளத்தாக்கின் அழகின் சிகரமாக விளங்குவது. பதர்வா, கிஷ்டுவார்ப் பகுதிகளுக்கு வழி பிரிகிறது. குத்தில் உள்ளதேபோலப் பிறவசதிகள் எல்லாம் உள்ளன.

ராம்பாண் :

ராம்பாண் - இராமபாணம். செனுப் நதியைத்தாண்டி அக்கரை வழியே இனிச் செல்லவேண்டியதாகயிருக்கும். ஆற்றைக் கடக்க இரும்புத் தொங்குபாலம் ஒன்று படைப் பிரிவினரால் நிறுவப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது. பாதை இங்கே இறக்கத்தில் வரும். அந்தத்தொங்கு பாலத்திற்கு வேண்டிய இரும்பு ஜம்முப் பிரதேசத்திலுள்ள கனிகளி லிருந்து வெட்டியெடுக்கப்பட்டு அங்கேயே உருவாக்கப் பட்டது. தங்க இட வசதியும் பிறவும் இங்குண்டு. உயரம் 2250 அடி. பெரும்பாலும் இங்கு வரும் உந்தூர்திகள் இக்கரையிலும் அக்கரையிலுமாக நிறுத்தப்பட்டு, ஒரோர் வழியும் அளவுபடுத்திவிடப்படுகிறது. பாலம், ஒருவழிப் பாட்டையாக வைத்துவரப்படுகிறது.

பனிஹால் - ஊர் :

அடுத்து பனிஹால் கிராமம் ஸ்ரீநகரத்திற்குச் செல்லும் வழியிலுள்ள உயரமான பகுதியினடிவாரத்தில், அதாவது பனிஹால் மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்த ஊர். 5650 அடி உயரத்தில் அமைந்தது. பனிஹால் பகுதியில் மேலே செல்லுவதற்குச் சுங்கக் கட்டணம்

ஸ்ரீநகர் வழியில் :



பனிஹால் பாதை

அமரநாத வழியில் :



இமயம் - " ஏகன் "

இங்குச் செலுத்தவேண்டும், ஜம்முப் பகுதியில் கடைசி இடமாக இது அமைந்திருக்கிறபடியால் அப்பகுதி யிலிருந்து அரிசி முதலிய கட்டுப்பாடுள்ள பண்டங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதையும் இங்கே சோதிக்கிறார்கள்.

பனிஹால் - கணவாய் :

இதற்கு மேலேயுள்ள பனிஹால் கணவாய்ப் பகுதி தரைப்போக்கு வரத்தில் உலகிலேயே மிக உயரமான பாட்டை என்று சொல்லப்படுகிறது. இப்பாட்டை இப் போழுது காஷ்மீர மன்னனாக இருப்பவரின் தாத்தா அமைத்தது. பனிஹால் மலை 9,250 அடி உயரம். அதனுச்சியில் ஏறி, அப்புறம் காஷ்மீரப் பகுதியில் கீழே இறங்குகிறது. உச்சியில் நின்று இருபுறமும் பார்த்தால் இப்புறம் பனிஹால் பள்ளத்தாக்கு - அதாவது ஜம்முப் பிரதேசம் ; அப்புறம் காஷ்மீரப் பள்ளத்தாக்கு. இரண்டு இடங்களின் அழகுகளையும், தொலைவிலே வானத்தை முட்டிநிற்கும் பனிப்படிவுகளைப் போர்த்த மலை முகடு களையும் காணலாம். இந்தக் காட்சி எவருள்ளத்தையும் நிறைத்து மயங்கி நிற்கச் செய்யும் அற்புதக் காட்சி. கோடைக் காலங்களில் இந்த வழியே போக்குவரத்து எளிதாக இருந்தாலும், மழை மேகமுட்டம் இவைகளால் முகடேறி இறங்குவது துன்பமாக, சில சமயங்களில் முடியாததாக இருந்துவந்தது.

குடைவு வழி :

அதைப் போக்க உச்சி முகட்டிலிருந்து சுமார் 300 அடிக்குக் கீழே மலையைத் துளைத்து குடைவு வழி

உண்டாக்கி இருக்கிறார்கள். இந்தக் குடைவு ஐந்தல்லது ஆறு பர்லாங்கு நீளமிருக்கும். இதனால், செல்லும் வழியில் 7 மைல் தொலைவு குறைவதாக ஆகிறது. இப்பகுதியும் 8,900 அடிக்கு மேல் அமைந்ததாகயிருப் பதால். மாரிக்காலங்களிலும் பனிக்காலங்களிலும் போக்கு வரத்து அடிக்கடித் தடைப்படுவதாயிருக்கிறது. அது வல்லாமலும், ஒரே ஒரு குடைவு ஏற்பட்டிருப்பதால், இரண்டு புறங்களிலும் எதிரேதிரேவரும் வாகனங்களை அங்கங்கும் நிறுத்தி, அளவு படுத்தி, ஒரோர்வழியிலும் அனுப்பப்படுகின்றன. ஒரு வழியில் செல்லும் வாக னங்கள் முழுவதும் அப்புறம் சென்ற பிறகுதான், எதிர் வழியில் செல்லவேண்டியவற்றை இக்குடைவு வழியே அனுப்புகிறார்கள். இராணுவக் காவல் கடுமையாக இங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. காஷ்மீரம் பெரும்பாலும் அதற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் இந்தியப் பெருநாட்டிலிருந்து எதிர்பார்த்திருப்பதால், இவ்வழியே தான் எல்லாப் பண்டங்களும் எடுத்துச் செல்லப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆகவே அப்படிச் செல்லு வதில் தடை யேற்பட்டால் காஷ்மீர மக்கள் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள்.

ஜீலம் பள்ளத்தாக்கு வழி :

இந்த வழியல்லாது, பஞ்சாப் முழுமையும் அதற்கப்பா லும் இந்திய உபகண்டத்தின் பகுதிகளாகயிருந்த காலத்தில் ஜீலநதிப் பள்ளத்தாக்கின் வழியே, அவ்வாற்றின் கரைமீது ராவல்பிண்டியிலிருந்து நல்ல வழியொன்று ஸ்ரீ நகரத்திற்குச் சென்றது. இப்பொழுதும் அது நல்ல நிலையில்தான் இருக்கிறது. ஆனாலும், இந்தியப்

பிரிவினைக்குப் பிறகு அந்த எல்லை அந்நிய நாடாக ஆகி விட்டது. மேலும், காஷ்மீரத்தில் பாக்கிஸ்தானிகள் படை யெடுத்து வந்த பிறகு, அப்பகுதி இந்தியாவிலிருந்து செல்லுவதற்குப் பயனற்றதாகிவிட்டது. காஷ்மீர நாட்டின் விரோத நாடாகவும் பாக்கிஸ்தான் எண்ணப்படுவ தால், தேவைக்கு வேண்டிய பொருள்களை அந்நாட்டி லிருந்து காஷ்மீரம் பெறமுடியாததாகி விட்டது. இக் காரணங்களால், காஷ்மீரம் பனிஹால் வழியே எல்லாப் பொருள்களையும் எதிர்பார்த்திருக்கிறது.

இந்தியர் சாதனை :

இந்த நிலையில் பனிஹால் குடைவின் ஒருவழிப் பாட்டைச்செலவு இப்போழுதுள்ள காலநிலைக்குப் போது மானதாக இல்லை. மேலும் நல்லதோரு பாதையமைப்பு வேண்டியதாயிருக்கிறது. காஷ்மீரம் இந்தியப் பெரு நாட்டோடு ஒன்ருகி எல்லா உதவிகளுக்கும் இந்த நாட்டை எதிர்நோக்கியிருக்கும் நிலையில், இந்தியா தன்னுடைய பெரும் பொறுப்பை உணர்ந்து வருகிறது. அதற்கேற்ற செயல்களும் புரிந்து வருகிறது. அவற்றுள் மிக மேலான தாகக் கோள்ளக்கூடியவோன்று, இப்போழுது இந்தப் பனிஹால் பகுதியில் இன்னும் சிறிது கிழே - அதாவது உச்சியிலிருந்து 2000 அடிகளுக்குக் கிழே - சிறந்ததோரு குடைவு வழி உண்டாக்கி இருப்பதே. அப்பகுதியில் இரண்டு குடைவுகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று போவதற்கும், மற்ருென்று வருவதற்குமாகக் குடையப்பட்டிருக்கின்றன. அவற்றின் நீளம் 2 மைல். இது இந்திய இஞ்சிநீயர்களின் அருஞ்சாதனைகளில் சிறந்தது. இப்படிக் குடைந்து எடுப்பதில் இருபுறங்களி லிருந்தும் குடைந்து கோண்டே வந்தனர். நடுவில்

ஓரிடத்தில் இருபகுதியினரும் சந்திக்க வேண்டியதென்பது திட்டம். இவ்விதமாக மலைக்குடைவுகள் செய்துவருவதில் பெரும்பாலும் ஒரு சிறிது தவறினுலும் வழிவிட்டு விலகி நெடுந்தொலைவுகூட ஒருவரை யொருவர் சந்திக்காது செல்லுவதும் உண்டு. அவ்விதமில்லாமல் இருபகுதி யினரும் குறித்த காலத்தில் குறித்த இடத்தில் குறித்த அளவு கூடினர். சொல்லுவார்கள், போட்டதிட்டத்தில் ½ அங்குல அளவுகூட கூடுதல் குறைவில்லாமல் அமைப்பு முடிந்தது என்று.

வழிதிறக்கப்பட்டுவிட்டது :

குடைவுவேலை முடிந்து வழியும் திறக்கப்பட்டு விட்டது. நமது நாட்டின் உபதலைவர் உயர்திரு. டாக்டர், சர். S. இராதாகிருஷ்ணன் அவர்கள் திறப்புவிழாவை இனிதே நடத்தி இந்தியத்தாயின் அருங்குழந்தையான காஷ்மீரத்தை எளிதில் அடைய வழிகோலினுர். ஆனுலும் அக்குடைவுகளில் பக்கங்கள் சிதைவுருமல் பாறையிடுக்கு களின் வழியே பெருக்கெடுக்கும் ஊற்றுக்கள் வழி யடைக்காமல், அவற்றைத் திருத்திக் கட்டி வருகிருர்கள். இன்னும் இரண்டோரு வருடங்களில் இவ்வழி செம்மைப் பட்டு மக்கள் நலமடைவர். இதனுல் இவ்வழியில் 27 மைல் தொலைவு குறையும் என்று எதிர்பார்க்கிருர்கள். இந்தக் காட்சிகளைக் கண்டு மனமகிழ்வோடு பனிஹால் மலையைக் கடந்து காஷ்மீர எல்லைக்குள் வந்து நின்ருேம்.

பனிஹால் பள்ளத்தாக்கு :

பனிஹால் மலையேற்றத்தில் பாதை கோணிக்கோணி மேலே ஏறிஏறிச் செல்லுகிறது. ஒவ்வோரு படிவிலும்

ஸ்ரீநகர் :



தால் ஏரி - ஜவஹர் பூங்கா

ஸ்ரீநகர் :



மலர்வண்ண வண்ணம்

நாம் வந்த வழியைப்பார்த்து மகிழலாம். இப்பகுதியில் கார் ஒட்டுவதற்குத் தனிப்பயிற்சி வேண்டும். எல்லோரும் எளிதில் ஒட்டிவிட முடியாது. காரோட்டி தன் திறமையைக் காட்டி ஒட்டினாலும் அவன் துன்பம் சுற்றுபுறக் காட்சி களால் இன்பமாகவே மாறி விடும். நல்ல உற்சாகம் பிறக்கும். சூழ்நிலே மேலேமேலே ஏறிப்போவதால் ஏற்படும் தட்பநிலே, பள்ளத்தாக்குப் பகுதியின் மலேக்காட்சி மனம் மகிழும்படியாக அமைந்திருக்கும். நமக்குள்ள அயர்வும் சோர்வும் நம்மைவிட்டகலும்.

இன்ப உலகம் :

மலேச்சரிவின் அப்புறத்தில் நம்முடைய கார் இறங்கத் தோடங்கியதுமே, ஒரு இன்ப உலகத்தில் நாம் இறங்கிச் செல்வதுபோன்ற உள்ளுணர்வு யாருக்கும் உண்டாகாம லிருக்கமுடியாது. உலகம் சுற்றும் வேளிநாட்டார் பலரும் இந்தப் பனிஹால் பகுதியில் நின்று தோலேவிலே பனி மூடிய சிகரங்களேயும், நேல், சோளம், கேழ்வரகு முதலியவை பயிராகியுள்ள அடுக்கடுக்கான வயல் வேளிகளேயும், அந்த நாட்டைப் பின்னிப்பின்னிச்சேல்லும் ஆறுகளேயும் ஒடைகளேயும், மலேப்பகுதிகளிலும் பிற இடங்களிலும் உயர்ந்து வானேங்கிநிற்கும் பைன், (F)பர், பாப்லார் மரக்காடுகளேயும், அதற்கேற்றுற்போல் அதி காலேயிலிருந்து அந்திவரை சூரிய ஒளிகாட்டும் வண்ணச் சேர்க்கைகளேயும் கண்டு மயங்கி, உலகிலே எங்கும் காணுத அற்புதக் காட்சிச்சாலேக்குத் தாங்கள் வந்திருப்ப தாக உணர்கிருர்கள். புத்தகவடிவில் எழுதி வேளியிட்டு மகிழ்கிருர்கள். இந்தக் காட்சிகளேக்கண்டு மகிழ்ந்து நாங்களும் சேன்ருேம்.


அறுவடைக்காலம் :

அப்பகுதியை விட்டுச் சமவெளியில் (காஷ்மீரப் பள்ளத்தாக்கு) எங்கள் கார் செல்லும்பொழுது மாலை மணி 5க்கு மேலாகிவிட்டது. சாலையின் இருபுறங் களிலும் பாப்லார் என்னும் மரம் வரிசையாக நடப் பட்டிருப்பது யாத்திரீகர்களை வரவேற்கச் செய்திருக்கும் அழகு வேலையோ என அமைந்திருக்கிறது. இன்னும் சிறிது மேலே சென்றால் வில்லோ மரக்காடுகளும் ஆப்பிள், வாதுமை, ஆரஞ்சு, எலுமிச்சை, வால்நட் முதலிய பழத்தோட்டங்களும், பசிய நெல் வயல்களும் சோளம், கேழ்வரகு முதலிய புன்செய் பயிர்களும் காட்சி தருகின்றன. காஷ்மீர அரிசி உயர்வகை நெல் லினத்தைச் சேர்ந்தது. செப்டம்பர் மாதம் அறுவடைக் காலம்.


ஆள் உருவந்தெரியாது :

அறுவடையில் ஒரு மாறுதல். காஷ்மீரக் குடியானவன் அவனுக்கு ஒழிந்த நேரங்களில் அதிகாலையிலிருந்து அந்தி மயங்கும் நேரம் வரையிலும் எவ்வப்பொழுது நேரம் கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் அறுவடை செய்து வருகிறான். அறுத்ததும் அங்கேயே தாட்ப் போராக அழகாக அடுக்கிவைத்துவிட்டு வீட்டுக்குச் செல்கிறான். ஒழிவு நேரங்களில் அவன் வீட்டுச் சிறு குழந்தைகளிலிருந்து வயதான கிழவர்கள்வரை அவரவ ராலும் இயன்ற மட்டும் கட்டாகக் கட்டி எடுத்துச் செல்லுகிறார்கள். வாலிபமுடையவர்கள் எடுத்துச் செல்லு வதைக்கண்டால் ஒரு சிறு வைக்கோல் போர் தானாக நகர்ந்து செல்லுவதுபோல இருக்கும். ஆள் உருவம் தெரியாது.

ஸ்ரீநகர் :



தால் ஏரி - ஷிக்காராவில்



ஜீலம் நதிக்கரை

கொண்டைச்சோளம் :

நாங்கள் சென்ற பருவத்தில் கொண்டைச் சோளம் பயிராகி இளங்கதிர்கள் ஏராளமாக ஒடிக்கப்பட்டு வாட்டி விற்பனைக்கு வைத்திருந்தான் அவ்வூர்க் குடியானவன். பக்கத்திலே கரியடுப்பு ஒன்று இருக்கும். சோளக்கதிர்களும் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும். அவரவர் விருப்பப்படி எடுக்கும் அந்தச் சோளக்கொண்டைகளை தணலில் வாட்டி தின்னப் பக்குவமாகக் கொடுக்கிருன். அங்குவரும் எல்லோரும் இதை விரும்பி வாங்குகிருர்கள்.

வழியில் வரும் எல்லா ஊர்களிலும் நல்ல ஆப்பிள், வால்னட் (பச்சைக்கோட்டை) ஏராளமாக கிடைக்கின்றன. வால் பேரிக்காய்களும் அவ்விதமே.

சினர் :

இன்னும் சிறிது மேலே போனல் (Chinar) சினர் மரங்கள் அடர்ந்த பகுதிகள். இலையடர்ந்த உருவிலும் பெரியதாக உயரமாக வளரும் மரவகையைச் சேர்ந்தது. இலையும் நல்ல அழகானதாகப் பெரிதாக இருக்கும். அடி மரம் சுமார் 15 அல்லது 16 அடி சுற்றளவுள்ளதாக, உயரம் 100அடிக்கு மேற்பட்டதாகத் தேர்போன்ற அமைப்புடைய தாக அது வளர்கிறது. பெருமழை பெய்தாலும் அதனடி யில் தங்கியிருக்கலாம். மழைத்துளி ஒரு சிறிதும் நம்மீது விழாது. பனிக்காலத்திற்கு முன்னே வரும் இலையுதிர் காலத்தில் இம்மரத்தின் பசிய இலைகள் நிறமாறி மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமுடையதாகக் காட்சி யளிக்குமாம். அந்தக் காலத்தில் அந்த மரம் பார்ப்பதற்கு

மிக அழகாக இருக்குமென்றும் சொல்லுகிறார்கள். இலையுதிர் காலத்தில் இதுபோன்ற பல காட்சிகளைக் காண வெளியார் பலரும் வருவதாகவும் சொல்லப்படுகிறது.

யாத்ரீகர் தங்கு விடுதி :

இக்காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டே ஸ்ரீநகரத்திலுள்ள யாத்திரீகர்கள் தங்கும் விடுதிக்கு இரவு 7 மணிக்கு வந்து சேர்ந்தோம். யாத்திரீகர்கள் வரவேற்புக்கென அமைந்துள்ள அக்கட்டிடத்தில் வரவேற்பு நிலையம், உணவு தான்யங்கள் மண்ணெண்ணெய் சீனி முதலிய கட்டுப்பாட்டுப் பொருள்களை வழங்குவதற்குப் பெர்மிட் கொடுக்கும் நிலையம் யாத்திரைத் திட்டங்கள் அமைத்துக் கொடுத்து அதற்கு வேண்டிய உந்தூர்தி முதலியனவும் ஏற்பாடு செய்யும் போக்குவரத்துப் பிரிவு, தபால் ஆபீஸ், சிற்றுண்டிச்சாலை, விமானக் காரியாலயம், யாத்திரீகர்கள் தங்குவதற்கு வசதியாக அமைக்கப்பட்டிருக்கும் 37 அறைகள் கொண்ட இருபெருங் கட்டிடங்கள், இவற்றை எல்லாம் மேற்பார்க்க அந்த நாட்டு யாத்திரீகர் இலாகாத் தலைவரின் (Director of Tourism) அலுவலகம், வெளி நாட்டு விருந்தினர் வரவேற்பு மண்டபம் முதலியவை அமையப்பெற்ற பெரும் வளைவு ஒன்று யாத்திரீகர்கள் வரவேற்பு விடுதியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

எங்குத் தங்குவது ?

புதிதாக அந்த நாட்டிற்கு வருவோர் இங்கு வந்து வரவேற்பு அதிகாரியிடம் தாம் இன்னார் என்று பதிவு செய்துவைத்துக்கொண்டால் அவர்களுக்கு அந்த நாட்டில் எல்லா வசதிகளையும் அந்த இலாகாவினரைக்கொண்டே

செய்துகொள்ளலாம். படகு வீடுகளில் தங்குவதா, பெரிய ஹோட்டல்களில் தங்குவதா, வெளியிடங்களில் வசதி செய்து கொள்ளுவதா என்பது புரியாதநிலையில் வந்தாலும், அவரவர் நிலைக்கு ஏற்ப இந்த இலாகாவினர் ஏற்பாடு செய்துகொடுக்கிறார்கள்.

மேலும், இவ்விதமாக ஏற்பாடு செய்துகொண்டு செல்லுவதற்கு முன்னே, 24 மணி நேரம் இந்த யாத்திரீகர் விடுதியில் ஸ்நான அறை, நான்கு கட்டில்கள் முதலிய அமைப்புடன் கூடிய ஒரு அறையும் கொடுக்கிறார்கள். வாடகையும் குறைவுதான். அறை ஒன்றுக்கு வாடகை ரூபாய் நான்கு, நான்குபேர் தங்கலாம். அதற்குமேல் தங்கும் நபர்களுக்கு தலைக்கு ஒருருபாய் வீதம் அதிகப்படி வாடகை கொடுத்தல் வேண்டும். வந்து தங்கியதிலிருந்து 24 மணி நேரத்திற்குள் வேறு ஏதாவது ஒரு வெளி ஏற்பாடு செய்துகொண்டு போய்விடுதல் வேண்டும். இங்கே அறை கிடைக்காவிட்டாலும் வெளியே ஏற்பாடு செய்துகொள்ளும் வரை தம்முடைய பண்டங்களைப் போட்டுவைத்துப் போக பாதுகாவல் அறை (Cloak-Room) ஏற்பாடும் இருக்கிறது. இந்த இலாகாவினர் அதையும் திட்டம்செய்து நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் நாங்கள் ஒரு அறை எடுத்துக்கொண்டு அன்றிரவை அங்கே கழித்தோம். நகரிலே இரண்டு, மூன்று பெரிய சைவ உணவு வழங்கும் ஹோட்டல்கள் இருக்கின்றன. பால், பழம், ரோட்டி முதலியவை எந்த நேரத்திலும் வாங்கலாம். பெரும்பாலும் சைவ உணவையே விரும்பிச் செல்வோர்க்கு காஷ்மீரத்தில் உணவு நிலையில் சிறிது துன்பம் இருக்கும்.

உயர்திரு. ஸயாடி :

மறுநாள் அதிகாலையில் அடியேனும் ஸ்ரீநிவாசராவும் மேஜர்பூரி குறிப்பிட்ட ராணுவ அதிகாரியைப்பார்ப்பதற்கும், உயர்திரு. ஸயாடி, பிரதமர் கனம். பக்ஷிகுலாம் இவர்களைப் பார்ப்பதற்கும் சென்றோம். உயர்திரு. பக்ஷிகுலாம், சர்தாரீ-யஸத் மாட்சிமை தங்கிய யுவராஜ கரன்ஸிங் இருவரும் வெளியூர்சென்றிருப்பதாகத் தெரியவந்தது. ஆகவே திரு. ஸயாடி அவர்கள், தானே யாத்திரீகர்கள் இலாகாத் தலைவர் திரு.கௌவுல் அவாகளைத் தொலைபேசியில் அழைத்து, மகா சந்நிதானத்தில் வந்திருக்கும் செய்திசொல்லி அவர்களுக்கு வேண்டிய எல்லா நலன்களையும் உடனிருந்து செய்து தருதல் வேண்டும் ; அரசாங்க நிலையில் இவ்விதமாக வருவோர்க்கு எந்த அளவு அதிகமாகச் செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்துகொடுத்து, அமரநாத யாத்திரை சிறப்பாக நிறைவுற செய்தல் வேண்டும் என்று சொன்னார்.

ராணுவக் காரியாலயத்தினரும் போக்கு வரத்து சாதனங்கள் தங்களிடம் இருப்பவற்றைக் கொடுப்பதில் கட்டுப்பாடுகள் கடுமையாக இருப்பதால் கொடுத்து உதவமுடியாத நிலையில் மனம் வருந்துவதாகவும், பிற வசதிகள் எல்லாவற்றையும் தாங்கள் செய்துகொடுக்க முன் வருவதாகவும் சொன்னார்கள். எங்களுக்கு வேண்டிய பெரிய உதவி போக்கு வரத்துச் சாதனம் அமைத்துக் கொடுத்தலே.

திரு. கௌவுல் :

இந்த நிலையில் நாங்கள் விடுதிக்குத் திரும்ப வந்தோம். முதல்நாள் மாலையிலிருந்தே திரு. கௌவுல் அவர்கள், மகாசந்நிதானத்தில் அங்கு வந்திருக்கிறார்களா



மரக்கூழ் வேலையா

ஸ்ரீநகர் :



பூங்காவில்

என்பதைக் கேட்டறிந்துகொண்டே இருந்திருப்பார்போலும். நாங்கள் வெளியே சென்ற சிறிது நேரத்தில், திரு. கௌவுல் மகாசந்நிதானத்தில் அங்கு வந்திருக்கும் செய்தியறிந்து அந்த அறைக்கு வந்து மகாசந்நிதானத்தையும் தரிசித்திருக்கிறார். அன்று குருவாரம்; மௌனநாள். ஆகவே, பேசி அறிந்துகொள்ளக்கூடிய நிலையில் அமையவில்லை. மேலும் நாங்களும் வெளியேசென்றிருந்தபடியால், அவரோடு பேசிக் கலந்துகொள்ளக்கூடிய நிலையில் அங்குயாருமில்லை. மகாசந்நிதானத்துடன் நாங்களிருவரும் வந்திருக்கிறோம் என்ற செய்தி திரு. ஸயாடி சொல்லி, அவரை நாடி நாங்கள் வருவதாகவும் அறிவித்திருந்தார். நாங்களும் சென்றோம்.

திரு. கௌவுல் அவர்கள் முன்னேநடந்ததைச்சொல்லி, மேற்கொண்டு தன்னால் ஆகவேண்டியது என்ன என்பதையும் கேட்டார். பிரயாணத்திட்டம் எப்படி அமைதல்வேண்டும் என்பதையும் தெரிந்துகொண்டார். அன்றே புறப்பட்டு பஹல்காம் போய், மறுநாள் பாரணைமுடிந்து மேலே செல்லுவதாக எங்கள் திட்டம். அதைச் சொன்னோம்.

மரக்குடில் :


பஹல்காமிலுள்ள தன் உதவியாளருக்குத் தொலைபேசியின் மூலம் எங்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரும்படிச் சொல்லி, அன்று மாலை நாங்கள் புறப்பட ஒரு உந்தூர்தியும் ஏற்பாடு செய்து கொடுத்தார். யாத்திரைக்கு வேண்டிய சில பொருள்களை ஸ்ரீநகரிலேயே நாங்கள் வாங்கிக்கொண்டோம். கால் உறை, காலணி (Boots), மண்ணெண்ணெய் அடுப்பு, பால்பவுடர், காப்பித்தூள் இவைகளைத் தவிர எங்களுடன்வந்த இரண்டொருவர்க்குக் கம்பளிச்சட்டை, இவை தாம் வாங்கியவற்றுள்

முக்கியமானவை. பிற ஒரளவு அவரவரும் எடுத்து வந்திருந்தோம். குறித்தபடி மாலை 4மணிக்கு ஸ்ரீநகரைவிட்டுப் புறப்பட்டுப் பஹல்காமிற்கு 7 மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கு யாத்திரீகர்கள் வரவேற்பு அதிகாரியாயுள்ள திரு. மதுசூதனன் ஊரெல்லையிலேயே எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார். திரு. கௌவுல் எங்களுக்கு லிடார் ஆற்றின் நடுவிலே அமைந்துள்ள திட்டின்மீது கட்டப்பட்டிருக்கும் அரசினர் குடிசையை (Government Annexe)த் திட்டம் செய்யும்படிச்சொல்லி இருந்தார். நல்ல பூங்கா அமைப்பும் நடுவிலே அழகிய மரவீடும்தான் அது. ஆனால் வைதிகமாக ஸ்நானம், பூசை முதலியவற்றிற்கு வசதிகள் அவ்வளவு போதாது. ஆங்கிலேய முறைப்படி அமையப்பெற்றது. வைதிகமாக வருபவர்க்கு அது பொருந்தாது என நினைத்த திரு. மதுசூதனன் மலைச்சரிவிலே, மிக அழகான சூழ்நிலையிலே, தேவதாரு காட்டுப்பகுதியிலே நல்ல மரக்குடில் ஒன்று ஏற்பாடு செய்துவைத்திருந்தார்.

மூப்பது குடில்கள் :

இதுவும் அரசினர் குடிசைதான். வாடகை உண்டு. நாலு பேருக்கு நான்கு ரூபாய். அதிகப்படி தங்குவோர்க்கு நாள் ஒன்றுக்கு தலைக்கு ஒரு ரூபாய். இங்கே யாத்திரீகர்கள் தங்குமிடம் தனியாகவும், சமையல்கட்டு வேலையாட்கள் தங்கும் பகுதி தனியாகவும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. எல்லா இடங்களிலும் நல்ல தண்ணீர்க் குழாய் உண்டு. குளிப்பு அறை, மின்சார விளக்கு, நல்ல கட்டில்கள், நாற்காலிகள், உடுப்பு அலமாரி, முகம்பார்க்குங் கண்ணாடி முதலிய எல்லா வசதிகளும் அமைந்த இடம். இது போன்று முப்பது குடில்கள் பல இடங்களிலும் அமைத்

பஹல்காம் :



லிடார் பள்ளத்தாக்கு லம்போதரி நதி

அமரநாத வழியில் :



வாவ்ஜன் அரசாங்க மரக்குடிசை பனி பெய்தல்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழிமீள எழுந்தருளல்

திருக்கிறூர்கள். சூழ்நிலே, கட்டிட அமைப்பு முதலியவை எங்களுக்கு ஒத்ததாக இருந்தபடியால் இங்கே தங்கினோம்.

என்னென்ன இருக்கிறது ?

திரு. மதிசூதனன் மேலே எங்களுடைய பிரயாண திட்டத்தைக் கேட்டார். 'மறுநாளே பாரணே முடிந்ததும் புறப்படுவதாக இருக்கிறோம்' என்று சொன்னோம். 'மேலே யாத்திரை செல்லும் பகுதிக்கேற்ற ஆடைகள் முதலியன இருக்கின்றனவா ? யார் யாரிடம் என்னென்ன இருக்கிறது என்பதைக் காட்டலாமா' என்று கேட்டார். அதற்கு, 'நாங்கள் கேதாரம் சென்றிருக்கிறோம். குளிர்ப் பகுதியில் போட்டுக்கொள்ள வேண்டிய ஆடைகள் போதுமான அளவு எங்களிடம் இருக்கின்றன' என்றேன். ''நல்லது இருந்தாலும் நானும் ஒருமுறை அவற்றைப் பார்த்து, தெரிந்து கொண்டால் மேலே ஏதாவது வேண்டியிருந்தாலும், இங்கே வாடகைக்காவது எடுத்துச் செல்லலாம். தாங்கள் சென்ற பகுதியைப்போல அல்ல இப்பகுதி. இங்கே இந்த ஊரைவிட்டுச் சென்றால், பிறகு திரும்ப இவ்வூர் வரும்வரையில் எந்தவிதமான உதவியும் எதிர் பார்ப்பதற்கில்லே. செல்லும் பாதையும் கரடுமுரடானது. கடுங்குளிர்ப் பகுதியில் செல்லவேண்டியதாயிருக்கும். 16000 அடி உயரம்வரை ஏறவேண்டிய நிலேகூட உண்டு. உறைபனிமீது சிறிது தொலேவு நடக்கும்படியும் ஏற்படும். இவற்றிற்கெல்லாம் பிற ஏற்பாடுகள் எப்படி யிருந்த போதிலும், ஆடையும் குளிர்த்தடுப்புச் சாதனங்களும் கையில் வேண்டிய அளவு எடுத்துச்செல்லுதல்வேண்டும்''.

'' இரத்தத் துடிப்பு, இருதய பலஹீனம் உள்ளவர்கள் அந்த அளவு செல்லலாகாது. எதோமுடிந்தமட்டும் போய்ப் பார்த்து திரும்புதல் நலம்.

சென்ற ஆண்டில் :

சென்ற ஆண்டு, வயதில் முதிர்ந்த பெரியவர் ஒருவர் ராணுவத்தில் சேவைசெய்து ஒய்வுபெற்றவர் ; அமரநாத தரிசனம்காண தன் மனைவியுடன்வந்தார். என்னிடம் 'தான் இன்னநிலையிலிருந்து இப்பொழுது அமரநாததரிசனத்திற்கு வந்திருப்பதாயும். தனது ஹிருதயம் பலஹீனமாகஉள்ளது, அடிக்கடி பிராணவாயு செலுத்திக்கோள்ளுவது உண்டு. 8.000, 9,000 அடிக்கு மேலே உயரச் சென்ருல் தன்னே அது பாதிக்கும் என்றும் சோன்ஞர். நானும் 'அமரநாதம் 10,000 அடிக்கு மேலான உயரம் உள்ள பகுதி. தாங்கள் பஹல்காம் வந்தது போதும். மேலே செல்லுதல் வேண்டாம்' என்றேன். 'மாயும் உடல்கோண்டு அமரநாதனேக் காணுது இனித்திரும்பேன். பிராணவாயு அடைத்த குப்பி என்னிடமிருக்கிறது. 10 க்குமேல் ஒன்று அல்லது இரண்டாயிரம் அடி அதிகமாக இருந்தாலும் செல் லத்தான்வேண்டும். சண்டையில் ஒரு சிறு பகுதிக்குத் தலைமைதாங்கி நடத்தியிருக்கிறேன். உலகமகாயுத்தங்கள் இரண்டிலும் ஈடுபட்டிருக்கிறேன். முன்வைத்த காலே பின்வைத்தறியேன். அப்படி உதவி ஏதேனும் வேண்டி யிருந்தால், என் மனைவி எனக்கு வேண்டியதைச் செய் வாள். நடுவழியிலே ஏதேனும் உயிருக்கு ஆபத்து வந்தாலும், அதற்கு நானே என் மனைவியோ வருந்தப் போவதில்லை. என்ருே ஒருநாள், எங்கோ ஒரிடத்தில் நாம் இறப்பது உறுதியல்லவா ? தயவுசெய்து அச்சம் தரும் செய்தி எதுவானுலும் என்னிடம் சோல்லவேண்டாம். மேலே செல்லுவதற்கு உதவியாக என்னவேண்டும் என்பதை மாத்திரம் பார்த்துச் சோன்ஞல் போதும்' என்று முடித்தார்''.

"ஆ" என்றார் :

"நான் எதிர்பார்த்ததைவிட குளிர்த்தடுப்புப் பொருள்கள், மருந்துகள் முதலியன மிகுதியாகவேகொண்டுவந்திருந்தார் 'அமரநாதன் அருள் தோல்வியே கண்டறியாத தங்களுக்கு வெற்றி அளிக்குமாக' என்று சொல்லி வாழ்த்தி அனுப்பினேன். சென்றார்; தரிசனம் கண்டு மீண்டார். நான்செய்த உதவிக்கு நன்றிதெரிவித்துக்கொண்டார். பேச்சோடு, 'நான் அதிகப்பட்சமாக எவ்வளவு உயரம் ஏறியிருப்பேன். தயவு செய்து சொல்லமுடியுமா' என்று கேட்டார். 'உத்தேசம் 16,000 அடிக்குமேலாக' என்றேன். 'ஆ!' என்றார். பிறகு அவருக்கு உயிர்வளி செலுத்தி நல்லநிலைக்குக்கொண்டுவர அரைமணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. தன் நினைவுவந்து நன்றாகப் பேசமுடிந்த பிறகு 'நடுவில் ஓரிடத்தில் எனக்கு மூச்சு முட்டியது. இப்பொழுது தாங்கள் உதவியதுபோல என் மனைவி என்னைக்காத்தாள். ஒருக்கால் அது வழியிலுள்ள நச்சுப்பகுதியாக இருக்குமோ என்று எண்ணி மேலே சென்றோம். தாங்கள் சொல்லுவதுபோல சாதாரணநிலையில் அந்த அளவு உயரம் என் அறிவுக்குத் தெரிந்து சென்றிருந்தால், என் பிணம்தான் இங்கே மீண்டிருக்கும். இவ்விதமாக என்னையாண்ட அமரநாதனருளுக்கு என்ன கைம்மாறு என்னால் செய்ய இயலும்' என்று உருக்கமாகக் கூறினார்.

மன்னிப்பீர்களாக :

"உள்ளூறு காதலாலே அவனைக் காணச்செல்லும் அடியாருக்கு அமரநாதன் அருள் வழங்கிக் காக்கிறான். இருந்தாலும், மனித முயற்சியாக நம்முடைய உடலைக் காத்துக் கொள்ளுவதற்குச் சில அவசியமான உதவி

களும் தேவைதான். ஆகவே, இங்குள்ளார் ஒவ்வொரு வருடைய உடைமைகளையும் நான் பார்த்து இன்னும் வேறு ஏதாவது வேண்டியிருக்கிறதா என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு வற்புறுத்திச் சொல்வது குறித்து என்னை மன்னிப்பீர்களாக!'' என்ருர். எல்லோரும் அவரவரிடம் உள்ள போர்வை, கால் உறை, கையுறை படுக்கைகள் முதலியவற்றை எடுத்துக்காட்டினேம். அவர் எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாக எங்களிடம் எல்லாம் இருப்பதைக் கண்டார். ஒரு பட்டியல் போட்டு இன்னின்னவை வாடகைக்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும்; அவற்றை உங்களுடன் வந்திருக்கும் வழிகாட்டி புரிந்து எடுத்துவருவான். மேலும் அவ்வழியில் நடந்து செல்லுதல் முடியாது. குறைந்தது ஏறுகுதிரைகள் பத்து, போதி குதிரைகள் ஒரு ஆறு அல்லது ஏழு எடுத்துச் செல்லுதல் நலம். ஒன்றிரண்டு சோர்வுற்ருலும் மற்றவை உங்களுக்கு உதவியாக இருக்கும். நாளைக்கு நடுப்பகல் 12 மணிக்குள் எல்லா ஏற்பாடுகளையும் முடித்துக்கொண்டு புறப்பட்டு, சந்தன்வாரியில் இரவு தங்கி, மறுநாள் வாவ்ஜன், அதற்கு மறுநாள் அமரநாத தரிசனம், அதற்கடுத்து இரண்டொரு நாளில் மீண்டும் இங்கே வந்துவிடலாம். இது மகாசந்நிதானத்திற்கு ஏற்றதாக இருக்கும் என நம்புகிறேன். நாளைக்காலை இங்கு வந்து சேகரிக்கப்பட்டிருக்கும் பொருள்களைப்பார்த்து மேலே ஆகவேண்டியதற்கு ஏதேனுமிருந்தால் சொல்லுகிறேன்.'' என்று விடைபெற்றுச் சென்ருர்.

அகத்தி :

மீண்டும் ஒரு மணி நேரத்திற்குள்ளாக ஏழு, எட்டுப் பேர் ஆணும் பெண்ணுமாக அழைத்துக்கொண்டுவந்தார்.

'' பெரிய மகந்து (மகான் - மடத்துத்தலைவர்) வந்திருக்கும் செய்தி அறிந்தோம். அவர்களைக்கண்டு வணங்கிச் செல்ல வேண்டும். அனுமதிப்பீர்களா '' என்று அடியேனைக் கேட்டார். '' இன்று குருவாரம்; மௌனதினம். நாளைக் காலையில் வந்தால் பார்த்துக் கொள்ளலாம் '' என்றேன். '' மன்னிக்கவும். நான் பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவந்த அகதிகளுள் ஒருவன். ஆண்டவன் அருட்சோதனைகள் பலவற்றையும் என் மன உறுதியால் - அவனிடம் உள்ள ஈடுபாட்டால் - வென்று ஓரளவு இப்பொழுது நிம்மதியோடு வாழ்கிறேன். எல்லாம் இழந்தாலும், என் மனவுறுதி என்னைக் காக்கிறது. இதுபோன்ற சாது மகாஜனங்களின் அருளாசிதான் என்னை உய்யச் செய்திருக்கிறது. நாளைக் காலை நான் ஸ்ரீநகரிலிருக்கவேண்டும். இவ் ஏழைக்கு அந்த மகானின் தரிசனம் கிட்டுமா? உய்வு கிடைக்குமா?'' என்று உருக்கமாகக் கேட்டார். மகாசந்நிதானத்திலும் தெரிவித்தேன். உத்தரவாயிற்று. திருமுன் அவர்களை இட்டுச்சென்றேன். அவர்கள் யார் ? அகதியாகுமுன் அவர்கள் நிலை என்ன ? என்ற திருவுளக் குறிப்புத் தோன்றியது.

பிள்ளை போன இடம் தெரியவில்லை :

அதற்கு அங்கு வந்தவர்களில் தலைவராக உள்ளவர், '' நான் அக்காலத்தில் மேலைப் பஞ்சாப்பில் ஒரு சிறு ஜமீன்தார். ஆண்டொன்றிற்கு நான்கு, ஐந்து லட்சரூபாய் நிகர வருமானம் எனக்கு வரும். இந்தியப் பிரிவினையால் இந்துக்களாகிய நாங்கள் எல்லா உடைமைகளையும் அங்கேயே விட்டுவிட்டு அவரவர்மேல் அணிந்துள்ளவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு திக்குத் தெரியாது, நிலைபுரியாது, ஒவ்வொரு மூலைக்கு ஒவ்வொருவராக

ஓடிவந்தோம். வரும்போழுது முறடர்கள் பலர் கைப்பட்டு இழந்ததுபோக எஞ்சியது ஓரளவு என்னிடம் இருந்தது. என் மனைவி எல்லாம் இழந்து எங்கோ ஓரிடத்தில் இருந்தாள். எனக்கு ஒரு பேண்ணும் ஒரு பிள்ளையும். பேண்ணைமட்டும் நான் ஏந்திவந்தேன். பிள்ளை போன இடம் தேரியவில்லை அப்போழுது. இந்தியாவில் வந்து ஓரிடத்தில் தங்கி எனக்குத் தங்கும் வசதியைச் செய்து கோண்டு பிறகுதான் பிள்ளையைப்பற்றியும் மனைவியைப் பற்றியும் சிந்திக்கத்தோடங்கினேன்.

சாது காத்தார் :

இதற்குள் இரண்டு மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. என் மனைவி ஒர் மூலையில் ஓர் கிராமத்தில் உயிர் போகாத நிலையில் தன்னைக் காத்துவந்தாள். என் மகனை ஒரு சாது தன்னுடன் அழைத்துச் சேன்று காத்தார். இச் சேய்தி எனக்குத் தேரிய, மேலும் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒவ்வோருவராக அவரவர் இருக்கும் இடத்தையும் தேடிச் சேன்று அழைத்து வந்து இறைவன் இன்னருளால் ஒன்று கூடினோம். அவளுடைய இழிநிலையிலும் உள்ளாடைக்குள் காத்து வந்த ஒரு சில போருள்கள், நான் கோள்ளை கோடுத்தது போக மறைத்து எடுத்துவந்த சில, இப்போழுது எங்க ளுக்கு மூலதனமாக இருக்கிறது.

பிரார்த்தனை :

மீண்டும் எங்கள் குடும்பம் ஒன்றுபட்டுக் கூடினால் அமரநாதனை வந்து தரிசித்து மீள்வது என்று பிரார்த்தனை. இப்போதுதான் அருள் கூடிற்று. இந்த ஒரு பிள்ளைக் காகவே நானும் என் மனைவியும் உயிர் வாழ்கிறோம்.

அந்த ஒரு பிள்ளையையும் ஆண்டவன் (அமரநாதன்) அடியவர் உருவில் வந்து காத்து எங்களுக்கு அளித்திருக்கிறுன். என்னுடைய பொருள் போனது எனக்குப் பெரிதல்ல.

உழைக்க முடியும் :

மகாசந்நிதானத்தைப் போன்ற அடியவர்கள் ஆசியால், நான் ஆங்கிலத்தில் ஒரு பெரிய பட்டதாரி. என் மனைவியும் ஓரளவு படித்தவள். குடித்தன வேலையும், சிறு கைத்தொழில் வேலைகளும் தெரிந்தவள். நாங்கள் இருவரும் மனம் ஒத்த நிலையில் வாழத்தெரிந்தவர்கள். உழைத்துப் பொருள்தேடி உயிர் வாழ்க்கை நடத்திவிட முடியும். எங்கள் அரும்பெரும் செல்வமான இந்தப் பிள்ளையை இழந்தால் மீட்டும் பெறமுடியுமா?

தவம் காக்கிறது :

நான் என் சோகக் கதையை வளர்த்திவிட்டேன். காலதாமதம் ஆகிறது. மேன்மையான அந்தத் திருவுளத்தில் இந்த உலகியில் துன்பங்கள் பதிதலும் வேண்டுமா? பொதுவாக அடியவர்கள் பிறர் துன்பங்கண்டு அதனைத் துடைக்கும் கருணை வள்ளல்களாக நம் நாட்டில் வாழ்கிறுர்கள். அவர்கள் தவம் ஒன்றே நம்மைக் காக்கிறது. ஆசி வேண்டும் '' என்று கண்ணீர் வடித்துச் சொன்ஞர்.

ஆசி :

உடன் வந்த மற்றவர்களும் நல்ல நிலையில் இருந்து ஒய்வு பெற்று அமரநாத தரிசனத்திற்கு வந்தவர்கள் தாம். இந்தக் கதையைக் கேட்டு மகாசந்நிதானத்தின்

திருவுளம் கனிந்தது. வந்திருந்தோர் அனைவருக்கும் மகாலக்ஷ்மி துர்க்காதேவியின் உருவம் பொறிக்கப்பெற்ற தொங்கல்களையும் (Pendants) வழங்கி ஆதீன வெளியீடு களில் சிலவும் அளித்து ஆசி வழங்கினார்கள். இவ்வித மாகப் பலரும் மகாசந்நிதானத்தில் அமரநாத யாத்திரை செல்லும் செய்தியறிந்து வணங்கி ஆசிபெற்றார்கள்.

திருவடி தோயச்சென்ற பாதை :

எல்லோரும் சென்றபிறகு, மதுசூதனன் சிறிது பின்னே தங்கினார். " தாங்கள் சொல்லியபடி பிற எல்லாப் பொருள் களும் வாடகைக்கு எடுத்துவர ஏற்பாடு செய்துவிட்டோம். ஆனால் ஏறுகுதிரைகள் மட்டிலும் மொத்தத்தில் மூன்று இருந்தால் போதும். நடக்கமுடியாத நிலையில் துன்பம் வந்தால் களைப்பு அதிகம் உள்ளவர்கள் மட்டிலும் அதில் ஏறிவரலாம். கேதாரம் 45 மைல்கள் நடந்திருக்கிறேன். ஏற்றமும் இறக்கமுமாக இதே இமயப்பாதைதான் அதுவும். அந்த அநுபவம் எனக்கு இருக்கிறது. மன உறுதியும் குறையவில்லை. எத்தனை எத்தனையோ ஆயிரக்கணக்கான அடியவர்கள் திருவடி தோயச் சென்ற அந்தப் பாதையிலே நான் வாகனம் இவர்ந்து செல்லுதல் தவறு என்று எண்ணு கிறேன். அந்த அடியவர்கள் அருளாசியும் அமரநாதனின் திருவருளும் எனக்கு உடனிருந்து இந்த யாத்திரையைக் கால் நடையாக முடித்துக்கொடுக்க உதவி செய்யும். ஆகவே ஏறு குதிரைகள் அவ்வளவு வேண்டியதில்லை. குறைத்துக்கொள்ளலாம் " என்றேன். " உங்கள் உறுதிப் படியே செய்து பாருங்கள். ஆயினும் நான்கு குதிரைகள் அவசியம் இருக்கட்டும். இப்பொழுது நான் சொல்லுவது புரியாது. அவனருள் எவ்வளவு தூரம் உங்களை அழைத் துச் செல்லுகிறதோ அதுவரை செல்லலாம். எல்லா

வற்றிற்கும் நாளேக் காலேயில் வந்து பார்க்கிறேன். உங்களுக்கெல்லாம் நல்ல ஓய்வு தேவை. வருகிறேன்' என்று சொல்லிப்போனுர்.

குறித்த திட்டப்படி மறுநாள் காலேயில் பாரணேயை முடித்துக்கொண்டு பிற்பகல் 2 மணிக்கு யாத்திரையைத் தொடர்ந்தோம். மதுசூதனன் வந்து வழியனுப்பினுர், "வழியில் பனியோ, மழையோ வேறு எதுவுமோ வந்து துன்பமாக இருந்தால் அங்கங்கும் தங்கி, வானிலே சரியான பிறகு, மேலே செல்லுதலே நலம். மழையில் சென்ருலும், பனியில் செல்லுதல் வேண்டா. அமரன் அருள் உங்களுக்கு எல்லா நலன்களேயும் அளித்துக்காக்குமாக. பெரிய தவமுனிவருடன் செல்லும் உங்களுக்குத் துன்பம் எதுவும் வராது" என்று வழியனுப்பினுர். பொதிசுமக்கும் (கோவேறு கழுதையும்) குதிரைகள் ஏழும், சேணமிட்ட ஏறுகுதிரைகள் நான்கும், ஆட்கள் அறுவரும் எங்களுடன் வந்தார்கள்.

போகும் வழி :

போகும் வழியில் பஹல்காம் கிராம எல்லேவரை சாலேயின் இருபுறத்திலும் சோளம், கேழ்வரகு முதலிய புன்செய் தானியங்கள் பயிராகியுள்ள வயல் வெளிகளும் அடுத்து இருபுறமும் உயர்ந்து உயர்ந்து செல்லும் பெரிய மலேத் தொடர்களும், அவற்றின்மீது பையின், (f)பர், சினுர் மரக்காடுகளும் மனதிற்கு மகிழ்வூட்டுகின்றன.

பஹல்காமிலிருந்து (Kolahoi Glacier) கோலகை பனிஉறைச்சிகரம், தார்சார் (Tarsar) ஏரி, ஆறு (Aru) பள்ளத்தாக்கு, லிடார் பள்ளத் (Lidarwat) தாக்கு


பௌமாஜோ (Bhaumajo) குகை, பவான் (Bawan) புல்வெளி, துலோயின் (Tuluain) ஏரி முதலிய பல அழகிய பொழுதுபோக்கு இடங்களுக்கு வழிகள் செல்லுகின்றன.

சுற்றிலும் தொலைவிலே பனிமுடிய கொடுமுடிகள் பல காட்சி அளிக்கின்றன. இந்த மனமகிழ்வூட்டும் சூழ்நிலையில் யாத்திரை தொடங்கப்பட்டது. நல்ல வெயிலும் காய்ந்தது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம், பணியாள் இசக்கி, அடியேன் மூவரும் முடிந்தமட்டும் கால்நடையாகச் செல்லுவது என்றே புறப்பட்டோம். மற்றையோரும், போதிகுதிரைகளும் சிறிது முன்னேசென்றுகொண்டிருந்தன. பஹல்காம் விட்டு ஒருமைல் தொலைவு வரை நல்ல சாலை அமைப்பிருக்கிறது. சந்தன்வாரிவரை சாலை அமைக்கப்பட்டுவருகிறது.

சீற்றூர் :


நடு நடுவே சமவெளிகிடைத்த இடங்களிலும், ஓரளவு மலைப் பகுதிகளிலும் புன்செய் தானியங்கள் பயிரிடப் பட்டிருக்கின்றன. மலை உச்சிகளிலிருந்து வரும் அருவிகளை இணைத்து உயரமான பகுதியில் வாய்க்கால்கள் கட்டி மக்கள் உபயோகத்திற்குக் கொண்டுசெல்லும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. பஹல்காம் ஊர் எல்லையைத் தாண்டியதும் ஏழு எட்டுமைல் வரை லிடார் ஆறு வழி நெடுகிலும் வந்துகொண்டே இருக்கிறது. நல்ல தெளிந்த கருநீல நிறத்தில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. செல்லும் வழியில் ஆங்காங்கும் சிறு சிறு கிராமங்கள். பத்து, இருபது மரவீடுகள் கொண்டவை. வீடுகளைச் சுற்றிலும் புன்செய் வயல்வெளிகள்.

அமரநாத யாத்திரை வழியில்:



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும், நாரதரும்

அமரநாத வழியில் :



போகலாம் வாருங்கள்

வீடுகள் :

எல்லாம் மர வீடுகள். மூன்றடுக்கு உள்ளவை யாகவே அமையப்பெற்றிருக்கின்றன. கீழ்ப்பகுதி ஆடு மாடுகள் கட்டிவைத்துக்கொள்ளவும், அதன் மேற்பகுதி வசிப்பதற்கும், அதற்கு மேற்பகுதி விறகு, தான்யங்கள் முதலிய மழைக்காலத்தேவைகளைச் சேகரித்து வைத்துக் கொள்ளுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. புதியமுறை யில் நல்ல வேலைப்பாட்டோடு அமையப்பெற்ற ஒருசில வீடுகளும், பழய நிலையில் மரப்பலகைகளை அறுத்து மேலே மூடப்பட்ட பல வீடுகளும் அவரவர் தகுதியை வெளிப்படுத்தக் கூடியதாக அமைந்திருக்கின்றன. ஆனால், எல்லா வீடுகளிலும் வசிக்கும் பகுதியாக அமைக்கப்பட்ட நடு இடங்களில் சுற்றிலும் பலகணிகள் பல அமைக்கப்பெற்று அப்பகுதிகள் ஒரு சிறிது வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்படியான மாட அமைப்புக்களைப் பெற்றிருக்கின்றன. ஓய்வுபெறும் நோக்கத்தோடும், வயல் களைக் காவல்புரியும் நோக்கத்தோடும் அந்த மாடங்களில் ஆணும் பெண்ணும் அமர்ந்திருக்கிறார்கள். இந்தச் சிற்றூர் களை விட்டுச் சிறிது தொலைவில் அமைந்துள்ள வயற்புறங் களில் பரண்கள் அமைத்து அவற்றிலும் காவல் புரியும் ஆணும் பெண்ணும் அமர்ந்து இருப்பதையும் காணலாம்.

அருமைக் காட்சிகள் :

சுற்றிலும் பனிஉறை கோடுமுடிகள். அவைகளையடுத்து வானோங்கிவளர்ந்திருக்கும் காட்டுப்பகுதிகள். அதனிடையே தங்கி மனமகிழ் நல்லிசை வழங்கும் பல வண்ணப்பறவைக் கூட்டங்கள். மலைச்சரிவில் வயலாக ஆக்கப்பட்டிருக்கும் பகுதியிலிருந்து படிப்படியாக அமைந்திருக்கும் புன்செய்

நிலப்பகுதிகள். அடியிலே தெளிந்த நீரையுடைய லிடார் ஆறு. வயற்புறங்களில் பரண்கள் அமைத்து காவல் புரியும் சிறு பெண்கள். வழியிலே சிற்றில் விளையாடி மனமகிழும் சிறு பெண்களும் குழந்தைகளும். இந்தக் காட்சி மௌனமாக நின்று அனுபவிக்கவேண்டிய ஒன்றுதான். நல்ல ஓவியர்கள் நாள் கணக்கில் தங்கி வண்ணங்கள் சேர்த்துக்குழைத்து எடுக்கவேண்டிய அருமையான காட்சிப் பகுதிகள்தாம்.

ஆனாலும், சித்தத்தைச் சிவன்பால் வைத்து அந்நெறியிலே நின்று திருமுறைகளிலும், சாத்திரக் கருத்துக்களிலும் மனம் திளைத்து நிற்கும் மகாசந்நிதானம் போன்ற சிவஞான முனிவர்களுக்குத் திருமுறைப் பகுதிகளிலே காணப்படும் காட்சிகளின் விளைவுகள் உண்டாதல் இயற்கைதானே. அந்த அனுபவத்தை நமக்கு எடுத்து உரைப்பது ஒரு சிறந்த உபதேசமாகுமல்லவா?

தினைவளம் காத்து :

மேலே சொன்ன காட்சிகளைக்கண்ட மகாசந்நிதானத்தின் திருவுளத்தில் திருக்கோவையார் நினைவுகள் முன் நின்றன. ‘ தினைவளம் காத்து ’ என்னும் பாடற் பகுதியை ஒப்பிட்டு நோக்கியது அத்திருவுளம். அகத்துறைப் பொருளாக “ குறியிடத்துக்கொண்டு சேறல் ” என்னும் பகுதியைச் சேர்ந்தது.

“தலைமகள் தன் தோழிகளுடன் பல விளையாட்டுக்களில் ஈடுபட்டு மனமகிழ்கிறாள். உயிர்த்தோழி அங்கு வருகிறாள். ‘தன்னிடம் தலைவியை இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் கொண்டு சேர்க்கவேண்டும் என்று தலைமகன் சொல்லிச் சென்ற தன் கடமையை நிறைவேற்றவேண்டுமே ;

அது மற்றவர்க்குத் தெரியாது தலைவிக்கு மட்டுமே தெரியவேண்டிய செய்தியாயிற்றே ; இச்செய்தி வெளியானால், ஊரார் ஏச்சுக்கு இடம் தருமே ; ஆனாலும், தலைவியும் தலைவனும் கொண்ட காதல் உயிர்க்காதல் ஆயிற்றே ; அதனைக் காத்து கூடும்படி செய்தல் தன் தலையாய கடன் ஆயிற்றே ; சிறிதுதவறினும் அதனால் தலைவனுக்கோ தலைவிக்கோ அல்லது இருவருக்குமோ தீராத் துன்பம் வந்துறுமே ; இதற்கு இப்பொழுது என்ன செய்வது' என்று சிந்திக்கிறாள். அவள் நல்ல அறிவுடையவள். நினைத்ததைச் செய்துமுடிக்கும் ஆற்றல் படைத்தவள். சொல் வன்மையும் உடையவள். யாருடைய மனமும் நோகாமல் எல்லோர் மனமும் மகிழும்படியாகத் தன் குறிக்கோள் கெடாத நிலையில் செயல் செய்யும் திறனும் உடையவள்.

சிந்தை களிப்பூட்டும் செய்தி :

ஆகவே, மற்றைத் தோழிகளை நோக்கி, 'தினைப்புனம் காவல் இல்லாது காட்டுப் பறவைகளும் பிற விலங்கினங்களும் வந்து அழிக்கின்றனவே; அவற்றைக் காவல் புரிய வேண்டாமா ; அங்கே சிலர் செல்லுங்கள். சிறு பெண்களாகிய நீங்கள் மலைகளில் எதிரொலி எழும்படியாக உங்கள் சிலம்புகள் ஒலிக்க, மனமகிழ் சிற்றில் இழைப்பீர்களாக. (இன்னும் சிலரை நோக்கி) நீங்கள் ! அதோ அருகிலே அழகாக அமைந்திருக்கும் சுனைகளிலே பாய்ந்து விளையாட வல்லீர் அல்லவோ ? அந்தப் பெருவிருப்பை இப்பொழுதே நிறைவுபெறச்செய்யலாமே. இப்பகுதியிலுள்ள நீவிர் ! மலர் அழகுகண்டு அதனை எடுத்துத்தொடுத்து பூணும் ஆசையுடையவர்களாயிற்றே, அதோ அந்தப் பூஞ்சோலையில் அழகும் நறுமணமும் மிகுந்த மலர்கள் பல நம்மைக் கூவி அழைக்கின்றனவே; அவற்றைக்கண்டு மகிழுங்கள்'.

இப்படியே அவர்களை ஒவ்வொரு பகுதியினராகப் பிரித்து அவரவர்க்கும் சிந்தைகளிப்பூட்டும் செய்தி சொல்லி அவரவரையும் செல்லவிடுத்தாள்.

தோகை மயிலைக் கண்டேன் :

உயிர்த்தோழியும் தலைமகளுமே அங்கே தங்கினர். தலைமகளுக்கு எப்பொழுதும் மயிலிடம் ஒரு தனி ஆசையுண்டு. முன்னுள் தான் தலைவனைக்கூடிக் கலந்துவந்ததை 'ஒரு அழகிய தோகைமயிலைக் கண்டேன்' என்றும் சொல்லியிருந் தாள். அதன் நினைவு தலைமகளுக்கு உண்டானல், தலைமகன் தனக்காகக் காத்திருக்கும் செய்தி அவளுக்கு நினைவு வரும் என்பதையும் அறிவாள் அந்த உயர்த்தோழி. ''சிறிது தொலைவில் நாம் இருவரும் சென்று மயிலாடல் காண்போம் ; வருவாயாக'' என்று அவளையும் அழைத்துச் சென்று, தலைமகன் குறித்த இடத்தில் சேர்த்தாள். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டனர் ; கூடினர் ; இன்ப வெள்ளத்தமுந்தினர்.

தலைவியின் உறைவிடத்தின், சிறப்பு ஆசிரியர்கூற்ருக இங்கே காண்டல் மகிழ்ச்சிதரும்.

'' சுனைவளம் பாய்ந்து துணைமலர்கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன் வெற்பில்உறைகின்ற
புனைவளர் கொம்பரன்ருய் !''

என்பதே அது.

துறை விளக்கம் :

அகத்துறை விளக்கம், அதனுள் பொதிந்துள்ள பேரின்பப் பொருளின் ஆழத்தை நமக்கு எடுத்து

உணர்த்துவதாக அமைந்திருக்கிறது. அது அருமையால் சிவத்தை உயிரிடத்து ஆக்கல் என்பதாகும். அருமை யான சிவபோக உணர்வை உயிர்களிடத்தில், உண்டாக்கு தல் என்பது அதனுடைய விளக்கமாகும். பக்குவப் பட்ட ஆன்மாக்களிடத்தில் சிவன் அருளைப்பதிவித்தல் என்று சொல்லவேண்டும்.

இங்கே தலைவன் உயிராகவும், தலைவி இறைவனாகவும், உயிர்த்தோழி அருட்சக்தியாகவும் (சிவசக்தி) கொள்ளப் படுகிறது. பக்குவப்பட்ட ஆன்மாக்களிடத்தில் சிவ போகத்தை விளைவிக்கிறது அருட்சக்தி. அருட்சக்திதொழில் பட்டு ஆன்மாவைச் சிவனிடத்தில் சேர்த்துவைக்கிறது. இந்த உட்பொருளைக் கொண்டு இந்தப் பாடற் பகுதி அமைக்கப்பட்டிருக்கிறது. இன்பவடிவினனாகிய ஆண்ட வனிடத்தில் உயிரின் பக்குவம் தெரிவித்து ஆண்டவ னுடைய அருள் சித்திக்குபடி கூட்டி வைப்பது அருட் சக்தியின் செயலாகும். இதனைத் திருவைந்தெழுத்திலே வைத்து விளக்கலாம்.

திருவைந்தெழுத்து :

"* திருவைந்தெழுத்திலுள்ள யகாரம் என்னும் உயிர் மாயை கன்மம் திரோதான சக்தி என்னும் மூன்றையும் குறிக்கும் நகாரத்தைவிட்டு, மூலமலமாகிய (ஆணவம்)

---

* "மாயநட் போரையும் மாயாமலமேன்னும் மாதரையும்
வீய விட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் தந்தையைக் கூடிப்பின் தாயைமறந்து
ஏயுமதே நிட்டை யென்றான் எழிற் கச்சியேகம்பனே "

— பட்டினத்தார்.

மகாரந்தை தன்னைவிட்டு விலக்கி, வகாரமாகிய சிவ சக்தியைக் (தாய்) கூடி அதுவாகி (ஞானமாகி) நின்று, சிகாரம் என்னும் தந்தையின் இருப்பிடம் கண்டு, முன்னே (கட்டுநிலையில்) தான் மலத்தோடு அழுந்தி இருந்த நிலையில் திரோதானமாகி இருந்து மாயையில் அழுத்தியும் சிவத்தை மறைத்தும், பிறகு பக்குவம் வந்த காலத்தில் மலத்தினை மறைத்துச் சிவத்தைக் காட்டியும் அருள் வழங்கிய தாயாகிய வகாரத்தோடு கூடிநின்ற நிலையையும் விட்டு, சிவத்தோடு நீக்கமற நிறைந்துநின்று, பேரானந்தப் பெருவாழ்வில் நிலைத்துநிற்பாயாக '' என்பதே அந்த உபதேசம் (ந - திரோதானமாகி முன்னே சிவத்தை மறைத்தும் மலத்தில் அழுத்தியும், பின்னே பக்குவம் வந்த காலத்தில் மலத்தை மறைத்து சிவத்தைக் காட்டியும் திரோதானம் செய்து சிவசத்தியாகி அருள்வழங்குகிறது.)

செல்லக் குழந்தை :

இதை ஒரு கதையால் விளக்கிவைக்கலாம். பெரும் செல்வர் ஒருவருடைய அருமை மகன். ஒரே மகன். தாய்க்குச் செல்லக் குழந்தை. அது பொறுப்பு உணராத நிலையில் தன் தகுதி புரியாமல் கூடா நட்புக் கொண்டு ஒழுகிவருகிறது. தாய் அப்பொழுது அதனைக் கண்டு பிள்ளை எப்படியும் திருந்திவிடுவான் என்ற நினைப்பில் செல்லங்கொடுத்து வளர்க்கிருள். தந்தையின் தகுதியையோ குடும்ப நிலையையோ காட்டாதுஅவன் போன வழியில் விட்டு வளர்த்துவருகிருள். பிள்ளை அறிவுள்ள பிள்ளைதான். ஆகவே, ஒருவயது எல்லைவரை அந்தக் கூடா நட்புக் கொண்டிருந்தாலும், தன்னிலையில் ஏதோ ஒரு குறை தன் தகுதியை பாதிக்கக்கூடியதாக இருக் கிறது என்ற நினைவு அடிக்கடி உள் மனதில் அதற்கு

வருவதுண்டு. ஆனால் வெளிப் பகட்டாக உள்ள கூடா நட்பின் பிணிப்பு அதனை வெகுவாகப்பற்றி நின்ற நிலையில், உறுதிகொண்டு அதனை உதறிவிட்டுத் தன் தந்தையின் நிலையைக் கைக்கொள்ள வழி தெரியாது மயங்குகிறது. அந்த மயக்கம் தன் பிள்ளையின் தெளிவுக்கு - தன் பிள்ளை மேனிலையடைவற்கு உதவும் என்று கண்ட அந்தத்தாய் தானே முன்னின்று, இந்த உலகியல் கூடா நட்புக்களைச் சிறிது சிறிதாக விலக்கி, அதனுடைய தந்தையின் தகுதிகளை எடுத்துச் சொல்லி உயர்நிலை அடைய உதவுகிறாள்.

முன்னே கூடா நட்பினால் விளையும் சிற்றின்ப அனுபவங்கள் அதுவதுவும் தலை சிறந்தது. அதைவிட மேலான தகுதி தனக்குக் கிடைப்பது அரிது என்று நினைத்து மயங்கியது அந்தக் குழந்தையின் மனம். ஆனால் தன் தந்தையின் தகுதி, தன் குடும்பத்தின் உயர்நிலை இரண்டும் அதற்கு ஓரளவு தெரிய வந்ததும் தன் இழிநிலை கண்டு தானே வருந்தித் தந்தையின் உயர்நிலையை எட்டிப் பிடிக்க அவாவுகிறது அதன் அறிவு. அங்கே உதவியாக வந்து நிற்பதற்கு அதனுடைய அருமைத் தாயின் சேவை தேவைப்படுகிறது. அவளும் விரும்பி நல்வழிப்படுத்துகிறாள். பிள்ளை தன் தகுதிக்கேற்ப, தந்தையின் நிலைக்கு ஒப்ப மேனிலையடைந்து அவரோடு இணங்கி இருந்து அவருடைய முழு அன்பிற்கும் உரியவன் ஆகிறான். தந்தையும் மகனும் ஒன்றுகிறார்கள். சீர்பட்டான் அவன் என்று மகிழ்கிறது அந்தத் தாயுள்ளம்.

திரோதான சக்தி :

இதைச் சாஸ்திர வழியில் வைத்து எண்ணினால் கூடா ஒழுக்கமாக பிள்ளைதிரியும் நிலை உயிர் தன் தகுதி

புரியாது மாயாமல சம்பந்தத்தோடு இழிநிலை அடைந்த தாகும். அங்கே பதியாகிய சிவனை மறைத்து நின்றது அந்த செல்லத்தாய் (திரோதான சக்தி). அதன் எதிர் நோக்கு பிள்ளையை அதன் வழியிலே விட்டுத் திருத்துவது என் பதுதான். அதையே தன் குறிக்கோளாகக் கொண்டவள் அத்தாய். அவளே பிள்ளை திருந்தியதும் மாயாமல கர்மங் களை மறைத்து ஆண்டவனை அடைய, அவனுடைய (இறை வனுடைய) உயர் குணங்களை எடுத்துக்காட்டி உதவுகிறாள். தந்தைக்குச் சீற்றம் ஏற்படாது தடுத்துக் காத்தது முன்னே. வளர்ச்சி அடைந்த பிள்ளைக்கு மாயமலங்களை மறைத்து நின்றது பின்னே. உயர்வழிக்கும் வழிகாட்டியது அந்தத்தாய். அதைத்தான் திரோதானசக்தி என்று சொல்லுகிறோம்.

நீறணிந்த நிறைகோலம் :

இப்பொழுது நினைவில் வந்த கோவைப்பாட்டில் பெரு மானுடைய புகழும் அவனை அடையும் வழியும் பயனும் சொல்லி இருக்கிறது. அன்பு வெள்ளம் ஊற்றுப் பெருக் கெடுக்க, அவன் திருநாம ஐந்தெழுத்தை ஓதி ஓதி இன்பம் பெருக்கி வரும் மெய்யடியார், அதிகாலையில் நீராடித் தூயராகித் திருநீறு அணிந்து, மலர் கொய்து அவைகளைத் திருப்பாதப் போதுக்காக்கி வழிபட்டு இன்பம் பெருக்கி நிற்பர். அந்த அன்புஅருளும் பெருமானும் அடியார் களுடைய மும்மல வாதனை நீங்கி அவர்கள் வினை மாய்ந் தொழிய நீறு அணியும் தன்மையன்.* இங்கே அடியார்

* "வெந்த வெண்பொடி பூசும் விகிர்தனார் ... ...
... ... சிந்தையால்
நினைவார் வினை தேயுமே." —திருநாவுக்கரசர்

களும் தம்வினை எரிந்து சாம்பல் ஆகும்படி நீறணிகிறார்கள். ஒரு சிறந்த தாய் தன் மகவுக்கு உற்ற நோய் நீங்க தான் மருந்துண்டு பிள்ளைக்கு இனிய தன் முலைப் பாலைக் கொடுத்து அதன் வழியே அதன் நோய் நீக்கிக் காத்து வருதல் போல, ஆன்மாக்கள் மாட்டுப் பெருகி நிறைந்து நிற்கும் வினைகள் எரிந்து சாம்பலாகும்வண்ணம் திருவருள் பாலித்து நீறணிந்துநிறைகோலம் காட்டுகிறான் பெருமான். மும்மலச் சேர்க்கையால் கட்டுண்டு துன்புறும் உயிர் களுக்கு உய்யும் நெறியைக் காட்டுகிறான். இதனை உட்பொருளாகக் கொண்டு எழுந்த வாக்கு இக்கோவைச் செய்யுள். இவ்வளவு உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கி வெளிப்போக்கில் ஒரு தலைவன் தலைவி நாடகமாக ஆக்கி நமக்குத் தந்திருக்கிறார் மணிவாசகப்பெருமான்.

வீணே பொழுது கழிப்பதை விட்டு ஒருசிறிது நேர மாவது இதுபோன்ற நற்சிந்தனையில் நம்முடைய மனத்தை ஈடுபடுத்துவதால் தூய்மை பெற்று தூநெறியடைய உதவுகின்றனவல்லவா நம்முன்னே காட்சியளிக்கும் இந்த இயற்கை விநோதங்கள் ? இவை நல்ல சிந்தனையில் நம்மை ஈடுபடுத்தும் வலிமை உடையதாக இருப்பதும் இந்த யாத் திரையின் பயன்களில் ஒன்று என்று கொள்ளலாம்'' என்று மகாசந்நிதானத்தில் திருவுளங் கொண்டார்கள்.

ஊக்கம் தந்தார் :

இந்த நற்சிந்தனை பாதிவழி செல்லும் வரையில் வழிச் செலவின் துன்பம் தெரியாது காத்தது. மேலே பாதை யமைப்பில் பலர் ஈடுபட்டு உழைத்து வருவதைக் கண் டோம். அதனை மேற்பார்வையிடும் அதிகாரி, சீக்கியர்

மகாசந்நிதானத்தைக் கண்டு வணங்கினுர். மாலை மணி 4-30. வழியிலே சிலர் அமரநாதம் சென்று திரும்பியவர்களாகவும், வாவ்ஜன், சந்தன்வாரி பகுதிகளுக்குச் சென்று காட்சிகண்டு களித்துத் திரும்பியவர்களாகவும் சிறுசிறு கூட்டங்கள் எங்களைத் தாண்டிச்சென்றன. அவர்கள் எங்களை நிறுத்தி "அமரநாதம் செல்லுகிறீர்களா? ஆண்டவன் அருள் உங்கள் முயற்சி வெற்றியடைய உதவி செய்யும்" என்று ஊக்கம் தந்து மேலே சென்றனர்.

சீக்கிய அதிகாரி :

முன்னே சொன்ன சீக்கிய அதிகாரி நாங்கள் ஆடை உடுத்தியிருக்கும் முறையைக்கண்டு தென்னிந்தியர் என்பதைத் தெரிந்து ஒருசில வார்த்தைகள் எங்களுக்குச் சொன்னுர். இருட்டும் நேரத்திற்கு முன்னதாகவே சந்தன்வாரியை அடைந்துவிடுதல் வேண்டும் என்றும், இருட்டிய பிறகு எக்காரணங் கொண்டும் இமயப் பகுதியில் வெளிகளில் தங்குவது நல்லதல்லவென்றும் சொன்னுர். தான் சென்னைவரை வந்திருப்பதாகவும், மகாபலிபுரம் சிற்பங்களைக்கண்டு மகிழ்ந்திருப்பதாகவும், ஆந்திரநாட்டில் கல்வி பயின்றிருப்பதாகவும், தென்னிந்திய அறிவு முதிர்ச்சியைத் தான் பாராட்டக் கடமைபட்டிருப்பதாகவும், புகழுரைகளும் சொன்னுர். குதிரை இவர்ந்துவந்த இவர் எங்களுக்காகச் சிறிது தொலைவு கீழிறங்கி நடந்தே வந்தார். அந்தச் சாலை அமைப்பு வேலைகளை மேற்பார்வையிடும் பொறுப்புத் தனக்கு இருப்பதால் விரைவாக மற்றப்பகுதிகளையும் சென்றுபார்த்து பஹல்காமுக்கு இருட்டும் முன்னே திரும்பிவிடவேண்டுமாகையால் முன்னே செல்லுவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்ருர்.

சந்தன்வாரி :

நாங்கள் எவ்வளவு விரைந்துசேன்றும், சந்தன் வாரியை அடைவதற்குள் நன்ருக இருட்டிவிட்டது. அங்குள்ள அரசாங்க மரக்குடிசையில் சென்று தங்கினேம். நல்ல அயர்வு. விரைவிலே உணவு முடித்து இரவுப் பிரார்த்தனையோடு தூங்கிரேம்.

சமுத்திர மட்டத்திலிருந்து சந்தன்வாரி 9500 அடி உயரம். இதன் அருகில் பனிப்பாலங்களும்,போழுதுபோக்கு இடங்கள் பலவும் இருக்கின்றன சந்தன மரக்காடு என்பதைத் குறிப்பதே சந்தன்வாரி என்பது. இங்கே இரண்டோரு கடைகள் உண்டு. பஹல்காமிலிருந்து 8 மைல். வரும்வழி ஓரளவு நல்ல திருத்தப்பட்ட பாதை அமைப்பாக இருக்கிறது. அநேகமாக இன்னும் ஒரு ஆண்டுக்குள் பஹல்காமிலிருந்து சந்தன்வாரிவரை உந்தூர்திகள் வரக் கூடியதாக அமைந்துவிடும்.

செல்லும் வழியில் :

பஹல்காமிலிருந்து நான்கு ஐந்துமைல் வரை ஒரு சில சிற்றூர்களும், சோளம் கேழ்வரகு நேல் பயிரான புன்சேய் நிலங்களும் மேலே காட்டுப்பகுதியும். அங்கங்கும் பல பல இடையர்கள் சடை யாடு (கம்பளி ஆடு), குதிரைகள் பல ஆயிரக்கணக்கில் மலைகளில் விட்டு மேய்த்து வருகிருர்கள். ஆற்றுப்படுகைகளில் ஒன்றிரண்டு கூடாரங்கள் அமைத்துக்கோண்டு தம் குடும்பத்துடன் தங்கியிருக்கிருர்கள். மந்தைக்காவலுக்கு ஒரு சில சடைநாய்கள் வளர்க்கப்படுகின்றன.

வழி ஒரு சிறிது ஏற்றமும் இறக்கமுமாக இருந்தாலும் துன்பம் தருவதாக இல்லை. சுற்றிலும் நல்ல காட்சி யமைப்புக்கள், சோர்வு தெரியாமல் செல்வதற்கு உதவி செய்கின்றன. இருந்தாலும் வழி ஏழு எட்டு மைல் ஏற்றமும் இறக்கமுமாக உள்ள பாதையில் நடந்து பழக்க மில்லாமையால் மனதில் உற்சாகமிருந்தாலும், உடம்பிலே சோர்வு காண்கிறது. பஹல்காமிலிருந்து சந்தன்வாரி வரு வதற்குள் 2000 அடி உயரம் ஏறிவிடுகிறோம். ஆனாலும் 8 மைல் நடந்துவருவதில் ஏற்றம் நமக்குத் தெரியவில்லை.

மலைப்பகுதி நெடுகிலும் சிறுசிறு பூக்கள் பலவித உரு விலும் பல நிறங்களிலும் காட்சி அளிக்கின்றன. கைத் திறமையுள்ள தோட்டக்காரன் பராமரித்து வரும் நல்ல தொரு பூஞ்சோலையோ என்ற எண்ணம் எல்லோருடைய மனத்திலும் உண்டாகும் அங்கே. இயற்கைக் காட்சிகளில் இந்தப் பூஞ்சோலை அமைப்பும் கலந்துவருவது மனதிற்கு மகிழ்வூட்டுவதாகும்.

வழிகாட்டி வேலை :

பெரும்பாலும் பஹல்காம் வரும் யாத்ரிகர்கள் சந்தன் வாரிவரை பொழுது போக்காக வந்து சிற்றுண்டி அருந்தி காட்டுப் பகுதிகளிலும் பனிப் பாலங்களின் அருகிலும் தங்கிப் பொழுதுபோக்கித் திரும்புவது உண்டு. இதற்கு மேலே வாவ்ஜன் (வாயு ஜனனம்) 10 மைல்.

மறுநாள் காலை 6 மணிக்கு வாவ்ஜனுக்குப் புறப் பட்டோம். இதற்குக் காலை 4 மணியிலிருந்தே குதிரை ஆட்களைத் தேடுவதும் அவர்களைக்கொண்டு குதிரைகளை ஓட்டிவரச்செய்து சேகரிப்பதுமாக வேலை நடந்தது. இந்த வேலை உடன்வந்த வழிகாட்டிக்குச் சரியாக இருந்தது.



நிஷாத்பா - (NISHAT BAGH)

அவந்திபுரம் :



சிதைந்த திருக்கோவில்

முதல்நாள் இரவு அங்கு வந்ததும் குதிரைக்காரர்கள் அவற்றின் மீதிருந்த சுமைகள் சேணங்கள் இவற்றை இறக்கிக்கொண்டு அவிழ்த்து விட்டுவிடுகிருர்கள். குதிரை களும் பக்கத்திலுள்ள காடுகளில் இரவு மேய்ந்து இளைப்பாறிக் கொள்கின்றன.

பெரும்பாலும் அதிகாலையில் அந்த நாட்டு மக்கள் எழுந்து பழக்கமில்லாதவர்களாகவே, அந்த நேரத்தில் அவர்களை எழுப்புவது மிகத் துன்பமாக இருக்கிறது. வழிகாட்டியாக வருவோர் நல்ல அறிவுடையவர்களா கவும், சமயோசிதமாக நடக்கத் தெரிந்தவர்களாகவும், எஜமானரது திருப்தி ஒன்றையேகுறிக்கோளாக சுறுசுறுப்பும் இனிய பேச்சும் நல்ல பழக்கவழக்கங்களும் உள்ள வர்களாக இருப்பதால், அவர்கள் எந்தநேரத்திலும் எஜமானருக்கு வேண்டிய எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க ஆயத்தமாகிருர்கள். அவனில்லாது நாமே நேரடி யாகக் குதிரைக்காரர்களிடம் தொடர்பு கொண்டால் அது கலகமாக முடிந்துவிடும்.

போஷ்! போஷ்!!

நல்லவர்களே யாளுலும் குதிரைக்காரர்கள் சோம்பேறி களாகவும், நேரம் கழித்தமட்டிலும் நல்லது என்ற எண்ணம் உடையவர்களாகவும் இருக்கிருர்கள். மேலும் வசதி கண்ட இடத்தில் முதல் வேலை வயிற்றை நிரப்புவது என்பது. அது நிறைவுபெருத நிலையில் எவ்வளவு கோபமாக நாம் பேசினுலும் அவர்கள் அசைந்து கொடுப்ப தாக இல்லை. ஆனுல் அவர்கள் உணவு தயாரிப்பில் ஒரு ஒற்றுமைஇருக்கிறது. அவரவரும் அவரவருக்கு வேண்டிய உணவுப் பண்டங்களைத் தனித்தனியே தயார்செய்வது என் பதில்லாமல், இரண்டொருவர் அந்தவேலையில் ஈடுபடுவதும்

மற்றவர்கள் சென்று குதிரைகளை ஆயத்தம் செய்துகொண்டு வந்து நிறுத்துவதுமாக வேலையைப் பிரித்துக்கொள்ளுகிறார்கள். காட்டுப்பகுதியில் இவர்கள் சென்றதும் சீழ்க்கை அடித்து 'போஷ்' 'போஷ்' (Pozsh) என்னும் சப்தமிட்டு குதிரைகளை ஒட்டி வருகிறார்கள். இந்த இரண்டோரு ஒலிகள் குதிரைகளை ஒட்டுவதற்குப் பேரிதும் உதவி செய்கின்றன. குதிரைகளைச் சேகரம் செய்து வைத்து விட்டுத் தேயிலைப்பானமும் ரோட்டியும் கலந்து உண்டு, பிறகு முட்டை முடிச்சுக்களைச் சுமையாகக் கட்டி போதி சுமக்கும் குதிரைகளில் ஏற்றியும், ஏறு குதிரைகளுக்குச் சேணமிட்டும் வேலை முடிப்பர்.

ஞானபூமி :

இதற்குக் குறைந்தது 2 அல்லது 2½ மணி நேரமாவது செல்லும். அவ்விதமே அன்று காலை 4 மணிக்குத் தோடங்கிய தயாரிப்புவேலை 6-30 மணிவரை ஆகிவிட்டது. நாங்களும் ஒரு சிறிது தேநீர்ப் பானம் அருந்தி யாத்திரையைத் தோடர்ந்தோம். அன்று அமாவாசை நாள். நாரதர் ஒரு சிறிதும் தேயிலைப் பானமோ பிற எதுவுமோ எடுத்துக் கோள்ளாமல் யாத்திரை தோடங்கினார். 'இதற்கு மேலே உள்ள பகுதிதான் மிகவும் கடும் ஏற்றமும் குளிரும் மிகுந்த பகுதி. ஆகவே வயிற்றில் ஒரு சிறிது ஆகாரம் இருத்தல்வேண்டும். இல்லாவிட்டால் களைப்பும் அதிகமாகும். குடல் முறுகி வயிற்றளைச்சல், வாய் வேக்காளம், வயிற்றுப் புரட்டல் முதலிய துன்பங்களை உண்டாக்கும். இது ஞானபூமி. இங்கே கர்மாக்கள் செய்வதில் அதிகச் சிறப்பில்லை. இருந்தாலும் மனப் பக்குவம் திருந்தாத நிலையில் இடத்தின் அவசியம் குறித்து ஒரு சிறிது தேநீர்ப்பானமாவது அருந்தாமல் சென்றால் துன்பம்

அதிகமாகும்' என்று வழிகாட்டி முதலிய பலரும் சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதன் விளைவு அன்று தொடங்கிப் பல நாட்கள் அவரை வாட்டுவதாயிற்று.

பிசிக்காட்டி :

இவ்விதமாக அன்று அதிகாலையில் யாத்திரை தொடங்கினோம். சிறிது தொலைவு கரடுமுரடான மலைப்பாதையில் சென்றோம். செல்லும் வழியில் பெரிய காட்டுப் பகுதி. பக்கத்தில் லிடார் ஆறு. பிறகு ஒரு சிறு சமவெளி. மேலே சென்றதும் வலது கைப்புறத்திலே லிடார் ஆறும், காடும், தொலைவிலே உச்சியில் பனிபடர் சிகரங்களும். கிழக்கே தொலைவில் கயிலாச கிரியின் உருவத்தோற்றங் கொண்ட ஒரு சிறு கொடுமுடியும் இடது புறத்திலே உத்தேசம் 2500 அடி. உயரமுள்ள செங்குத்தான செம்மலையும் சூரியனுடைய ஒளி எல்லாச் சிகரங்களிலும் பட்டுக் காட்சியின் எழிலை அதிகப்படுத்திக் காட்டியது. நேரம் உத்தேசம் மணி 7-30. இதற்கு மேலே ஒரு சிறிது சென்றதும் ஒரு கடும் ஏற்றம். இந்தப் பகுதி பிசிக்காட்டி. அதாவது பிசாசுகள் தங்குமிடம் என்று பெயர்.

குட்டிக் கயிலாயம் :

ஒரு புறம் செம்மேனி அம்மான் நிமிர்ந்து நின்ற கோலமும், தொலைவிலே கயிலாயக் காட்சியும் மகா சந்நிதானத்தின் மனதில் கனிவை உண்டாக்கியது. 'ஊழிதோர் ஊழிமுற்றும் உயர் பொன்நொடித்தான் மலையைச் சூழ் இசையின் கரும்பின் சுவை நாவல ஊரன் சொன்ன ஏழிசை இன் தமிழால் இசைந்து ஏத்திய பத்தும் இவையும் ஆழி கடல்அரையா! அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே' என்ற ஆரூடைய நம்பிகளின் திருவாக்கு

திருவுளத்தில் தோன்றியது. அதற்குச் செவிசாய்ப்பது போல மேலே ஒரு ஆகாயவிமானம் இரைச்சலிட்டுச் சென்றது. இந்தக் காட்சி சுந்தரமூர்த்தி சுவாமிகள் கையிலைக்குச் சென்ற காட்சியை நினைவூட்டியது. எதிரே தோன்றிய குட்டிக் கயிலாயம், இமயம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தை கயிலாய யாத்திரைக்கு மீண்டும் அழைப்ப தாகத் திருவுளக் குறிப்பும் தோன்றியது.

செங்குத்தான பாதை :


இன்று யாத்திரை தொடங்கியபொழுது ஸ்ரீநிவாசராவ், பணியாள் இசச்சி, அடியேன் ஆகிய மூவரும் பின்னே வாவ்ஜன் வரைக் கால்நடையாகச் செல்வது என்ற திட்டத் தில் சென்றோம். மற்றவர்கள் முன்னே போயினர். பிசிக்காட்டி வரையிலும் முன்னும் பின்னுமாகச் சென்று கொண்டிருந்த நாங்கள் அப்பகுதி வந்ததும் இரண்டாகப் பிரிந்து வாகன வசதியுள்ளவர்கள் முன்னேயும், மற்றையோர் பின்னேயுமாகத் தங்கிச் சென்றோம். பின்னே தங்கியவர்களில் இசக்கி உடல் பெருத்தவர். ஸ்ரீநிவாசராவ் சென்னையில் பழகி ஒரு சிறிது தொலைவு செல்லுவதானாலும் சொந்த உந்தூர்தியிலே சென்று கால் நடையாக அதிகத் தொலைவு சென்றறியாதவர். அடியேனைப்பற்றி எல்லோரும் அறிந்த ஒன்றுதான். முன்னே சென்றவர்கள் வெகு தொலைவு சென்றிருக்க வேண்டும். பிசிக்காட்டி ஏற்றம் சுமார் மூன்று மைல்கள் தொலைவு உள்ளதேயானாலும் 3000 அடிகளுக்கு மேலாகச் செங்குத்தான பாதையில் வளைந்து வளைந்து ஏறவேண்டிய தாக உள்ள பகுதி. பின்தங்கிய பிரிவினரில் அடியேன் மட்டிலும் காட்டு வழியாகக் குறுக்கே சென்ற பாதையில்

அமரநாத வழியில் :



நீல மோட்டலர்ந்தவை

அமரநாத வழியில் :



கணவாய் வழி (பிசிகாட்டி)

சேடிகளையும் கோடிகளையும் பற்றி ஏறிஏறி அங்கங்கும் தங்கித் தங்கிச் சற்று இளைப்பாறி மேலே சேன்றேன்.

களைத்துப்போயினர் :

மற்ற இருவரும் குதிரை சேன்ற வழியே வளைந்து வளைந்து கரடுமுரடான குண்டுக் கற்களைத் தாண்டித் தாண்டி ஏறி வந்தனர். அவர்கள் உடல்நிலை மேலே ஏற முடியாதபடி களைப்பைத் தந்தது. வழியிலே சேடிநிழல் கண்ட இடத்தில் சுருண்டு படுத்து விடுவர். சிறிது நேரம் அந்நிலையிலிருந்து ஓரளவு அயர்வு போக்கிக் கோண்டு எழுந்து மேலே நடப்பர். இவ்விதம் கிட்டத் தட்ட ஒரு மணி நேரம் அவர்கள் நடந்தும் பாதி அளவு கூட ஏறமுடியாது களைத்துப் போயினர்.

வந்தேதீர்வோம் :

ஓரளவு அவர்களோடு முன்னும் பின்னுமாகத் தோடர்ந்து சேன்ற அடியேனுக்கு, அவர்களும் மேலே யாத்திரையைத் தோடர்ந்து சேய்யமுடியுமா என்றசந்தேகம் ஏற்பட்டது. சோர்வுற்ற அவர்கள் நடுநடுவே படுப்பதைக் காணக்காண இனி அவர்கள் இந்த யாத்திரையில் மேலே வருதல் பிறருக்குத் துன்பம் தரத்தக்கதாக இருக்குமோ, அவர்கள் பிடிவாதமாக வருவதாக இருந்தாலும், எப்படியாவது சோல்லி அவர்களை நிறுத்திவிடுதல் இருபாலாருக்கும் நன்மையாகுமே என்றுநினைத்தேன். அவர்களை அணுகி என் எண்ணங்களைச்சோல்லி “மேலே வந்து துன்பப்படுதலைக் காட்டிலும் வந்தவரை மனநிறைவுபேற்று கீழிறங்கி சந்தன்வாரியில் அன்று தங்கி பஹல்காமில் சேன்று நாங்கள் வரும்வரை ஒய்வு எடுத்திருத்தல் நல்லதல்லவா”

என்று கேட்டேன். ஆனால் இருவரும் ''எப்பாடுபட்டேனும் அமரநாத தரிசனத்திற்கு வந்தே தீருவோம். எங்களுக்கு உபகாரமாக ஓர் இரு குதிரைகள் வரச் செய்தால் அதுவே போதும்'' என்று கேட்டுக்கொண்டார்கள்.

ஒரேமூச்சில் :

அப்பொழுது இருந்த நிலையில் அவர்களோடு தங்கிச் செல்வது நன்மை தருவதாக இல்லை. அதைவிட்டு வேகமாகச்சென்று முன்னே செல்லும் பகுதியினரை எட்டிப்பிடித்துச் செய்தி சொல்லி ஒரு குதிரையாவது அனுப்பிவைப்பதே பொருந்தும் என்று கண்டேன். இந்த நினைவின் வேகம் எனக்கு இருந்த அயர்வைப் போக்கி வேகமாகச் செல்லும் வலிமையைத் தந்தது. மேலே ஏறிச் செல்வது துன்பமாகவும் நடுவில் நில்லாது ஒரே முச்சில் ஏறுவதால் பெருமுச்சு ஏற்படுவதாகவும் இருந்தது. இருந்தாலும், அந்த இருவர் படும் துன்பம் என்னுடைய இந்தத் துன்பத்தை மாற்றி வேகமாக முன்னே சொன்னபடி குறுக்கு வழியில் செல்ல உந்தியது.

இருபக்கமும் யாருமில்லை :

ஒருவாறு பிசிக்காட்டி உச்சிப் பகுதியை அடைய எனக்கு 2 மணி நேரகாலத்திற்கு மேலாகிவிட்டது. அங்கே சிறு சமவெளிப்பகுதி இருக்கிறது. அவ்விடத்தில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் மற்றையோரும் தங்கி இருப்பார்களோ என்ற நினைப்புடன் வந்து பார்த்தேன். அவர்களும் மேலே வந்து தங்கி எங்களை வெகுநேரம் எதிர்பார்த்திருக்கிறார்கள். பிறகு பின்னே வருபவர்கள் வரட்டும், அதுவரை மெதுவாக மேலேபோய்க்கொண்டிருக்கலாம். பின்னே வருபவர்கள்

நம்மை எட்டிப் பிடித்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையோடு சேன்றுவிட்டார்கள். கண்ணுக்கு எட்டிய தொலைவில் இருபக்கமும் யாருமில்லை.

அச்சம் வாட்டியது :

கீழே வருபவர்களின் உருவம் தெரியவில்லை. அடர்ந்த சேடிகள் படர்ந்த காட்டுப்பகுதியாக இருக்கிறதே இவர்களைத் தனியே விட்டு மேலே செல்லலாமா. இமயப் பகுதியிலுள்ள விலங்கினங்கள் ஏதாவது வந்து அவர்களைத் துன்புறுத்தினால், அவர்கள் உள்ள நிலையில் உதவி யாருமில்லையே. அல்லாமல், இங்கே அவர்கள் வரவை எதிர்பார்த்து நின்றால் அவர்கள் வருவதற்கு எவ்வளவு நேரமாகுமோ ; அல்லது வரமுடியாது நடுவழியில் தங்கி விடுவார்களோ என்ற அச்சம் ஒருபுறம் என்னை வாட்டியது.

வேகமாகச் சென்றேன் :

சோர்வுதரத்தக்க இதுபோன்ற யாத்திரையில் உதவக் கூடியதாக எப்பொழுதும் நான் எடுத்துச் செல்லும் சில பண்டங்கள் (ஹார்லிக்ஸ், சிறிது சர்க்கரை, [பிளாஸ்க்கில்] தட்பவெட்ப குப்பியில் சுடுதண்ணீர்) இப்போது என்னிடம் இல்லை. மிகவும் கடுமையான ஏற்றங்களும் இறக்கங்களும் உயரம் மிக அதிகமாகவும் உள்ள பகுதிகளில் கால் நடையாகச் செல்வதில் இயற்கையாக நமக்குச் சோர்வு அதிகம் கொடுக்கும். அயர்வு போக்கிக்கொள்ளுவதற்கென ஒரு சுமையும் சுமந்து செல்லுதல் மேலும் துன்பத்தைக்கொடுக் கும். அதுவல்லாமலும் அவ்வழியில் வேண்டிய எல்லாப் பண்டங்களும் உடன் வரும் பொதிகளில் வைக்கப்பட்டிருப் பதால், அயர்வு தோன்றிய இடத்தில் குதிரைகளை நிறுத்தி

அவைகளிலிருந்து வேண்டியதை எடுத்துக்கொள்ளலாம், தனித்து அவரவரும் எடுத்துச்செல்ல வேண்டியதில்லை என்ற எண்ணமும் இருந்தது. மேலே இவ்வளவு துன்பப் பட்டு வந்த எனக்கு அயர்வைப் போக்கிக்கொள்ள என்னிடமிருந்த சிறிது வெந்நீரைத் தவிர வேறு ஒன்றும் கிடைப்பதாய் இல்லை. ஒருசிறிது அதை அருந்திவிட்டு ஓட்டமும் நடையுமாக முன் பகுதியினர் சென்ற திக்கை நோக்கி வேகமாகச் சென்றேன்.

உடம்பில் சக்தியில்லை :

அங்கிருந்து அரை மைல் சென்றதும் பாதை மலையை ஒட்டி வளைந்துவளைந்து ஏற்றமும் இறக்கமுமாகச் செல்லு கிறது. மலைச் சரிவிலே லிடார் ஆறு ஓடிவருகிறது. சமவெளியின் மறுகோடியில் வந்ததும், இரண்டு மைல் தூரத்தில் முன்பகுதியினர் மிக மெதுவாகச் சென்று கொண்டிருப்பது தெரிய வந்தது. இவ்வளவு நேரம் எங்களைக் காணாததால் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டே அவர்களும் சென்றார்கள். தொலைவில் உள்ள அவர்களை நிறுத்துவதற்கு குரல் எழுப்பி கூப்பிடும் அள வுக்கு என் உடம்பில் சக்தியில்லை. ஆகையால் என் தலையில் கட்டியிருந்த வெள்ளைத் துண்டை அவிழ்த்து எடுத்து உயர வீசி வீசிக்காட்டினேன். மேலே சென் றேன். எங்கெல்லாம் அவர்கள் உருவம் என் கண்ணில் பட்டதோ அங்கெல்லாம் துண்டை மேலே எழுப்பி விசிறி னேன். அரை மணி நேரம் என் முழு வன்மையையும் பயன் படுத்தி வேகமாகச்செல்லுவதும், முன்னேசெல்லுவோர்க்கு சைகை எழுப்புவதுமாகச் சென்றுகொண்டிருந்தேன்.

ஓசை ஒலியில்லை :

அந்த மலைப்பகுதியில் எந்த ஒலியும் காதில் விழு வதற்கில்லை. எங்கோ மலையுச்சிகளில் இடையர்கள் மந்தைகள் மறித்திருப்பர். அவர்கள் நம்மைக் கண்டாலும் நமக்கு அவர்கள் தங்கி இருப்பது கண்ணில் படாது. அவர்கள் அப்பகுதியில் பழகிப் பழகி தொலை தூரத்தில் வருவது மனிதனா, காட்டு விலங்கினங்களில் துன்பம் தரத்தக்கவையா அல்லது அஞ்சி ஓடக்கூடியவைகளா என்பதைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு அயர்வு ஏற்படுவதில்லை. உற்சாகமாக எப்பொழுதும் இருந்து வருவார்கள். வாழ்க்கையிலும் எளிமை. தேவை மிகக் குறைவு. அவர்கள் மனம் தம்முடைய குதிரைகள் ஆடுகள் கொழுப்பதில் ஈடுபடும். அவை நன்றாக வளர வளர அவர்கள் மனமும் மகிழ்ச்சியடையும். இந்த நிலையில் உள்ளவர்கள் ஒரு சிலரைத் தவிர, வேறு எவரும் அங்கு இல்லை. நகரங்களிலும் நாட்டுப் புறங் களிலும் நாம் வசித்து வந்தாலும் அங்கே ஏதாவதொரு ஒலி நம்முடைய காதில் விழுந்துகொண்டேயிருக்கு மல்லவா. நாம் தனித்திருந்தாலும் தொலைவில் எங்கோ எழும்ஒலி அப்பகுதியில் நம்மோடு உயிர்வகை ஏதோ ஒன்று வாழ்கிறது என்ற செய்தி நம்முடைய காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கும். இப்படிப் பழகிய நாம், அங்கே தனித்து நிற்க நேர்ந்தால் எப்படி இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லவும் வேண்டுவதில்லை.

முன்னேறவில்லை :


இந்த நிலையில் தனித்து நான் சென்றாலும், பின்னே உள்ளவர் துன்பத்தைப் போக்கவேண்டும் என்ற நினைப்பில்

அந்த அச்சம் ஏற்படவில்லை. மேலும் முன்னே செல்லுபவர்கள் ஒரு சிறு தொலைவில் மெதுவாகச்சென்று கொண்டிருப்பதால் சிறிது நேரத்தில் அவர்களை நெருங்கி விடமுடியும் என்ற ஊக்கமும் உதவியாக அமைந்தது. இவ்விதமாக அரை மணி நேரம் சென்றதும், பெரிய வளைவு ஒன்றில் நான் வெள்ளை விசிறியதை மகாசந்நிதானத்தில் கண்டு அப்படியே அந்த இடத்திலே எல்லாவற்றையும் நிறுத்திக்கொண்டு காத்திருந்தார்கள். நானும் சிறிது நேரத்தில் அவர்களை யடைந்து பின்னே வருவோர் நிலை சொல்லி, உதவிக்குக் குதிரைகள் அனுப்பவேண்டியதையும் தெரிவித்துக்கொண்டேன். எங்களுடன் வந்தவற்றுள் நல்ல குதிரைகளாக இரண்டு பொறுக்கியெடுத்து அவற்றை உடனே ஓட்டிச் சென்று ஸ்ரீநிவாசராவையும், இசக்கி யையும் அழைத்து வரும்படி ஒரு குதிரைக்காரனை ஏவினார் கள். அந்த இருவரும் வந்து சேரும்வரை நாங்கள் ஒரு சிறிதும் முன்னேறாமல் அங்குத் தங்கிக் காத்திருந்தோம்.

தின்னப்பழங் கொண்டுதருவார் :

இந்த நிலையில் நான் களைப்புற்று வந்திருப்பதைக் கண்ட மகாசந்நிதானத்தில் தின்னப் பழங்கொடுத்து, ஹார்லிக்ஸ் போட்டுக் கொடுக்கச் செய்தார்கள். அயர்வு நீங்கிற்று. ஒரு மணி நேரத்திற்குள் ஸ்ரீநிவாசராவையும், இசக்கியையும் குதிரையில் ஏற்றிக்கொண்டு குதிரைக் காரன் ஓடோடியும் வந்து நின்றான். எனக்குக் களைப்பாறக் கொடுத்து அருளியதுபோல, இசக்கிக்கும் கொடுக்கச் செய்தார்கள். அந்த நிலையிலும் ஸ்ரீநிவாசராவ் தன் பிடிவாதத்தை தளர்த்திக்கொள்ளவில்லை. ஆனால் மிகவும் சோர்வுற்ற நிலையில் உதவி இல்லாது மேலே செல்ல முடியாது துன்பப்பட்டார். இருந்தாலும் பிரிந்தவர் கூடிய

அமரநாத வழியில் :



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் தனியாய் நடத்தல்

அமரநாத வழியில் :



கல்லும் மலையும்

அந்த ஆனந்தத்தை நாங்கள் அடைந்தோம். மேலே யாத்திரை தொடங்கப்பட்டது. அப்பொழுது உச்சிவேளை மணி 12. வந்ததொலைவு 6 அல்லது 7 மைல் இருக்கும்.

பனிப்பாலம் :

வரும் வழியில் இரண்டு இடங்களில் லிடார் ஆற்றின் மீது 6 அல்லது 7 அடி உயரமுள்ள பனிப்பாலங்கள் அமைந்திருந்தன. பழுப்பு நிறத்தில் உறுதியாக அமைந்திருந்தது அந்தப்பாலம். கீழே அப்புறத்திலிருந்து வந்த தண்ணீரும் இப்பகுதியிலிருந்து உருகிச் சேரும் தண்ணீருமாகச் சேர்ந்து வெளிப்பட்டு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. தோற்றம் மிக அழகாக இருந்தது.

உடற்சுமை :

அங்கங்கும் சிறிதுசிறிது நின்று காட்சிகளைப் பார்ப்பதும் ஓய்வு எடுப்பதுமாக மேதுவாக நகர்ந்துகொண்டிருந்தோம். 13000 அடிக்கு மேலான உயரத்தில் நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். அதுவரை நடந்த அயர்வும், உயரம் அதிகமானதின் காரணமாகவும் நடந்து செல்வது துன்பம் தருவதாக இருந்தது. உடற் சுமையின் பாரம் அழுத்துவது அப்பொழுதுதான் எங்களுக்குத் தெரிய வந்தது. நம்மை யாராவது தூக்கி எடுத்துச் சென்றால் உதவியாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றத் தொடங்கியது. அங்கு உதவி செய்வார் யாவர்? திருவடி நாட்டங் கொண்ட பெரியோர்கள் உடற்சுமையின் பாரத்தைத் தாங்காது எங்கே இந்தச் சுமையை இறக்குவது என்று ஏங்கிஏங்கிச் சொன்ன மொழிகள் நமக்கு நினைவுவரும்.

சேஷநாக் ஏரி :

இங்கிருந்தே அண்மையில் பனிச்சிகரங்கள் காட்சி அளிக்கின்றன. இரண்டோரு மைல் மேலே சென்றதும் மும்மூர்த்தி உருவில் ஒரு பனிமலையும், அதன் அடி வரையிலும் பனிப்பாறையும். அதனடியில் ஒரு பெரிய பனிக்குகையும் இவற்றிலிருந்து ஊறிவரும் பனித்தண்ணீர் தேங்கிய சேஷநாக ஏரியும் தோற்றம் அளிக்கின்றன. சுமார் ஒன்றரை மைல் நீளம். ஒரு மைல் அகலம். ஆழம் 80 அடிக்கும் மேலாக இருக்கும். கருநீல நிறத்தில் தண்ணீர் கொண்ட அந்த ஏரி, ஒரு பகுதி பனிப்பாறை யையும் ஒரு பகுதி புல்வெளி நிறைந்த சரிவான இடத்தையும் கரையாகக்கொண்டு மிக அழகாக அமைந் திருக்கிறது. மேலே இரண்டு மைல் சென்றால் வாவ்ஜன் என்னும் பகுதி யிருக்கிறது. 300 அல்லது 400 அடி கீழே இறங்கித்தான் ஏரியை அணுக முடியும். அந்த ஏரிக் கரையில் குளிக்கவும் ஏற்பாடுசெய்து வைத்திருக்கிறார்கள். இதற்குள் உச்சிவேளை மணி 1-30. எல்லோரும் களைத் திருந்தோம் ஆதலால் எங்களுக்குள் மிக அதிகமாகத் துன்பப்பட்டவர்களையும் வழிகாட்டியையும் பிறவற்றையும் முன்னேயனுப்பி மகாசந்நிதானம், ஆதீனப்புகைப்படக்காரர் மீனாட்சிசுந்தரம் அடியேன் மூவரும் நடந்தே சென்றோம். 50 அடி, 100 அடி நடப்பதற்குள் மேல்மூச்சு வாங்கும்; சிறிதுநிற்போம், மேலேநடப்போம். இவ்விதமாகக்கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வாவ்ஜன் மரக்குடில் வந்து சேர மணி 2-45 ஆகிவிட்டது. வாவ்ஜன் சுமார் 14500 அடி.

துன்பநிலை :

எங்களுக்கு முன்னே வந்திருந்தவர்கள் எல்லோரும் களைத்துப் படுத்திருந்தார்கள். அவர்கள் பெரும்பகுதியும்

குதிரைமீதே வந்தும் பலஹீனம் உள்ளவர்கள். ஆகவே, அவர்களுக்குத் துன்பம் அதிகம் இருந்தது. எங்களுக்கும் அதே துன்ப உணர்வு இருந்தாலும் அதை வெளியே நாங்கள் காட்டிக்கொள்ளவில்லை. ஒருவருக்கொருவர் உதவி செய்வதாகத் தீமுட்டி தேனீர்போட்டு ஒரு சிறிது அருந்தினோம்.

ஸ்ரீநிவாசராவ் களைத்துப்படுத்தவர் ஒரு சில மணிநேரம் அப்படியே படுத்திருந்து மெதுவாக எழுந்தார். குடிசைக்குப் பக்கத்திலுள்ள நீருற்றில் பனிக்குளிருள்ள தண்ணீரில் குளித்தார். அன்று செய்யவேண்டிய கர்மாக்களை முடித்துச் சிறிது பாலும் அவலும் கலந்து உண்டு மீண்டும் படுத்தார்.

ஏதோ சமைத்தோம் ; உண்டோம் :

நாங்களும் ஒரு சிறிதுநேரம் ஒய்வு எடுத்துக்கொண்டு அந்த கடுங்குளிர்த் தண்ணீரில் குளித்துவிட்டு, அந்த ஊற்று நீரை எடுத்து வடிகட்டி நன்ருகக்காய்ச்சி அதை வைத்து சமயல் காரியங்கள் செய்தோம். அந்தச் சுடுதண்ணீர் கீழே இறக்கிவைத்த சிலநிமிடங்களில் 'சில்' லென்று ஆகிவிடும். எவ்வளவு நேரம் வேகவைத்தும் காய்கறி, அரிசி, பருப்பு முதலிய பண்டங்கள் நன்ருக வேகமறுத்தன. ஏதோ சமைத்தோம் ; உண்டோம் என்ற நிலையில் அதை முடித்துக்கொண்டு ஒய்வெடுத்துக்கொண் டோம். அப்பொழுது மாலை மணி ஐந்து. சூரியவொளி இருந்தது.

வழிகாட்டி தொலைவிலே உள்ள ஆட்டுமந்தையி லிருந்து எங்களுக்குவேண்டிய பால் வாங்கிவந்தான். மாலைப் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு ஒரு சிறிது

தேனீர் அருந்திக் குடிசையில் அவரவரும் வந்து படுத்துக் கோண்டோம்.

ஒத்துழையாமை இயக்கம் :

நாங்கள் தங்கியிருந்த பகுதிக்கு அடுத்த ஒன்றில் வடநாட்டார் ஒருவர் வந்து தங்கியிருந்தார். அவர் குடும்பத்தோடு அமரநாததரிசனத்திற்கு அன்று அதிகாலையில் சென்றவர் இரவு 7 மணி வரையிலும் வரவில்லை. 7 மணிக்கு மேலே இருட்டத் தோடங்கிற்று. 7-30 அல்லது 8 மணி சுமாருக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். வழி எப்படி இருக்கிறது, நல்ல நிலையில் தரிசனம் முடிந்ததா என்பதை அறிந்துகோள்ள ஆவல் எங்களுக்கு. வேளியே தங்கி அவர்களை வரவேற்கவும் முடியவில்லை. அவ்வளவு குளிர். படுக்கையில் படுத்த நிலையில் தூக்கமும் விழிப்புமாக இருந்தோம். குதிரைகள் வந்த சத்தம், அவர்களின் சந்தோஷ ஆரவாரம் எங்களுக்கு எங்கோ தோலைவில் கேட்பதுபோலவும், கனு நிகழ்ச்சி போலவும் இருந்தன. எழுந்து வேளியே சேன்று அவர்களைக் கண்டு பேச அவா. இருந்தும் உடல் உறுப்புக்கள் ஒத்துழையாமை இயக்கம் வேகுவாக நடத்தின. ஆட்சி நம்முடையதா அல்லது அவைகளுடையதா என்று சிறிது நேரம் போராட்டம். நாங்களே வேற்றிகண்டோம். காலை நடக்கச் சேய்தோம். வேளியே வந்தோம். முகத்திலே ஒரு புன்னகையை வரவழைத்துக்கோண்டோம். அடுத்த அறையில் நுழைந்தோம். அமரநாதசுவாமிக்கு ஜே ! என்றோம். "யாத்திரை வேற்றிகரமாக முடித்துவந்த உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள். அமரநாதன் அருள் பேற்ற புண்ணிய சீலர்களே ! வழி எப்படி" என்றோம். 'அமரநாதன் தண்ணருளே போன்று குளிர்ச்சிதான். வழி

ஏற்றமும் இறக்கமுமாக இருந்தாலும், வேயில் காய்ந்தது. தரிசனம் இனிதே முடித்து மனமகிழ்வுடன் வந்திருக் கிறோம். நீங்கள்?' என்றனர். ‘தென்னாட்டுக்காரர். ஒரு பெரிய மகாசந்நிதானத்தோடு வந்திருக்கிறோம் அமரநாத தரிசனம் விரும்பி. வந்தவழி இதுவரையிலும் மிக்த் துன்பமாக இருந்தாலும், குறிக்கோள் நாளையோ மறு நாளோ கிட்டுவதாக உள்ள நிலையில் நல்ல முடிவை எதிர்பார்க்கிறோம். நாளையே நீங்கள் திரும்பிவிடுவீர்களா' என்றோம். ‘ஆம்; நாளை அதிகாலையில் நாங்கள் புறப்படுவ தாகத்திட்டம். வணக்கம்' என்று முடித்தார்கள். நாங்களும் எங்கள் இடம் வந்துசேர்ந்து நடந்தவற்றை மகாசந்நிதானத் திடம் தெரிவித்துவிட்டுப் படுத்தோம்.

மரக்குடிலுக்கு ஆபத்து :

ஆனால் மகாசந்நிதானத்தில் சூரியன் அஸ்தமித்த நேரத்திலிருந்து உட்கார்ந்து திருமுறைப் பாராயணம் செய்திருந்தார்கள். படுத்ததுதான் எங்களுக்குத்தெரியும். பிறகு.........?

வானமே பெயர்ந்து விழுந்ததுபோன்ற பேரச்சத்தோடு விழித்தோம். கண்இமை விரிய மறுத்தது. உள்ளுணர்ச்சி ஒருக்கால் நாம் தங்கி இருக்கும் மரக்குடில் இமயப்பேய்க் காற்றில் பிய்த்து எறியப்பட்டு விட்டதா? நம்முடைய கையும் காலும் சில்லிட்டிருக்கிறதே! பனியில் வெளியே தூக்கி எறியப்பட்டிருக்கிறோமா என்ற ஒரு சிறு நினைப்பு. கண் இமையும் விலகியது விழித்துப்பார்த்தோம், கூரை பெயர்ந்து விழவில்லை. கீழே கம்பளி, அதற்குமேலே மெத்தை, அதற்குமேலே ஒரு கம்பளி உடம்பிலே உள் சட்டை (பாடி), மேல் சட்டை, அதற்குமேல் (Sweater)

கம்பளிச் சட்டை, தலைக்குப் பனிக்குல்லாய், கையுறை, காலுறை, அதற்குமேல் போர்வை, அதற்குமேல் முறட்டுக் கம்பளி, அதற்குமேல் ரஜாய் (மேல்லிய) மேத்தை இவ் வளவுதான். இந்தநிலையில் அயர்ந்த உறக்கம். அன்று ஏற்பட்ட அசதியில் புரண்டு புரண்டு படுத்திருப்போம் போலும். ஒரு கையும் ஒரு காலும் போர்வைகளை விட்டு விலகி வேளியே நீட்டிக்கோண்டிருந்திருக்கிறது. இதனால் வேளியே நீட்டிக்கோண்டிருந்த பகுதிகள் மரத்துவிட்டன. தலையணை பனிநீரில் தோய்த்தெடுத்தாற்போல சில்லிட் டிருந்தது. அயர்ந்த உறக்கத்திலிருந்து பேரிடிக்குரல் கேட்டு திடீரென்று எழுந்த எங்களுக்கு மரக்குடிலுக்கு தீங்குவந்து பனியில் வேளியே விழுந்துவிட்டதான உணர்ச் சியை உண்டாக்கியது.

சேதமில்லை :

நன்றாக விழித்து எழுந்துபார்த்தால் மகாசந்நிதானத் தில் அப்போழுதும் படுக்கையில் உட்கார்ந்திருந்தார்கள். குடிசைக்குச் சேதமில்லை. சுற்றிலும் இறுகச் சார்த்தித் தாளிடப்பட்ட கதவுகள் நல்ல நிலைமையில் அப்படியே இருந்தன. எதிரேயுள்ள கண்ணாடி ஜன்னல் வழியாகக் கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல். தோடர்ந்து மீண்டும் மீண்டும் பேரிடிச் சத்தம். மகாசந்நிதானத்தில் ஒருக்கால் இந்தப் பேரோலி கேட்டு எழுந்தார்களா ? பக்கத்திலே நாங்கள் படுத்திருந்தும் அவர்கள் எழுவதற்குமுன் அல்லது அவர்களோடு நாமும் விழித்துக்கோள்ளவில்லையே. நம்மோடு அவர்களும் அன்று பகல் முழுவதும் துன்பப் பட்டு வந்தவர்கள் தாமே. நமக்குள்ள உடல் துன்பம் அவர்களுக்கும் இருக்குமே. அவர்களோடு, அவர்களுக்கு

உதவியாக வந்த நாம் இப்படி மெய்ம்மறந்து உறங்கி இருக்கிருேமே என்று மனம் வருந்தியது.

பேய் பூத வேலையா !

மீண்டும் மீண்டும் தோலைவிலே அச்சம் தரும் இடிக்குரல்கள்* கேட்டுக்கோண்டே இருந்தன. நாங்களும் எழுந்து உட்கார்ந்தோம். இரவு மணி 11 தான் ஆகியிருந்தது. இவ்விதமாகத் தோடர்ந்து கேட்ட பேரிடி முழக்கம் எதனுல்? ஒருக்கால் மாலையில் பார்த்து வந்த பனிமுகடுகள் பேயர்ந்து விழுந்தனவா? அல்லது மோட்டைப்பாறைகள் வேடித்து மலை உருண்டோடி வருகிறதா? இமயத்தில் அடிக்கடி இந்த நிகழ்ச்சிகள் நடைபேறுவதாகப் பலரும் எழுதிவைத்திருக்கிருர்களே. அவற்றுள் ஏதாவதோன்று இப்போழுது நம் வழியில் முன்னே பின்னே எங்காவது நிகழ்ந்து விட்டதா? மேலே நம்முடைய யாத்திரை இனியும் துன்பம் இல்லாது நிறைவுற வேண்டுமே, அமரநாதன் அருள் நமக்கு வழிகாட்டும் என்று மகாசந்நிதானத்தில் உத்திரவாயிற்றே. அதுவும் போய்க்குமா? ஒருக்கால் இன்று நாம் தாண்டிவந்த அந்த பிசிக்காட்டியிலுள்ள பேய் பூதங்களின் வேலையா? என்ற எண்ணங்கள் ஒரு சில விநுடிகளில் ஒன்றன்பின் ஒன்ருக வந்துகோண்டே இருந்தன.

---

*"போடிகோளுருவர் புலியினதளர் புரிநூறிகழ் மார்பில்
கடிகோள்கோன்றை கலந்த நீற்றர் கறைசேர்கண்டத்தர்
இடிகுரலா லிரியு மடங்கருேடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கோடியோன்றுடையார் கயிலை மலையாரே"

—திருஞானசம்பந்தர்

நல்ல நிலையில்தான் இருக்கிறது :

மின்னல் ஒளியும் தோன்றிக்கொண்டே இருப்பதால் ஒருக்கால் மழையின் விளைவாக உண்டாகும் இடியும் மின்னலுமோ என்ற எண்ணமும் வந்தது. அப்படியானால் வெளியே சென்று பார்க்கலாம் என்ற நினைவோடு வெளியே சென்றோம். அப்பொழுது நாங்கள் தங்கி இருக்கும் பகுதியில் சிறு தூறல் போட்டுக்கொண்டிருந்தது. சுற்றிலும் உள்ள பனிபடர் பகுதியில் தூய வெள்ளை நிறத்தில் புதுப்பனி பெய்து மூடியிருந்தது. குளிர் தாங்க முடியாது விரைவில் அறைக்குள் புகுந்து அடைத்துக் கொண்டோம். முன்னே சொல்லியபடி அங்கே கேட்டுக் கொண்டிருந்த பேரொலியின் விளைவு விடிந்தால் தெரிந்து கொள்ளலாம். நாம் இருக்கும் இடம் நல்ல நிலையில்தான் இருக்கிறது என்று மனதைத் தேற்றிக்கொண்டோம்.

நேரம் என்னாயிற்று ?

அப்பொழுதும் மகாசந்நிதானத்தில் முன்னிருந்த நிலையிலேயே இருப்பதைக் கண்டேன். ஒருக்கால் சுற்றிலும் நிகழும் இந்த நிகழ்ச்சிகள் அத்திருவுளத்திலும் ஏதாவது கனிவு கொடுத்திருக்குமோ என்று மயங்கினேன். மகாசந்நிதானத்திலே என்னிடத்தில் எதுவும் பேசாமல் ஸ்ரீநிவாசராவை அழைத்து 'எதிரே அதோ வானம் பரிசுத்த மாக விண்மீன்கள் ஒளிவீச அமைந்திருக்கிறதே. வெளியே சென்றுவந்தீர்களே. எப்பகுதியில் மழை பெய்கிறது' என்று உத்திரவாயிற்று. அப்பொழுதுதான் நேரம் என்னாயிற்று என்பதையும் தெரிந்து கொண்டோம். ஸ்ரீநிவாசராவ் வெளியே கண்ட காட்சிகளை எடுத்துச்சொல்லி மீண்டும் போர்வைகளைச் சரிசெய்துகொண்டு படுத்துவிட்டார். மகா சந்நிதானத்திலும் நித்திரையானார்கள்.

விழிப்பும் உறக்கமும் :

எல்லோரும் முன்போல நன்ருக உறங்கி அயர்வு போக்கிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு போர்வைகளை இழுத்துப் போட்டு கண்ணை மூடினேம். இடிக்குரல் விளைத்த அச்சம் எங்களைவிட்டு அகலவில்லை. விழிப்பும் உறக்கமுமாக அன்றிரவை ஒருவாறு கழித் தோம். மறுநாள் காலையில் எழுந்தபொழுது மணி 5. வெளியே வந்துபார்த்தால் அப்பொழுதும் தூறிக்கொண்டே இருந்தது. இரவு நிகழ்ந்த பேரொலி இமயவரை நெடு கிலும் ஏற்படும் இடிக்குரல் எனத் தெரிந்தோம். மற்றும் சரிவுகள் எதுவும் எங்கும் ஏற்படவுமில்லை. பக்கத்து அறையில் தங்கி இருந்தவர்கள் பஹல்காம் போவதற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

நாங்கள் அன்று அங்கேயே தங்கி மறுநாள் சோமவாரத் தன்று அமரநாத தரிசனத்திற்குச் செல்வதென்று திட்டம். அன்று (ஞாயிறு) முழுவதும் மழை பெய்துகொண்டே இருந்தது. சுற்றிலும் மலைச் சிகரங்களில் புதுப்பனி பெய்து கொண்டேயிருந்தது. வெள்ளைவெளேரென்று சிகரங்கள் மூடப்படுவதையும் கண்டோம். அமரநாதம் உள்ள திக்கிலே வெள்ளைப் பனிமேகமுட்டம் அதிகமாக இருந்தது.

பனியும் மழையும் :

வழிகாட்டி 'நாம் இன்று கடுமையான சோதனைக் குள்ளாகிறேம். இன்று முழுவதும் இதே நிலையில் இருந்தால், மழை நின்றதும் பனிபெய்யத் தொடங்கும். இயற்கையாக இவை யிரண்டும் ஒன்றையொன்று தொடர்ந்தேவரும். வாவ்ஜன் தாண்டி மேலே பஞ்சதாரணி ஏழுமைல். அதற்கப்புறம் அமரநாதம் ஐந்துமைல்.

பஞ்சதாணி வரையிலும் ஒருக்கால் சென்ருலும் செல்ல லாம். அதற்குமேலே செல்லுவது மிக வருத்தம் தருவதா கும். வாவ்ஜனுக்கு மேலே எங்காவது பனியோ மழையோ நேர்ந்துவிட்டால் ஒண்டுவதற்குக்கூட அங்கு இடம் கிடையாது. நம்மிடம் கூடாரமோ, பிறவசதிகள் எதுவுமோ இல்லே. பஞ்சதரணியில் அரசினர் இரண்டு தங்குமிடங்கள் கட்டிவைத்திருக்கிருர்கள். ஆனுல் அந்தப் பகுதிகளில் மழையோ பனியோ பெய்தால், பிறகு நன்ருக வெயில் காய்ந்து வழி சீர்பட்டிருக்கிறதா என்று தெரிந்த பின்னரே முன்னே பின்னே செல்லமுடியும். அதுவரை அங்கேயே (பஞ்சதாணி) தங்கி இருக்க நேரிடும். இதுவல்லாமல், அமரநாதத்தில் நாம் தங்கி இருக்கும் பொழுதோ அல்லது நடுவழியிலோ பனியோ மழையோ பெய்தால் அந்த ஆண்டவனே நமக்கு உதவிசெய்தல்வேண்டும். முயற்சி யால் நம்மைக் காத்துக்கோள்வதேன்பது எவ்வளவு பேரிய வசதியோடு சென்ருலும் முடியாதகாரியம். அச்சம் உண் டாக்குவதற்காக இவ்விதம் நான் சோல்லவில்லே. இயற்கை நிகழ்ச்சியைச் சோன்னேன். இன்று மாலேக்குள் மழையும் நின்று, அமரநாதம் திக்கிலுள்ள பனிமேகமும் கலேந்தால் தான் நாளே நாம் அங்குச் செல்லமுடியும. இல்லேயேல் போறுத்துப் பார்த்துச் செல்லுதலே நலம்' என்று சோன்ஞன்.

அமேரிக்கர் :

அன்று மாலே அமேரிக்கர் ஒருவர் இமயக் காட்சி கண்டு களிக்கவும், அமரநாதன் திருவுரு அற்புதத்தைக் காணவும் வழிகாட்டியாக படகுக்காரன் ஒருவனேயும் அழைத்துக்கோண்டு வாவ்ஜனுக்கு வந்துசேர்ந்தார். காலே யில் வாவ்ஜனேவிட்டுப் புறப்பட்ட குதிரைக்காரர்களிடம்

பஹல்காமில் உள்ள அதிகாரிக்குச் செய்தி சொல்லி அனுப்பினோம் நான்கு ஏறு குதிரைகள் சேணமிட்டு அன்று மாலையே வாவ்ஜனுக்கு வந்துசேரும்படி அனுப்பி வைக்கவேண்டும் என்று.

அவசரச் செய்தி :

அன்று மாலை மிக அவசரச் செய்தி ஒன்று அவர் அனுப்பிவைத்தார். அதில் "உள்மலைப்பகுதிகளில் பனி பெய்கிறதாக வானிலை அறிக்கைச் செய்தி வந்திருக்கிறது. ஆகையால் உடனே திரும்பி, பஹல்காம் வந்துசேரவும். மகாசந்நிதானத்திற்கு என் வணக்கங்கள். அவர்களை மீண்டும் இங்கு அழைத்து வரவும். கைகூப்பி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். மேலே செல்லவேண்டாம். மிகமிக அவசரம்" என்று கேட்டுக்கொண்டிருந்தார். இச்செய்தி மகாசந்நிதானத்திற்கும் எட்டியது. "நாளை விடியட்டும்; பார்க்கலாம்" என்று இரவு பிரார்த்தனையோடு உறங்கச் சென்றோம்.

பொறுத்துப் பார்ப்போம் :

மறுநாள் மகாசந்நிதானத்தில் அதிகாலைப் பாராயணத்தில் "வெள்ளநீர்சடையனார்தாம்" என்னும் திருநேரிசைப் பாட்டை மெல்ல ஓதி எழுந்தார்கள். கருத்திலே ஆழமிருந்தது. பொழுதும் புலர்ந்தது. நெடுவரைச்சிகரங்களிலே பனி மூட்டமாக வெண்மேகமும், மழை மூட்டமாகச் சில பகுதிகளில் கருமேகமும் கவிந்திருந்தன. வழிகாட்டி அதிகாலையிலிருந்தே அடிக்கடி வெளியேபோய்ப்பார்ப்பதும் உள்ளே வந்து எங்களைப்பார்த்து, "சற்றுப் பொறுமையோடு இருங்கள். இன்று அமரநாதம் செல்வது உசிதமாகத்தோன்ற

வில்லே. பொறுத்துப்பார்ப்போம்'' என்று சொல்வதுமாக இருந்தான்.

புறப்படுங்கள் :

மகாசந்நிதானத்திற்கு இருப்புக் கொள்ளவில்லை. "அமரநாதனுடைய அழைப்பு வந்துவிட்டது. வழி காட்டி வரவேண்டாம். வர மனத்தைரியமிருப்பவர்கள் என்னேடு புறப்படுங்கள். மற்றவர்கள் இங்கே தங்கலாம். செல்லமுடிந்தமட்டுமாவது போய்வரத் தீர்மானித்து விட்டோம். குதிரைகள் ஆயத்தமாகட்டும்'' என்று உத்தர வாயிற்று. வாவ்ஜனில் உள்ள அரசினர் குடிசைக் காவலன் (Chowkidar) நல்ல முகமதியன். அவன் இச்செய்தி அறிந்து வெளிவந்தான். "சாதுமகாராஜின் உத்தரவு அதுவானல், இன்று அமரநாத தரிசனம் நிச்சயம் கிட்டும். வாருங்கள். நான் வழிகாட்டியாக அமைந்து அழைத்துச் செல்கிறேன். எனக்கு இம்மலேப் பகுதியில் அனுபவம் அதிகம். அடியார்க்கெளியன் அமரநாதன். உறுதியைச் சோதித்து எளிவந்து காட்சி அளிப்பான். புறப்படுங்கள்'' என்று முன்சென்ருன். குதிரைக்காரர்கள் தயங்கினர்கள். அரசாங்க உத்தரவு மீளவும் என்று, சூழ்நிலேயும் குழப்பமாக இருக்கிறது. இந்த நிலேயில் மேலே செல்லுதல் முறையா'' என்று யோசித்தார்கள். ஆனல் மகாசந்நிதானத்தின் உறுதி கண்டு நிற்கமனமில்லாமல் குதிரைகள் ஆயத்தமாயின. அமரநாதத்தை நோக்கிப் புறப்பட்டன.

நச்சுப்பகுதி :

மேலே செல்லச்செல்ல ஏற்றமும் இறக்கமுமாக வழி சென்றது. மகாகுனஸ் என்னும் பகுதியைத் தாண்டினேம்.

"ஆண்டவன் அருளால் தப்பினேம்" என்றான் காவலன். "என்ன செய்தி" என்றேம். "வழியில் ஏதாவது நாம் காணாத தொல்லை வந்திருக்கவேண்டும். இமயப்பருவ நிலை எப்பொழுதும் ஒரே நிலையில் இராதே. அதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டுத் தாண்டிவிட்டோமோ" என்று வினவினேம். "இல்லை ஐயா, தாங்கள் மகாகுனஸ் பகுதியைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லையா?" என்றான். "மகாகுனஸ் என்றால் என்ன" என்றேம். "நாகமூலிகை படரும் நச்சுப் பகுதி. அப்பகுதி யாருக்கும் மயக்கம் தரும் பகுதி. மனிதரானாலும் குதிரையானாலும் மற்றப் பிராணி எதுவானாலும் இங்கு வரும்பொழுது மயங்கி விழுந்துவிடும். அங்கோரு பூவுண்டு. அது மலருங் காலத்தில் அந்த வாடை மயக்கத்தை உண்டுபண்ணும். ஆனால் இது வழியே நான் பலமுறையும் வந்திருக்கிறேன். இதுபோன்ற சாது சிரேஷ்டர்கள் வருங்காலத்தில் துன்பம் எதுவும் நேர்ந்ததில்லை. இன்று வெயில்கூடக் காய்கிறது. எங்கும் நிறை ஆண்டவன் அருள் பூரணமாக வெளிப் பட்டுப் பிரகாசிக்கிறது" என்று ஆனந்த மிகுதியால் கூறி, "போலோ அமர்நாத்சுவாமிக்கி ஜே!" என்றான். நாங்களும் உற்சாகத்தோடு "அமர்நாத்சுவாமிக்கி ஜே" என்று பல முறையும் உரக்க முழங்கினேம்.

மகாகுனஸ் பகுதியிலிருந்து வழி கீழே இறக்கமாகச் செல்லுகிறது. கடுமையான இறக்கமல்லவாயினும் கீழே இறங்குவது நமக்குத் தெரியும். அப்படி இறங்கி வரும் வழியில் பல இடங்களில் குதிரைகள் செத்துக்கிடப்பதைக் கண்டோம். அண்மையில் நடந்த கங்கண விழாவிற்கு வந்த குதிரைக் கூட்டத்தில் சில குளிர் தாங்காது விரைத்தும், நச்சுவாடையின் பலனாகவும் இறந்ததாகச் சொன்னார்கள்.

பஞ்சதரணி :

இத்தலத்து, பெருமான் பிரளய காலத்தில் அந்தி நடம் புரிந்ததாகவும், அவர் ஆடும்போழுது அவர் சடையிலிருந்து ஐந்து சோட்டு கங்கை நீர்த்துளிகள் விழுந்ததாகவும், அவை ஐந்து ஆறுகளாகப் பெருக் கேடுத்து ஒடிவந்து கூடிப் பஞ்சதரணி என்னும் பெருநதி யாகிமலைகளின் வழியே ஒடிக் கீழே சிந்து என்னும் பெயரோடு காஷ்மீர நாட்டில் ஜீலம் நதியில் வந்து கலப்பதாகவும் சொல்லப்படுகிறது. இந்த ஆற்றின் நடுவே செல்லும்போழுது கிழக்கில் அது உற்பத்தியாகும் பகுதி யைப் பார்த்தாலே மனதில் ஒரு அச்சத்தை உண்டாக்கும். பஞ்சதரணி ஆற்றைக் கடந்து அப்புறம் சேன்ருல் அங்கே ஒரு மயானஅமைதி. அருகிலே ஒரு மலையில் ஈட்டிகள் பல செருகியதுபோல நூற்றுக்கணக்கான கூரான பகுதி கள் மலை முழுவதிலும் நீட்டிக்கோண்டிருக்கும். பஞ்ச தரணி உற்பத்தி யாகுமிடத்தில் நவமணிகளும் சிதறிக் கிடப்பதாகவும் வேள்ளக்காலத்தில் அக்கற்களை அடித்துக் கோண்டு வந்து கீழே தள்ளுவதாகவும் சொல்லப்படுகிறது.

அந்தப் பகுதி யாருக்கும் ஒரு அச்சத்தைத் தரத்தக்க பயங்கரச் சூழ்நிலையில் அமைந்திருக்கிறது இந்தப் பஞ்சதரணி. அவ்வாற்றின் உபநதிகள் ஒன்றிரண்டு பனிப் படிவுகளில் உருகிவரும் தண்ணீராகவும் மற்றவை மலையில் தரை இடத்தில் பெருக்கேடுத்து வருவதாகவும் சோல்லப்படுகிறது. சிறிதுநேரம் மழை பெய்தாலும் பெருவேள்ளம் எடுத்தோடுமாம்.

அண்மையில் நிகழ்ந்தது :

மனத்தைரியம் உடைய இரு வாலிபர்கள் தற்காப்புக்கு வேண்டிய ஆயுதங்களுடன் ஆற்றின் உற்பத்தி ஸ்தானத்

தைப் பார்த்துவரக் குதிரைகளில் சென்றனர். இரண்டு மைல் தொலைவு கூடச் சென்றிருக்க மாட்டார்கள். குதிரைகள் மிரண்டு கட்டுக்கடங்காது திரும்ப ஓடிவந்து விட்டன. குதிரைகளை விடுத்துக் கால்நடையாகவே சென்று கண்டுவருவது என்ற உறுதியோடு அவர்கள் மேலும் சென்றிருக்கிறார்கள். ஒரு சிறு தொலைவு சென்றதும் கருவிகள் எவ்வளவு இருந்தும் அவர்களை அறியாது ஒரு அச்சம் பற்றிக்கொண்டது. மனத்திலே சோர்வும் உண்டா யிற்று. மேலே செல்ல அவர்கள் மனம் இடங்கொடுக்க வில்லை. மீண்டும் பஞ்சதரணி அரசினர் குடிசைக்குத் திரும்பி வந்தார்கள். இது அண்மையில் நிகழ்ந்த செய்தி.

மார் மூட் :

இப்பகுதியில் Marmoot என்னும் மலை அணில்கள் அதிகமாக இருக்கின்றன. அவைகள் குண்டுக் கற்களின் அடியே சிறுவளை செய்துகொண்டு தங்கி இருக்கின்றன. சிவப்பும் கருப்பும் கலந்த மயிர் அடர்ந்திருக்கிறது. உயரம் ஒரு அடி. கால் குட்டையானது. நம் நாட்டு அணிலைப்போல பின்னங்காலில் நிமிர்ந்து உட்கார்ந்து முன்னங் கால்களைத் தூக்கித் தலைநிமிர்ந்து பார்த்துக் கொண்டே இருக்கும். அண்மையில் சென்றால் விரைந் தோடிப் பொந்துக்குள் புகுந்துவிடும்.

சிறிது காற்றடித்தாலே :

சிறு பூண்டுகள், பல நிறத்தில் சிறு சிறு பூக்கள் சுற்றிலும் பனி மூடிய சிகரங்கள் இவைதாம் அங்கு உள்ளவை. அந்தப் பகுதிகளில் சிறிது காற்று அடித்தாலே காற்றிலிருக்கும் ஜலவாயு அப்படியே பனியாக மாறிப் பனி பெய்யத் தொடங்கிவிடும் என்று சொல்லுகிறார்கள். இந்த

நிலையில் அக்கரை சென்று அங்கே அரசினர் குடிசையில் நாங்கள் எடுத்துச்சென்ற சில பொருள்களையும் போட்டு விட்டு, மாற்றுடை, வழிபாட்டுக்கு வேண்டியவை இவை களை மட்டிலும் எடுத்துக்கொண்டு மேலே சென்றோம்.

கால் இடறினல் :

இந்த இடத்திலிருந்து அமரநாதம் ஐந்து மைல் தொலைவுதான். தங்குமிடத்திலிருந்து ஒரு மைல் தொலைவு சென்றதும், மறுபடியும் ஒரு செங்குத்தான ஏற்றம். உத்தேசம் 1000 அடி. மிகவும் வருத்தம் தரும் ஏற்றம். அரைமைலுக்குள் அந்த உயரம் ஏறவேண்டியதாக இருக் கிறது. ஏறுவதற்குள் குதிரைகளும் களைத்து விடுகின்றன. அதில் ஏறி மேலே குறுகலான பாதை வழியே செல்ல வேண்டும். இப்புறத்திலே 1000 அல்லது 2000 அடிப் பள்ளத்தில் பஞ்சதரணி ஆறு. அப்புறம் உயரமான மலை. குதிரையின் கால் ஒரு சிறிது இடறினாலும் அமரநாதன் திருவடி சரண்புக வேண்டியதுதான். அக்கரையிலும் மிக உயரமான பனிமலை. பஞ்சதரணித்தங்கலைத் தாண்டி இந்த ஏற்றமான பகுதிக்கு வருமுன் பனிப்பாலம் ஒன்றின் மீது சிறிது தொலைவு நடந்துவர வேண்டியதாயிருக்கிறது. மேலே இந்த நிலையில் ஒன்றன்பின் ஒன்ருக நாங்கள் ஏறிச் சென்ற குதிரைகள் மேதுவாகச் சென்றன.

வழுக்கல் :

இரண்டு மைல் சென்றதும், மறுபடி ஒரு இறக்கம். ஆற்றிற்குள்ளேயே இறங்கி வந்து ஆற்றின் நடுவிலே நடந்து சென்று, பிறகு அமரநாதம் அடையவேண்டும். அந்தப்பகுதி எப்போழுதும் வழுக்கல் உள்ளது. குதிரைகள்

வெகுநிதானமாக இறங்குகின்றன. அப்படி இறங்கியதும் மலைப்பகுதியை விட்டு ஆற்றுப்பகுதியில் கால் வைத்தால் குறைந்தது 10 அல்லது 15 அடி உயரமுள்ள உறைபனி ஆறு முழுவதும் அடர்ந்து பரவிக்கிடக்கிறது.

குதிரைகளின் நுண்ணுணர்வு :

இந்தத் தொடர்பில் குதிரைகள் இறங்கி வரும் பொழுது ஒரு குதிரைக்குக் கால் வழுக்கி மேலே இருந்தவர் கீழே விழுந்தார். குதிரையும் உருண்டு விழுந்தது. முதலில் வந்த இரண்டு குதிரைகளில் இரண்டாவதாக வந்ததன் கதி இப்படியானது பின்னே வந்தவர்களுக்கு எச்சரிக்கையாக இருந்தது. மற்றையோர் குதிரைக்காரர் உதவியுடன் கீழே இறங்கினுர்கள். அந்தப் பகுதியில் கீழே இறங்கிநின்றதும் சுற்றிலும் ஒரு குளிர் (Ice-packed state). கீழே நடப்பதில் மணலில் எற்றிச் செல்வதுபோல பனித்துகள்கள் சிதறிவிழுந்தாலும் உறுதியாகயிருக்கிறது. நடுநடுவில் வெடிப்புக்கள் பெரிதும் சிறிதுமாக இருக்கின் றன. குதிரைகள் அவைகளுக்கு இயற்கையாகவுள்ள நுண் ணுணர்வோடு (Animal instinct) அடிபார்த்து உறுதியான இடத்தில் வைத்து நடந்துசெல்லுகின்றன. நாம் எவ்வளவு விரட்டினுலும் வேகமாக அவை நடக்கமாட்டா. நிதான மாகவே செல்லும். இந்த நிலையில் உத்தேசம் அரை மைல் நீளமிருக்கும். இது தாண்டிச் சிறிது தொலைவுசென்றதும், மறுபடியும் ஒரு பெரிய பனிப்பாலம். அதுவும் முன் சொன்னதுபோல 10 அல்லது 15 அடி உயரமும் உறுதியும் கொண்டது. இதில் 6, 7 பர்லாங்கு தொலைவு செல்லுதல் வேண்டும். இவை இரண்டின் அடியிலும் தண்ணீர் ஒடிக் கொண்டேயிருக்கிறது.


மலைப்பு ஏற்படும் :

பஞ்சதாரணியில் கடும் ஏற்றம் ஏறியதும் ஒரு வளைவு திரும்புகிறோம். அங்கேயே அமரநாதத்தின் சிகரம் நமக்குக் காட்சி வழங்கும். உச்சி 18000 அடி உயரம். இந்த இரண்டாவது பனிப்பாலம் வந்ததும் அமரநாதகுகைவாயில் நமக்குப் புலனாகும். அங்கிருந்து பார்க்க அந்தக் குகை மிக உயரத்தில் அமைந்தது போலவும், எப்படி ஏறமுடியும், வழியும் இல்லையே என்பதுபோலவும் மலைப்பு ஏற்படும்.

மேலான சக்தி :

பஞ்சதாரணிப் பகுதியில் நுழைந்ததிலிருந்து அமரநாதம் வரும் வரையிலும் நம்முடைய குறிக்கோள் நிறைவுறும் தருணத்தில் நாம் இருக்கிறோம். இதுவரை காணாத காட்சி காணப்போகிறோம். பெருமான் நமக்குக் காட்சி தந்தருள அழைத்துச் செல்லுகிறான், சர்வவல்லமை உள்ளவன். மேலான சக்தியுடையவன். அவனைவிட உலகிலே பெரியது, பெருமையுடையது, சக்தியுடையது வேறு ஒன்றுமில்லை. அந்தச் சக்தி, அதனுடைய காந்தம் நம்மை வலித்து இழுத்துச் செல்லுகிறது. நம்முடைய சக்தி, நம்முடைய செயல் எதுவும் அங்கே தொழிற்பட முடியாது, வேலை செய்தாலும் பயனில்லை. சிறிது தவறினும் அதோ அந்தப் பள்ளத்தில் விழுந்து அதோகதி ஆகிவிடுவோம். ஆனால் பயபக்தியோடு, அது அழைத்துச் செல்லும் வழியே நிதானமாகச் சென்றால் நல்லருள்காட்டி பேரா இன்பம் நமக்கு அளிக்கக் காத்திருக்கிறது. அது கூவி அழைக்கிறது. அந்தக் கருணை வெள்ளம் நம்மை இழுத்துச் செல்லுகிறது. அவ்வழியே செல்லுகிறோம். உய்வுண்டு, அஞ்சவேண்டாம். விரைந்துவந்து கண்டு

அமரநாத வழியில் :



பனிப்பாறைச்சரிவில்

அமரநாத வழியில் :



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

மீண்டும் செல்லவும் என்று ஏதோ ஒன்று நம்மிடம் சொல்லி வருவதாக ஒரு உணர்வு. நம்முடைய வாய் பேசாது. மனம் குகையையே நாடிச்செல்லும்.

இதோ வந்துவிட்டோம் :

இதோ வந்து விட்டோம் அமரநாத அடிவாரத்தில். அதோ விழுகிறது அமராவதி. பெருமானுடைய திருமுடியிலிருந்து கங்கை நீர் பெருக்கெடுத்து வருவதுபோல, அமரநாதத்தின் உச்சிமுகட்டிலிருந்து வேகமாகப் புரண்டடித்து ஒடிவருகிறது பனியுருகிவரும் தண்ணீர். வெண்ணீறுசண்ணித்த மேனியன் அமரநாதன் திருமுடி அதோ நமக்குக் காட்சியளிக்கிறது. அந்தக்குகை அந்த விராட் புருஷனுடைய திருவாயாக, (வா என்றழைக்கும் பான்மையில் திறந்தவாய்திறந்தபடியே) அமரநாதன் பனிலிங்கவுரு உள்நாக்காக இவை காட்சியளிக்கின்றன. சர்வ வல்லமையுள்ள பெருமானுடைய சிரித்த திருமுகத்தைக் கண்டோம். மனமுருகிநின்ருேம். இந்தப் புனிதயிடத்தில் இந்தப் புனித மலேயில் கால் தோய நிற்கிருேமே. காரைக்காலம்மையார் தோடையவிழ் மாலேச் சூலபாணியனுர் மேவும் படர் ஒளிக் கயிலேவேற்பின் பாங்கணேந்து, ஆங்கு காலின்நடையினேத் தவிர்த்து பார்மேல் தலேயினுல் நடந்து சென்ருர். தலேயினுல் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளிமலேயின் மேல் ஏறும்போது மகிழ்ச்சியால் அன்பு பொங்கக் கலேயிளந்திங்கட் கண்ணிக் கண்ணுதல் ஒரு பாகத்துச் சிலேநுதல் இமயவல்லி திருக்கண்ணேக்கு உற்றதன்றே. இது காரைக்கால் அம்மையார் போன்ற பெரியவர்களால் செய்ய முடிந்த செயற்கரியசெயல்; நம்மால் முடிவதன்று. செய்கை அரிதே யாயினும், மனத்திலே அடியார்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி நமக்குத் தோன்றிக்

கொண்டேயிருக்கிறது. எல்லோரும் திருவடி காண்பதற்கு உருகி நிற்பர். ஆனால் நமக்கோ இங்கே திருமுடி காட்சி அளிக்கிறது. கருணைபொழி திருமுகத்தில் தோன்றும் புன்முறுவல் நம்மை வா என்று அழைத்துச் செல்கிறது. காரைக்கால் அம்மையாரை ‘ அம்மையே இங்குற்ற தேன் ’ என்று கேட்ட கேள்வி நம்மையுங் கேட்பதுபோல ஒரு தோற்றம். இந்தச் சிரித்த முகங்கண்டு இனிக்காண்ப தேன்னே என்று நமக்கு ஒரு இறுமாப்பு.

வெற்றி :

நாங்கள் உணர்ச்சி வயத்தராய் அடிவரையில் வந்து நின்றோம். குதிரையை விட்டு இறங்கினோம். மேலே விரைந்து ஏறினோம். 200 அடி உயரம் செங்குத்தாக ஏறவேண்டியதாக இருக்கிறது. அந்த இடத்தில் அமராவதி (பனிநீரில் உருகிவரும் தண்ணீர்) ஓடிவருகிறது. குளிக்க அறை தடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அந்தத் தண் ணீரில் விரல் வைத்து எடுக்கவும் மனம் அஞ்சுகிறது. விரல் பட்டால் இரத்தஓட்டம் நின்று மரத்து விடுமோ என்ற அச்சம். ஆனாலும் புனித நதியல்லவா, நம்முடைய அவயவங்கள் சொல்லுவதைக் கேட்டு நடக்க அது இட மல்லவே. அவற்றை அடக்கியாண்டு மேலே நம்மை அழைத்து நிற்கும் அமரநாதனின் தரிசனம் காணவேண் டுமே, இந்நிலையில் இங்கே குளித்து அனுஷ்டானுதிகளை முடித்துக்கொண்டு புனிதமாகி மேலேசெல்லுவோம் என்று மனத்தோடு போராடி நாங்கள் வெற்றிகண்டோம்.

அரிய காட்சி :

இதற்கு முன்னரே மகாசந்நிதானத்தில் குளிக்குமிடத் தில் திருமஞ்சனமாகி யிருப்பது தெரியவந்தது. நாங்களும்

பின்பற்றினோம். முழுகினோம். திருநீறு பூசி நல்ல கோலத்தோடு மகாசந்நிதானத்தைப் பின்பற்றி மேலே சென்றோம். மேலும் 100 அடி ஏறிச் செல்லுதல்வேண்டும். இரண்டு தடுப்பு இரும்புக்கம்பி அடைப்புக்கள் இருக்கின்றன. அவைகளைத் தாண்டி மேலே சென்றோம். கண்டோம் அரிய காட்சியை - அமரநாதனை. அப்பொழுது உச்சிப் பகல் மணி 1-30.

வழிபாடுகள் மனமுருகச் செய்தோம். கீழே கல்லும் மண்ணும்தான். அதிலே பளிங்கு நிறத்தில் பெருமான் திருவுரு பனிவடிவில் பாறையை ஒட்டிப் படர்ந்து உயர்ந்து விளங்குகிறது. நாங்கள் சென்றது வளர்பிறையில் மூன்றாவது நாள். சுமார் 3 அடி உயரமிருந்தது அத் திருவுரு. அங்கு விநாயகர், பெருமான், பெருமாட்டி, கார்த்திகேயர் (முருகன்) திருவுருவங்கள் வளர்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நாங்கள் கண்ட அன்று பெருமான் திருவுருமட்டிலுமே வளர்ந்திருந்தது. மற்ற இடங்களில் கீழே ஈரமாக இருந்தது. காலை வெற்றுத் தரையில் ஊன்றி நிற்கவுமுடியவில்லை. அவ்வளவு குளிர்ச்சி. மேலேயிருந்து பனிநீர் சொட்டுச் சொட்டாகச் சொட்டிக்கொண்டே யிருக்கிறது. அவை அமுதம் பொழிவது என்று சொல்லுகிறார்கள். அவை நம்மீது பட்டாலே மிகப் புனிதமானதாகவும் கருதப்படுகிறது. எங்கள்மீது அந்த அமிருதப் பொழிவுபட்டது. *

“ For why? The Lord our God is good,
His mercy is for ever sure,
His truth at all times firmly stood,
And shall from age to age endure.”

— The Pilgrim’s Progress.

திருக்கோலங்கண்டு வழிபடல் :

குகை சுமார் 100 அடி அகலம், 100 அடி உயரம், உள்ளாழம் 150 அடி இருக்கும். பெருமான் தெற்கு நோக்கி எழுந்தருளிய கோலம். பெருமானுக்கு முறையாக வழிபாடுகள் செய்து கற்கண்டு, வாதுமைப்பருப்பு, திராக்ஷை காய்ந்தபழம், மிட்டாய் முதலியவை இட்டு நிவே தித்தோம். இது முடிந்ததும் மகாசந்நிதானத்தில் அங்கே நேடுநேரம் அப்படியே மனமுருகி நின்று திருக்கோலங் கண்டு வழிபட்டுத் திருமுறைப் பாராயணம் செய்தார்கள்.

அமுதபானம் :

வழிபாடு முடித்து கீழிறங்கி வரும்போது அந்தக் குகையின் மற்றோர் பகுதியில் நிர்வாண சந்நியாசி ஒருவர் முழுநீறு சண்ணித்த மேனியராய் எப்பொழுதும் புன் முறுவல் பூத்த முகத்தினராய் அமர்ந்திருந்தார். அவருக்கு சீடர் ஒருவரும் இருந்தார். வெகுநாட்களாக இரவு பகல் அங்கேயே தங்கியிருப்பதாகத் தெரியவந்தது. எங்களைக் கண்டதும் அப்பெரியார் தம் சீடரை விளித்து வந்திருக்கும் அடியவருக்கு விரைவில் தேனீர் அருந்தக் கோடுக்கவும், ''ஜல்தி ஜல்தி'' என்று உத்திரவிட்டார். அவரும் பண் பட்டவர். எங்களை வரவேற்று பக்கத்தில் அமரச்சேய்து எல்லோருக்கும் சூடான தேனீர் அருந்தக் கோடுத்தார். அதுவே அமுதபானமாயிற்று. நாங்கள் இவ்விதம் அதனை அருந்துவதைக் கண்டு மகிழ்வுற்றார் அப்பெரியவர். நாங்களும் அவரை வணங்கிக் காணிக்கைகள் சேலுத்திக் கோண்டோம். நல்லாசி வழங்கினார். விடை பேற்று மீண்டோம்.

இவ்விதம் நாங்கள் கண்ட தரிசனம் இரண்டுவகை யாலும் சிறப்புற அமைந்தது. ஆண்டவனைக் கண்டோம்; முழுநீறுபூசிய முனிவர் ஒருவரையும் கண்டோம். ஆகவே அந்த இரண்டுருவிலும் எங்களுக்கு அமரநாதன் காட்சி வழங்கினான். அருள்வழங்கினான். பெரும்பேறுபெற்றோம்.

பொதி சோறு :

அமரநாதனைத்தவிர வேறு யாரும் இல்லாத அந்த இடத்தில் அடியவர் ஒருவர் புன்முறுவலுடன் எங்களை வரவேற்றுபசரித்தது சுந்தரருக்கு திருக்குருகாவூர் வழியில் பெருமான் அளித்த பொதிசோறும் தண்ணீரும் போன்று இருந்தது எனலாம். அங்கே (சுந்தரமூர்த்திகளுக்கு) குருகாவூர் அமர்ந்தருளுங் குழகர் வழிபார்த்திருப்பத் திருவாரூர்த் தம்பிரான்தோழர் திருத்தொண்டருடன் வருவார், பந்தரிடைப் புகுந்து திருமறையவர்பால் பேரு கார்வஞ்சேல 'சிவயாநம' எனப்பேசி இருந்தார். ஆல நிழற் கீழிருந்தார் அவர்தம்மை எதிர்நோக்கிச் 'சாலமிகப் பசித்தீர் ; இப்பொதிசோறு தருகின்றேன். காலம் இனித் தாழாமே கைக்கொண்டு இங்கு இனிதருந்தி ஏலநறுங் குளிர்தண்ணீர் குடித்து இளைப்புத் தீரும்' என்றார். அது கேட்டு வன்றொண்டர் "மறை முனிவர் தரும் பொதிசோறு இன்று நமக்கு எதிர்விலக்கல் ஆகா" தென்று இசைந்தருளி, பொன் தயங்கு நூல் மார்பர் தரும் பொதிசோறது வாங்கிச் சென்று, திருத்தொண்டருடன் திருஅமுது செய்தருளி, எண்ணிறந்த பரிசனங்கள் எல்லாரும் இனிதருந்தப் பண்ணியபின் அம்மருங்கு பசித்தணைந்தார்களும் அருந்த உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால்."

அப்போதிசோறு எடுக்க எடுக்கக் குறையாத உலவாக்கிழி போன்று வழங்க வழங்கக் குறையாது, எல்லோருடைய பசியையும் தீர்த்தது. இது கொடுத்தவருடைய கருணை (வள்ளன்மை) யும் அதனைப்பெற்று வழங்கியவர் பெருமை யும் தோன்ற அது உலவாதே புண்ணியனார் தாமளித்த போதிசோறு பொலிந்ததால் என்றார்.


எதிர்விலக்கல் ஆகாது :

இங்கே ' மறைமுனிவர் தரும் போதிசோறு இன்று நமக்கு எதிர் விலக்கல் ஆகாது என்பது சிறப்பு. அழிவாம் பசிவந்து அணைந்திடவும் அதற்குச் சித்தம் அலையாதவர்கள் பெரியோர். கண்ட இடத்தில் வழி களில் எங்கும் உணவு கொள்ளார். நம்பர் அருள் என்று அறிந்தாலன்றி ஏற்றுக்கொள்ள மறுப்பர். சுந்தரர் போதிசோறு ஏற்றுத் தாமும் உண்டு மகிழ்ந்து. உடன்வந்த பரிசனங்களையும் அங்கு பசித்துவந்த மற்றையோரையும் பசிநீங்கி மகிழச் செய்தார். அதே போன்று இங்கே நாங்களும் எங்களைச் சார்ந்துவந்த குதிரைக்காரர்களும், எல்லோரும் அந்த நேரத்தில் தேநீர் அளிக்கப்பெற்றோம். தாயினும் சாலப் பரிந்தூட்டும் பெருமானுடைய திருவருட் செயலாகவே எங்களுக்கு அது இருந்தது.

புறப்பட வேண்டாமா :

அந்தப் பெரியவரிடம் ஆசிபெற்ற நாங்கள் எல் லோரும் கீழே இறங்கி வந்தோம். மகாசந்நிதானத்தில் தனியே மேலே பெருமான் உறையுமிடத்திற்குச் சென்று நின்றார்கள். அங்கு நிறைந்து நின்று அருள் வழங்கும் அற்புதப்பொருளை கண்ணாரக் கண்டு பிரியாவிடைபெற்று

ஸ்ரீநகர் :



கீர்பவானி வழிபாடு

அமரநாத குகைக்கருகில் :



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருக்கரத்தில் நீலமலர் ஏற்றல்

வந்தார்கள். அப்பொழுது மாலை மணி 3. அங்கிருந்து விரைவிலே புறப்பட்டு இருட்டுமுன் வாஷ்ஜன் போய்ச் சேரவேண்டுமே ; காலையில் அமரநாதம் வந்துசேர ஐந்து மணி நேரம் ஆயிற்றே. வரும்பொழுது இருந்ததைவிட திரும்பும்பொழுது சோர்வு மிகத் தேரியுமே என்று குதிரைகளைச் சேணமிட்டு ஆயத்தம் செய்தோம். அப்பொழுதுதான் மகாசந்நிதானத்திலும் குகை வாயிலில் இறங்கி வந்து பெருமானை நோக்கி நின்றிருந்தார்கள். அவர்கள் செவியிலும் விழத்தக்கதாக மணி 3-30 ஆகி விட்டதே, விரைவில் புறப்பட வேண்டாமா என்று எங்களுக்குள் பேசிக்கொள்ளுவதுபோல சொல்லிக்கொண்டோம். மகாசந்நிதானத்தின் செவிகளில் இச்சொல் விழுந்திருக்கும் போலும். மேதுவாக வந்து திரும்பும் வழியில் எழுந்தருளினார்கள்.

நீலமலர் :

குகைவாயில் கண்ணுக்கு மறையும்வரையிலும் சிறிது தொலைவு நடப்பதும், நிற்பதும், திரும்பப் பார்ப்பதுமாகச் சென்று கொண்டிருந்தார்கள். வழியெல்லாம் உறை பனிப் பகுதியின் அருகில் நீலமலர் பூத்துக் கிடந்தது. அது நீல மோட்டலரும் கேதார நினைவை அவர்களுடைய (மகாசந்நிதானம்) திருவுளத்தில் தோற்றுவித்ததுபோலும். கேதாரப் பதிகம் முழுமையும் ஓதிக்கொண்டே வந்தார்கள்.

அந்தி நடம் :

பஞ்சதரணிக்கு நாங்கள் வரும்பொழுது மாலை மணி 5-30. அங்கே நாங்கள் வைத்துச்சென்ற ரோட்டி, பால் இவைகளைக் கொஞ்சம் உண்டு அயர்வு நீக்கிக்கொண்டு

மேலே செல்லலானோம். நாங்கள் அங்கு வந்த நேரம் மாலைக் காலமல்லவா? பெருமான் அங்கு அந்தி நடம் புரிந்தார். அவர் சடையினின்றும் விழுந்த நீர்த்துளிகள் ஐந்தும் அங்கே ஐந்து ஆறுகளாகிப் பிறகு பஞ்சதரணியாக ஆயிற்று என்ற தலக் குறிப்பு நினைவு வந்தது. அந்த அந்திநடம் நாங்கள் காண்பதற்கில்லையானாலும் நேரம் அதற்குப் பொருத்தமாக இருந்தபடியால் நினைவுகள் அவ்வழியே சென்றன. திருமுறைகளிலே அந்தி நடனத் தைப்பற்றிப் பெருமான்புகழ் பரப்பும் பாடல்கள் நினை விற்கு வந்தன.

தூய்மை :

" பெருமானுடைய திருமுடியிலிருந்து சடையின் வழியாக வழிந்தோடும் நீர் தூய்மையானது என்று சொல்லு கின்றனர். தூய்மைக்குத் தூய்மையாக அதுவே உருவாக அமைந்த பெருமானுடைய சடையும், சடையிலிருந்து விழுந்த நீரும் தூய்மையானவை. அந்தத் தூய உடலில் பட்டது தூய்மையானது. அந்தத் திருச்சடையிலும் திருஉடம்பிலும் பட்டாலே எதுவும் தூய்மைபெறும். அந்த நீர்த்துளி நம்மீதுபட்டாலே நாமும் தூயராவோம். பெருமான் திருமுடியிலிருக்கும் சடைகளின் வழியேவழிந்து உடலில் பட்டு திருவடிகளில் தோய்ந்துவரும் நீர் புனிதக் கங்கை யாகிறது; நம்முடைய மலமாசுகளை நீக்கும் புண்ணிய நதியாக அதைக்கொள்ளுகிறோம். "

இடத்தால் பெருமை :

" பெருமானிடம் சேர்ந்த கங்கையும், புலியும், மானும், பாம்பும், கடுவிஷமும் புனிதமாயின. பொதுவாகத் தலை மயிர்பட்ட, நாம் தொட்ட, தோய்ந்த நீர் அசுத்தமாகி

விட்டதாகவே கருதுவோம். ஆனல் அந்தத் தூயவன்மீது பட்டது எந்த இடத்திலிருந்து வந்தாலும் தூயதாகிப் பிறரை யும் தூயராக்கும் வலிமை பேற்றுவிட்டது. இதனைக் கீழ்க் காணும் நூல்கள் மிக அழகாக எடுத்துச்சொல்கின்றன.

पुण्येरुद्रस्य मूर्धनि , शिवे शिवशिरस्युत
तत्र देवर्षिगन्धर्वा वसुधातल वासिनः ।
भवाङ्गपतितं तोयं पवित्रमिति पस्पर्शुः ॥

— இராமாயணம் - பாலகாண்டம்.

எப்போழுதும் கங்கையில் மூழ்கும் தேவர்களும் புண்ணியமான ருத்ரனுடைய தலையில், மங்களகரமான சிவசிரசில் விழுந்த கங்கை, * சிவனுடலிலிருந்து விழுந்த

---

*पूतं स्वतः पूततरंततोऽपि गाङ्गं पयः शङ्करमौलि सङ्गात् । நீலகண்டர் - சிவ லீலார்ணவம். இயற்கையில் தூயதன கங்கைநீர் சிவன் தலையின் சம்பந்தத்தால் மிகத் தூயதாகிறது. यत्केशाग्रविलग्नमंबु जगतां तीर्थं परं पावनं । நீலகண்டர், சிவோத் கர்ஷ மஞ்சரீ சு - 3. சிவன் கூந்தல் நுனியில் தங்கிய நீர் உலகில் மிகத் தூய்மையானது.

சிவனுடைய தலையில்மறைப்புண்டகங்கை வேளியில்வரத் துள்ளியது. சில துளிகள் வேளியில் சிதறின. அவையே பிந்து சரஸ் எனப்படும். (மத்ஸபுராணம் 120 அத்). (பிந்து - துளி).

கற்பகத் தருவைச் சார்ந்த காகமு மமிர்த முண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சேர்ந்தோர் வாழ்வர்
இப்புவி தன்னி லேன்று மிலவுகாத் திடுங்கிளிபோல்
அற்பரைச் சேர்ந்தோர் வாழ்வ தரிதரி தாகுமம்மா.

— விவேகசிந்தாமணி.

நீர் தூய்மையானது எனக் கோண்டாடுகிருர்கள். ஆதலின் அதன் தூய்மையின்பேருமை புலப்படும்.

வந்தே ஆகவேண்டும் :

"நாம் எவ்வளவு அடர்ந்த மலமாயா சம்பந்தம் உடையவர்களாக இருந்தாலும், இந்தப் புனித நிலத்திலே நடக்கிறேம்; இந்தப் புனிதக்காற்றை நுகர்கிறேம்; திருவுருவக் காட்சியை மனத்தாலேயே காண்கிறேம். அந்தப் புண்ணியம் இப்பிறவியிலேயே நமக்குக் கிடைக்கிறது. அதனுல் நாம் உய்ந்தவர்களாகிறேம். எத்தனையோ பேர் இங்குவர முயன்றும் வினைதடுப்பப் பாதிவழிவந்து, வாவ்ஜன்வரையிலும் வந்தும் மேலே வரமுடியாமல் திரும்பிப்போயிருக்கிருர்கள். அல்லது வந்துங்கூட துன்பங் தோடரப்பெற்று, நல்ல காட்சிகண்டும் மனநிறைவு பெருமல் துன்ப நினைவிலே மீண்டிருக்கிருர்கள். வரும்வழியிலே நம்மைச் சோதித்துத் துன்பங்காட்டி உறுதிகண்டாலும், நல்ல ஆனந்தக் காட்சி நல்கி நம்மை ஆண்டுகோண்டான் அமரநாதன். அங்குச்செல்லும்போழுது இன்று தோலைவிலே அவன் திருமுடி கண்டோம். குகை வாயிலிலே அவன் புன்முறுவல் கண்டோம். வா என்று அழைத்தான், உள்ளே திருவடி காட்டிப் பேரின்பம் அளித்தான். அடியார் உருவில் அழிபசி நீக்கினுன். நம்மை யாண்டான் அவன். மீண்டும் மீண்டும் வருக எனப் பணித்தான். மற்றேர் முறை நல்ல பேளர்ணமியில் அடியுமுடியுங்காண நாம் வந்தே ஆகவேண்டும்" என்று மகாசந்நிதானத்தில் திருவாய் மலர்ந்தார்கள். அதுவரை கண்ட காட்சியிலே பேச்சற்று, இலயமாகி மேளனமாக வந்த எங்களுக்கு இது முதல் உபதேசம்.

வழி தெரியவில்லை :

நாங்கள் சென்ற குதிரைகள் நேரம் ஆகஆகக் களைத்து விட்டன. அயர்வுதோன்ற நடைவேகம் குறைந்தது. அதிலே ஒரு கருப்புக்குதிரை துடுக்குத்தனமுள்ளது. போதிசுமப்பது. ஒவ்வொன்றின் மீதும் வந்துவந்து உராய்ந்தது. கடித்தது. கனைத்தது. நல்ல நிலையில் மெதுவாகச் சென்றாலும் பொறுமையாகச் சென்ற மற்றக் குதிரைகளுக்கும் துன்பம் உண்டாக்கியது. மேலே ஏறிச் செல்லுவோர்க்கும் அதே துன்பம். இதனால் இரண்டோரு குதிரைகள் மிரண்டோடின. இரண்டோருவர் கீழேவிழ ஏதுவாயிற்று. அக்குதிரையை அடக்கி அடித்து விரட்ட வேண்டியதாயிற்று. பாதிவழி வந்ததுமே நன்றாக இருட்டிவிட்டது. வழி தெரியவில்லை. எங்களிடம் இருந்த மின்விளக்கைப்பொருத்தி ஒருவாறு வழிகண்டு மெதுவாகச் செல்லவேண்டியதாயிற்று. அதிலும் ஒரு குதிரை வழி தவறி ஒரு சிறு குன்றின் உச்சியில் ஏறி நின்றது. கீழேயும் இறங்க வழி தெரியவில்லை, வந்த வழியிலேயும் திரும்ப அச்சமாக இருந்தது அதன்மீது வந்தவருக்கு. மெதுவாக அங்கே சென்று அதனையும் நேர் வழியில் அழைத்துவர வேண்டியதாயிற்று.

மேயும் நேரம் :

வாவ்ஜன் 2 மைல் தொலைவிருக்கும்போழுதே எங்களுடன் வந்த வழிகாட்டி (வாவ்ஜனில் தங்கியவன்) எதிரே விளக்கெடுத்து ஓடோடியும் வந்தான். இதற்குள் மகா சந்நிதானமும் அடியேனும் இன்னும் இரண்டோருவரும் கீழே இறங்கி நடக்கலானோம். வந்த குதிரைகளில் சில புல்மேயும் ஆசையோடு மேலே இருந்த சுமைகளை உதறி

விட்டுப் பல இடங்களுக்கும் ஓடத்தோடங்கின. குதிரைக் காரர்கள் அவைகளே அடக்கி ஒட்டிவருவதற்குள் வேகு துன்பப்பட்டார்கள். ஒருவழியாக இரவு 8-45க்கு வாவ்ஜன் மரக்குடிலுக்கு வந்து சேர்ந்தோம்.

கனத்த குரல் :

உள்ளே நுழைந்தோம். அங்கும் இருட்டு. ஒரு கனத்த குரல், "ஏன் இவ்வளவு நேரம்? மலேவழியே அகால நேரத்தில் இப்படி வரலாமா? இருட்டிவிட்டால் எங்காவது ஒரிடத்தில் தங்கியல்லவா வரவேண்டும்?" என்று அதட்டிக் கேட்டது. 'யாரது' என்ருேம். 'முதலில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் வரட்டும்' என்றது. இதற்குள் வழிகாட்டியும் வந்தான். விளக்கேடுத்துப் பார்த்தோம். முதியவர் ஒருவர். வடநாட்டவர். எங்கள்மீது இரக்கங்கோண்டு, அமரநாதம் சென்றவர்கள் இதுவரை வரவில்லேயே, அகாலநேரம் ஆயிற்றே, என்ன ஆனுர் களோ, ஒருக்கால் பஞ்சதரணியில் தங்கிவிட்டார்களோ, என்று கவலேப்பட்டிருக்கிருர். எங்களேக் கண்டதும், கண்ட மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், கோண்ட கவலே யின் தாக்குதல் மேலேசோன்னது. அந்தப் பரந்த வேளியில் யாருமற்ற இடத்தில் இப்படித்தான் உறவுநிலே உண்டாகிறது. ஒருவருக்கோருவர் முகம் தேரியாத வராக இருந்தாலும் வந்தவர்கள் நல்ல நிலேயில் யாத்திரை முடிந்து ஊர் திரும்பவேண்டுமே, அறியாமையாலே அவர் களுக்குத் துன்பம் வரக்கூடாதே என்று மற்றவர் வருந்தி வழிபார்த்திருப்பது அங்கே இயற்கையாக நிகழ்வது. இந்த அனுபவம் எங்கும் கிடைக்காத ஒன்று. உலக சகோதரபாவம் இங்கே தோனிக்கிறதல்லவா? இதைப் புரிந்துகோள்ள எங்களுக்குச் சிறிதுநேரம் பிடித்தது

'நம்மீது உண்டான கனிவின் விளைவாகக் கேட்கிருரே ஒழிய நம்மீது குறைசொல்லும் நோக்கத்துடனே அல்லது வேறு எவ்விதமான கோபம் காரணமாகவோ அல்ல' என்பதை உணர்ந்து நாங்களும் உரிய மறுமொழி சொன்னேம்.

பனிக் கரடி :

இவ்விதம் எங்கள்மீது அன்புகொண்ட அப் பெரியவர் யார்? நாங்கள் அங்கிருந்து புறப்படும்பொழுதோ, முதல் நாளோ அவர் அங்கில்லையே, அவரும் யாத்திரை வந்திருக்கிருரா? அல்லது காட்சி காண வந்தவரா என்று அறிய எங்களுக்கும் ஆவல். உத்திரப் பிரதேச போலீஸ் அதிகாரி. அவர், அவர் தங்கையின் கணவர் (ஒரு இஞ்சினியர்), அவருடைய தங்கை மூவரும் அமரநாத தரிசனத்திற்கு வந்திருக்கிருர்கள். நாங்கள் காலையில் அமரநாதம் சென்றிருப்பதையும் அதுவரை திரும்பாத காரணம் தெரியவில்லை என்று எங்கள் வழிகாட்டி மயங்கியதையும் கேட்டிருக்கிருர். நேரம் ஆகஆக அங்குள்ளவர்களுக்கு மனத்துன்பம் அதிகரித்திருக்கிறது. அந்த நேரத்தில் எங்களுடைய மின் விளக்கு ஒளியைத் (Torch light) தொலைவிலே அவர்கள் கண்டிருக்கிருர்கள். மகிழ்ச்சிகொண்டு வழிகாட்டி வந்திருக்கிருன். பனிமலைக் கரடிகள், காட்டுப் பகுதியிலிருந்து வரும் கொடிய விலங்குகள் இவை அந்நேரத்தில் எங்கும் உலவுமாதலால், அந்த வேளையில் நாங்கள் தைரியமாக வந்தது தவறுதானே. இந்த நினைவு அவருக்கு ஒரு சிறிது கோபத்தை உண்டாக்கி இருக்கிறது.

நேசம் :

ஒருவர்க்கொருவர் அறிமுகமான பிறகு இனிமையாகப் பேசினுர். மற்றையோரையும் அறிமுகம் செய்துவைத்தார்.

மகாசந்நிதானத்தைக் கண்டு வணங்கி ஆசிபெற்றார். மகாசந்நிதானமும் ஆசி வழங்கி ஆதீன வெளியீடுகள், மகாலக்ஷ்மிதுர்க்கை பொறித்த பதக்கங்கள் (Pendants) அளித்தார்கள். அதனைப் பிரசாதமாக ஏற்று மகிழ்ந்த உத்திரபிரதேசக்காரர் தாம் மறுநாட் காலையில் அமர நாதம் செல்லுவதாகச் சொல்லி எங்களை ஒய்வெடுத்துக் கொள்ளும்படி விட்டுத் தம் அறைக்குச்சென்றார். வழிகாட்டி நாங்கள் வருமுன்னே குளிர்காயத் தீ வளர்த்து, கைகால் சுத்தஞ்செய்ய வெந்நீர் போட்டுவைத்துக் காத்திருந்தான். இசக்கி வாய்க்கினிய உணவு தயார்செய்துவைத்திருந்தான். கைகால் சுத்தம் செய்துகொண்டு பிரார்த்தனை செய்து உண்டு மனம்நிறை மகிழ்வோடு படுத்தோம்.

மரத்தால் :

மறுநாள் காலை 7 மணிக்கு எழுந்து பார்த்தோம். எங்கும் வெண்பனித்துகள். மரக்குடிசையின் கூரை, தரைப்பகுதி, தண்ணீருற்று, மலைப் பகுதி எல்லாம் வெண்பனி போர்த்தன. பனி பெய்துகொண்டே யிருந்தது. பஞ்சுத்துகளை மேலிருந்து ஒருவர் இடைவிடாது சிந்துவதுபோலக் காட்சியளித்தது. இரண்டங்குல உயரம் தரையெல்லாம் படிவு. வெண்மணலைக் கையில் அள்ளுவதை ஒப்ப அள்ளலாம். உருண்டையாக உருட்டலாம். பனித்துகளை எடுக்கும்பொழுது குளிர் இருக்காது. ஆனால் நேரம் ஆகஆக அது அதனுடைய வேலையைச் செய்கிறது. சொல்லுவார்கள் பனியின் மீது நடப்பதும் பனிபெய்யும்பொழுது செல்வதும் தவறு என்று. தொடக்கத்திலே துன்பந் தெரியாது. ஆனால், நேரமாகி பனி பட்ட பகுதி மரத்துவிட்டால் அது எப்பொழுதுமே

பரிகாரம் செய்யமுடியாதபடி மரத்தேபோய்விடும். வேட்டி எடுப்பதைத்தவிர அந்த உறுப்பு நமக்குப் பின்னே பயன் தராது. வேட்டினுலும் பட்ட மரம்போல் வலிதெரியாது. இரத்தம் அங்கே பரவி இருக்காது. பட்டது பட்டதே (Frost Bite, Snow Bite). மேலும் அப்பனி வலுத்துப் பெய்தால் ஒரு சில மணித்துகளுக்குள் ($\frac{1}{2}$ மணி $\frac{3}{4}$ மணி நேரத்திற்குள்) ஒரு சில அடி உயரம் அதாவது 5 அடி 6 அடி கூட மூடிவிடுவது உண்டாம்.

விரைவிலே புறப்படுங்கள்:

இந்த நினைவுகள் எங்கள் வழிகாட்டிக்கும் வாவ்ஜன் மரக்குடில் காவலனுக்கும் துன்பத்தைத் தந்தன. 'விரை விலே எல்லோரும் புறப்படுங்கள். இப்போழுதே இந்த இடத்தைவிட்டுக் கீழே சென்றுவிட வேண்டும். சிறிதும் தாமதம் கூடாது' என்ருர்கள். நாங்களும் புறப்பட்டோம் ஒரு சிறிது தேநீரோடு. அன்று அமர நாதனை தரிசனம் செய்வதேன்று வந்தவர்கள் தயங்கி னர். இரண்டோருநாட்கள் அங்கே தங்கியாவது வழி செம்மைப்பட்டால் அமரநாதம் சேல்லலாமே என்பது அவர்கள் எண்ணம். ஆனுல் குடிசைக்காவலன் சூடுபட்ட வன். சென்ற ஆண்டு அனுபவம் அவன் நினைவைவிட்டு அகலவில்லை. 'ஐயா இந்தப் பகுதி நிராதரவானபகுதி. இங்குள்ளநிலை எனக்குத்தெரியும். தயவுசெய்து தாங்களும் கீழே சென்றுவிடுதல் நலம். மனைவி மக்களோடு வந்த தாங்கள் நேற்று அமரநாத தரிசனம் செய்துவந்தவர்களைத் தரிசித்து விட்டீர்கள். அமரநாதனையே கண்டதாகக் கோண்டு திரும்பி விடுதலே மேலாகும். இப்போழுதே நீங்களும் புறப்படுதல் நலம். தங்கவேண்டாம்' என்று அவர்களையும் புறப்படச்செய்தான்.

முன் அனுபவம் :

வாவ்ஜன் மரக்குடில் காவலன் சென்ற ஆண்டில் பட்ட துன்ப அனுபவ நினைவு அவனைவிட்டு அகலவில்லை. அப்போழுது: அமெரிக்கர் ஒருவர் காஷ்மீரக் காட்சி கண்டு களிக்க வந்தவர் ஸ்ரீநகர படகு வீட்டுக்குச் சோந்தக்காரன் ஒருவனைத் தனக்கு வழிகாட்டியாக அழைத்துவந்தார். நான்கு குதிரைகளையும் இரண்டு குதிரைக்காரர்களையும் திட்டம் செய்து அழைத்துக்கோண்டு வாவ்ஜன் வந்தார். அன்றே பனிபெய்யத் தோடங்கியிருக்கிறது. அன்றிருந்த நிலையில் அவர்கள் அங்குத்தங்குவது தகாது - திரும்பிச் செல்லுதலே நலம் என்று எச்சரித்திருக்கிறான் காவலன். அவர்கள் திரும்பினர். அவனும் உடன் வந்திருக்கிறான். வரும்வழியில் பனி வலுத்துவிட்டது. முன்னே பின்னே வழி தெரியவில்லை. இதற்குள் தட்டுத் தடுமாறி பிசிக்காட்டி இறக்கத்தின் மேலே வந்துவிட்டார்கள். வாவ்ஜனிலிருந்து பிசிகாட்டி வர மூன்று நாட்களாயின. அங்கே நாலடி ஐந்தடிக்குப் புதுப்பனிப் பேய்திருந்தது. மேலும் பனி அடர்ந்து பெய்துகோண்டிருந்திருக்கிறது. பாவம் மேலும் என்ன செய்வதேன்று தெரியாமல் பக்கத்திலிருந்த மரமோன்றில் ஏறியிருக்கிறார்கள். மரக்கிளைகளிலும் பனி பேய்து கப்பிப்பிடித்திருந்திருக்கிறது. அதைத்தள்ளிவிட்டு இலை அடைசலில் தங்கினால் உயிர்தப்பலாம் என்று தங்கி யிருக்கிறார்கள். குடிசைக்காவலனுக்கும் என்ன செய்வ தேன்று புரியவில்லை. அங்கே யாரும் மற்றவர் எவருக்கும் உதவிசெய்யக்கூடியநிலையில்லை. அவரவரும் அவரவரைக் காத்துக்கோள்ள வகைதெரியாது தவித்திருக்கிறார்கள்.

குடிசைக் காவலன் ஒன்றும் புரியாமல் மேட்டுப் பகுதி ஒன்றில் வந்து நின்று தன் முரட்டுக் கம்பளியில்

தன்னைச் சுற்றிக்கொண்டு கீழே உருண்டு வந்து கால் பாவக்கூடிய இடத்தில் அதாவது பிசிக்காட்டியின் அடியில் வந்து உயிரைக் காத்துக்கொள்ளவேண்டுமென்ற வேகத்தில் ஓரளவு நடந்தும், படுத்துப்புரண்டும் சந்தன்வாரிவரை வந்திருக்கிறான். இங்கே கடையுள்ள பகுதிக்கருகில் வந்த பிறகு உணர்விழந்து கிடந்திருக்கிறான். நல்லவேளையாக கடைக்காரர் ஒருவர் அவனை அடையாளம் கண்டு எடுத்து வந்து நெருப்பிலே வாட்டி ஓரளவு உயிர் இருக்கிறதெனத் தெரிந்து குதிரை மீது அவனைப் போட்டு எடுத்துச் சென்று பஹல்காமிலுள்ள அதிகாரியிடம் ஒப்படைத்திருக்கிறான். மருத்துவ உடனடிச் சிகிச்சைகள் செய்து அவனுணர்வு வந்து நடந்த செய்தி தெரிய இரண்டு மூன்று நாட்களாகியிருக்கின்றன.

பிறகு பிசிக்காட்டிப் பகுதிக்குச் செல்ல 10, 15 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. அதுவரை பனிபெய்து கொண்டேயிருந்திருக்கிறது. அவ்வழியே செல்ல முடிந்த பொழுது அங்குச் சென்று பனியை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். அமெரிக்கர், வழிகாட்டி, குதிரைகள், குதிரைக்காரர் அனைவரையும் கண்டெடுத்தனர். அவர்கள் எல்லோரும் மரத்தில் ஏறி அமர்ந்தபடியே இருந்தார்கள். உடலில் வாட்டமில்லை. ஆனால் உயிர்தான் இல்லை.

இதுபோல பலமுறையும் நிகழ்ந்திருக்கிறது இப்பகுதியில். ஆனால் குடிசைக் காவலனே நேரிலே இத்தடவை மாட்டிக்கொண்டு உயிர்தப்பியிருக்கிறான். இதன் விளைவுதான் பனி பெய்வதைக் கண்டதும் அவன் எங்களை விரைவில் புறப்படச்செய்தது. அதுவும் ஓரளவு நல்லதாயிற்று. அங்கிருந்த அனைவரும் (குடிசைக் காவலனும் கூட.) விரைந்து வந்தோம்.

கனவு பலித்தது :

இவ்விதமாக எங்கள் அனுபவம் குறித்துப் பேச்சுவந்தது மறுநாள். "அமரநாதம்சென்ற அன்று அதாவது திங்கட்கிழமை பயணத் தொடக்கத்திலோ, வழியிலோ அல்லது மீளும்பொழுதோ இப்பனி பெய்திருந்தால் இப்படித்தானே நாமும் ஏமாற்றத்தோடு மீளவேண்டிவரும் ; மிகுதுன்பம் அடைந்திருப்போம் '' என்றேன். '' அதெப்படி நிகழும் ? நாதன் என்னுள் இருக்க முடியாத செயலுமுளதாமோ ? நமக்குத்தான் முதல்நாளிரவே அமரநாதன் அழைப்பு வந்து விட்டதே ? '' என்றருளினார்கள். அவசரக் கடித நிலையில் திரும்பிப் பகல்காம் வரும்படி அதிகாரி எழுதியிருந்தாரே அதைக்குறித்தா உத்தரவாகிறது ? சோதனை செய்து மன உறுதிகண்டார் என்று சொல்லிக்கொள்ளலாம் '' என்று என் அவசரபுத்தியால் கேட்டுவிட்டேன். குறுநகைகொண்டார்கள். "தெளிவு ஏற்படுதல் அவ்வளவு எளிதல்ல. முதலிலே உறுதிவேண்டும். திங்கள்காலையில் (திருமுறைப் பாடல்) திருநேரிசைப் பாடல் * பாராயணம் செய்து எழுந்தது நினைவிருக்கிறதா ? அதன் உட்பொருளாய் அமைந்த ஒரு நிகழ்ச்சியால்தான் நமக்கும் உறுதிபிறந்தது. அழைப்புக்கிடைத்தும் காணாது செல்லுதல் கூடாது என்று தெளிந்தோம் '' என்று உத்தரவாயிற்று. விளங்கவில்லை எங்களுக்கு. '' அழைப்பு எம்முறையிலோ '' என்றுகேட்டேன்.

---

* வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போல வந்தென்
உள்ளமே புகுந்துநின்றார்க்(கு) உறங்குநான் புடைகள்
போந்து
"கள்ளரோ புகுந்தீர்" என்னக் கலந்துதான் நோக்கிநக்கு
"வெள்ளரோம்" என்று நின்றார் விளங்கிளம் பிறையனாரே.

— அப்பர் - திருநேரிசை.

“ கனவில் வந்து உட்புகுந்தான். இப்படி ஒரு காட்சி. எங்கும் பனிப்பாறைகள், பனிப்பாலங்கள். வழியெல்லாம் பனி உறை உயர் சிகரங்கள். வான்முகடு முட்டும் சிகரங்கள். பல உருவில் அமைந்தவையாக விளங்கிய வெள்ளி மலைச் சிகரங்கள். இறைவன் ஜடாமுடியிலிருந்து இறங்கும் பால்கங்கைபோலப் பனி உருகிவரும் அருவிகள். மேலே மேலே ஏறிச்சேல்கிறோம். அங்கே ஆண்டவன் செம்மேனி எம்மான், வெண்ணீறுதுதைந்த உருவினன். கிழ உருவினன். அழைக்கிறான். “ மயங்காதே ! வா. இங்கே இந்த உச்சி முகட்டுக்கு வா காணாத காட்சியெல்லாம் காணலாம் வா ” என்கிறான். விரைந்து சென்றோம். கண்டோம். மயங்கினோம். பேச்சற்ற நிலை வந்தது. கண்ணீர்மாரி பொழிந்தது. உரைதடுமாறிற்று. அங்கே கயிலைநாதனைக் கண்டோம் பனி இலிங்க உருவில். திக்காருமில்லை, சொக்கே நின்தாளே துணை என்று மனம் நெகிழ்ந்து வழிபாடுசெய்தோம். விழித்துக்கொண்டோம். வாவ்ஜன் மரக்குடிசையில் இருப்பதாகத்தெரிந்தது. கண்ட காட்சியை மறக்கமுடியவில்லை. கண்ணைமூடிப்பார்த்தோம். பழைய இருள் கலந்த ஒளி நிலையைத் தவிர வேறொன்றும் காணவில்லை. நன்றாகக் கண்விழித்து எழுந்து பார்த்தால் அதிகாலைநேரம் என்பது தெரியவந்தது. இதுவரை கண்டது கனவு நிலைதான் என்பதும் தெளிவாக அதிக நேரம் பிடித்தது. அப்போழுது நம் துணைவராக வந்தவர்கள் அப்பர் சுவாமிகள். அவர்கள் செஞ்சொல்தான் நினைவுவந்தது. மனம் நிறைவுற்றது. அப்போழுதே முடிவுசெய்துவிட்டோம் அமரநாதன் தரிசனம் தவறாது கிட்டும் என்று. அந்த உறுதிதான் நமக்குத் துணைசெய்தது. தரிசனம் கிடைத்தது. ஆண்டவன் அழைப்புப் போய்க்குமா ? ” என்று திருவுளம் நெகிழ்ந்து உத்தரவாயிற்று.

வழுக்கலும் சருக்கலும் :

வாவ்ஜனிலிருந்து மீண்டும் வரும்போழுது அடியேனும் வழிகாட்டியும் இசக்கியும் கால்நடையாக வந்தோம். பனி பேய்துகோண்டிருந்ததாலும், அதற்கு முன்னுளுக்கு முந்தியநாள் மழை பேய்ததநாலும் வழியேல்லாம் வழுக்கலும் சருக்கலுமாக இருந்தது. கையில் ஊன்றுகோலிருந்தபடியால் ஒரளவு நடந்தோம். அதனுல் இளேப்பு அதிகமாயிற்று. பிசிக்காட்டிக்குச் சிறிது மேலேவந்தோம். அங்கே ஒரு சிறு கடும் இறக்கம். கையில் ஊன்றுகோலிருந்தாலும் மேலும் நடந்தால் வழுக்கி விழநேரும் போல இருந்தது. நல்வினேப் பயனுக அருகாமையில் குதிரை மேய்ப்போன் ஒருவன் தன் குதிரைகளே மலேயில் மேய்த்துநின்ருன். அவனே அழைத்து மூன்று நல்ல குதிரைகள் கோண்டுவரச்சேய்து உதவிக்கு இருவரையும் அழைத்துக்கோண்டு சந்தன்வாரிக்குப் புறப்பட்டோம். முன்னே சோல்லியிருக்கிறபடி மலேயுச்சியில் ஏறி மேய்ந்து பழகிய குதிரைகள் அவைகள் ஆகவே வேகுநிதானமாக இறக்கங்களில் இறங்கின. ஒவ்வோரு இடத்தில் கால் வழுக்கினுலும் சமாளித்துக்கோண்டு மிகச் சாதுரியமாக நடந்தன. பிசிக்காட்டி இறக்கத்தில் ஒவ்வோரு திருப்பத்திலும் ஒவ்வோரு முனேயிலும் உள்ள குண்டுக் கற்களிலும் நான்கு கால்களும் போருந்த வந்து நின்று, கீழே அடுத்த அடி எங்குவைப்பதேன்பதை முடிவுசேய்து அது இறங்குவதற்குள் நமக்கு '' நாம் இத்தோடு ஒழிந்தோம். குதிரையோடு விழுந்து உருண்டேவிடுவோம் '' என்று அச்சமாக இருக்கும். ஆனுல் அவை சிறிதும் தவறவில்லே. (சர்க்கஸ் குதிரைகள் வேலே சேய்வதுபோலவே) எங்களேச் சுமந்து வந்து சந்தன்வாரி மரக்குடிலில் சேர்த்தன.

அதற்குச் சிறிதுமுன்புதான் மகாசந்நிதானமும் மற்றையோரும் அங்கு வந்திருக்கிறார்கள். காரணம் பிசிக்காட்டியின் பிசாசுத் தன்மையை நினைத்து அஞ்சிக் குதிரைகளிலிருந்து இறங்கிக் கால் நடையாக வழுக்கலிலும் சருக்கலிலும் வேகு நிதானமாக வந்து சம வெளிப் பகுதி வந்ததும் குதிரை இவர்ந்தும் வந்திருக்கிறார்கள். எங்களை விட அவர்கள் களைத்திருந்தார்கள்.

விநாயக சதுர்த்தி :

நாங்கள் சாந்தன்வாரிக்கு மீண்ட நாள் விநாயக சதுர்த்தி நாளாகும். அன்று அந்த மரக்குடிலுக்குப் பக்கத்தில் ஓடும் சிற்றாற்றில் ஸ்நானம் செய்து மான சீகமாக விநாயக வழிபாடு நிகழ்த்திப் பாராயணம் செய்து அங்குத் தங்கி இளைப்பாறினோம். மறுநாள் அதிகாலையில் அதைவிட்டுப் புறப்பட்டு பஹல்காம் வந்து அங்கு அன்று முழுவதும் தங்கி யிருந்தோம். யாத்திரைத் தொடக்கத்தில் வாடகைக்கு எடுத்துச் சென்ற பொருள்களை இங்கே திரும்ப ஒப்புவித்துவிட்டு அதற்குள்ள சிறு வாடகையும் கொடுத்து ரசீது பெற்றோம். நாங்கள் திரும்புவந்த செய்தி ஸ்ரீநகரத்திற்குத் தொலைபேசியின் மூலம் அறிவிக்கப் பட்டது. நாங்கள் ஸ்ரீநகரில் இரண்டொரு நாள் தங்கி ஊர் திரும்ப உத்தேசம் என்பதையும் தெரிவிக்கப்பட்டது.

மீன்கள் :

மறுநாள் ஸ்ரீநகரத்திற்கு எங்களை அழைத்து வர அரசாங்கத்தினர் உந்தூர்தி ஒன்று அனுப்பி இருந்தார்கள். ஸ்ரீநகர் செல்லும் வழியிலே மாட்டன், அனந்தநாகம், வெறிநாகம் முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீநகரம் மாலை 7 மணிக்கு வந்துசேர்ந்தோம். மாட்டன் ஆலயத்திலும், அனந்தநாக் ஆலயத்திலும், அழகான

குளங்கள் அமைக்கப்பட்டு அவைகளின் நடுவே சிவ லிங்கத் திருமேனி எழுந்தருளச் செய்து அழகாக வைத் திருக்கிருர்கள். குளங்களில் அழகான பெரிய மீன்கள் பல ஆயிரக்கணக்கில் மந்தைமந்தையாக ஊர்ந்து வருகின்றன. அன்பர்கள் ரோட்டி, மிட்டாய் முதலிய தின்பண்டங்கள் வாங்கி அந்த மீன்களுக்குப் போடுகிருர்கள். அந்த மீன்களை யாரும் பிடிப்பதில்லை. இவ்வாலயங்களில் சைவ வைணவ வேறுபாடுகள் கிடையாது. எல்லா மூர்த் தங்களும் அமைத்து வழிபாடுகள் நடைபெறுகின்றன.

காஷ்மீரக் கோவில்கள் :

அநந்தநாகத்தில் கந்தகஊற்று ஒன்றிருக்கிறது. நோயுள்ளோர் பெருமானை வேண்டிக்கோண்டு அந்தத் தண்ணீரில் குளித்தால் நோய் அகலுமென்று நம்புகிருர்கள். நாட்கணக்கில் தங்கி அப்படியே நியமமுடித்துச் செல்லு கிருர்கள். பெரும்பாலும் காஷ்மீரத்திலுள்ள கோயில்களில் குளங்கள் அமைத்து அதன் நடுவில் பெருமானையோ பெருமாட்டியையோ ஒரு சிறு கோவிலில் எழுந்தருளப் பண்ணி கரையிலிருந்தே வழிபாடுகள் செய்கிருர்கள். பூசகர் பெருமானுக்கு மலர் அணியச் செல்லுவதற்கு அவ்வப்போழுதும் சிறு பலகை போட்டுக் கடந்து செல்லு கிருர்.

ஜீலம் உற்பத்தி :

வேறிநாகத்தில் ஜீலம் நதி உற்பத்தியாகிறது மோகலாயசக்கரவர்த்தி ஜஹாங்கீர் அந்த நதி உற்பத்தியாகு மிடத்தில் எட்டுப்பட்டையில் ஒருபெரிய கட்டிட அமைப்புச் செய்திருக்கிருன். சுற்றிலும் மாடகூட அமைப்புக்கள்

கட்டி அவற்றிலிருந்து பெண்கள் (Zenana) தனிவழியில் நேரே அக்குளத்தில் இறங்கி நீராடப் படிக்கட்டும் அமைத்திருக்கிறுன். அவை இப்போழுது சிதைந்த நிலையிலிருந்தாலும் பார்க்க மிக அழகாக இருக்கின்றன. தண்ணீர் 80 அடி ஆழம் இருக்குமாம். இங்கேயும் மீன்கள் அதிகம் உண்டு. 6 அடி அகலம் 4 அடி ஆழம் உள்ள வாய்க்கால் ஒன்று அக்குளத்திலிருந்து கட்டிவிடப்பட்டிருக்கிறது. அதுநிறையத் தண்ணீர் மிக வேகமாக ஓடிக்கோண்டிருக்கிறது. இதுதான் ஜீலம் பெருநதி ஆகிறது. முன்காலத்தில் விதஸ்தா (Vitasta) என்றழைக்கப்பட்டது. சுற்றிலும் பூங்கா அமைப்பு. அது மோகலாயத் தோட்ட அமைப்புக்களில் (Moghul gardens) சிறந்தவற்றில் ஒன்று.

அயர்வு நீங்கிற்று :

ஸ்ரீநகர் வந்த எங்களுக்கு முன்பு கோடுத்ததுபோல யாத்திரிகர் தங்கும் விடுதியில் ஒரு அறை கோடுத்தார்கள். சமையலிடமும் கோடுத்தார்கள். முன்று நாட்கள் அங்கே தங்கினேம். ஊர்சுற்றி அங்குள்ள மோகலாயர் பூங்காக்கள் (நிஷாத், ஷாலிமார் முதலியவற்றையும்), தால் ஏரி. ஜீலம் நதி இவைகளேயும் மற்றும் பார்க்கத்தகுந்த இடங்களேயும் கண்டு மகிழ்ந்தோம். பனிமலையில் செய்த கடும் யாத்திரையின் அயர்வு நீங்கவும் இது உதவிற்று.

கீர்பவாநி :

நாங்கள் வந்த மூன்ருவது நாள் அதிகாலையில் திரு. கௌவுல் அவர்கள் ‘ இன்று அஷ்டமி ஆகவே அம்பிகை தரிசனம் மிகவும் விசேஷம். அதிலும் கீர்பவாநி (பாற்கடலில் அமர்ந்த பவாநி அம்மை) தரிசனம் இந்த நாட்டு மக்கள் அதிகம் விரும்பிச் சேய்வது. சேன்று வரலாம் ’

என்று மகாசந்நிதானத்தையும் அழைத்துச்சென்றார். உயர்ந்த சேனார் மரம் அடர்ந்த ஒரு நல்ல தோட்டத்தில் முன்னே சொல்லியிருப்பதுபோல ஒரு குளத்தின் நடுவிலே அம்பிகை எழுந்தருளி இருக்கிறாள். முன் இடமும் சுற்றுப்புறமும் தூய்மையாக, மனதைக் கவரத்தக்கதாக, பக்தி உணர்வைப் பெருக்கக் கூடியதாக அமைந்திருக் கின்றன. வழிபாடுகள் சிறப்பாகச் செய்து மீண்டோம்.

நிறம் மாறினால் :

அந்தத் திருக்குளத்திலுள்ள தண்ணீர் பெரும்பாலும் பால்போன்று வெண்மையாகவே இருக்கும். சிவந்தால் ரத்தக்களரி. கருப்பானால் சொல்ல வேண்டியதில்லை. கடும் பஞ்சமும் பூகம்பமும், இவையில்லாவிட்டால் சொல்லொணாத நாட்டுத் துன்பங்கள் பலவும் வருமாம். நாங்கள் சென்ற பொழுது வெள்ளை நிறம். நல்ல சுபிட்ச மான காலம்.

தரிசனம் முடித்துக்கொண்டு வரும் வழியில் ஹரி பருவதம், (அக்பர் கோட்டை) என்ற ஒன்றிருக்கிறது. அங்கேயும் அம்மையின் ஆலயம் உண்டு. அதுபோன்ற அஷ்டமி நாட்களில் மக்கள் ஏராளமாக வந்து வழிபட்டுச் செல்லுவார்கள் என்று திரு. கௌவுல் சொன்னார்.

புது அனுபவம் :

இவ்விதமாக வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்கள் ஸ்ரீநகரில் தங்கியிருந்து திங்கட்கிழமை அதிகாலை யில் உந்தூர்திமூலம் பதன்கோட்டிற்குப் புறப்பட்டோம். பனிஹால் பகுதி தாண்டி ராம்பாண் வரும்வழியில் அது வரை நாங்கள் கண்டறியாத புது அனுபவம் காத்திருந்தது.

இமயப் பாட்டையில் மழைபெய்தால் மலையில் மேலேயுள்ள பகுதிகளிலிருந்து மழைநீர் ஓடிவரும்பொழுது மண் கல் இவையிரண்டையும் அடித்தேடுத்துவருவதில் சேருகிவந்து வழிந்து தேங்கிவழியடைத்துத் தூர்த்துவிடுமேன முன்னே சோல்லி யிருக்கிறது. அவ்விதமாக வழியடைப்பு எங்களுக்கு ஏற்படவில்லை. ஆனல் நாங்கள் ஸ்ரீநகரைவிட்டுப் புறப்படும் நாளுக்கு முந்திய மூன்ருவது நாள் ஜம்முப் பகுதியில் மலை நேடுகிலும் பேய்த மழையின் காரணமாக ராம்பாண் பகுதியில் பல இடங்களில் பல அடி உயரத்திற்குச் சேறு வழிந்து வழி அடைத்துவிட்டது.

அதனல் ஸ்ரீநகர் வரவேண்டிய சரக்கேற்றி பேருந்துகள் பல நூற்றுக்கணக்கானவை குத்துக்கும் (Kud) பனிஹாலுக்கும் இடைப்பட்ட இடத்தில் இரண்டு வழிகளிலும் மேலே செல்லமுடியாமல் நிறுத்தப்பட்டிருந்தன. நல்லவேளையாக நாங்கள் வந்த அன்று அச்சேற்றைப் பக்கத்தில் ஓடும் சேனுப்பில் வாரிவிட்டார்கள். உந்தூர்திகள் ஓரளவு மேல்லமேல்ல அப்பகுதிகளில் ஊர்ந்து ஊர்ந்து தாண்டிச் சேன்றன. நாங்கள் சேன்ற காரும் அவ்விதமே சேன்று குத்தை அடையும்பொழுது உச்சி மணி 1-30. அங்கு யாத்ரீகர் விடுதியில் தங்கி உணவருந்தி மேலே சேன்ருேம். இரவு முன்னேரத்தில் பத்தன்கோடு சேன்றுவிடவேண்டும் என்ற ஆர்வத்தில் ஜம்முவில்கூட அதிகநேரம் தங்காது சேன்ருேம்.

டயர் வெடித்தது :

ஆனல் இத்தடவை எங்கள் காரின் பின் சக்கரத்தின் டயர் வேடித்து காற்று வேளிச் சேன்றுவிட்டபடியால் நடுவழியில் நிறுத்தப்பட்டது. காரோட்டி அரசாங்க

ஊழியஞக இருந்தாலும் டயர் மாட்டக்கூடத் தெரிய வில்லை. அந்தக் காரில் அதற்கு வேண்டிய கருவிகளும் சரியாக இல்லை. நாங்கள் எல்லோரும் காரைத்தூக்க பக்கத்திலுள்ள ஆற்றுப்பகுதிகளிலிருந்து குண்டுக்கற் களைத் தூக்கிவந்து முட்டுக்கட்டிக் கொடுத்தோம். இதுபோன்ற உதவிகள் செய்தும் டயர் மாட்டிக்கொண்டு புறப்பட அந்தக் காரோட்டிக்கு அதிகநேரம் பிடித்தது. இரண்டு மணிநேரம் மிக முயன்று அந்த வேலையை முடித்தான். மாற்று டயர் இருந்தது. மாட்டிஞன். பிறகு ஒருவாறு பத்தன்கோட்டிற்கு வந்துசேர இரவு மணி 10 ஆயிற்று.

பீஸ் (Beas) நதி :

வழியில் ஜம்முப்பகுதி முடிவடைந்தது. பாரதப் பகுதி தொடங்குமிடத்தில் லக்கான்பூர் (Lakhanpore) உள் நுழைவுச் சீட்டுக்களைப் (Permits) பரிசீலித்து வெளியே செல்ல அனுமதிக்கிருர்கள். அதனைத் தாண்டி சிறிது தொலைவந்ததும் பீஸ் (Beas) நதியைக் கடக்க மரப்பாலம் ஒன்று அமைத்திருக்கிருர்கள். அந்த ஆறு அங்கு சுமார் ஒரு மைலுக்கு மேற்பட்ட அகலமுள்ளதாக இருக்கிறது. அதற்கு ராணுவக்காவல் கடுமையாக இருக் கிறது. இரவு 9 மணிக்குமேல் அதில் எந்தக் காரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது

மேலும் அதற்குச் சற்று தொலைவில் மாதவ்பூர் என்னுமிடத்தில் அந்த நதியின் குறுக்கே அணைகட்டித் தண்ணீரைத் தேக்கிப் பாசனத்திற்கு எடுத்துச் செல் கிருர்கள். இதனுல் பஞ்சாபில் ஒரு பகுதி நன்ருகச் செழித்து ஓங்கி வருகிறது. இவைகளைப் பார்த்துக் கொண்டே பத்தன்கோடு வந்து சேர்ந்தோம். வரும்

வழியில் பொழுதுபோக்காகப் பலவும் பேசி வந்தோம். அதில் ஸ்ரீநிவாசராவ் ஒரு சிறு மலையாளக் கதை ஒன்று சொன்னார்கள்.

*நல்ல பௌர்ணமி திவசம். சந்திரன் பிரகாசிச்சுகொண்டிருக்கின்னு தல்சமயம் இரண்டுவீட்டுகார் நேரம் போக்கு பறையான் துடங்ஙி. பல காரியங்ஙளும் பறஞ்ஞு கொண்டிருக்கின்னு. அப்போழ் ஒரு வீட்டுக்காரன் பறஞ்ஞு 'என்டே வீட்டில் கிணறு ஒண்ணு குழிச்சு. அப்போழ் கண்டு அதில் ஒரு இரும்பு கஷ்ணம். அதே எந்த ஆணன்னு நினக் கறியாமோ? அதே பண்டே என்டே அப்பூப்பன்மார் கம்பியிலா சம்சாரிச்சுக் கொண்டிருன்னது' இதுகேட்ட அயல்வாசி பறஞ்ஞு, 'என்டே வீட்டிலும் கிணறு ஒண்ணு ஞானும் குழிச்சு. பக்ஷே சேட்டா! அதில் ஒன்னிம்கண்டில்லா. காரணம் எந்தாணன்னு நினக் கறியாமோ? என்டே அப்பூப்பன்மார் பண்டு சம்சாரிச்சு கொண்டிருந்தது கம்பியிலாக் கம்பியிலாண. இங்ஙனே ரண்டு கூட்டுகாரும் தம்மில் தம்மில் சிரிச்சு சம்சரிக்கான் தொடங்ஙியதே இரண்டு கூட்டரும் ஹாஸ்யமாயி விஷாதிச்சு கொண்டு பிரிஞ்ஞு.

---

* ஒரு பௌர்ணமி நாளில் அடுத்தடுத்த வீட்டுக்காரர் இருவர் பொழுதுபோக்காக நிலவொளியில் உட்கார்ந்து பேசத் தொடங்கினார்கள். பலவும் பேசிவரும்போழுது ஒருவர் "என் வீட்டுக் கிணறு தோண்டியபொழுது ஆழத்தில் சிறு இரும்புக் கம்பித் துண்டொன்று கிடைத்தது. அது எதைத்தெரிவிக்கிறதென்றால், என் முன்னோர் அக்காலத்தில் தந்திமூலமே எல்லாம் பேசினர் என்று. ஆச்சரியமாக இல்லையா?" என்றார். மற்றவர் நினைத்தார் முதலாமவர் தன் மூதாதைகளை மிகவும் குறைத்துப் பேசிவிட்டார் என்று. இவரும் தொடங்

காலையில் 7 மணிக்குத் தொடங்கிய எங்கள் பயணம் இரவு (10 மணிக்கு) பத்தன்கோட் வரும்வரை இதுபோன்ற வேடிக்கைப் பேச்சுக்களும் சத்விஷயப் பேச்சுக்களுமாகக் கழிந்தது.


பத்தன் கோட்டில் இரயிலடியிலுள்ள தங்குமிடத்தில் (Retiring room) இரவின் ஒரு பகுதியைக் கழித்தோம். இரவு 4-30 மணிக்குப் புறப்படும் பாம்பே மெயிலில் ஏறி அமிருதசரசுக்கு மறுநாள் காலை 8 மணிக்கு வந்துசேர்ந்தோம். அங்கும் இரயிலடியிலேயே (Retiring room) தங்குமிடத்தில் எங்கள் பேட்டிபடுக்கைகளை வைத்துவிட்டு நீராடி காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டோம். ஒருவரைப் பண்டங்காவலாக வைத்துவிட்டு நகருக்குள் சென்று பஞ்சாப் படுகொலை நடந்த ஜலியன்வாலாபாக், சிக்கியருடைய தங்கக்கோவில், துர்க்கா மந்திர் இவற்றுக்குச் சென்று வந்தோம்.

கிறார் "அதைவிடப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால், என் வீட்டில் நானும் கிணறு தோண்டினேன். அப்போழுது கீழே மணலைத்தவிர வேறொன்றுமில்லை. இது எதைக்காட்டுகிறது சொல்பார்ப்போம். அக்காலத்தில் அவர்கள் கம்பியில்லாத் தந்திமூலம் பேசினார்கள் என்பதைக் காட்டவில்லையா இது" என்றார். தான் இவன் முன்னோரை முட்டாள் என்று சொன்னால் தன்முன்னோரை இவன் அடிமுட்டாள் என்றல்லவா சொல்லிவிட்டான் என்று முன்னவருக்கு மனவருத்தம் உண்டாயிற்று. இருவரும் சிரித்துக்கொண்டாலும் மனதிலே கோபம் மூண்டது. முடிவில் பேசாமல் மௌனமாகக் கலைந்தனர். அன்று தொடங்கிய மனவருத்தம் பின்னே தெளியவேயில்லை.



அமிர்தசரஸ் தங்கக்கோவிலில்

அமிர்தசரஸ் :



ஜலியன் வாலாபாக் (பஞ்சாப் படுகோலைச் சின்னம்)

ஜலியன்வாலாபாக் :

இது ஒரு சிறு பூங்கா. ஊரின்நடுவில் அமைந்தது. நேருக்கமான கடைவீதிப்பகுதியில் அமைந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி நடந்த அந்தக் காலத்தில் ரேளலட் சட்டத்தை எதிர்த்து இங்கே 13-4-1919ல் கூடிய கூட்டத் தைக்கலேக்க முன்பு ஜேனரல் டயர்என்பவன் அநியாயமாகக் காட்டு விலங்குகளே வேட்டையாடுவதுபோல நுழைவுகளே அடைத்துவிட்டு சுழல் துப்பாக்கி வைத்து நாலாபுறமும் சுட்டிருக்கிருன். ஆணும் பேண்ணும் குழந்தைகளுமாக ஒன்றுமே அறியாத பலரும் படுகோலேசேய்யப்பட்டனர்.

இந்தவீரச்சேயலுக்கு அவனுக்கு அக்கால அரசாங்கம் வீரபட்டயமும் வீரவாளும் அளித்து பதவியிலும் உயர்த் தியது. இது நம்மக்களின் உள்ளக்கோதிப்பை அதிகமாக்கி, பின்னே ஆங்கிலேயரைக் கண்டாலே அடித்துக்கோல்ல வேண்டுமேன்ற வேறிக் கூட்டத்தையும் நம்முள்ளும் உண்டாக்கியது. காந்தி அடிகள் ‘ சாத்வீகப் போராட்டம் நடத்தவேண்டும்; இரத்தம்சிந்தக்கூடாது’ என்று எவ்வளவு சோல்லியும் அதற்கும் சேவிசாய்க்காது உயிரை வேறுத்து சதிச்சேயலில் பலரும் ஈடுபடலாயினர். பின்னர் நிகழ்ந்தது நம்மேல்லோருக்கும்தேரியும். இன்று நாம் சுதந்திரம் பேற்ற நிலேயில் வேடிக்கைபார்ப்பதற்காக அந்த இடத்திற்குப் போனுலும் அந்த மண்ணே மிதித்ததுமே, அங்கே குண்டு பட்ட இடங்கள் இதுவேனக் குறியிட்டுவைத்திருக்கும் இடங்களேக் கண்டதுமே ஒன்றுமே அறியாத சாதுவுக்கும் இரத்தம் துடிக்கிறது. மனதிலே ஒரு வேகம் பிறக்கிறது.

அந்த இடத்தை இப்போழுது சுதந்திரம் வாங்கித்தந்த புநித இடமாகக் கட்டி, நினேவுச் சின்னமும் எழுப்பிவரு


கிறார்கள். பாரதத்தாயின் தளைநீக்க அடியிட்ட அந்த மண்ணும் புனிதமானதுதானே !

தங்கக்கோவில் :

சீக்கியருக்கு மிகமுக்கியமான தலம். பெரிய விசால மான இடத்தில் இது அமைந்திருக்கிறது. நல்லமுறையில் நடத்தப்படுகிறது. ஜாதிமத இனவேறுபாடு அங்குக் கிடையாது. யாரும் போகலாம். எந்நேரத்திலும் போகலாம். எப்பொழுதும் திறந்தே இருக்கும். அதைப் பார்க்கவோ அல்லது வழிபடவோ வருவோர் யாராக இருந்தாலும் உடனிருந்து அழைத்துச்சென்று அங்கு நடந்துகொள்ள வேண்டிய முறை, அந்தக் கோவிலில் உள்ள ஒவ்வொரு இடத்தின் மகிமை முதலியன சொல்லி அழைத்துப்போக உதவிகள் (Guides) வைத்திருக்கிறார்கள்.


அப்படியொருவர், தமிழ் நன்றாகப் பேசத்தெரிந்தவர் (சீக்கியர்தான்) உடன்வந்தார். ஒவ்வொன்றையும் நன்றாக விளக்கிச்சொன்னார். வாயிலிலேயே ஒரு தொட்டியில் நீர் நிறைத்துவைத்திருக்கிறார்கள். அதில் அவரவரும் காலை சுத்தம் செய்துகொள்ளவேண்டும். நாம் காலை நனைக்கு முன்னே அதேதண்ணீர் பல நூற்றுக்கணக்கானவர் கால் தோய்த்தெடுத்து அழுக்காக இருந்தது. ஆனால் அங்கு உள்ள நியதிப்படி அப்படிப் பார்க்கக்கூடாது. அதே தண்ணீரில்தான் நம்முடைய காலையும் நனைத்தெடுக்க வேண்டும். பிறகு தலையிலே துணி கட்டிக்கொள்ள வேண்டும். நம்முடைய காலணிகளை அங்கேயே விட்டுவிட வேண்டும். சுற்றிலும் திருமாளிகைப்பத்தி அமைப்பில் மிக உயரமான கட்டிடப்பகுதி இருக்கிறது. அதைத்

அமிர்தசரஸ் :



தங்கக் கோவில் (சீக்கியர் ஆலயம்)

அமிர்தசரஸ் :



அமுத புஷ்கரணி

தாண்டி உள்ளே நுழைந்தால் ஒரு பெரிய அழகிய படிக் கட்டுகளுடன் கூடிய குளத்தின் நடுவில் பெரிய தங்கக் கோவில் காட்சியளிக்கிறது. வெயில்பட்டு அது ஒளிவீசி நிற்கிறது. சதுர அமைப்புடன் கூடியது. விமானங்கள் இருக்கின்றன. வெளிப்புறம் பூராவும் செப்புத் தகடு வேய்ந்து அதன்மேல் தங்கத்தகடுகள் (Gold Plated) பதித்திருக்கிறார்கள். நான்குபுறமும் வாசல் அமைப்பிருக் கிறது. ஆனால் கீழ்புறம் வாயிலில் குளத்தைக் கடக்க பாலமும் அதற்கு உயரமான வளைவும் அமைத்திருக் கிறார்கள்.

குளத்தில் ஏராளமாக மீன்கள் இருக்கின்றன. பீஸ் (Beas) ஆற்றிலிருந்து அந்தக் குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. அந்த மீன்களை யாரும் பிடிக்கக் கூடாது. அந்தக்கோவிலைச் சுற்றிலும் முன்பிருந்த முதல் சுற்றுத் திருமாளிகைப்பத்தியை இடித்துவிட்டு சலவைக்கல் தூண் நட்டு அழகாகக் கட்டிவருகிறார்கள். நூற்றுக் கணக்கான வருஷங்களாகிவிட்டபடியால் கோவி லுக்கு மறுபடியும் தங்கத் தகடு வேயும் வேலையும் நடைபெறுகிறது. இந்த வேலை செய்வோருக்குச் சம்பளம் கிடையாது. பக்தி நிலையில் வேலை செய்கிறார்கள். உணவு மட்டிலும் அளிக்கப்பெறுகிறார்கள். உள்ளே சென்றோம். பாலத்தின் நடுவில் சூரிய சக்கரம் ஒன்று நாழிகை அறிய வைக்கப்பட்டிருக்கிறது.

க்ரந்த்சாகிப் :

பிரதானக் கோவில் இரண்டடுக்குக் கட்டிடம். தர்பார் சாஹிப் (Darbar Sahib) தெய்விகம் விளங்கும் சந்நிதி, ஹரிமந்திர் (Harimandir) இறைவன் உறைவிடம்

என்றழைக்கப்படுகிறது. உள்ளே விதானத்திற்கும் தங்கமும் வெள்ளியுமிட்டு அழகிய கோடி வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சுவற்றுப்பகுதியிலும் தரையிலும் சலவைக்கல். அங்கே நடு இடத்தில் குருமார்களில் முதன்மையான பெரியவர் ஒருவர் அமர்ந்திருக்கிறார். அவர் எதிரே அவர்களுடைய வேத புத்தகம் "குரு க்ரந்த் சாகிப்" (Guru Granth Sahib) வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அப்பெரியவர் விசிறிகொண்டு வீசுகிறார். அதனையே கடவுளாகக்கொண்டு அதற்கு மலரிட்டு வணங்குகிறார்கள், காணிக்கைகளும் செலுத்திக்கொள்கிறார்கள். அலங்காரம்செய்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மூலையிலும் மற்ற இடங்களிலும் சீக்கிய குருமார்களில் இரண்டாம் தரத்தவர் உட்கார்ந்து மௌனமாகப் பாராயணம் செய்கிறார்கள். பக்தர்கள் துன்ப நீக்கங் கருதி வேண்டிக்கொண்டு இப்படிப் பாராயணம் செய்யச் செய்வதாகத் தெரிகிறது. நல்ல பக்திப் பாடல்கள் அங்கே பக்கவாத்தியங்களுடன் ஒரிருவர் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். அந்த குரு க்ரந்த்சாகிப் புத்தகத்தில் நம்முடைய இராமாயணம், மகாபாரதம், பாகவதம், பகவத் கீதை, முதலியவற்றிலிருந்தும் குரானிலிருந்தும் பலர் பாடிய பக்திப் பாடல்களும் எழுதப்பட்டிருக்கின்றன. முக்கியமான குரு க்ரந்த்சாகிப் இம்மதத்தை ஸ்தாபித்த குருநாநக் கையால் எழுதியதாக இருக்கிறது. பின்னே வந்த குருமார்கள் கையால் எழுதியவைகளையும் பலரும் வைத்துப் பாராயணம் செய்கிறார்கள். அந்தப் புநிதக் கை எழுதிய எழுத்துக்குத்தான் கடவுள் மதிப்புக் கொடுக்கப்படுகிறது. அதுவே வேதம் - அதுவே கடவுள். எப்பொழுதும் நல்ல கூட்டம் அங்கு இருந்து வருகிறது. இரவு 10 மணிக்கு முக்கியமான வேத புத்தகத்தை ஒரு

தங்கப் பல்லக்கில் வைத்துப் பக்திப் பாடல்கள், வாத்தியங்கள் இவை முழங்கச் சகல விதமான மரியாதைகளுடனும் எழுந்தருளச் செய்து பள்ளியறையில் சேர்க்கிறார்கள். காலை 5மணிக்குப் பள்ளியறையிலிருந்து மீண்டும் அதேபோல் சகல மரியாதைகளுடனும் கோவில் பிரதான இடத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுகிறது. பள்ளியறையும் மிக அழகான வேலைப்பாட்டுடன் கூடியது. வேத புத்தகம் எங்கிருந்தாலும் பிரதான இடத்தில் இரவும் பகலும் இடைவிடாது பஜனை நடந்துகொண்டே இருக்கும்.

பக்திச் சூழ்நிலை :

ஒவ்வொருநாளும் குறைந்தது 2000 பேர்களுக்குமேல் உணவுப் பொருள்கள் வழங்கப் பெறுகிறார்கள். ரொட்டி முதலியன செய்துகொள்ள மாவு, சர்க்கரை முதலிய பொருள்களைக் கோவில் செலவிலேயே வழங்குகிறார்கள். ஆனால் அதைப்பெறுவோர் ஒரே அடுக்களையில் அவற்றைப் பாகம்செய்து பொதுவாக எல்லோரும் அமர்ந்து உணவு பெறும் இடத்தில் உட்கொள்ளவேண்டுமென்பது நியதி. வெளியிலிருந்து வருவோருக்குத் தங்க இடமும் கொடுக்கிறார்கள். அங்கே உள்ள பக்திச் சூழ்நிலை நன்றாக இருக்கிறது. இவைகளைப் பார்வையிட்டு வந்தோம்.

பஞ்சசீலம் :

இந்தக் கோவிலும் நம்முடைய பாரத தேசத்தின் தலையறுக்கப் பிறந்ததுதான். இரத்த ஆறாகத் தம்மை அர்ப்பணித்த வீரர்களின் அமர ஆவிகள் அங்கே உலவிக்கொண்டிருக்கின்றன. இன்று இந்தியாவில் இந்த அளவு இந்து சமயம் நிலவுவதற்குக்காரணம் இந்தச் சீக்கியர்களே.

முகம்மதியர்கள் வந்து படையெடுத்து நாட்டைப் பிடித்து மதவெறி யாட்டங்கள் நடத்திய காலத்தில் தங்களைப் பலி யிட்டுக்கொண்டு நம்மைக் காத்தார்கள் அவர்கள். இரண்டு மதத்திலும் உள்ள சிறந்த கொள்கைகளை ஒன்று சேர்த்து ஒரு மதமாக்கி அருளினார் குருநாநக். அது மதத்தின் பெயரால் முளைத்தது. பின்னே மதமும் அரசியலும் கலந்த ஒன்றாக ஆகி வளர்ந்தது. முடியும், தாடியும், முடியிலே சீப்பும், இடுப்பிலே என்றும் பிரியாத கத்தியும் கையிலே இரும்பு வளையமும் (பஞ்சசிலம்) இது முக்கியமான அடையாளம். இது வீர மதத்தின் சின்னங்கள். இந்த நினைவோடு அதைப் பார்ப்போர்க்கு அது தங்கக் கோவிலாக இருக்கக்கூடாது, அதைவிட உயர்ந்த பொருளில் ஆக்கப்பட்டிருக்கவேண்டும். அவர்கள் செய்த சேவைக்குத் தங்கத்தை உருக்கி வார்த்து நவரத்தினங் களும் பதித்து உருவாக்கி யிருக்கவேண்டும் என்ற வீரபக்தி உண்டாகும். சமயம் காத்தார்கள், நாட்டைக் காத்தார்கள் அந்தச் சிங்கங்கள். இவ்விதமான உணர்ச்சி மேலோங்க அங்கு நின்றும் இரயிலடிக்கு நாங்கள் திரும்பியபொழுது மணி 11-30. புதுடில்லி திரும்பினோம். அப்பொழுது பறக்கும் ராணி தயாராக நின்றிருந்தாள் (பெண்ணல்ல ரயில்தான்). 12-30 க்குப் புறப்படும். அது இரவு 9 மணிக்கு டில்லி சென்றடையும். அதில் ஏறினோம்.

புதுடில்லி ரயிலடியிலேயே உயர்திருவாளர்கள் K.C.C. செட்டியார், T. S. குஞ்சிதபாதம், வை. ஆறுமுகம்பிள்ளை, T. D. முத்துக்குமாரசுவாமி M. P., கமலசாமி M. P. முத லிய பல அன்பர்கள் வரவேற்றழைத்துச் சென்றனர். முதல் முறை இங்கு வந்திருந்தபொழுதே தம்முடைய பங்களாவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளவேண்டுமென்று

மக்கள் சபை அங்கத்தினர் உயர்திரு. சங்கரபாண்டியன் அவர்கள் கேட்டுக்கொண்டபடியே அங்குச் சென்று தங்கினுர்கள். மறுநாள் காலையில் மதுரா, பிருந்தாவனம், ஆக்ரா முதலிய இடங்களைப் பார்த்துவரப் புறப்பட்டோம்.

ஆக்ரா - தாஜ்மகால் :

ஆக்ராவில் உலக அதிசயங்களில் ஒன்ருன தாஜ் மகாலைப் பார்த்தோம். மோகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹானுடைய ஆசை மனைவி மும்தாஜ்மகாலின் நினைவாக அவளுடைய சமாதிக் கட்டிடமாகக் கட்டப் பட்டிருக்கிறது. வெள்ளைச் சலவைக்கல்லால் யமுனை நதிக் கரையில் கட்டப்பட்டிருக்கிறது. இதில் மும்தாஜ்மகால், ஷாஜஹான் இருவருடைய பூத உடலையும் பக்கம் பக்கமாக அடக்கம்செய்து வைத்துள்ள சமாதுகள் இருக் கின்றன. உலக அற்புதங்கள் ஏழனுள் ஒன்ருகக் கருதப் படுவது இது.

தயாள்பாக் :

அவ்வூரை அடுத்துள்ள தயாள்பாக்கிற்கும் சென் றிருந்தோம். இங்கு ராதாஸ்வாமி என்ற மகானுடைய சமாதின்மீதும் ஒரு பெரிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. தாஜ்மகால் ஒரு அரசனுடைய ஆசைக் காதலியின் சமாதின்மீது கட்டப்பட்டது. இது ஒரு அடியார் சமாதின்மீது அவருடைய அன்பர்களால் கட்டப் படுவது. ராதாஸ்வாமி(தயாள்)யின் சிஷ்யர்களால் கட்டப் படுவது. முன்னையது ஒரு பேரரசனின் வெறும் காத லுணர்ச்சி தூண்ட எழுந்தது. பின்னையது குருபக்தியின் விளைவாகப் போதுமக்களால் கட்டப்படுவது.

இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் பலவிதக் கைத் தொழில்களைத் தொடங்கி நடத்திப் பொருள் சேர்த்திருக் கிறார்கள். பூமி மட்டத்திலிருந்து 10, 15 அடி உயரத்தில் கட்டிடம் எழுப்பப்படுகிறது. முடிவடைய இன்னும் பல ஆண்டுகளாகலாம். அந்தத் திட்டத்தில் வேலை நடைபெறு கிறது. முடிவடைந்தால் இதைவிடச் சிறந்த கட்டிடம் உலகில் எங்கும் இருக்காது என்றும், காதல் கனவின் சின்னமாக அமைத்த ஒன்று உலக அதிசயங்களில் ஒன்றாக இருப்பதுபோல குருபக்தியின் விளைவாக எழுப்பப்படும் ஒன்றும் உலக அதிசயங்களில் மிகச் சிறந்ததாக அமைந் திருக்கவேண்டுமென்ற திட்டத்தில் வேலை நடைபெற்றுவரு கிறது. நூற்றுக்கணக்கான மக்கள் நாள்தோறும் இங்கு வருகிறார்கள். அந்த மகான் மகாசமாதியானநாளன்று பல லக்ஷக்கணக்கான மக்கள் இங்குத் தரிசனத்திற்கு வருகின் றார்கள். இப்பகுதி அந்த மகானுடைய பெயரால் தயாள்பாக் என்று வழங்கப்படுகிறது. இதுபோன்ற சிறப்பான பலவற் றையும் பார்த்து மகிழ்ந்து ஸ்ரீ கிருஷ்ண ஜனனமான மதுராவிற்கு மாலை 6 மணிக்கு வந்துசேர்ந்தோம்.

மதுரா :

புராணப் பெயர் மதுபுரி, யமுனை ஆற்றங்கரையில் அமைந்தது. விஷ்ராம் கட்டம் முக்கியமான ஸ்நான கட்டம், இங்கே கிருஷ்ணன் தன்மாமன் கம்சனைக் கொன்ற பிறகு அயர்வு நீங்கத் தங்கியிருந்ததாகவும் இரண்ய காசியபனை மகாவிஷ்ணு அழித்த பிறகு தங்கியிருந்த தாகவும் அதனால் விஷ்ணு கட்டம் என்று பெயர் வந்த தாகவும் சொல்லப்படுகிறது. பலதேவர், கிருஷ்ணன், முகுந்தன், யமன், தர்மராசன் இவர்கட்குக் கோயில்கள் அமைந்து விளங்குகின்றன. இது போன்ற பல தீர்த்த

கட்டங்கள் ஆற்றங்கரை நெடுகிலும் அமைந்து விளங்கு கின்றன. சைவ வைணவ புராண சம்பந்தமான பல நிகழ்ச்சிகள் ஆங்காங்கும் நிகழ்ந்ததாகவும் அததற்கும் பலனும் சொல்லப்பட்டிருக்கிறது. நகரமெங்கிலும் பல கோயில்கள் கிருஷ்ணர் பெயரால் விளங்கினுலும், துவாரக் நாத்ஜி மந்திர் என்பது மிகவும் பெயர் பெற்றது. சிராவண மாதத்தில் பெரிய விழா நடைபெறுகிறது. எப்பொழுதும் பெருங்கூட்டம் பக்திப் பெருக்கோடு பஜனை செய்திருப்பர் அங்கே.

அண்டபாரா என்னுமிடத்தில் கம்சனுடைய மல்வீரர் களோடு கிருஷ்ணன் சண்டையிட்டு வெற்றிபெற்றதாகவும், கம்சனுல் ஏவப்பட்ட மதயானையைக் கொன்றதாகவும், இதற்கு அருகிலுள்ள திப என்னுமிடத்தில் கம்சனைக் கொன்றதாகவும் சொல்லப்படுகிறது.

ரங்ஹை ரங்ஹை :

கம்சன் வதமானபிறகு கிருஷ்ணனும் பலதேவனும் திரும்பிவரும்பொழுது இந்த இடத்தில் ஒருவருக்கொருவர் மனம் மாறுபட்டு சண்டையிட்டுக்கொண்டதாகவும், அது கண்ட தேவர்கள் துன்பப்பட்டு வருந்தியபொழுது சிவ பெருமான் எழுந்தருளி அவர்களுக்குள் சமாதானம் செய்து வைத்து (Rang-Hai ! Rang-Hai !) சண்டைவேண்டாம், சண்டை வேண்டாம் என்று உரத்துச் சத்தமிட்டதாகவும் அதனுல் அங்குள்ள பெருமானுக்கு ரெங்கேஸ்வரமாதேவர் என்ற திருநாமம் வழங்குவதாகவும் சொல்லப்படுகிறது. இதுபோன்ற புராணப் பிரசித்திப்பெற்ற சிவாலயங்களும் தேவி ஆலயங்களும் பல அமைந்து விளங்குகின்றன.

ஆமைகள் :

யமுனை ஆற்றில் ஆமைகள் மந்தை மந்தையாக நிறைந்து நிற்கும். அன்பர்கள் அவைகளுக்கு ரோட்டி முதலிய தின்பண்டங்கள் வாங்கிப் போடுகிறார்கள்.

கோகுல பிருந்தாவனம் :

மதுராவுக்கு அருகில் கிருஷ்ணன் வளர்ந்த கோகுல பிருந்தாவனம், யமுனை ஆற்றங்கரையிலேயே இருக்கிறது. கிருஷ்ண சரித்திர சம்பந்தப்பட்ட காளிங்க மர்த்தனமான மடு, கோபிகைகளுடன் ரச லீலைகள் (திருவிளையாடல்கள்) புரிந்த இடம் என்று பல குறிக்கப்படுகின்றன.

துவாரக்நாத்ஜி :

மேலே சொன்னவற்றுள் மத்ராவில் துவாரக்நாத்ஜி மந்திருக்குச் சென்று வழிபாடுகள் முடித்துக்கொண்டு டில்லி திரும்பினோம். மறுநாள் அன்பர்கள் பலர் வழியனுப்ப மகா சந்நிதானத்தில் விமான முலமாகப் புறப்பட்டு சென்னை வந்தடைந்து உந்தூர்தி முலம் அன்று இரவே தருமபுரம் வந்து எழுந்தருளியாயிற்று. அமரநாதன் அருள் முன்னிற்க யாத்திரை வெற்றிகரமாக முடிவடைந்தது.

வாழ்க உலகெலாம் !

வளர்க பக்தர்கள் !

வாழ்க ! வாழ்க !!

உ

சிவமயம்

திருக்கயிலாயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

போடிகோளுருவர் புலியினதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடிகோள்கோன்றை கலந்தநீற்றர் கறைசேர் கண்டத்தர்
இடியகுரலால் இரியுமடங்கல் தோடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கோடியோன் றுடையார் கயிலைமலையாரே 1

புரிகோள்சடையர் அடியர்க்கேளியார் கிளிசேர் மோழிமங்கை
தேரியவுருவில் வைத்துகந்த தேவர் பேருமானுர்
பரியகளிற்றை அரவுவிழுங்கி மழுங்க இருள்கூர்ந்த
கரியமிடற்றர் சேய்ய மேனிக் கயிலைமலையாரே. 2

மாவினுரிவை மங்கைவேருவ மூடி முடிதன்மேல்
மேவுமதியு நதியும்வைத்த இறைவர் கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர் திரங்கன் முகவன்சேர்
காவும்போழிலுங் கடுங்கற் சுனைசூழ் கயிலைமலையாரே 3

முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட முதல்வர் மதனன்றன்
தேன்னீருருவம் அழியத்திருக்கண் சிவந்த நுதலினுர்
மன்னீர்மடுவும் படுகல்லறையின் உழுவை சினங்கோண்டு
கன்னீர்வரைமேல் இரைமுன் தேடுங் கயிலைமலையாரே. 4

ஒன்றும்பலவும் ஆயவேடத் தோருவர்கழல் சேர்வார்
நன்றுநினைந்து நாடற்குரியார் கூடித் திரண்டேங்கும்
தேன்றியிருளில் திகைத்தகரிதண் சாரல் நேறியோடிக்
கன்றும்பிடியும் அடிவா ரஞ்சேர்.கயிலைமலையாரே. 5

தாதார்கோன்றை தயங்குமுடியர் முயங்கு மடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர் பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனாய் அறநான் கருள்சேய்த
காதார்குழையர் வேதத் திரளர் கயிலைமலையாரே. 6

கோடுத்தார்புரமூன் றேரியச்சிலைமேல் எரியோண் பகழியார்
எடுத்தானதிரள்தோள் முடிகள்பத்தும் இடியவிரல் வைத்தார்
கோடுத்தார்படைகள் கோண்டாராளக் குறுகிவருங் கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார் கயிலைமலையாரே. 7, 8

ஊணாப்பலிகோண் டுலகிலேற்றார் இலகு மணிநாகம்
பூணாணா மாகப்பூண்டார் புகழும் இருவர்தாம்
பேணாவோடி நேடஎங்கும் பிறங்கு மேரியாகிக்
காணாவண்ணம் உயர்ந்தார் போலுங் கயிலைமலையாரே. 9

விருதுபகரும் வேஞ்சோற் சமணர் வஞ்சச் சாக்கியர்
போருதுபகரு மோழியைக்கோள்ளார் புகழ்வார்க் கணியராய்
எருதோன் றுகைத்திங்கிடுவார்தம்பால்இரந்துண் டிகழ்வார்கள்
கருதும் வண்ணம் உடையார் போலுங் கயிலைமலையாரே. 10

போரார்கடலிற் புனல்சூழ்காழிப் புகழார் சம்பந்தன்
காரார்மேகங் குடிகோள்சாரற் கயிலைமலையார்மேல்
தோராவுரைத்த சேஞ்சோன்மாலை சேப்பும் அடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகில் மருவு மனத்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வேற்ருகி விண்ணுகி நின்ருய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்ருகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்ருகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மாணுய் போற்றி
காற்ருகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியேன் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதேன் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியேன் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி, 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி

தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி

உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி
ஊழி யேழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி பூரணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. ௯

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

பிழை திருத்தம்

பக்.	வரி	பிழை	திருத்தம்
10	22	வள்ளண்மை	வள்ளன்மை
48	20	காலவரையரை	காலவரையறை
50	1	போருத்து	போறுத்து
50	7	நோருங்கி	நோறுங்கி
52	6	பரிபோகிறதே	பறிபோகிறதே
52	23	நகாரனுலேன்ன	நகரானுலேன்ன
53	24	நோருங்கி	நோறுங்கி
59	7	பிரிதிஷ்டை	பிரதிஷ்டை
63	13	தூவாரம்	துவாாம்
64	1	பைவரக்	பைரவக்
65	10	சிதோஷ்ண	சீதோஷ்ண
68	18	பார்த்தால்	பார்த்தல்
70	16	விமானக்கூட்டம்	விமானக்கூடம்
73	16	முறட்டு	முரட்டு
74	1	ஜிப்பில்	ஜீப்பில்
74	25	அளவாளாவி	அளவளாவி
76	8	பழுதுதாக	பழுதாக
80	9	தேர்தல்	தேறுதல்
80	23	தில்லியால்	தில்லியில்
81	4	ஊணக்கண்	ஊனக்கண்
94	15	எங்ஙிலே	என்னிலே
95	21	நங்ஙிலே	நன்னிலே
99	21	நங்ஙீர்	நன்னீர்
105	21	சமவேட்ப	சமவேப்ப
112	20	தாட்ப்	தாட்
121	17	நச்சுப்படுதி	நச்சுப்பகுதி
122	12	புரித்து	புரிந்து
128	10	சேன்றுகோண்டிருந் தன	சேன்றுகோண்டிருந் தனர்
144	4	கையிலைக்	கயிலைக்